வரு.76 இல. 20 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2024 மே 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
May 26 Sunday, 2024
24 பக்கங்கள் 100/-
















# மக்களின் காணி உரிமை உறுதிப்படுத்தப்பட்டு முன்னேற்றத்துக்கான வாய்ப்பு உருவாக்கப்படும்

## தெற்காசியாவில் மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்கும் ஒரே நாடு இலங்கை

## வடமாகாணத்தில் வீடுகளை நிர்மாணிக்க 2025 இல் தேவையான நிதி ஒதுக்கப்படும்

### யாழ். நகரில் 'உறுமய' காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டு மக்களின் காணி உரிமை உறுதிப்படுத்தப்பட்டு முன்னோக்கி செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தெற்காசியாவிலேயே மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்கும் ஒரே நாடு இலங்கை என்று தெரிவித்த ஜனாதிபதி, 'உறுமய' வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இலவசப் பத்திரங்களை அடுத்த சந்ததியினர் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு உரிமையாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் (24) கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 1,286 இலவசப்பத்திரங்கள் மக்களிடம் வழங்கி வைக்கப்பட்டதுடன், காணி உறுதிப்பத்திரங்களை ஜனாதிபதி 06

## கதிர்காமக் கந்தன் உற்சவம்; ஜூலை 06 இல் கொடியேற்றம்

### 22 ஆம் திகதி தீர்த்தோற்சவம்

காரைதீவு குறூப் நிருபர்



வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழா 06

## 2024 இல் ஜனாதிபதி தேர்தல் உறுதி



### பாராளுமன்றம் கலைக்கப்படும் என்பதில் உண்மையில்லை

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடத்தில் நிச்சயம் நடத்தப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். இத்தேர்தலுக்கென வரவு, செலவுத் திட்டத்தில் 1,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அரசியலமைப்பின் பிரகாரம் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது கட்டாயமெனவும் அதற்கான திகதிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன் தற்போதைக்கு பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது எனவும் இவ்வாறு உண்மைக்கு புறம்பான அறிக்கைகளை அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளவர்களே முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்தார். சிலர் கூறுவது போன்று ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடித்துக்கொள்ளும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட மாட்டாதென்றும் அமைச்சர் 06

## அமரர் ஆறுமுகன் தொண்டமான் 04ஆவது சிரார்த்த தினம் இன்று

### சௌமிய பவனில் நிகழ்வுகள்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 04 ஆவது சிரார்த்த தினம் இன்று (26) அனுஷ்டிக்கப்படுகிறது. கொழும்பிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான 06

## யாழ். மாவட்டம், மக்கள் மீது ஜனாதிபதி விசேட கவனம்

### பிரதமராக இருந்தபோதும் அதிக அக்கறை; சுமந்திரன் MP பாராட்டு



யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியிலும், மக்கள் மீதான அக்கறையிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளாரென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். 06

## ஐ.ம.மு. கட்சியின் கேகாலை மாவட்ட மாநாடு இன்று

### மனோ தலைமையில் எட்டியாந்தோட்டையில்



தமிழ் முற்போக்கு கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை எட்டியாந்தோட்டை நகரில் நடைபெறும். எட்டியாந்தோட்டை ஸ்ரீவிநாயகர் ஆலயத்துக்கு எதிரே அமைந்துள்ள கே.ஜி.எல். 06

## தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை அதிகரிக்க முடியாத கம்பனிகள் குறித்து ஆராய குழு நியமனம்



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க முடியாத பெருந்தோட்டக் கம்பனிகள் தொடர்பில் ஆராய்ந்து, சம்பளத்தை அதிகரிக்க முடியாத நிறுவனம் நட்டத்தில் இருப்பதாக இருப்பின், அதற்கான 06

## ஜனாதிபதி இல்லாதிருந்தால் நாடு சோமாலியாவாகியிருக்கும்

### விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு



கடந்த காலங்களில் தவறாக மக்கள் வாக்களித்ததாலேயே நாட்டை சோமாலியாவின் நிலைக்கு கொண்டு சென்றனரென முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

ஆனால் தேர்தலில் படுதோல்வியடைந்தும் இன்று ஒரு ஆசனத்துடன் ஆசியாவின் சிறந்த தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு சேவையாற்றுகின்றாரென்றும் 06

## எங்கள் கருத்து...

### சீரற்ற காலநிலை வேளையில் மிகுந்த எச்சரிக்கை அவசியம்!

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் தற்போது சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. கரையோரப் பிரதேசங்களில் கடும் காற்றுடன் மழை பெய்வதனால் ஆங்காங்கே அனர்த்தங்கள் சம்பவித்திருக்கின்றன.

முன்னரெல்லாம் மழைக்காலங்களின் போது வெள்ளம் காரணமாகவே மக்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படுவது வழமை. ஆனால் இம்முறை மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் உயிரிழப்புகளும், உடைமைச் சேதங்களும் அதிகளவில் ஏற்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது மழை மற்றும் கடும் காற்று காரணமாக மரங்கள் முறிந்து விழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இலங்கையில் கடந்த 19ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை மரங்கள் முறிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் ஒருவார காலத்தில் வீதியோரங்களில் நின்றிருந்த சுமார் இருபது மரங்கள் கடும் காற்றினால் முறிந்து வீழ்ந்துள்ளன. இச்சம்பவங்களால் சிலர் காயமடைந்துள்ளதுடன், வாகனங்களும் சேதமடைந்துள்ளன. கொழும்பின் சில பகுதிகளில் வீதியோரம் 06



06
## நுவரெலியாவில் மழையுடன் வீதிகளில் அதிக பனிமூட்டம்

சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை



06
## சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன காலமானார்

### வங்கக்கடலில் உருவான தாழமுக்கம்

## Remal எனும் சூறாவளி பங்களாதேஷ் நோக்கி நகர்வு

### ஆழ்கடல் மீனவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை



வங்காள விரிகுடாவில் நிலவிவந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று நேற்று (25) பாரிய சூறாவளியாக வலுப்பெற்று பங்களாதேஷை 06

## ISIS நபர்களுடன் மேலும் சில இலங்கையருக்கும் தொடர்பு

### விசாரணைகளை துரிதப்படுத்தும் பொலிஸார்



ISIS பயங்கரவாத அமைப்புடன் தொடர்புள்ளதாக இந்தியாவில் கைதான நான்கு இலங்கையருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த மேலும் சிலரின் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதன்படி ISIS உறுப்பினர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் மாளிகாவத்தை பகுதியில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்தத் தகவல்கள் 06

## மல்வானையில் இரண்டு இளைஞர்கள் மர்ம மரணம்

### வயல்வெளியிலிருந்து சடலங்கள் மீட்பு



கம்பஹாவின் தோம்பே, மல்வானை பிரதேசத்தில் வயலொன்றிலிருந்து இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தோம்பே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவலதென்னவத்த மற்றும் ரம்பொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 மற்றும் 29 வயதுடைய இரண்டு இளைஞர்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் கடந்த 22ஆம் திகதி அவர்கள் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து வெளியே சென்று, 06

# ஜனாதிபதி ரணிலின் வடக்கு விஜயத்தின் சில பதிவுகள்...

யாழ். பல்கலைக்கழகத்தில்....







யாழ்ப்பாணத்தில் காணி உறுதிப்பத்திரம் வழங்குகையில்...







கிளிநொச்சியில்...










# மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டிய காலம்!!!



## எச்சரிக்கிறார் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் கொடிப்பிலி

நாட்டில் கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகிறது. தென் மேல் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி ஆரம்பமாகியுள்ளது. அதன் விளைவாக தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள நிலையும், போக்குவரத்து இடையூறுகளும் அவ்வப்போது ஏற்பட்ட வண்ணமுள்ளன. கடும் காற்றுடன் கூடிய இக்காலநிலையில் மண்சரிவு அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இச்சீரற்ற காலநிலையால் மக்களும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இருந்த போதிலும் தற்போதைய சீரற்ற காலநிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று கடந்த வெள்ளியன்று குறிப்பிட்ட வளிமண்டலவியல் திணைக்களம் மேல், சப்ரகமுவ, மத்தி, வட மேல், தென் ஆகிய மாகாணங்களிலும், மன்னார் மாவட்டத்திலும் அடிக்கடி மழை பெய்யும் என்றும் சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலிய மாவட்டத்திலும் 100 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழை வீழ்ச்சி பதிவாகலாம் என தெரிவித்துள்ளது.

அத்தோடு மேல், வடமேல் மாகாணங்களிலும் கண்டி, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில பிரதேசங்களில் 75 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழை பெய்யக் கூடும் என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறது வளிமண்டலவியல் திணைக்களம்.

இதேவேளை, கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் நாட்டிலுள்ள சில நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

பல குளங்கள் நிரம்பி வழியும் கட்டத்தை அடைந்துள்ளன. புத்தளம் மாவட்டத்தின் தப்போவ நீர்த்தேக்கத்தின் 04 வான் கதவுகள் ஒரு அடி உயரத்துக்கும், குருநாகல் தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகள் இரண்டடி உயரத்துக்கும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றது.

களுத்துறை மாவட்டத்தின் குக்குலே கங்கையில் நிமிடத்திற்கு 25 சதுர மீற்றர் என நீர் வழிகிறது.

அநுராதபுரம் மாவட்டத்தின் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

களனி கங்கை, ஜின் கங்கை, களுகங்கை, அத்தனகலு ஓயா ஆகிய கங்கைகளின் நீர் மட்டமும் தொடர்ந்தும் உயர்ந்து வருகிறது. அதனால் கங்கைகள், நீர்த்தேக்கங்களை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போதைய சீரற்ற காலநிலைக்கு தென்மேல் பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சியும் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கமுமே காரணம் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரியொருவர் குறிப்பிட்டிருக்கிறார்.



### ஏழு மரணங்கள்

இதன் விளைவாகவே அடிக்கடி கடும் காற்று வீசுகின்றது. அதனால் சுற்றாடலிலுள்ள பாதுகாப்பற்ற மரங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மக்களை கேட்டுள்ளது. இந்த சீரற்ற காலநிலையால் கடந்த வெள்ளிக்கிழமை வரையும் நாட்டில் 07 மரணங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 6 மரணங்கள் புத்தளம், நுவரெலியா, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததால் ஏற்பட்டவையாகும். அந்த மரணங்களில் மூன்று புத்தளம் மாவட்டத்தில் சம்பவித்தவை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு மரணம் படகு கவிழ்ந்ததால் நேர்ந்துள்ளது.

கடும் காற்று வீசியபோது, மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதியொருவர் மீது மரக்கிளையொன்று முறிந்து விழுந்து உயிரிழந்த சம்பவமொன்று சிலாபத்தில் பதிவாகியுள்ளது. அதனால் உயரமான மரங்களுக்கு கீழ் நிற்பதையும் அவற்றுக்கு கீழே வாகனங்களை நிறுத்துவதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடுப்பிலி தெரிவித்துள்ளார்.



### மண்சரிவு முன்னெச்சரிக்கை

இதேவேளை தற்போதைய சீரற்ற காலநிலையின் பின்புலத்தில் மலையகம் மற்றும் மலை சார்ந்த பிரதேசங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம், மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த முன்னெச்சரிக்கையின் படி, கொழும்பு மாவட்டத்தின் பாதுக்க, சீத்தாவக்க பிரதேச செயலகப் பிரிவுகளிலும், கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவிலும், களுத்துறை மாவட்டத்தின் தொடங்கொட, அகலவத்தை, ஹொரணை, வலல்லாவிட்ட, பாலிந்தநுவர, புளத்சிங்கள, மத்துகம, இங்கிரிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மண்சரிவு ஏற்படுவதற்கான அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. அதேபோன்று பதுளை, நுவரெலியா, கேகாலை, கண்டி, குருநாகல், காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அச்சுறுத்தல் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அதனால் மலையகம் மற்றும் மலை சார்ந்த பிரதேசங்களில் புதிய நீரூற்றுக்கள் உருவாதல், அந்நீரூற்றுக்களில் சேற்று நீர் வெளிப்படல், வீட்டு சுவர்களிலும் நிலத்திலும் புதிய வெடிப்புக்கள் ஏற்படல், அவை விரிவடைதல், மின்கம்பங்கள், உயர்ந்த மரங்கள் சரிவடைதல் போன்றவாறான அறிகுறிகள் தென்பட்டால் அவை அப்பிரதேசத்தில் மண்சரிவு ஏற்படுவதற்கான முன்சமிக்ஞைகளாகவே இருக்கும். அதனால் அவ்வாறான அறிகுறிகள்தென்பட்டால் தாமதியாது பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்ந்து செல்ல வேண்டும். அத்தோடு அது தொடர்பில் பிரதேச கிராம உத்தியோகத்தருக்கும் பிரதேச செயலாளருக்கும் அறிவிக்கவும் தவறலாகாது. மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருப்பது மிகவும் அவசியமானது.

### சீரற்ற காலநிலையின் பாதிப்புகள்

தற்போதைய சீரற்ற காலநிலையின் விளைவாக கடந்த வெள்ளிக்கிழமை வரையும் 11 ஆயிரத்து 610 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 799 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 188 பேர் நான்கு நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளனர். இந்த முகாம்கள் கண்டி, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு 111 குடும்பங்களைச் சேர்ந்த 431 பேர் உறவினர்கள், நண்பர்கள் இல்லங்களிலும் தங்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையம், 7 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 11 பேர் காயமடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்தோடு இச்சீரற்ற காலநிலையினால் 10 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு 2,645 வீடுகள் பகுதியளவிலும் பாதிப்படைந்திருப்பதையும் அந்த நிலையம் குறிப்பிடத்தவறவில்லை.

- 7 மரணங்கள்
- 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு
- நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு
- வங்காள விரிகுடாவில் ரீ மெல் புயல்
- தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் நீர்ப்பாசனத் திணைக்களம்



இந்த சீரற்ற காலநிலையினால் அதிகளவில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 5401 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்ததாக புத்தளம் மாவட்டத்தில் 3455 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 815 பேர் பாதிக்கப்படைந்துள்ளனர்.

அதேநேரம் காலி, இரத்தினபுரி உட்பட நாட்டின் 16 மாவட்டங்களிலும் இக்காலநிலை தாக்கங்களை ஏற்படுத்தவே செய்திருக்கிறது.

என்றாலும் தற்போதைய சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு உடனுக்குடன் நிவாரணப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் அனர்த்த முகாமைத்துவ நிலையம், பாதுகாப்பு அமைச்சு, அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், மாவட்ட, பிரதேச செயலகங்கள், மீட்புக்குழுக்கள் என்பன பணியாற்றி வருகின்றன.

### வங்காள விரிகுடாவில் சூறாவளி

வங்காள விரிகுடாவின் தென் மேற்கு பிராந்தியத்தில் காணப்பட்ட தாழமுக்கம் 25ஆம் திகதி இலங்கைக்கு வடகிழக்காக பயணித்து மத்திய வங்காள விரிகுடாவில் சூறாவளியாக மாற்றமடையுமெனவும், அதனைத் தொடர்ந்து அது வடக்கு நோக்கி நகர்ந்து கடும் புயலாக மாற்றமடையும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த சூறாவளிக்கு 'ரீ மெல்' என ஓமான் பெயரிட்டுள்ளது. இது வடக்கு ஒரிசா அல்லது மேற்கு வங்கப் பகுதியின் ஊடாக கொல்கத்தாவை ஊடறுத்துச் தரையைக் கடக்கலாம் என எதிர்பார்ப்படுகிறது. அதனால் தென்மேற்கு கடல் பிராந்தியம் மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் மணித்தியாலயத்திற்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசலாம். அதன் விளைவாக கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்படும். அதனால் இந்த நாட்களில் மிகுந்த விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் கடற்றொழில் ஈடுபடுவது அவசியம் எனவும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது வளிமண்டலவியல் திணைக்களம்.

அதனால் தற்போதைய சூழலில் சீரற்ற காலநிலையின் தாக்கங்கள், பாதிப்புக்கள் குறித்து அறிவிப்பதாயின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 என்ற அவசர இலக்கத்திற்கு உடனுக்குடன் அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் கொடிப்பிலி மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். அதனால் சீரற்ற காலநிலை குறித்து கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ மக்கள் நடந்து கொள்ளக்கூடாது.

மர்லின் மரிக்கார்

# சிறப்பாக நடந்தேறிய வெளியீட்டு விழா



ஒரு வித்துவ நிலைக்கு வந்த பிறகு திரும்பவும் குழந்தைப் பருவத்திற்குச் சென்று அந்த நடையில் எழுதத் துணிவது என்பது அசாத்தியமான விடயம். மகாகவி பாரதியும் அப்படித்தான் குழந்தை இலக்கியம் படைத்தார். அந்த வகையில் ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலி அதனை மிகச் சிறப்பாகச் செய்துள்ளார் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீலாங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்திய எழுத்தாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர், கவிஞர் இக்பால் அலி எழுதிய காலத்தின் கால்கள் (திறன் நோக்கு கட்டுரைத்தொகுதி), குரங்குத் தம்பி (சிறுவர் பாடல்கள்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அக்குறணை ஐடெக் கல்வி நிலைய மண்டபத்தில் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீமும் பாராளுமன்ற உறுப்பினரும், கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளருமான எம். எச். ஏ. ஹலீமும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அக்குறணை பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக கலந்து கொண்டார். கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் வரவேற்புரையினையும், மத்திய மாகாண, முன்னாள் முதலமைச்சரும் வட மத்திய மாகாண முன்னாள் ஆளுநருமான சரத் ஏக்கநாயக்க, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி மனித அபிவிருத்தி தாபன இயக்குனரும் சர்வதேச விவசாய நிறுவனத்தின் செயலாளர் நாயகமுமான கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், சமய, சமூகப் பேச்சாளரும் நெலும் ஆடைக் காட்சியகத்தின் உரிமையாளருமான தேசமானிய முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் வாழ்த்துரையையும் வழங்கியதுடன் நூல் அறிமுகத்தை பேராசிரியர் எம். எஸ். எம். அனஸும் நயவுரையினை கவிஞர் ரா. நித்தியானந்தன், ஆசிரியை சர்மிளா தேவி ஆகியோரும் வழங்கினர்.

நூல் முதல் சிறப்புப் பிரதிகளைப் தொழிலதிபர் டி. எம். எஸ். நிஸைஹிர் ஹாஜியார், மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன், சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள் ஆகியோர் பெற்றுக் கொண்டார்.

திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ள எழுத்தாளர்கள் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# 2001இல் காப்பாற்றிய அதே தலைவர்தான் 2023இலும் நாட்டைக் காப்பாற்றினார்

## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன



**பாராளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் சட்டமூலங்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் பயணிக்க வேண்டிய திசைகள் தொடர்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தினகரனுக்கு வழங்கிய நேர்காணல்**

**ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏன் அவசரமாக இந்த மூன்று நிதிச் சட்டமூலங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சிக்கப்பட்டது?**

எந்த அவசரங்களும் இல்லை. எம்மால் சர்வதேச ஒத்துழைப்பில்லாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ஒரு தேசமாக, ஒரு நாடாக, சர்வதேச உடன்படிக்கைகளுக்கு நாம் உடன்படாவிட்டால், நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

நமது நாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் வருமானத்தை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமாக இறக்குமதி நடவடிக்கைகளுக்காக செலவாகின்றது. எரிபொருள், எரிவாயு, மருந்து, இயந்திரங்கள், உணவு மற்றும் பானங்கள், குறிப்பாக பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுகளுக்காக நாம் கண்டிப்பாக இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கான கடன் பத்திரங்கள் திறக்கப்பட வேண்டும். அதற்கு சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைவாக நாம் செயற்பட வேண்டும். நாட்டைப் பொருளாதார ரீதியில் ஸ்திரமாக்குவதற்காகவே இந்தச் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நாடு பொருளாதார ரீதியாக நிலையானதாக இல்லாவிட்டால், எமது கடன் பத்திரங்களை எந்த நாட்டின் வங்கியும் அல்லது நிதி நிறுவனமும் ஏற்றுக்கொள்ளாது. அதற்குத் தேவையான நிதி ஒழுக்கங்கள்தான் இந்தச் சட்டமூலங்கள் ஊடாக ஏற்படுத்தப்படுகின்றன.

**இந்தச் சட்டமூலங்கள் ஊடாக நீங்கள் நினைக்கும் பொருளாதார ஸ்திரத்தன்மை பேணப்படுமா?**

இந்தச் சட்டமூலங்கள் மூலமாக எதிர்பார்க்கப்படுவது மக்களின் இணக்கப்பாட்டை பாராளுமன்றத்தின் ஊடாக உலகிற்கு கொண்டு செல்வதேயாகும். இந்தச் சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் எம்மால் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

**இந்தச் சட்டங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல் போனால் என்ன நடக்கும்?**

இந்தச் சட்டமூலங்களுக்கு உடன்படாதவர்கள் தனிப்பட்ட ரீதியிலும், கூட்டாகவும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

**இந்தச் சட்டமூலங்கள் தொடர்பில் சுருக்கமாகக் கூற முடியுமா?**

அரச நிதி முகாமைத்துவச் சட்டம், பொருளாதார மாற்றச் சட்டம் மற்றும் கடன் முகாமைத்துவச் சட்டம் ஆகிய மூன்று சட்டமூலங்களே எம்மால் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில் மிக முக்கியமான சட்டம் பொருளாதார மாற்றச் சட்டமாகும். 2048ஆம் ஆண்டு வரையிலான இலங்கையின் பொருளாதாரத்தின் பயணப் பாதை, அதற்கான மூலோபாயத் திட்டங்களும்தான் இந்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

இங்கு விசேடமாக, 2032ஆம் ஆண்டுக்குள், செலுத்தப்படாதுள்ள அரச கடனின் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 95 வீதத்திற்கு குறைவடைய வேண்டும். அதேபோன்று, நாட்டின் மொத்த நிதித் தேவை வருடத்திற்கு உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 13% ஐத் தாண்டிச் செல்லக் கூடாது.

அத்துடன், வெளிநாட்டு கடன் சேவை 4.5%ஐத் தாண்டிச் செல்லக் கூடாது.

போட்டித் தன்மையுடைய ஏற்றுமதி விவசாய முறை உருவாக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சி 5% அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும்.

அதேபோன்று, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 5%க்கு மேல் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும். அதன் மூலம் எமக்குத் தேவையானவாறு பணம் செலுத்த முடியாது.

அவ்வாறே பாராளுமன்றத்தின் ஊடாக நிதி ஒழுக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். அங்கு, அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், அரசு செலவின திட்டங்கள் போன்ற தொடர்பான நிதி ஒழுக்கம் குறித்த தரநிலை செயல்படுத்தப்படுகிறது. அத்துடன் இலங்கை செலுத்த வேண்டிய கடனைக் கையாள்வது கடன் முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் செய்யப்படும்.

**எனினும் நாட்டின் வங்குரோத்து நிலைக்குக் காரணமானவர்களே மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கேட்பதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் கூறுகிறார்களே?**

சுதந்திரத்திற்குப் பின்னர் நாடு இந்தளவுக்கு வங்குரோத்தடைந்த முதற் தடவை இதுவாகும்.

குறிப்பாக இலங்கையைப் போன்ற சிறிய பொருளாதாரத்தையுடைய நாட்டினால் சர்வதேச ஒத்துழைப்பில்லாமல் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது. தனியாக எழுந்து நிற்பதற்கான பொருளாதாரக் கட்டமைப்புக்கள் நாட்டில் இல்லை. பல தசாப்தங்களாக அரச வரவு செலவுத் திட்டத்தின் நடப்புக் கணக்கில் நாடு தாங்க முடியாத பற்றாக்குறை உள்ளது.

நாட்டின் வருமானத்தில் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி அஸ்வெசும போன்ற நிவாரணக் கொடுப்பனவுகள் மற்றும் அரச கடன் வட்டி போன்றவற்றைச் செலுத்திவிட்டு அரசாங்கத்தினால் வேறு எந்தச் செலவையும் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இதுதான் அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்ளாத பொருளாதார உண்மை.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அல்லது பொதுஜன பெரமுன அல்லது வேறு எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் இந்த வரவு செலவுத் திட்ட பற்றாக் குறை இருக்கும்.

**ஏன் இந்தளவுக்கு நாடு வங்குரோத்து அடையுமளவுக்கு நாம் செயற்பட்டோம். இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியது நாட்டை இதுவரை ஆட்சி செய்தவர்கள்தானே?**

இந்நாடு வங்குரோத்து அடைந்தது முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வற் வரியினைக் குறைத்ததாலோ அல்லது கொவிட் தொற்றினாலோ அல்ல.

பல தசாப்தங்களாக, அரச வரவு செலவுத் திட்ட நடப்புக் கணக்கில் தாங்கிக் கொள்ள முடியாத பற்றாக் குறை நிலவுவதும், சர்வதேச கொடுப்பனவுகளின் நடப்புக் கணக்கில் பற்றாக்குறையை பேணுவதனாலும், அது ஒரு நாட்டிற்கு தாங்க முடியாத வரவு செலவுத்திட்ட இடைவெளி மற்றும் கொடுப்பனவு நிலுவையைப் பேணுவதனாலுமே இந்த நிலை ஏற்பட்டது.

**ஒரு நாடு திடீரென அவ்வாறு வங்குரோத்து நிலையை அடைவதில்லை. இதனை பொருளாதார நிபுணர்களும், நிதி நிபுணர்களும் புரிந்து கொள்ள வேண்டும். நீங்களும் ஒரு பொருளாதார நிபுணர்தானே?**

இதற்கு முன்னரும் 2001ஆம் ஆண்டில் நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு நாடு வங்குரோத்து நிலைக்குள்ளாகும் நிலை ஏற்பட்டது. பொருளாதாரத்தின் வளர்ச்சி – 1.4 ஆகக் குறைந்தது. வட்டி விகிதம் அதிகரித்தது. பணவீக்கம் அதிகரித்தது. மாற்று விகிதம் உயர்ந்தது. அந்த நாட்களிலும் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு இருந்தது. பொருளாதாரத்தை பராமரிப்பது கடினமாக இருந்தது. எனவே நாம் அந்த அரசாங்கத்தை விட்டு விலகி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தோம். நான் பிரதி நிதி அமைச்சராகவும், கிராமிய பொருளாதாரத்திற்கான அமைச்சரவை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டேன். வெளிவிவகார அமைச்சராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் விவசாய அமைச்சராக எஸ்.பி. திஸாநாயக்க போன்றோரும் செயற்பட்டனர்.

அந்தப் பொருளதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்பதற்காகத்தான் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க 2003ஆம் ஆண்டின் 3ம் இலக்க அரச நிதி முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்தச் சட்டத்தில் மூன்று பிரதான விடயங்கள் சட்டமாக்கப்பட்டன.

ஒரு வருடம் செல்வதற்குள் நாட்டின் பொருளாதாரம் சாதகமாக நிலைக்கு மாறியது. ரூபாயின் மதிப்பு அதிகரித்தது.

அந்தச் சட்டத்திற்கு அமைய 2006ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டாகும் போது கடன் அளவு மொத்த தேசிய உற்பத்தியில் 65 வீதத்திற்கு குறைய வேண்டும் என நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 2006ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட இடைவெளியை மொத்த தேசிய உற்பத்தியில் 5 வீதமாகப் பேணி அதன் பின்னர் தொடர்ச்சியாக அதனை அரசாங்கங்கள் முன்னெடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இன்னும் பல விடயங்கள் அதில் இருந்தன. அந்தச் சட்டம் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் நாடு வங்குரோத்து அடைந்திருக்காது. இதுதான் உண்மை.

துரதிர்ஷ்டவசமாக அந்த அரசாங்கத்தினால் 2004இல் மீண்டும் அதிகாரத்திலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. பின்னர் வந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை மாற்றியதன் காரணத்தினால் நாடு வங்குரோத்து நிலையை நோக்கி விரைந்தது.

**எவ்வாறாயினும், தாம் ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச உடன்படிக்கைகளை திருத்துவோம் என எதிர்க்கட்சியைச் சேர்ந்தது சிலர் கூறுகின்றனரே?**

மேற்குறித்த சட்டத்திற்கு அமைய யார் அதிகாரத்தில் இருந்தாலும் அந்த நிதி ஒழுக்கச் சட்டத்திற்கு அமைவாகவே செயற்பட வேண்டும். அந்தச் சட்டங்கள் ஊடாக ஒரு பொதுவான தேசிய இணக்கப்பாடு நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையெனில், எங்களுக்கு கடன் உதவிகள் கிடைக்கப் போவதில்லை.



**2022ஆம் ஆண்டில் வங்குரோத்து அடைந்த நாட்டைப் பொறுப்பேற்பதற்கு யாரும் முன்வராத சந்தர்ப்பத்தில் அவர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று நாட்டைக் காப்பாற்றினார்.**

**நாம் ஏன் கடன் பெற வேண்டும், இப்போது இருக்கும் கடன் போதாதா? உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஏன் செல்லக்கூடாது? இவ்வாறு சென்றால் எதிர்காலத்தில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாடு மீண்டும் வீழ்ச்சியடையலாம் அல்லவா?**

அவ்வாறு நடக்காமல் இருக்க தற்போதைய ஜனாதிபதி பார்த்துக் கொள்வார். 2022ஆம் ஆண்டில் வங்குரோத்து அடைந்த நாட்டைப் பொறுப்பேற்பதற்கு யாரும் முன்வராத சந்தர்ப்பத்தில் அவர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று நாட்டைக் காப்பாற்றினார்.

**அதற்கு முன்னரும் அவர் 2001ஆம் ஆண்டில் நாட்டைக் கட்டியெழுப்பினார் என நான் மேலே கூறினேன். நாடு வங்குரோத்தடையும் என்பதைத் தெரிந்து கொண்டு சட்டத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பிய ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்கவாகும். வேறு கட்சிகள் அதிகாரத்திற்கு வந்தாலும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக வாய்ப்புக்கள் இல்லை என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

நாம் ஆட்சிக்கு வந்தால் அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 ஆயிரத்தால் கூட்டுவோம். ஓய்வூதியக்காரரர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவால் ஓய்வூதியத்தை அதிகரிப்போம், சிரேஷ்ட பிரஜைகளுக்கு 25 வீத வட்டியை வழங்குவோம், பாடசாலை மாணவர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்குவோம் போன்றவாறான கதைகளை எம்மாலும் கூற முடியும். இவ்வாறு செய்வதற்கு நிதி எங்கே இருக்கின்றது? யாராவது இவ்வாறு செய்வோம் எனக் கூறுவார்களாக இருந்தால் எங்கிருந்து நிதியைப் பெறுவது என்பதை அவர்கள் காட்ட வேண்டும். இவ்வாறு வழங்குவதற்கு எங்கிருந்தாவது நிதியைத் தேடிக் கொள்ள வேண்டுமே. அதாவது, வற் வரியினை 30, 40 வீதங்களால் அதிகரித்தா நிவாரணம் வழங்கப் போகிறீர்கள். இதைத்தான் மொண்டிசூரி கதைகள் என்பது.

சஜித் பிரேமதாச அல்லர் அனுரகுமார திசாநாயக்கா போன்றோர் இந்தத் தரவுகளை அனுமதிக்காவிட்டால் அவர்கள் மேற்கொள்ளும் மாற்று நடவடிக்கைகள் என்ன என்பதைக் கூற வேண்டும். அவர்கள் அவ்வாறு எதையும் கூறப் போவதில்லை.

**எனினும் தற்போது நாடு வங்குரோத்தடைந்து கடன்கள் கூட திரும்பிச் செலுத்தப்படவில்லை. அதற்காகத்தான் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச ஒத்துழைப்புடன் எமது நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் செலுத்துவதற்குள்ள எமது நாட்டின் வெளிநாட்டுக் கடன் தொகை மிக அதிகமானதாகும்?**

ஆம், எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும், நாட்டில் வீதிகள் அமைக்கப்பட்டன, ஆறுகள் மற்றும் ஏரிகளின் அணைகள் கட்டப்பட்டன. மகாவலி நதியை வடக்கே திசை திருப்புவதற்கோ, ஜிங்கங்கை திட்டம், இகினிமிட்டிய, மொரகஹகந்த போன்ற பாரியளவிலான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் கண்டிப்பாகச் சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கிழக்கு புத்தெழுச்சி, வடக்கின் வசந்தம் போன்ற இந்த திட்டங்கள் அனைத்தும் வெளிநாட்டு உதவியுடன் செய்யப்பட்டவை. சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு என்ற வகையில் எம்மால் தனித்து செயற்பட முடியாது.

**தற்போது நாடே கடனாளியாகிவிட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டின் பிரகாரம் நாட்டைக் கட்டியெழுப்ப எமக்கு எவ்வளவு காலம் எடுக்கும்?**

தற்போது, சர்வதேச நாணய நிதியத்துடன் நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன்களைச் செலுத்தத் தொடங்கியதன் பின்னர் முதல் 56 ஆண்டுகளுக்குள் செலுத்துவது தற்போது செலுத்துவதற்கு முடியாது போயுள்ள கடன் தொகையில் 37% மட்டுமேயாகும். 6 ஆண்டிலிருந்து இருந்து இன்னும் 20 ஆண்டுகள் வரை செலுத்துவது, கடன்களில் 51வீதம் மட்டுமேயாகும். மீதமுள்ள 12 வீத கடன் தொகை 20 ஆண்டுகளுக்குப் பிறகு செலுத்தப்படும்.

இதனடிப்படையில் 2048ம் ஆண்டில் யார் ஜனாதிபதி பதவியை வகித்தாலும், எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் இந்த உடன்பாடுகளில் ஒரு அங்குலத்தையேனும் மாற்ற முடியாது.

அவ்வாறு மாற்றினால் நாடு என்ற வகையில் எம்மால் முன்னேறிச் செல்ல முடியாது. அவ்வாறு மாற்றம் செய்யப் போனால் நாடு இரண்டு வாரத்திற்கும் கூட நிலைக்காது.

**இவ்வாறு சென்றால் குறைந்த வருமானம் பெறுபவர்கள் நன்மையடைவது கனவாகிப் போய்விடுமோ?**

நாட்டின் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் 2027ஆம் ஆண்டின் பின்னர் அனைத்து உற்பத்தி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சில்லறை மொத்த விற்பனை வர்த்தகத்தை வற் வரிக்கு உட்படுத்துவதன் மூலம் 2027ஆம் ஆண்டு முதல் வற் வரி விகிதத்தை 12 வீதமாகக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வாறு 2027ம் ஆண்டில் வற் வரி 12 வீதமாகக் குறையும் போது வரியிலிருந்து விடுவிக்கப்படும் பொருட்களின் பட்டியல் ஒன்றும் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அரசி, கோதுமை மாவு, சீனி, தேங்காய், மீன், மரக்கறிகள், பழங்கள், ஆங்கில சிங்களம் மற்றும் யுனானி மருந்து வகைகள், புத்தகங்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கிழங்கு, வெங்காயம், மிளகாய், மஞ்சள், உளுந்து போன்ற அனைத்துப் பொருட்களும் மக்களுக்கு அத்தியாவசியமானவை. அவை அனைத்தும் வற் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.



எம். எஸ். முஸப்பிர்

அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்கே ஆதரவளிப்பேன்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் சந்திப்பு



**பொருளாதாரப் பின்னடைவிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டல் மிகவும் முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டால் அவருக்கே முழுமையான ஆதரவை வழங்குவேன் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். துறைமுக, கப்பல்துறை மற்றும் விமானத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா எமக்கு பிரத்தியேக செவ்வியொன்றை வழங்கினார்.**

**கே: ஜப்பானின் உதவியுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டம் மீண்டும் தொடங்கப்படும் என நீங்கள் நம்புகின்றீர்களா?**

பதில்: ஆம், ஜப்பானின் உதவியுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத் திட்டத்தை மீண்டும் தொடங்குவது குறித்து நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன். சமீபத்தில் ஜப்பானிய நிதி மற்றும் வெளியுறவு அமைச்சர்களைச் சந்தித்து, இது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடியிருந்தேன். இந்தத் திட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். தற்போது, நடைபெற்று வரும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளால் இதனை முன்னெடுத்துச் செல்வதில் சிறியதொரு தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இதனை முன்னெடுப்பதற்கான தொழில்நுட்ப ரீதியான திட்டங்களைத் தயாரித்து வருகின்றோம். இதனைப் பூர்த்தி செய்ய ஐந்து முதல் எட்டு மாதங்கள் தேவைப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டு ஜப்பானிய தரப்புடன் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி இத்திட்டத்தை தொடங்க முடியும்.

**கே: செங்கடலில் ஏற்பட்ட மோதலினால் கொழும்பு துறைமுகம் ஆதாயமடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. தற்காலிகமாகக் கிடைத்திருக்கும் இந்த நன்மையை நீண்டகாலத்திற்கு மாற்ற எவ்வாறான திட்டங்களை வகுத்துள்ளீர்கள்?**

பதில்: செங்கடலில் அண்மையில் ஏற்பட்ட மோதல் கொழும்பு துறைமுகத்துக்கு சாதகமாக அமைந்தது. இதன் காரணமாக கொழும்புத் துறைமுகத்துக்கான கப்பல் போக்குவரத்து 23 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையைப் பயன்படுத்தி நீண்டகால ஆதாயங்களை உறுதி செய்ய மற்றும் துறைமுகத்தின் செயல்திறனை மேம்படுத்துவது குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம். செயல்பாட்டு நம்பகத்தன்மையை பராமரிக்கவும், துறைமுகப் பணியாளர்களிடம் நம்பிக்கையை அதிகரிக்கவும் அரை அல்லது முழு தானியங்கு செயல்பாடுகளை நோக்கி மாறுவதையும் நாம் நோக்காகக் கொண்டுள்ளோம். ஒரு துறைமுக சமூக அமைப்பைச் செயல்படுத்துவது என்பது காகிதமில்லா பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்கும் துறைமுகம் மற்றும் தளவாடச் செயல்முறைகளை மேம்படுத்துவதற்குமான ஒரு முக்கியமான முயற்சியாகும். பொது மற்றும் தனியார் பங்குதாரர்களிடையே தகவல் பரிமாற்றத்திற்கான அறிவார்ந்த மற்றும் பாதுகாப்பான இலத்திரனியல் தளமொன்றை நிறுவுவதற்கான ஆலோசனைகளைக் கோரியுள்ளோம்.

**கே: பெரிய விமானங்களுக்கு இடமளிக்கும் வகையில் யாழ்ப்பாணம் விமான நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?**

பதில்: யாழ்ப்பாணம் (பலாலி) விமான நிலையத்தை பெரிய விமானங்களுக்கு இடமளிக்கும் வகையில் விரிவாக்கம் செய்ய தனியாரிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டைக் கோரியுள்ளோம். காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்காக 67 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்குவதன் மூலம் இந்தியா வலுவான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் இந்த ஆதரவு, அவர்கள் யாழ்ப்பாணம் விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தங்கள் உதவியை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையை எங்களுக்குத் தருகிறது. இதன் ஊடாகப் பெரிய விமானங்கள் வந்து செல்வதற்கு இடத்தை ஏற்படுத்தி பிராந்திய நாடுகளுடன் இணைப்பை வலுப்படுத்த முடியும்.

**கே: மத்தள விமான நிலையத்தை இந்திய- ரஷ்ய கூட்டமைப்புக்கு வழங்குவதனால் கிடைக்கும் நன்மை யாது? இந்த விமான நிலையத்தை மேம்படுத்த அவர்கள் என்ன திட்டம் வைத்துள்ளனர்?**

பதில்: மத்தள விமான நிலையத்தை நிர்வகிப்பதில் இந்திய ரஷ்ய கூட்டமைப்பை ஈடுபடுத்துவதற்கான முடிவு வலுவான விமான நிபுணத்துவம் மற்றும் நிதி ஆதரவுடன் திறமையான பங்காளியின் தேவையிலிருந்து உருவாகிறது.

மூன்று வருடங்களின் பின்னர் வருமானப் பகிர்வு மாதிரியின் கீழ் மத்தள விமான நிலையத்தின் நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம், விமான நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் நிதி நம்பகத்தன்மையை அவர்களால் புத்துயிர் பெறச் செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த கூட்டாண்மை நிர்வாகத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறது, மேலும் உரிமையை தக்க வைத்துக் கொள்ளும்போது அவர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.

**கே: ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் பங்களிப்பு அதிகமாக இருப்பதால் புவிசார் அரசியலில் இது தாக்கத்தை ஏற்படுத்தும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

பதில்: ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்தியில் சீனா உட்பட பல்வேறு சர்வதேச தரப்பினரின் பங்களிப்பை நாம் ஆராய்ந்து பார்த்தோம். எங்கள் முடிவெடுக்கும் செயல்முறையானது, நமது தேசிய நலன்களுடன் ஒத்துப்போகும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை உறுதிப்படுத்த பல பங்குதாரர்களிடமிருந்து ஆர்வத்தை அழைப்பதை உள்ளடக்கியது.

இந்தக் கூட்டாண்மைகளில் இருந்து எழும் சாத்தியமான புவிசார் அரசியல் தாக்கங்களை நிர்வகிப்பதில் நாங்கள் விழிப்புடனும் செயலூக்கத்துடனும் இருக்கிறோம். ஆனால் இப்போதைக்கு, அத்தகைய சிக்கல்கள் எதுவும் இல்லை.

**கே: ஹிங்குராங்கொடை விமானத்தளத்தை சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையின் பின்னணி என்ன?**

பதில்: மத்தள போலல்லாமல், ஹிங்குராங்கொட விமான நிலையம் அதன் மூலோபாய இடத்தின் காரணமாக குறிப்பிடத்தக்க சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. ஹிங்குராங்கொடையை சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானமானது, மத்தள விமான நிலையம் ஆரம்பத்தில் இருந்து எதிர்கொண்ட சவால்களைப் போன்று அல்லாமல், அதன் குறிப்பிடத்தக்க சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் உருவானது.

தற்போதுள்ள ஓடுபாதை 2,287 மீற்றரிலிருந்து 2,500 மீற்றர் நீளம் மற்றும் 46 மீற்றர் அகலம் வரை விஸ்தரிக்கப்படும் இது கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படும். ஏ320 மற்றும் போயிங் பி737 போன்ற பெரிய விமானங்கள் வந்து செல்வதற்கு இந்த விஸ்தரிப்பு இடமளிக்கும். இது விரிவாக்கப்பட்ட சர்வதேச விமான நடவடிக்கைகளுக்கு உதவுகிறது.முக்கியமாக, பரந்த நிலம் கையகப்படுத்தலுக்கு அவசியமின்றி ஓடுபாதை மேம்பாட்டிற்கு போதுமான இடம் உள்ளது. இந்த அபிவிருத்தி முன்முயற்சி ஹிங்குராங்கொடவிற்கு நன்மை பயக்கும் என்பது மட்டுமன்றி, பொதுவாக பொலன்னறுவையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிக்கும்.

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தீர்மானித்தால், நீங்கள் அவருக்கு ஆதரவளிப்பீர்களா, அவ்வாறாயின் அதற்கான காரணம் என்ன?**

பதில்: ஆம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தால் அவருக்கு ஆதரவளிக்க நான் முனைகின்றேன்.

நாட்டை முன்னேற்றத்தை நோக்கி வழிநடத்தும் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் அவர் தனது சிறந்த தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தியுள்ளார். அவரது வேட்புமனு அறிவிக்கப்படாத நிலையில், இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு தேசத்தை திறம்பட வழிநடத்தத் தேவையான குணங்கள் அவரிடம் இருப்பதாக நான் நம்புகிறேன்.

**கே: உங்கள் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? ஜனாதிபதி தேர்தலில் அது யாருக்கு ஆதரவாக இருக்கும் அல்லது நீங்கள் வேட்பாளரை நிறுத்துவீர்களா?**

பதில்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய பல கட்சிகளைப் போலவே உள்ளக பிளவுகளை எதிர்கொண்டுள்ளது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யதார்த்தத்தை எதிர்கொள்வதுடன், யதார்த்தமற்ற நம்பிக்கைகளை மகிழ்விப்பதை விட இந்த உள்முரண்பாடுகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் நம்புகிறேன். தற்போது ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்தும் நிலையில் நாங்கள் இல்லை. மாறாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத் தேர்தலுக்கான தயாரிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு எமது செயற்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

### ‘நாட்டில் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு ஜனாதிபதித் தேர்தலே அவசியம்’

**கே: பொதுத்தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் எதுவாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன்?**

பதில்: நான் ஜனாதிபதித் தேர்தலை விரும்புகின்றேன், ஏனெனில் அனைத்துக் கட்சிகளும் தற்போது உள்முரண்பாடுகளை கையாள்கின்றன.

இந்த நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவது இந்தப் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கும். சில தரப்பினர் நிலைமையைப் பயன்படுத்தி வன்முறையைத் தூண்டுவதைத் தடுக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னுரிமை அளிப்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் எந்த நேரத்திலும் வன்முறையில் ஈடுபட விரும்பும் கட்சிகள் உள்ளன. எனவே, இது போன்ற வன்முறைச் செயல்களுக்கு இடமளிக்கக் கூடாது. மேலும், சர்வதேச சமூகத்தின் பார்வையில் நமது ஜனநாயக விம்பத்தை நிலைநிறுத்துவதற்கு சரியான நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல்கள் அவசியம்.

# பிரதமர் மோடிக்கு எதிராக பா.ஜ.கவுக்கு உள்ளேயே இயங்கும் முக்கிய புள்ளிகள்!



## ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க உறவில் விரிசல்! பா.ஜ.கவுக்காகப் பாடுபட்டவர்களை நரேந்திர மோடி ஓரங்கட்டுவதாகக் குற்றச்சாட்டு!

ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக பலர் அதிருப்தியில் இருக்கிறார்கள் என்ற பரபரப்பான தகவல் வெளியாகி வருகின்றது. பா.ஜ.க தலைவர்களை பிரதமர் மோடி ஒதுக்கி வருவதை ஆர்.எஸ்.எஸ் விரும்பவில்லை. அதனால்தான் இந்த முறை பா.ஜ.கவுக்கு ஆதரவாக ஆர்.எஸ்.எஸ் தேர்தல் பணிகளில் ஈடுபடவில்லை. இதன் அர்த்தம் என்னவெனில் நரேந்திர மோடியை ஆர்.எஸ்.எஸ் விரும்பவில்லை என்பதாகும்.

இத்தகவலை இந்தியாவின் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன் மற்றும் அரசியல் நோக்கர்கள் பலர் தெரிவித்திருக்கின்றனர்.

ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க இடையே முரண்பாடு நிலவுவதாக சமீப காலமாக செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

பா.ஜ.க தலைவர் ஜேபி நட்டா சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் இருந்து பா.ஜ.க கட்சி தனியாக சுதந்திரமாக வளர்ந்துள்ளதாகவும், இனிமேல் ஆர்.எஸ்.எஸ் அமைப்பிடம் பா.ஜ.க கையேந்த வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியுள்ளார்.

பா.ஜ.கவின் தேசியத் தலைவரே இப்படி நேரடியாக ஆர்.எஸ்.எஸ் பற்றி குறிப்பிட்டு இருப்பது தேசிய அரசியலில் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. முக்கியமாக 2024 லோக்சபா தேர்தலுக்கு நடுவில் இந்தப் பரபரப்பு வந்திருப்பது தான் அதிக விவாதத்தை ஏற்படுத்துகிறது.

இதேசமயம் ஏற்கனவே மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசத்தில் இருந்து பா.ஜ.கவிற்கு சில அதிர்ச்சி அளிக்கும் தகவல்கள் வரத் தொடங்கி உள்ளதாகவும் கூறப்படுகிறது. இதுதான் ஆர்.எஸ்.எஸ் உறவை பா.ஜ.க முறிக்க காரணம் என்றும் கூறப்படுகிறது.

பத்தாண்டு காலமாக மத்தியிலும், உத்தரபிரதேசத்தில் ஏழு ஆண்டுகளும் பா.ஜ.க ஆட்சியில் இருந்த நிலையில், ஆர்.எஸ்.எஸ் வட்டாரங்களில் பா.ஜ.க மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசாங்கம் ‘அவர்களுடையது’ என்ற போதிலும், உத்தர பிரதேசத்தில் ஆர்.எஸ்.எஸ் பணியாளர்கள் இம்முறை பெரிதாக தேர்தல் பணிகளை செய்ய வில்லை.



**பா.ஜ.க இம்முறை தனிப்பெரும்பான்மை ஈட்டுவது சாத்தியமில்லை; பிரதமராக மூத்த தலைவர் ஒருவரை நிறுத்துவதற்கு திட்டமிடுகிறது ஆர்.எஸ்.எஸ்!**

பா.ஜ.கவுக்கு உள்ளேயே பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகவே வேலை செய்வதில் ஒரு தரப்பினர் ஈடுபடுகின்றனர். ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் மோடிக்கு எதிராக பலர் அதிருப்தியில் இருக்கிறார்கள். அவர்களில் பலர் பிரதமர் மோடிக்கு எதிராக திட்டமிட்டு வேலை பார்க்கிறார்கள். மோடியை தோற்கடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயற்படுகின்றார்கள்.

பா.ஜ.கவில் சிறந்த தலைவராக இருந்தவர் முன்னாள் பிரதமர் வாஜ்பாய். பா.ஜ.கவின் மிக மென்மையான தலைவர் அவர். அப்படி ஒரு தலைவரை பா.ஜ.கவில் பார்க்க முடியாது. அவர் தன்னை முன்னிறுத்தியதே இல்லை. ஆனால் நரேந்திர மோடி தன்னை முன்னிறுத்துகிறார். இதனை பா.ஜ.கவிலேயே பலரும் விரும்பவில்லை.

இதனால்தான் பா.ஜ.கவில் மோடிக்கு எதிராகவே பலர் வேலை செய்கிறார்கள். மோடி தனது கட்சிக்கு உள்ளேயே பலரை வீழ்த்தி உள்ளார் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பா.ஜ.க மீதான வெறுப்புக்கு அதுவும் காரணமாகும்.

நரேந்திர மோடியை மேலும் வளர்க்க ஆர்.எஸ்.எஸ் விரும்பவில்லை. அதனால் தான் இந்த முறை ஆர்.எஸ்.எஸ் தேர்தல் பணிகளை செய்யவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

2024 லோக்சபா தேர்தல் தொடக்கத்தில் 400 இடங்களைப் பெறுவோம் என்று பா.ஜ.க முழக்கம் வைக்கத் தொடங்கியது. ஆனால் பா.ஜ.கவின் இந்தக் கோஷம் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கி விட்டது. மூன்றாம் கட்ட பிரசாரத்திலும் அந்தச் சத்தம் கேட்கவே இல்லை உதாரணமாக பிரதமர் நரேந்திர மோடி கடைசியாகச் செய்த பிரசாரங்களிலும் 400 என்ற வார்த்தையை பயன்படுத்தவே இல்லை. மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்பதை மட்டுமே கூறினார். மாறாக இலக்கு 400 என்பதை அவர் எங்குமே குறிப்பிடவில்லை.

பா.ஜ.க 272 ஆசனங்களை தனியாக பெற வாய்ப்பே இல்லை என்று அந்தக் கட்சிக்கு சில அறிக்கைகள் வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அதாவது பா.ஜ.க தனியாக ஆட்சி அமைக்க வாய்ப்பு இல்லை.

கூட்டணியான என்.டி.ஏ ஆதரவுடன் பா.ஜ.க ஆட்சி அமைக்கும் பட்சத்தில் பா.ஜ.கவிற்குள் பல உள்வேலைகளை பார்க்க ஆர்.எஸ்.எஸ் திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

இம்முறை லோக்சபா தேர்தலில் பா.ஜ.க தனிப்பெரும்பான்மை பெறாத பட்சத்தில் என்.டி.ஏ கூட்டணி ஆட்சி அமையுமானால் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பா.ஜ.க ஆட்சியில் கடுமையான தலையீடுகளை செய்யும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி நரேந்திர மோடிக்குப் பதிலாக கர்நாடகாவைச் சேர்ந்த பிரகலாத் ஜோஷியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்த ஆர்.எஸ்.எஸ் நினைக்கிறது.

பிரகலாத் ஜோஷி கர்நாடக மாநில பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவரும், 2009, 2014 மற்றும் 2019 ஆண்டுகளில் தார்வாடு மக்களவைத் தொகுதிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை உறுப்பினரும் ஆவார். இவர் தீவிரமான ஆர்.எஸ்.எஸ் நிர்வாகி. ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் இருந்து வந்தவர்.

“பாஜகவிற்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் இவரை பிரதமராக்க வேண்டும்..இல்லையென்றால் என்.டி.ஏ கூட்டணியை உடைப்போம்” என்று ஆர்.எஸ்.எஸ் வற்புறுத்துவதாக தகவல்கள் வெளியாகின்றன.

பா.ஜ.க முன்னைய தேர்தல்களில் வெற்றிபெற முக்கிய காரணம் பா.ஜ.க பிரசாரம் மற்றும் ஆர்.எஸ்.எஸ் நடத்திய உள்ளூர் பிரசாரம் ஆகும். ஆனால் உத்தர பிரதேசத்தில் இந்த முறை பா.ஜ.கவிற்கு ஆதரவாக களப்பணிகளை ஆர்.எஸ்.எஸ் நிர்வாகிகள் செய்யவில்லை.

ஆர்.எஸ்.எஸ் தரப்பு மோடியின் தனிப்பட்ட வளர்ச்சியை விரும்பவில்லை என்பதே இதற்கான காரணமாகும். ஆகவே பா.ஜ.கவில் இப்போது ஆர்.எஸ்.எஸ் குரல் இல்லாமலே போய்விட்டது.

அதேசமயம் ஆர்.எஸ்.எஸ் முடிவுகளை மோடி அமித் ஷா இருவரும் கேட்பது இல்லை. இருவரும் சுயமான முடிவுகளை எடுக்கின்றனர். இதன் காரணமாக ஆர்.எஸ்.எஸ் மௌனம் ஆகி உள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில், இம்முறை தேர்தல் முடிவை ஒட்டு மொத்த இந்தியாவே பெரும் எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

எஸ்.சாரங்கன்...

# Dr. கலாம் சர்வதேச ஒன்றிய புதுடில்லி சர்வதேச மாநாடு

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பங்கேற்பு




'தரமான கல்விக்கான சர்வதேச மாநாடு 2024' என்ற தொனிப்பொருளின் கீழ் சர்வதேச மாநாடு இந்தியாவின் புதுடில்லியில் இன்று ஆரம்பமாகி இம்மாதம் 30ஆம் திகதிவரை நடைபெறும்.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியில் இயங்கும் டொக்டர் கலாம் சர்வதேச ஒன்றியம், தரமான கல்விக்கான சர்வதேச அமைப்பு, தெற்காசிய சர்வதேச அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இம்மாநாடு நடைபெறுகிறது.

# சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன காலமானார்



சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன தனது 82ஆவது வயதில் நேற்று (25) காலை காலமானார்.

இலங்கையில் பல உயர்மட்ட மற்றும் பிரபலமான நீதிமன்ற வழக்குகளை மிகவும் திறமையுடன் இவர் வாதாடியுள்ளார்.

அத்துடன் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராகவும் சிறிது காலம் இவர் பணியாற்றியிருந்தார். இவர், நல்லாட்சி அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய பி.சி.திலக் மாரப்பனவின் சகோதரராவார்.

இவரது இறுதிச்சடங்கு தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென, இவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# பண்டத்தரிப்பில் இலவச தியான பயிற்சி



மனத்தூய்மைக்கான தியான பயிற்சி எதிர்வரும் திங்கட்கிழமை (27) ஆரம்பமாகி ஜூன் 07ஆம் திகதிவரை 10 நாட்களுக்கு யாழ். பண்டத்தரிப்பு பாத்திமா ரிட்ரீட் ஹவுஸில் நடைபெறவுள்ளது.

குருஜி எஸ்.என்.கோயங்காவின் வழிகாட்டலின் கீழ் இலவசமாக இப்பயிற்சி நடத்தப்படவுள்ளதுடன், இதில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. விபாசனா தியான மையத்தில் இணைய விரும்புவர்கள் 0716439454, 0773504491, 0774935850 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

அல்லாவிடின் www.sobha.dhamma.org ஊடாக முன்பதிவு செய்ய முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சாய் சரணாலயத்தில் திருவாசகம் முற்றோதல்





இறைவன் திருவருளால் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசக பாடல்கள் முற்றோதுதல் நிகழ்வு எதிர்வரும் ஜூன் 02ஆம் திகதி கொட்டாஞ்சேனை சாய் சரணாலயத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது. ஜெயந்தி நகர ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அறங்காவலர் தெ.பெரமநாயகத்தின் வழிநடத்தலில் சிவனடியார்களான எஸ்.செல்வ விநாயகம் (செல்வம்), எச்.எச்.விக்கிரமசிங்க இருவருமே இந் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் தமிழகத்திலிருந்து வருகை தரும் திருமுறை தேனமுத கலாநிதி கோவை சிவத்திரு ஆ.சுப்பிரமணியம் ஓதுவார், திருமுறை இசைச் செல்வர் பழனி சிவத்திரு வெ.விக்னேஷ் ஆறுமுகம் ஓதுவார் ஆகிய நிகழ்வை கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிசுவாமி ஆலய பஜனை குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். அடியார்கள் அனைவரும் வருகை தந்து நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## யாழ். மாவட்டம், மக்கள்...

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கான யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளை கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி கட்டடத்தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த சபையில் உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இன்று இங்கு வந்தமைக்கு தனிப்பட்ட முறையில் ஜனாதிபதிக்கு நான் நன்றி கூறுகின்றேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலம் முதல் வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். இன்று திறந்து வைக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தின் இந்த மருத்துவபீடக் கட்டடம் வடக்குக்கு மாத்திரமன்றி நாட்டுக்கும் ஒரு நல்ல முதலீடாகுமென சுட்டிக்காட்டலாம். மேலும் இது எதிர்காலத்தில் இலங்கையில் நிபுணர்களின் புகலிடமாக மாறும் என நான் நம்புகின்றேன்.

முன்னதாக இந்த சபையில் உரையாற்றியவர்கள் கூறியது போல் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியிலும், மக்களின் முன்னேற்றத்திலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார். 2005 இல் உங்கள் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதனை வடக்கு மக்கள் இப்போதாவது வருந்துவதுடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கின்றேன். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை நான் வாழ்த்துகின்றேன்.

# நுவரெலியாவில் மழையுடன் வீதிகளில் அதிக பனிமூட்டம்

## சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை



நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையைத் தொடர்ந்து நுவரெலியாவில் நேற்கு (25) காலை முதல் மழையுடன் கடும் பனிமூட்டம் நிறைந்து காணப்பட்டது.

குறிப்பாக நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியில் பிளக்பூல் சந்தி, வெண்டிகோனர், பங்களாஹத்த, நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதி போன்ற இடங்களில் வழமைக்கு மாறாக கடும் பனிமூட்டம் காணப்பட்டது. இதனால் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

நுவரெலியா ஹட்டன் ஏ07 பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் அதிக ஒலி எழுப்பியவாறும், வாகன மின் விளக்குகளை ஒளிரவிட்டும் சென்றதை அவதானிக்க முடிந்தது. தொடர்ந்து மழை பெய்வதால் கடும் குளிருடன் கூடிய காலநிலை காணப்பட்டது.

குறிப்பாக வெசாக் பௌர்ணமி தொடர் விடுமுறை வழங்கப்பட்டுள்ளமையால் வெளி மாவட்டங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு வாகனங்களில் வருகை தந்துள்ளனர்.

எனவே எதிரே வரும் வாகனங்கள் தெரியாதபடி கடும் பனிமூட்டம் நிலவுவதால், விபத்துகளை தடுக்கும் நோக்கில் மிகவும் அவதானமாக தமது வாகனங்களை செலுத்துமாறும் வாகனங்களை செலுத்தும் போது தமக்கு உரித்தான பக்கத்தில் வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிர செய்தவாறு வாகனங்களை செலுத்துமாறும் போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## அதிகரிக்க முடியாத...

நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுக்கள், 22 அரச தோட்ட நிறுவனங்களை ஆராய்ந்து, அந்தந்த நிறுவனங்கள் உண்மையில் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளனவா?, அப்படியானால், என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? அந்த பெருந்தோட்ட நிறுவனங்கள் தொடர்பாக சம்பளம் வழங்க முடியாத அளவுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பலவீனமாக இருந்தால், அந்த நிறுவனங்களை அரசு பொறுப்பேற்று முதலீட்டாளர்களிடம் ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

நிறுவனங்களினூடாக ஊழியர்களுக்கும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் சேவையாற்ற முடியாவிடின் தோட்டக் கம்பனிகளை திறமையாக நடத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கடந்த 21ஆம் திகதி தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை 1,700 ரூபாவாக உயர்த்துவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மே மாதம் முதலாம் திகதி அறிவித்தார். இதன்படி தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 1,350 ரூபாயாகவும் உற்பத்தித்திறன் அடிப்படையில் 350 ரூபாயாகவும் அதிகரிக்கப்படும்.

## கதிர்காமக் கந்தன்...

எதிர்வரும் ஜூலை 06ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக, கதிர்காமம் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். திருவிழாவுக்கான பந்தல் கால் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு சுபமுகூர்த்த வேளையில் நடைபெற்றது. கதிர்காமக் கந்தனுக்கு 16 நாட்கள் திருவிழா நடைபெற்று, ஜூலை 21ஆம் திகதி இரவு பிரதான பெரஹரா நடைபெறும். 22ஆம் திகதி மாணிக்க கங்கையில் நீர்வெட்டு உற்சவத்துடன் திருவிழா நிறைவுறுமெனவும், அவர் தெரிவித்தார்.

## 2024 இல் ஜனாதிபதி...

சுட்டிக்காட்டினார். ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துவதே ஜனாதிபதியின் நோக்கமாகும் எனவும், உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மல்வானையில் இரண்டு...

மீண்டும் திரும்பி வராததால் விடுதியிலிருந்த நபரொருவர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜ.ம.மு. கட்சியின்...

குணவர்தன மண்டபத்தில் கட்சித் தலைவர், கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

கூட்டணியின் பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம் எம்.பி., வே.இராதாகிருஷ்ணன் எம்.பி., கேகாலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பிரமுகர்கள் கபீர் ஹசீம் எம்.பி., சுஜித் சஞ்சய் பெரேரா எம்.பி., ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவர் வேலுகுமார் எம்.பி. ஆகியோர் உட்பட கட்சி, கூட்டணி அரசியல் குழு உறுப்பினர்களும் விசேட அழைப்பாளர்கள், மாவட்ட கட்சி அங்கத்தவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் முருகேசு பொறுப்பேற்றுள்ளார். ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக வலய, தோட்ட பிரிவு வலய, நகர வலய அமைப்பாளர்களின் தலைமையிலான செயற்குழு உறுப்பினர்கள் அடங்கிய முழு மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடாக இந்நிகழ்வு, 'ஒன்றிணைந்து வெல்வோம்! தேசிய அரங்கில் இடம்பெறுவோம்!' என்ற தொனிப்பொருளில் நடைபெறுமென பரணீதரன் முருகேசு தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி இல்லாதிருந்தால்...

விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி கண்ட பின்னர், எமது நடவடிக்கை அமைதியாகவே இருந்தது. கடந்த 2020 இல் படுதோல்வியை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்கொண்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், கொரோனா தொற்று பரவல் மற்றும் கட்சியில் கருத்து வேறுபாடு காரணமாக பலர் பிரிந்து போன நிலையிலும் தாங்கள் கட்சியை விட்டு வெளியே போகவில்லையென்றும் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார். அடுத்த தேர்தலே தனது அரசியல் பயணத்தின் இறுதித் தேர்தல் என்றும், அதிலிருந்து தானும் அரசியலில் இருந்து விலகி விடுவேன் என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## Remal எனும்...

நோக்கி நகர்வதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த சூறாவளிக்கு Oman நாட்டினால் பரிந்துரை செய்யப்பட்ட Remal எனும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சூறாவளி காரணமாக நாட்டில் பலத்த மழை வீழ்ச்சி, கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதனையொட்டிய மேற்கு மத்திய வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் கடந்த நாட்களில் உருவாகிய தாழமுக்கம் இன்று பாரிய சூறாவளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூறாவளி நேற்று அதிகாலை 5.30 மணிக்கு தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியான வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து மத்திய வங்கக்கடலில் புயலாக உருவாகக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ISIS நபர்களுடன்...

கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு நபர்களுடன் தொடர்பு வைத்திருந்த நபர்கள் தொடர்பில் ஏற்கனவே தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒருவர் மாளிகாவத்தையில் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரே சம்பந்தப்பட்ட நால்வருக்கும் விமான பயணச் சீட்டுகளை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் தற்போது பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். இதேவளை, பாகிஸ்தானில் ISIS தலைவராக செயற்படும் அபு என் பவரின் ஆலோசனைக்கமைய, இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். நர்மதா கங்கைக்கருகிலுள்ள பகுதியொன்றில் இவர்களின் நிழற்படமும் கையடக்கத் தொலைபேசிகளும் பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கிகளும் ரவைகளும் இதன்போது மீட்கப்பட்டிருந்தன. அத்தோடு, ISIS அமைப்பின் கொடியும் கைப்பற்றப்பட்டதுடன், தாக்குதலை நடத்திய பின்னர் அந்தக் கொடியை அங்கு ஏற்றுமாறு தமக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையரும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமரர் ஆறுமுகன்...

சௌமிய பவனில் விசேட பூஜை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை 7.30 மணிக்கு தலைமையகத்திலுள்ள விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை நிகழ்வும் காலை 8.00 மணிக்கு இ.தொ.கா. ஸ்தாபகர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மாலைகள் அணிவிக்கும் நிகழ்வும் நடைபெறும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நிதிச் செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்பு கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினருமான மருதுபாண்டி இரமேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அமரர் ஆறுமுகன் தொண்டமானின் சேவைகளை நினைவுகூரும் வகையில் 1,000 புகைப்படங்களை உள்ளடக்கிய புகைப்பட கண்காட்சியொன்றுக்கும் ஏற்பாடு செய்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடக இணைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.தேவதாஸ் தெரிவித்தார்.

இதை முன்னிட்டு பதுளை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இ.தொ.கா. முக்கியஸ்தரும் முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டி.வி.சென்னன் தெரிவிக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இ.தொ.காவின் பொதுச் செயலாளராக அமரர் ஆறுமுகம் தொண்டமான் இருந்த காலத்தில் தோட்டங்களை நிர்வகித்து வரும் முதலாளிமார் சம்மேளனத்திற்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்.

தொழிலாளர்களின் நாள் சம்பள உயர்வு கோரிக்கை உட்பட பல்வேறு அடிப்படை தேவைகளை நிறைவேற்றி கொள்வதற்காக கம்பனி நிர்வாகங்களிடம் அவர் மேற்கொண்ட அணுகுமுறை கம்பனி நிர்வாகத்தினரை அச்சமடையச் செய்திருந்தது.

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு போராட்டத்தின் போது பொகவந்தலாவ தோட்டப்பகுதியில் ஒரு கொழுந்திற்கு ஒருநாள் பேர் போராட்டம் கம்பனி நிர்வாகத்தினரை சம்பள விவகாரத்தில் இணக்கப் போக்குடன் செல்வதற்கு வழி அமைத்தது.

இன்றைய சம்பள உயர்வு போராட்டத்தின் போது அமரர் ஆறுமுகம் தொண்டமான் உயிருடன் இருந்து இருந்தால் கம்பனிகள் இவ்வளவு தூரம் வீராப்பு காட்டி முரண்பட்டிருக்காது.

அவரின் இழப்பு உழைக்கும் மலையக பாட்டாளி வர்க்கத்திற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் தலைமைத்துவத்தை நினைவுகூரும் வகையில் பதுளை மாநில இ.தொ.கா பணிமனையில் விசேட அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தோட்டங்கள் தோறும் ஆலயங்களில் ஆத்ம சாந்திக்கான விசேட பூஜை வழிபாடுகளும், நலனோம்பல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்றார்.

## மக்களின் காணி உரிமை...

அடையாளமாக சிலருக்கு வழங்கி வைத்தார். 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு 13,858 இலவச காணி உறுதிப்பத்திரங்கள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளன.

கடந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வடமாகாண வீட்டுத்திட்டம் அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் இந்த இலவச காணி உரிமைத்திட்டம் அதன் ஒரு படியாகுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உறுமய வேலைத்திட்டம் நாட்டிலேயே மிகப்பெரிய தனியார்மயமாக்கல் வேலைத்திட்டம் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில், "நாட்டு மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்த வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கமாகும். அனைத்து மக்களுக்கும் அவர்கள் வாழும் மண்ணில் முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த பத்திரங்கள் இன்று வழங்கப்பட்டது போன்று இந்தப் பணி எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படும். காணி ஆணையாளர் திணைக்களத்தில் பணியாளர் பற்றாக்குறையால், பணிகள் சற்று தாமதமாகி வருகின்றன.

அது பற்றி கலந்துரையாடிய பிறகு காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்துக்கு 100 புதிய பணியாளர்களையும், நில அளவைத் திணைக்களத்துக்கு 150 பேரையும் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இதன்படி எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை மிகவும் திறமையான முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

காணிப்பிரச்சினை வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அரசாங்கக் காணிகளில் குடியேற்றப்பட்ட மக்களைத் தவிர யுத்தத்தினால் காணிகளை இழந்தவர்கள் ஏராளம். தீர்க்கப்பட வேண்டிய இரண்டு பிரச்சினைகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது என்னுடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளனர். அதற்கமைவாக, பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடி, பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள காணிகளில், காணி விடுவிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அந்த அனைத்து காணிகளும் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. வனவளப் பாதுகாப்புத்துறை கையேற்ற காணிகள் குறித்தும் பிரச்சினை உள்ளது. இந்தப் பிரச்சினை வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல. தென் மாகாணத்திலும் இந்தப் பிரச்சினை உள்ளது. எனவே, 1985 வரைபடத்தின்படி, காடுகளாக உள்ள பகுதிகளை, காடுகளாக பேணவும், மீதமுள்ள காணிகளை காடு அல்லாத பகுதிகளாக கருதவும் கொள்கை ரீதியான முடிவு எடுத்துள்ளோம். தற்போது அது தொடர்பில் ஆலோசித்து வருவதோடு குறிப்பிட்ட காணிகளை வழங்குமாறும் தெரிவித்துள்ளோம். தொல்பொருளியல் திணைக்களத்தின் கீழும் அதிகளவிலான காணிகள் உள்ளன. தொல்பொருளியல் நடவடிக்கைகளுக்கு தேவையான காணிகளை தவிர்த்து ஏனைய காணிகளை மீள ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் இந்தக் காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அத்துடன் யாழ்ப்பாணத்தின் உயர்பாதுகாப்பு வலயம் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது.

விசேட ஆய்வுகளின் பின்னர் மேலும் விடுவிக்கப்படக்கூடிய காணிகளை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நாட்டின் அனைத்து மக்களினதும் காணி உரிமையை உறுதிப்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை உருவாக்க எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இம்மாகாண மக்களுக்கு தேவையான வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை ஒதுக்க முடியவில்லை. ஆனால் அடுத்த ஆண்டு முதல் மீண்டும் அது ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

இந்த இலவச பத்திரங்களை வழங்குவதும் அந்த திட்டத்தின் ஒரு பகுதி என்றுதான் கூற வேண்டும். இலவசப் பத்திரங்களை வழங்குவதை இந்நாட்டின் மிகப்பெரிய தனியார்மயமாக்கும் திட்டம் என்று கூறலாம்.

ஜப்பான், கொரியாவைத் தவிர வேறு எந்த நாடும் அந்த வகையில் மக்களுக்கு காணி உரிமை வழங்கவில்லை. ஆனால், ஜப்பானும் கொரியாவும் மக்களுக்கு இலவசமாக காணி உரிமையை வழங்கவில்லை.

குறைந்த விலையில் வாங்குவதற்கான வாய்ப்பை மட்டுமே தருகிறது. ஆனால் எமது நாட்டில் மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்குவதற்காக செயற்பட்டு வருகின்றோம்.

பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரையிலும் மட்டக்களப்பிலிருந்து நீர்கொழும்பு வரையிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இலங்கை மக்கள் தங்கள் இனம் அல்லது மதம் எதுவாக இருந்தாலும் பாரம்பரியமாக காணி உரிமையை மதிக்கின்றனர். இன்று நீங்கள் அதை சரியாகப் புரிந்து கொள்கிறீர்கள்.

அந்த நிலத்தைப் பாதுகாத்து உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது உங்கள் பொறுப்பு என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்" எனத் தெரிவித்தார்.

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

# சீரற்ற காலநிலை வேளையில் மிகுந்த எச்சரிக்கை அவசியம்!

விருட்சமாக நிற்கின்ற மரங்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அழகுக்காக நடப்பட்டவையாகும். சில இடங்களில் இருநூறு வருடகால பழைமை வாய்ந்த மரங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறான மரங்களும் ஆபத்து மிக்கவையாகும். அம்மரங்கள் சரிந்து விழுமானால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை நினைத்துப் பார்க்க முடியாது. இந்நாட்களில் கடும் காற்று வீசுவதால் கொழும்பு மாத்திரமன்றி ஏனைய பிரதேசங்களிலும் வீதியோரம் நிற்கின்ற மரங்கள் குறித்து மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்.

இதேவேளை மரங்கள் முறிந்து வீழ்வதால் ஏற்படுகின்ற சேதங்களைத் தடுக்கும் வகையிலான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்திருக்கின்றார்.இலங்கையில் நிலவுகின்ற சீரற்ற வானிலை தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டின் 18 மாவட்டங்களில் 9688 குடும்பங்களைச் சேர்ந்த 35,796 பேர் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சீரற்ற காலநிலையின் போது மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தங்களது உயிரை மாத்திரமன்றி, உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளத் தவறக் கூடாது.

# பெருந்தோட்டக் கம்பனிகளை சரியாகக் கணித்தவர் ஜனாதிபதி

## சம்பள அதிகரிப்பை சாத்தியமாக்கக் கூடியவர் அவரே

பெருந் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் இரண்டாவது விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.



இந்த வர்த்தமானி அறிவிப்புக்கமைவாக மே மாதம் 01ஆம் திகதி ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி விசேட வர்த்தமானி அறிவிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பி.சி. விமலவீரவின் கையெழுத்துடன் சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவிப்புக்கமைவாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1700 ரூபாவாக வழங்கப்படவேண்டும் அத்தோடு இந்தக் கெடுப்பனவு இம்மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளம் 1350 ரூபாவாகும். நாளாந்த விசேட கொடுப்பனவு 350 ரூபாவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமான தோட்டத் தொழிலாளர்கள் பறிக்கும் தேயிலைக் கொழுந்து மற்றும் இறப்பருக்கு கிலோ ஒன்றுக்கு 80 ரூபாவாக வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் இதற்கு உடன்பட்டதாகத் தெரியவில்லை. ஆரம்பம் முதலே தோட்டத் தொழிலாளர்களின் 1700 சம்பள அதிகரிப்புக்கு இணங்கவில்லை. தோட்டத் தொழில் துறை உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதால் இதனை வழங்க முடியாதென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மே மாதம் 01ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைவாக சம்பள அதிகரிப்பு தொடர்பில் தோட்ட நிர்வாகங்கள் அல்லது தனிப்பட்ட நபர்கள் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்காக கடந்த 15ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் எவரும் இது தொடர்பில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காததால், தொழில் அமைச்சு கடந்த 21ஆம் திகதி முதல் சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது.

இந்நிலையில் சில தோட்ட நிர்வாகங்கள் இந்த அதிகரிப்பை வழங்கமுடியாதெனக்கூறி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, இது தொடர்பில் 3 விடயங்களை முன்னிலைப்படுத்தி சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதில் சம்பளத்தை வழங்க முடியாத, திறனற்ற தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட தோட்டங்கள் தொடர்பான ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக கடுமையான தொனியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது தோட்டத் தொழிலாளர் தொடர்பில் ஜனாதிபதி கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருப்பதாக பலரும் தெரிவித்துள்ளனர். இந்த அமைச்சரவை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 3 விடயங்களுக்காக விசேட குழுவொன்று அமைக்கப்படுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குழு ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள நீண்ட காலம் செல்லும் என்பதாக சிலர் வாதிடுகின்றனர். ஆனால் ஜனாதிபதியின் இந்த முடிவு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை இழுத்தடிப்பதாக அமையாது. ஏனெனில் தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய பொருளாதார நிலை தொடர்பில் கவனம் செலுத்தியே ஜனாதிபதி சம்பள அதிகரிப்பை நேரடியாக அறிவித்துள்ளார் என்பது தோட்டத் தொழில் துறையை சார்ந்த நலன் விரும்பிகளின் அபிப்பிராயமாக அமைந்துள்ளதாக பலரும் குறிப்பிடுகின்றனர்.

தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தோட்டங்கள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட நாள் முதல், சம்பள அதிகரிப்பு தொடர்பில் இவ்வாறான இழுபறி நிலை இருந்து வருகிறது. இதனை ஜனாதிபதி நன்கறிவார். தோட்டங்கள் 1992ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச காலத்தில் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன.

அப்பொழுது பிரதமராக இப்போதைய ஜனாதிபதி பணியாற்றிருந்தார். அன்று முதல் இத் தொழிற் துறையில் நிலவும் பிரச்சினைகளை ஜனாதிபதி நன்கு அறிவதுடன் ஜனாதிபதி தொழிலாளர்கள் தொடர்பிலும் கரிசனையுடன் செயல்படுகிறார்.

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டுள்ள தேசிய தொழிலாளர் சங்கம் செயற்பட்டு வருகிறது. இதில் ஏனைய தொழிற் சங்கங்களைப் போன்று தொழிலாளர் விடயங்களிலும், தோட்டங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

1992ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டங்கள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. இந்தக் கம்பனிகளில் சில காத்திரமானமுறையில் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றன. தேயிலைக் கொழுந்தைப் பறிக்கும் தொழிலாளர்கள் சிலர் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாத வருமானத்தைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறான நிலையில் சில தோட்டங்கள் நஷ்டக் கணக்கு காட்டுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது. இதற்கு சில கம்பனிகள் பராமரிப்பில் காட்டிவரும் அக்கறையின்மையே காரணம். 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோட்டக் கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அப்பொழுது 750 ரூபா சம்பள அதிகரிப்புக்கு கம்பனிகள் இணக்கம் தெரிவித்தன. இது தொடர்பான உடன்படிக்கை இறுதியாக 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு கோரப்பட்டது. அப்பொழுதும் நிர்வாகங்கள் அதனைக் கொடுக்க மறுப்பு தெரிவித்தன. அக்காலப்பகுதியில் ஆடைத் தொழிற்துறையில் பணிபுரிபவருக்கு 7500 தொடக்கம் 15450 ரூபா வழங்கப்படுவதாகவும் இதேபோன்று நாட்டின் பல்வேறு துறைகளில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதையும் சுட்டிக்காட்டி 1000 ரூபா சம்பள அதிகரிப்பை தட்டிக்கழிக்க முனைந்தனர். நாளாந்தம் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு 25 நாட்களுக்கு 25000 ரூபா சம்பளம் கிடைக்குமென மேற்படி விடயங்களை சுட்டிக்காட்டி தட்டிக் கழித்தனர்.

இப்பொழுதும் அவ்வாறே செயற்பட முயற்சிக்கின்றனர். வியட்நாம் சோசலிச நாடாக இருந்த போதிலும் முதலீட்டாளரைப் பாதுகாப்பதற்கும் தொழிலாளர் சட்டங்களை உருவாக்குவதற்கும் முன்னிலையில் செயற்படுகிறது. அங்கு நிறுவனங்கள் முறையாக செயல்படுவதாக சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலை இலங்கையில் அவ்வாறில்லை என இவர்கள் கூறுகின்றனர்.

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்குச் சொந்தமான தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன பல காலமாக செலுத்தப்படவில்லை. தற்பொழுது சமகால அரசாங்கம் 5 பில்லியன் ரூபாவை இக்கொடுப்பனவுக்காக வழங்கியிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்திருந்தார்.

இது தொழிலாளர் நலன் தொடர்பில் சமகால அரசாங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிக்காட்டியுள்ளது. தோட்டங்கள் தொழிலாளர்களுக்கு மேலதிக வருமானங்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், நாட்டுக்கும் வருமானத்தை பெறக் கூடிய வகையில் நிர்வகிக்கப்பட வேண்டும். இதற்காக தொழிலாளர்களுக்கு மேலதிக வருமானத்திற்கான வழிமுறைகள் இருக்க வேண்டும். தோட்டக் கம்பனிகளுக்கு தொழிலாளர்கள் மீது உண்மையான ஈடுபாடு இருக்குமாயின் பலவழிகளிலும் இதற்கு உதவமுடியும்.

ஆனால் தோட்டங்கள் முறையாக பராமரிக்கப்படாததினால் இன்றைய நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். காரணம் பல தோட்டங்களில் காடுகளினால் தேயிலைச் செடிகள் மூடப்பட்டுள்ளன.

இங்கு விலங்குகள் மட்டுமின்றி பாம்பு, அட்டை முதலானவையும் காணப்படுகின்றன. மேலதிகமாக சிறுத்தை நடமாட்டமும் அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் என்ன? ஆங்கிலேயர் காலத்தில் இந்நிலை காணப்பட்டதா? 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 12 வருடங்களுக்குப் பின்னர் பெருந்தோட்டங்களில் இந்நிலை ஏற்படுவதற்கு காரணம் என்ன? .

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலில் பல்வேறு சவால்களை சந்தித்துள்ளதுடன் நிர்வாகத்துறையிலும் அனுபவம் மிக்கவர். அவர் பிரதமராகவிருந்த காலப்பகுதியில் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட தோட்டங்களின் தற்போதைய நிலையை சரியாகக் கணித்தார்.

இதனாலேயே, கடந்த அமைச்சரவையில் 3 கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிவித்துள்ளார். எனவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு அவராலேயே வழங்கப்படும் என்பது பல தொழிற் சங்கங்களின் நம்பிக்கையாக உள்ளது.

இதேவேளை சில தோட்டக் கம்பனிகள் பாம் ஒயில் மரங்கள் மூலம் கூடிய வருமானத்தை பெறுவதில் நாட்டம் காட்டி வருகின்றது. இவற்றினால் நீர்வளம் முற்றாக அழிந்துவிடும். இவற்றின் மூலமான வருமானத்துக்காக இயற்கை அழிவையும் பொருட்படுத்தாமல் சில கம்பனிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் பெருந்தோட்டத் துறை மாத்திரமின்றி இதனை அண்டியுள்ள கிராமங்களும் எதிர்காலத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் என்பதையும் இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது அவசியமானது.

**ஏ.கே.எம். பிள்ளை**

---

# மீரிகமவை உலுக்கிய கொலைகள்

## சந்தேக நபரான மருமகன் கைது

கடும் வறட்சி, உஷ்ணமான காலநிலையையடுத்து நீண்ட இடைவெளிக்கு பின்னர் கொட்டித்தீர்க்கிறது மேமாத பருவ மழை. போதாததற்கு மீரிகம பிரதேசத்தையே உலுக்கியது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரின் மரணம்.

மீரிகம மாலதெனிய பிரதேசத்தில் பணத்துக்காக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியது.

அது கடந்த 18ஆம் திகதி. நால்ல பொலிஸார் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது இவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து ஒருதரப்பினர் மீரிகம மாலதெனிய நோக்கியும் இன்னுமொரு தரப்பினர் மற்றொரு பக்கமும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

19ஆம் திகதி அதிகாலை 2 மணியிருக்கும். மாலதெனிய பகுதியிலிருந்து மீரிகம நோக்கி நபரொருவர் சைக்கிளை தள்ளிக்கொண்டுசென்றுக்கொண்டிருந்தார். உடனே பொலிஸார் அவரை வழிமறித்தனர். அவருடைய சைக்கிளின் இரண்டு சில்லுகளிலும் காற்றுப் போயிருந்தது.

அவரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட போது அவரிடமிருந்து ரூ.255,000 பெறுமதியான தங்க மோதிரம் தங்கச் சங்கிலி மற்றும் குறடொன்றும் அவரிடமிருப்பது கண்டறியப்பட்டது.

அவர் அணிந்திருந்த ஆடையில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த கத்தி, கையுறை என்பவற்றையும் பொலிஸார் மீட்டனர்.

இதனையடுத்து சந்தேகம் வலுக்கவே, சந்தேகநபரை பொலிஸார் நால்ல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அவர் அணிந்திருந்த சட்டைப் பையில் மாலதெனிய பிரதேசத்திலுள்ள வீடொன்றின் விலாசம் அடங்கிய காகிதத் துண்டு காணப்பட்டது.

இதனையடுத்து விசேட பொலிஸ் குழுவினர் அவ்விலாசத்தை தேடிச் சென்றனர். இதன்போதே, பொலிஸார் சென்ற வீட்டில் பெரும் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளமை தெரியவருகின்றது.

> **தாயும் தந்தையும் அவர்கள் உறங்கும் அறையிலும் மாற்றுத்திறனாளியான மகனின் சடலம் வரவேற்பறையிலும் கிடப்பதை பொலிஸார் அவதானித்தனர். உயிரிழந்த மகனுக்கு இரத்தக் காயம் இருந்ததாகவும், அவர்கள் மூவரும் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகித்தனர்**

பொலிஸார் அங்கு சென்ற போது வீட்டின் கதவுகள் அனைத்தும் திறந்திருந்தன. வீட்டுக்குள் நுழைந்த பொலிஸாருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. அந்த வீட்டிலிருந்த அனைவரும் பரிதாபகரமான முறையில் கொலைசெய்யப்பட்டு ஆங்காங்கே வீழ்ந்து கிடந்தனர்.





அதுமட்டுமின்றி, மின்சார மானிக்கு சமீபமாக வீட்டுக்கு மின்சாரத்தை வழங்கும் பிரதான மின்கம்பி அறுந்து கிடப்பதையும் பொலிஸார் அவதானித்தனர்.

குறடினால் மின்சாரத்தை துண்டித்து அதன்பின்னர் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் ஊகித்தனர்.

மீரிகம மாலதெனிய பகுதியைச் சேர்ந்த நுகதேனி ஆராச்சிகே லயனல் பிரேமசிறி (வயது 78), அவரது மனைவி துலியாவதி ஜயலத் மெனிக்கே (80) மற்றும் மாற்றுத்திறனாளியான மகன் நுகதேனி ஆராச்சிகே சுமுது பிரியசாந்த (42) ஆகியோரே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

தாயும் தந்தையும் அவர்கள் உறங்கும் அறையிலும் மாற்றுத்திறனாளியான மகனின் சடலம் வரவேற்பறையிலும் கிடப்பதை பொலிஸார் அவதானித்தனர். உயிரிழந்த மகனுக்கு இரத்தக் காயம் இருந்ததாகவும், அவர்கள் மூவரும் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகித்தனர்.







லயனல் என்றால் அந்த ஊரில் பெரியவர், சிறியவர் என அனைவருக்கும் தெரிந்தவர். அமைதியான யாருக்கும் எந்த தொந்தரவும் இல்லாமல் வாழ்ந்துவந்த மனிதர் என ஊரவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் ஒரு திறமையான விவசாயி. 2002ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 20 வருடங்கள் அவ்வூர் விவசாய அமைப்பின் செயலாளராக செயற்பட்டு வந்திருக்கிறார். ஊரிலுள்ள விகாரையின் அனைத்து புண்ணிய காரியங்களிலும் முன்னின்று செயற்பட்டார்.

அவர் சம்பாதிக்கும் பணத்தை மனைவி, மகனின் நலனுக்காக செலவழித்தார். தங்களுக்குப் பிறகு மாற்றுத்திறனாளியான மகனை பாராமரிக்க யாருமில்லை என்ற கவலை அவரை வாட்டியது. இதனால் மகனுக்காக ஒவ்வொரு நாளும் உழைப்பில் ஒரு சிறு தொகைப் பணத்தைச் சேமித்துவந்தார். எனினும் அதுவே அவருக்கு எமனாக மாறும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

லயனலின் மூத்த சகோதரியின் மகள் சிலாபத்தை சேர்ந்த ஒருவரை திருமணம் முடித்துள்ளார். அவர் பெயர் சமிந்த ரொஷான். 44 வயதான இவரின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் மாலதெனியா பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கியிருந்தனர். தொழில் நிமித்தம் ரொஷான் சிலாபத்தில் தங்கியிருந்தான். மனைவியையும் பிள்ளைகளையும் பார்ப்பதற்கு வாரம் ஒருமுறை வந்து செல்வது இவரின் வழக்கமாக இருந்தது. கடைசியாக மாலதெனியா வந்த போது லயனலின் வீட்டுக்கு வந்திருந்தார். தொலைக்காட்சி திருத்தவேலைகளுக்காக வந்து போனார். இதன்போது தனது வருமானத்தில் கிடைத்த பணத்தை லயனல் சரிபார்த்து எடுத்து வைத்துகொண்டிருந்தார். இதை அங்கு தொலைக்காட்சி திருத்த வேலைகளுக்காக வந்திருந்த மருமகன் ரொஷான் யன்னல் வழியாக பார்த்துகொண்டிருந்தான்.

சிலாபத்தில் தங்கியிருந்த இவன் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்டு பெருந்தொகை பணத்தை இழந்துள்ளார். இதனால் கடனாளியான இவர் லயனல் சேர்த்துவைத்திருக்கும் பணத்தை கொள்ளையடிக்க திட்டம் தீட்டினார்.

அதன்படி கடந்த 18ஆம் திகதி இருள் சூழ்ந்ததும் தனது மனைவிக்கு தெரியாமல் சிலாபத்திலிருந்து மாலதெனியா நோக்கி முச்சக்கர வண்டியில் வந்து லயனலின் வீட்டுக்கு பின்புறமாகவுள்ள பாழடைந்த வீட்டில் மறைத்திருந்தார். அதன் பின்னர் நள்ளிரவில் லயனலின் வீட்டுக்கு சென்று தனது திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற மின் இணைப்பை துண்டித்தார்.


அதன்பின்னர் பின்பக்க கதவை உடைத்து வீட்டுக்குள் நுழைகின்றார். கதவு உடைபடும் சத்தத்தை கேட்ட லயனல் தனது மனைவியிடம் 'நீங்கள் கட்டிலிருந்து கீழே விழுந்து விட்டீர்களா? என கேட்டார். அதற்கு அவர் 'இல்லை' என பதிலளிக்க இருவரும் அதைப்பற்றி அலட்டிகொள்ளவில்லை. இது சந்தேகநபருக்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது.

அவர் தனது திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார். மூவரையும் கொலை செய்துவிட்டு, பணம், நகை அனைத்தையும் கொள்ளையடித்துவிட்டு லயனலின் சைக்கிளையும் எடுத்துகொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

எனினும் மாலதெனியா பகுதியில் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் அவருடைய பயணத்துக்கு இடையூறு ஏற்பட்டது. பொலிஸாரின் துல்லியமான விசாரணையில் சந்தேகநபர் எல்லா உண்மைகளையும் கக்கினார்.

கைவிரல் அடையாள திணைக்களத்தினர் வீட்டிலிருந்து சந்தேகநபரின் கைவிரல் அடையாளங்களையும் கண்டுபிடித்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து பொலிஸாரின் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளினால்தான் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியுமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



**வசந்தா அருள்ரட்ணம்**

# ஜனாதிபதித் தேர்தலா? இன்றேல் பாராளுமன்ற பொதுத்தேர்தலா?

**இந்த ஆண்டு இலங்கைக்குத் தேர்தல் வரும் என்பது உறுதியாகியுள்ள நிலையில், எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்பது தொடர்பில் அரசியல் கட்சிகள் கடந்த வாரம் தமக்கிடையில் விவாதம் நடத்திக் கொண்டிருந்தன.**




## இறுதித் தீர்மானம் எட்டப்படாத நிலையில், பரபரப்பாகும் அரசியல் களம்!

எனினும், சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் நடுப்பகுதியிலும், பொதுத்தேர்தல் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதமும் நடத்தப்பட வேண்டும். இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்ற ஊகம் பொதுவெளியில் வலுத்துள்ளது. ஆனாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்கும்.

செப்டெம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்டோபர் 16 வரை தேர்தல் காலமாக இருக்கும். ஒக்டோபர் 16 ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு தினமாக இருக்கும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதற்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அதற்கான தேர்தல் முதலில் நடத்தப்படலாம்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முதலில் செல்வதற்கே விரும்புவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், தற்போதைய அரசாங்கத்தின் பிரதான ஆளும் கட்சியாக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் நிதியமைச்சருமான பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்தே பொதுத்தேர்தல் முதலில் நடத்தப்படும் என்ற ஊகம் வலுவடைந்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் வெற்றிபெறும் தரப்பினர் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்பதே பசில் ராஜபக்ஷவின் வாதமாக இருந்துள்ளது.

### ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெறுமாயின் மும்முனைப் போட்டி உருவாகும் சாத்தியம்!

கடந்த கால அரசியல் அனுபவங்களும் இதனை வலுப்படுத்துகின்றன. 1989ஆம் ஆண்டு அமரர் பிரேமதாசவின் ஆட்சிக்காலத்திலும், அதன் பின்னர் 2010 மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம், 2020 கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் என்பவற்றில் நடத்தப்பட்ட பொதுத்தேர்தல்களில் அவர்கள் தலைமையிலான அரசாங்கங்கள் முறையே 125 ஆசனங்கள், 144 ஆசனங்கள் மற்றும் 145 ஆசனங்களைப் வெற்றி பெற்றிருந்தன.

இதனை முன்னுதாரணமாகக் கொண்டே பசில் ராஜபக்ஷவின் கணிப்பும் அமைந்துள்ளது.

குறிப்பாக பொதுஜன பெரமுன தொடர்பில் மக்கள் மத்தியில் தற்பொழுது காணப்படும் நிலைப்பாடு அவர்களுக்கு சாதகமாக இல்லையென்பதால், ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு அதில் அவர்கள் நினைத்த வெற்றி கிட்டவில்லையாயின் அதன் பின்னர் நடத்தப்படக் கூடிய பாராளுமன்றத் தேர்தல் அவர்களுக்கு மோசமான முடிவுகளைக் கொடுத்துவிடலாம் என்பது பசில் ராஜபக்ஷவின் கணிப்பீடாக இருக்கலாம்.

இருந்தாலும் இது போன்ற கணிப்புக்கள் பிழைத்துப்போன சந்தர்ப்பங்களும் உள்ளன.

2000ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சந்திரிகா குமாரதுங்கவின் கட்சி 107 ஆசனங்களை மாத்திரம் பெற்றிருந்ததுடன், 2015ஆம் ஆண்டு மைத்திரி தலைமையிலான அரசாங்கம் 106 ஆசனங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

இது கடந்தகால அரசியல் அனுபவங்களாக இருந்தாலும் தற்பொழுது நாட்டில் காணப்படும் அரசியல் சூழல் என்பது சற்று வித்தியாசமானது என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது. எனவே, தேர்தல் முடிவுகள் எதிர்பார்க்காத திருப்பங்களை வழங்கக் கூடியதாகவும் அமைந்துவிடலாம்.



அதேநேரம், பொதுத்தேர்தலொன்று முன்கூட்டியே நடத்தப்பட்டால் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்பட்டாலும், தற்போதைய ஜனாதிபதி ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்று பாராளுமன்றத்தில் செயற்படுவதற்கான பெரும்பான்மையை அமைத்துக் கொள்ளலாம்.

அவ்வாறான பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொதுவேட்பாளராகக் களமிறக்கி வெற்றிபெறச் செய்ய முடியும் என்பதும் பசில் ராஜபக்ஷவின் வாதமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், இதற்கு மாறான சூழல் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை சவாலுக்கு உட்படுத்தப்படுமாயின் இரண்டரை வருடங்களுக்கு புதிய ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது போகும்.

அது நாட்டில் ஸ்திரமற்ற தன்மையையே ஏற்படுத்திவிடும். இருந்தாலும் அரசியல்வாதிகள் பொதுத்தேர்தல் தொடர்பில் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை முன்வைத்து மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதித் தேர்தலே இவ்வருடம் நடத்தப்படும் என்பதை தெளிவாகக் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜனாதிபதித் தேர்தல் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இந்தவருட வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை பற்றி ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் குறித்தே அக்கறை காட்டிவருவதாகத் தெரிகிறது.









இது இவ்விதமிருக்க, ஜனாதிபதித் தேர்தலுக்கான களம் மேலும் சூடுபிடித்திருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தேர்தலில் களமிறங்கப் போவதாக அறிவித்துள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் குறித்த பதவிக்குப் போட்டியிடுவாரா இல்லையா என்பது இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார் என அவர் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுதிபடக் கூறி வருகின்றது. இது பற்றிய அறிவிப்பு எதிர்வரும் ஜூன் முதல்வாரம் வெளியிடப்படும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்திருந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இத்தேர்தலில் போட்டியிட்டால் மும்முனைப் போட்டி நிச்சயமாக ஏற்படும்.

இவர்களைத் தவிரவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மேலும் பலர் முயற்சிக்கின்றனர். இதில் ஒருவராக தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் காணப்படுகின்றார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கிலேயே அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து அதன் தலைவர் பதவிக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். இது விடயத்தில் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருந்தாலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயதாசவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றார்.




சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்பட விஜயதாவுக்கு நீதிமன்றம் தொடர்ந்தும் தடையுத்தரவை பிறப்பித்துள்ளபோதும் அவர் கட்சியில் நீடித்து வருகின்றார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் அவர் களமிறக்கப்படுவார் என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில், மற்றுமொரு ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடப் போவதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜப்கஷவை எதிர்த்துக் களமிறங்கிய சரத் பொன்சேகா அதில் தோல்வியைத் தழுவியிருந்தார்.

இதன் பின்னர் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட அவர், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு பீல்ட் மார்ஷல் பதவிக்குத் தரமுயர்த்தப்பட்டார். இவ்வாறான பின்னணியில் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய கட்சியை உருவாக்குவதன் பின்னணியில் ஒத்துழைப்பு வழங்கிய சரத் பொன்சேகா அக்கட்சியின் தவிசாளர் பதவிக்கும் நியமிக்கப்பட்டார்.

இருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான உறவில் முரண்பாடு ஏற்பட்டது. குறிப்பாக கடந்தகாலத்தில் பாதுகாப்புப் படையில் இருந்த முக்கியஸ்தர்களை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைக்கும் விடயத்தில் சரத் பொன்சேகா இணங்கவில்லை. இதனால் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக பகிரங்கக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தியதால் இது தரப்புக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. தன்னைத் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு எதிராக நீதிமன்றம் சென்றிருந்தார்.

இந்த நிலையில் சரத் பொன்சேகாவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பில் உள்ள ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது. இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் அவர் புத்தகமொன்றை வெளியிடவிருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த அரகலய போராட்ட காலத்தில் போராட்டக்காரர்கள் மத்தியில் அவர் வரவேற்பைப் பெற்றவராக விளங்கினார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் தானும் போட்டியிடலாம் எனக் கணிப்பிட்டிருக்கலாம். எந்தவொரு கட்சியிலும் இன்றி தனித்துப் போட்டியிடவே அவர் எண்ணியிருப்பதாக ஆங்கில பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. இருந்தபோதும் அவரிடமிருந்து இதுவரை எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களும் வெளியாகவில்லை.

அரசியல் கட்சிகளின் சார்பில் பொதுஜன பெரமுனவும் தனித்து வேட்பாளரைக் களமிறக்குமாயின் பிரதானமாக ஐந்து வேட்பாளர்கள் களமாடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மறுபக்கத்தில், தமிழ்க் கட்சிகள் இணைந்து பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கினால் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய வாக்குகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இதனால் யாராவது ஒரு வேட்பாளர் இலகுவான வெற்றியை உறுதிசெய்வதற்கான சந்தர்ப்பங்களும் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரம், இம்முறை வேட்பாளர்களுக்கான வைப்புப் பணத்தின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதற்கமைய அரசியல் கட்சியொன்றின் சார்பில் போட்டியிடும் வோட்பாளருக்கான கட்டுப்பணம் 2.6 மில்லியனாகவும், சுயேச்சையாகப் போட்டியிடுபவரின் கட்டுப்பணம் 3.1 மில்லியன் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையில் பெறப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் களம் மிகவும் பரபரப்பு மிக்கதாக அமையும்.

---

# சண்முகலிங்கம்: தமிழ் அறிவுலகின் கைவிளக்கு

இரு நூற்றாண்டு கால உயர்கல்விப் புலமை மரபு கொண்ட யாழ்ப்பாணத்திலிருந்து புகழ்மிக்க மருத்துவர்களும், பொறியியலாளர்களும், விஞ்ஞானிகளும், சட்ட மேதைகளும், கணக்காளர்களும், உயர் அரசாங்க நிர்வாகிகளும், பல்கலைக் கழகப் புலமையாளர்களும், பெருந்தொகையில் உருவானார்களெனினும், அந்த அளவிற்கு சமூக விஞ்ஞானிகளும் மானிடப் புலமைசார் அறிவுஜீவிகளும் உருவாகவில்லை என்பது புலமை வானில் தென்படும் இருள் மேகமாகத் தெரிகிறது.

தமிழர் தம் தாயகப் பிரதேசத்தின் சமூகவியல், கிராமியப் பொருளாதாரக் கட்டமைப்பு, சாதிய அமைப்புமுறை, திருமண முறைமைகள், காலந்தோறும் புலப்பெயர்வு, காலனிய வாழ்வியல், அரசியல் எழுச்சிகள், கருத்தாடல்கள், தமிழ்த் தேசிய எழுச்சி போன்ற பல்வேறு சமூகப் பண்புகள் குறித்து பெருமளவு புலமை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த ஆய்வறிவுப் புலமையின் வெறுமை தென்னிலங்கை குறித்து வெளியாகும் புலமை ஆய்வுகளின் வெளிச்சத்தில் துலாம்பரமாகிறது.

சட்டத் துறையில் புகழ் மிக்க நீதியரசர்களாகத் திகழ்ந்த சி.நாகலிங்கம், எஸ்.சர்வானந்தா போன்றோர் குறித்தோ, ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.நடேசன் போன்ற வழக்கியல் அறிஞர்கள் குறித்தோ, தமிழ் அரசியல் தலைவர்கள் குறித்தோ எந்த ஆவணமும் நம்மிடம் இல்லை. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நுணுக்கி ஆராய்ந்த நூல்கள் எவையும் இல்லை.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க பற்றி, ஜேம்ஸ் மெனர் எழுதிய The Expedient Utopian போன்ற ஆய்வு நூல் போன்று நம் தமிழ் அரசியல் தலைவர்கள் பற்றி எந்த ஆய்வுமே செய்யப்படவில்லை.

போர்த்துக்கேயக் கால யாழ்ப்பாணம் பற்றி அறிய, போர்த்துக்கேய மொழியைப் பயின்று ,ஆராய்வு மேற்கொண்ட கலாநிதி டிக்கிரி அபயசிங்க அவர்களின் Jaffna under the Portuguese என்ற நூலைத்தான் நாட வேண்டியிருக்கிறது.

ஆங்காங்கே நல்லறிஞர் சிலர் நம் மத்தியில் தோன்றியபோதும், ஈழத் தமிழர் வாழ்வியல் பற்றிய ஆய்வு என்பது ஆட்புகாத அடர் காடாகவே தோற்றங் காட்டுகிறது.

சுயமொழிக் கல்வியின் பின், ஆங்கிலத்தில் வெளியாகும் நூல்களை வாசித்துக் கிரகிக்கும் ஆற்றல் நம் மாணாக்கர் மத்தியில் வளர்த்தெடுத்துச் செல்லப்படவில்லை. பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் போதிக்கப்பட்டதாயினும் அப்பயிற்சியில் வெற்றி கிடைத்தது என்று கூறுவதற்கில்லை. பல்கலைக்கழக ஆங்கில போதனை ஒரு தோல்வி என்றே கூறவேண்டும்.



சிங்கள அறிஞர்களின் சிறந்த அரசியல், சமூக, பொருளாதார ஆய்வுகள் ஆங்கிலத்தில் நூல் வடிவம் பெற்றுள்ளன. தென்னிலங்கை அரசியல், அரசியல் தலைவர்கள்,பௌத்தம், சிங்கள சமூகத்தின் வாழ்வியல் கோலங்கள், சிங்கள தேசியவாதம் போன்ற பல்வேறு சமூகவியல் சார்ந்த புலமை ஆய்வுகள் தென்னிலங்கை அறிஞர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கையில் ஆங்கிலத்தில் கிடைக்கும் இந்த அறிவியல் கருவூலங்களைத் தமிழ் வாசகர்களுக்குத் திறந்துகாட்டும் பெரும் பணியைத் தவமே போல் செய்துவருபவர் யோகி க.சண்முகலிங்கம் ஆவார். அறிவுத்தேடல் கொண்ட தமிழ் வாசகர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷம் அவர். ஆழ்ந்த தேடல், அயராத வாசிப்பு, நுட்பமான கிரகிப்பு, பல்துறை ஞானம், எதனையும் சமூகத்தோடு பொருத்திப்பார்த்துப் பரிசீலிக்கும் பாங்கு என்பன சண்முகலிங்கத்தின் தனி முத்திரைகள். பேராதனைப் பல்கலைக்கழகம் உற்பவித்த ஆற்றல்மிக்க அரச நிர்வாகிகளில், அரச பணியோடு தனது சமூக விஞ்ஞான அறிவுப் புலமையையும் சேர்த்தே வளர்த்துக்கொண்ட இப்பெருமகனின் அறிவுலகக்கொடை ஒப்பற்றது. பொருளியல் அறிஞர் குனார் மிர்தால் எழுதிய Asian Drama: An inquiry into the Poverty of Nations என்ற நூலைத் தமிழில் அறிமுகம் செய்த தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமன், ஆங்கிலத்திலிருந்து அரிய நூல்களை, கட்டுரைகளைத் தமிழில் லாவகமாகத் தரும் பேராற்றலை நான் வியந்து பார்த்திருக்கிறேன். சண்முகலிங்கம் ஈழத்தின் சிவராமன் ஆகப் போற்றத்தக்கவர். சண்முகலிங்கம் இனவரைவியல், சமூகவியல், அரசறிவியல், பொருளாதாரம், மெய்யியல் சார்ந்த பல்வேறு துறைகளில் பரந்தும் ஆழ்ந்தும் தொடர்ந்து வாசித்து வருபவர். அவர் தமிழில் தந்திருக்கும் இருபதுக்கும் அதிகமான நூல்கள் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களின் உசாத்துணை நூல்களாகச் சிறப்புப் பெறுவன. பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் தமிழ் ஆய்வாளர்களுக்கு சண்முகலிங்கத்தின் நூல்கள் இருள் வெளியில் கைவிளக்காக அறிவுப் பயணத்தில் ஒளி பாய்ச்சுகிறது.

மொழிபெயர்ப்பு என்பது ஒரு சிந்தனை முறைமையாக வகைப்படுத்தத் தக்கது.மொழிபெயர்ப்பாளன் சிருஷ்டிக் கலைஞன் ஆகிறான். தான் மொழிபெயர்த்து வழங்கும் மொழியின் செழுமைக்கு அவனே ஊட்டம் சேர்க்கிறான்.மொழிபெயர்ப்பு இல்லையானால் பல மேற்றிசைச் செல்வங்களை வாசித்துப் பயன்பெறும் நிலையை நாம் ஒரு போதும் பெற்றிருக்கமாட்டோம். இந்த முக்கிய அறிவுப்பின்னலின் வைரம் பாய்ந்த கண்ணியாக சண்முகலிங்கம் திகழ்கிறார். தனது மொழியாக்கத்தினை 'மீள எடுத்துச் சொல்லுதல்' என்று சண்முகலிங்கம் வரையறை செய்கிறார். சுருக்கித் தருதல், தழுவி எழுதுதல், சிக்கலான கருத்துகளை எளிமைப்படுத்திக்கூறுதல்,விளக்கி உரைத்தல், இடையிடையே எனது கருத்துகளைக் கூறுதல் என்று தனது மொழியாக்கத்தின் கூறுகளை விபரிக்கிறார்.

நமது அரச கருமமொழித் திணைக்கள மொழிபெயர்ப்புகள் பல வாசகனுக்குத் தொந்தரவு தருபவை. மொழியாக்கத்திற்கு அவர்கள் கைக்கொண்ட கிரந்த எழுத்துகள் தவிர்ந்த தூய தமிழ் எழுத்துநடை மாணாக்கருக்கு பெருஞ் சிரமத்தைத் தந்தன. அந்த மொழியாக்கங்கள் வாசகருடன் நேச உறவு கொள்ளவில்லை. மொழிபெயர்ப்பில் சிறந்த அறிஞர்கள் ஈடுபட்டனரெனினும், மொழிபெயர்ப்புகள் வரண்டதாய், வாசித்தறிய இயலாதனவாகவே அமைந்தன.

அவரது மொழியாக்கம் எளிமையாக அமைகிறது. வாசகனைத் தோளில் கைபோட்டு அழைத்துச் செல்லும் லாவகம் அது. குறுகிய அளவில் தனது எழுத்துப் பரப்பை வரையறுத்துக்கொள்கிறார். அசாத்தியமான பெரிய நூல்களை, மிக நுட்பமான ஆய்வேடுகளை அவர் அறிமுகம் செய்கிறார். சில நூல்களை அறிமுகப்படுத்துவதென்பது மலைப்பூட்டுவது. சண்முகலிங்கம் இந்த சவாலை எளிதாக எதிர்கொள்கிறார். அவரது பரந்த வாசிப்பும், பேசும் பொருள் குறித்த தெளிவும் அதற்குப் பெருந் துணை புரிகின்றன. நெஞ்சினில் ஒளியிருப்பதால், வார்த்தையில் எழுத்தில் வெளிப்படும் ஒளிச்சிதறல் அது. விரிந்த கட்டுரையினை அவர் அளவாகச் சுருக்கித் தருகிறார்.

மு.நித்தியானந்தன்

# பொருளாதார வீழ்ச்சி மீண்டும் உருவெடுப்பதைத் தடுக்கும் குறிக்கோளில் அரசாங்கம்!



## பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய இரு சட்டமூலங்கள்!

**பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை, படிப்படியாக மீண்டுவரும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பல்வேறு சீர்திருத்தங்களை முன்மொழிந்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.**

அந்த வரிசையில் இரண்டு புதிய சட்டமூலங்கள் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

'பொருளாதாரப் பரிமாற்ற சட்டமூலம்' மற்றும் 'அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம்' ஆகிய இரண்டு சட்டமூலங்களே இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக நாட்டின் அரசநிதி உகந்த மட்டத்தில் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதி செய்யும் நோக்கிலேயே இச்சட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2032 ஆம் ஆண்டிற்குள் பொதுக்கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 வீதத்துக்கும் குறைவாகப் பேணவேண்டும் என்பது இச்சட்டமூலங்களின் நோக்கமாகும்.

அதன்பின் மத்திய அரசாங்கத்தின் மொத்த வருடாந்த நிதியளிப்புத் தேவை 2032ஆம் ஆண்டாகும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 வீதம் ஆகப் பேணப்படுவதும், 2027 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் மத்திய அரசின் வருடாந்த கடன் சேவை வெளிநாட்டு நாணயத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் நான்கு தசம அரை சதவீதத்திற்கும் குறைவாக இருப்பதை உறுதிப்படுத்துவதுமே இவற்றின் குறிக்கோளாகும்.



இந்தக் கொள்கையானது இலங்கையை அதிக போட்டித்தன்மை கொண்ட, ஏற்றுமதி சார்ந்த, டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் பல்வகைப்படுத்தல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரிக்க தேசிய பொருளாதாரத்தின் ஆழமான கட்டமைப்பு மாற்றங்கள், 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜியத்தை அடைதல், உலகப் பொருளாதாரத்துடன் அதிகரித்த ஒருங்கிணைப்பு, நிலையான பேரண்டப் பொருளாதார நிலுவைகள் மற்றும் நிலையான கடனை அடைதல், விவசாயிகளின் உற்பத்தித்திறன், விவசாயிகளின் வருமானம் மற்றும் விவசாய ஏற்றுமதியை அதிகரித்தல், உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை மேம்படுத்தல், விவசாயத்தை நவீனமயமாக்குதல் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது.



இது பொருளாதார மாற்றத்திற்கான தேசிய கொள்கை மற்றும் பொருளாதார ஆணைக்குழு, முதலீட்டு வலயங்கள், சர்வதேச வர்த்தக அலுவலகம், தேசிய உற்பத்தி ஆணைக்குழு மற்றும் இலங்கை பொருளாதாரம், சர்வதேச வர்த்தக நிறுவனம் உட்பட பல்வேறு நிறுவனங்களை நிறுவுவதற்கான முன்மொழிவுகளையும் கொண்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டமானது புதிய பொருளாதார ஆணைக்குழுவுடன் இணைந்ததாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இச்சட்டமூலத்தின் கீழ் நிறுவப்படும் பொருளாதார ஆணைக்குழு, வலுவான முதலீட்டு சூழலை உருவாக்கி அதனைப் பராமரிப்பதற்கும் பங்களிக்கும். நிலையான வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேம்படுத்துவதை எளிதாக்குவதற்கும் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவித்தல் மற்றும் இலங்கை பிரஜைகளின் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கவும் ஒத்துழைப்பு வழங்கும்.

ஆணைக்குழு இலங்கையில் முதலீட்டு வலயங்களின் அவசியத்தை மதிப்பிடுவதோடு, அத்தகைய வலயங்களின் செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வையை வழங்கும், முதலீட்டாளர்கள், முதலீடுகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வியாபாரம் செய்வதை இலகுவாக ஊக்குவிக்கும் மற்றும் செயல்படுத்தும்.

வெளிநாட்டு நேரடி முதலீடு, பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் இலங்கைக்குள் பாரிய வேலைவாய்ப்புகள் மூலம் இலங்கைக்கு கணிசமான அந்நிய செலாவணி வரவுகளை உள்ளடக்கிய மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த முதலீடுகளையும் ஆணைக்குழு தீர்மானிக்கும். பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான நன்மைகளைக் கொண்டதாக இந்தச் சட்டமூலங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின்படியே இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்ஹ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கூட்டு வேலைத்திட்டத்தில் இது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டதாகவும், நாட்டின் எதிர்கால நிதி நிர்வாகத்தில் இது மிகவும் முக்கியமான சட்டங்களாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம் ஊடாக பாரிய கருத்தாடல் எழுந்துள்ளது. தற்போதுள்ள சட்டத்தின் பலவீனங்களைக் கண்டறிந்து, எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான சட்டக் கட்டமைப்பை முன்வைப்பது இதன் மூலம் இடம்பெறுகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டைப் பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்பதற்காக அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது.

இருந்தபோதும் அராங்கத்தின் இந்த முயற்சிகளுக்கு ஏனைய அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். உரிய ஒத்துழைப்புக்கள் கிடைக்காவிட்டால் அரசாங்கத்தினால் மாத்திரம் தனியாக சாதனை செய்ய முடியாது.

எனவே, தொழிற்சங்கங்களுக்கும் இது விடயத்தில் கணிசமான பங்கு உள்ளது. குறிப்பாக வினைத்திறான அரசாங்க சேவையை வழங்கும் நோக்கில் அரசசார்பான நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கா டெலிகொம், லங்கா ஹொஸ்பிட்டல் போன்ற அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் சில தொழிற்சங்கங்களினால் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன.

அரசுக்குச் சொந்தமான பல நிறுவனங்கள் மாறி மாறி ஆட்சியில் இருந்த அரசாங்கங்களினால் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. நாடு பொருளாதாரப் பின்னடைவுகளுக்கு முகங்கொடுக்க இதுவும் ஒரு காரணமாகும். இவ்வாறான பின்னணியில் அரசாங்கம் தற்பொழுது முன்னெடுக்கும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதும் கட்டாயமானதாகும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்களை தொழிற்சங்கங்கள் தனியார் மயப்படுத்தல் எனக் கூறி மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன. எனினும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பனை செய்வதாக அர்த்தப்படாது. அரச தனியார் பங்குடமையின் கீழ் அந்தந்த நிறுவனங்களை வினைத்திறன் மிக்க முறையிலும், போட்டித் தன்மை நிறைந்த நிறுவனங்களாகவும் மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம். இதுவும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு மிகவும் அவசியமானவை என்பதை உணர்ந்து அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

## அரசநிதி உரியமுறையில் முகாமைத்துவம் செய்யப்படுவது கண்காணிப்பு!

பி.ஹர்ஷன்...

---

# ஈரானிய ஜனாதிபதியை பலிகொண்ட ஹெலி விபத்து உருவாக்கிய வினாக்கள்!



## அரச உயர்மட்டம் ஆரம்பித்துள்ள விரிவான விசாரணைகள்!

**ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியன் உட்பட 09 பேர் பலியாவதற்குக் காரணமான ஹெலிகொப்டர் விபத்து உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**

ஈரானி தலைநகர் தெஹ்ரானில் இருந்து சுமார் 600 கி.மீ. தொலைவிலுள்ள கிழக்கு அசர்பைஜானின் தப்ரீஸ் நகருக்கு அருகிலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தில் காணப்படும் மலையொன்றின் 2500 மீற்றர் உயரத்தில் இவர்கள் பயணத்த ஹெலிகொப்டர் எரிந்த நிலையில் கடந்த ஞாயிறன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதில் பயணித்த எவரும் உயிருடன் மீட்கப்படவில்லை.

இந்த ஹெலிகொப்டர் விபத்தும் அதில் பயணித்தவர்கள் பிரேதங்களாக மீட்கப்பட்டதும் ஈரான் மக்கள் மத்தியில் மாத்திரமல்லாமல் உலகின் பல நாடுகளிலும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளதோடு, பலவிதமான கேள்விகளையும் தோற்றுவித்துள்ளது.



இந்த ஹெலிகொப்டர் சீரற்ற காலநிலை, பனிமூட்டம் காரணமாக மலையில் மோதி விபத்துக்குள்ளானதா? அல்லது விபத்துக்கு தொழில்நுட்ப கோளாறு காரணமானதா? அல்லது எதிரி நாடுகளின் தாக்குதல் மற்றும் சதிகள் ஊடாக இவ்விபத்து ஏற்பட்டு ஜனாதிபதி உள்ளிட்டோர் உயிரிழந்தனரா என்றவாறான கேள்விகள் நிலவுகின்றன.

இவ்வாறான நிலையில் ஈரானின் முப்படை தளபதி மேஜர் ஜெனரல் முஹம்மட் பகாரி, இவ்விபத்து குறித்து திறந்த அடிப்படையிலான விசாரணைக்கு உயர் மட்டக்குழுவுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

**சீரற்ற காலநிலை காரணமா?**

ஜனாதிபதி ரைசியும் அவர் தலைமையிலான குழுவினரும் அயல்நாடான அசர்பைஜானில் நீர் மின்னுற்பத்தி திட்டத்திற்கான இரண்டு அணைகளைத் திறந்து வைக்கும் வைபவத்தில் ஞாயிறன்று பங்குபற்றிய பின்னர் திரும்பிக் கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர்கள் மூன்று ஹெலிகளில் சென்று, திரும்பியுள்ள போதிலும், ஜனாதிபதி ரைசி தலைமையிலான குழுவினர் பயணித்த ஹெலி தவிர்ந்த ஏனைய இரண்டு ஹெலிகளும் பாதுகாப்பாக தப்ரீஸை வந்தடைந்துள்ளன.

அதனால் இவர்கள் பயணித்த மூன்று ஹெலிகளும் ஏகநேரத்தில் திரும்பி பயணத்தை ஆரம்பிக்கவில்லையா? அல்லது திரும்பிக் கொண்டிருந்த போது ஜனாதிபதி பயணித்த ஹெலி தொடர்பை இழந்ததை ஏனைய இரண்டு ஹெலிகளும் அறிந்து கொள்ளவில்லையா என்ற கேள்விகள் நிலவுகின்றன.

அதேநேரம் நாடொன்றின் தலைவர் ஆகாய மார்க்கமாகச் செல்லும் போதும் திரும்பும் போதும் அவர் பயணத்தை தொடங்க முன்னர் வானிலை மற்றும் காலநிலை குறித்த தகவல்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்படும் நடைமுறை காணப்படுகிறது. அவ்வாறிருக்கையில் ஜனாதிபதி ரைசி பயணித்த ஹெலிக்கு அவ்வாறு தகவல்கள் வழங்கப்படவில்லையா என்ற கேள்வியும் நிலவுகிறது.

மேலும் இந்த ஹெலி பயணத்தை ஆரம்பித்த போது ஆகாயம் மிகவும் தெளிவாகக் காணப்பட்டுள்ள போதிலும் பயணித்த பாதையில் கடும் பனிமூட்டமும் சீரற்ற காலநிலையும் காணப்பட்டுள்ளன. அதனால் ஹெலியை பொருத்தமான இடத்தில் தரையிறக்கி ஜனாதிபதி உள்ளிட்டவர்களை தரை வழியாக தப்ரீஸுக்கு அழைத்து வந்திருக்க முடியும்தானே என்ற அபிப்பிராயமும் கூட மக்களிடம் காணப்படுகிறது.

**தொழில்நுட்ப கோளாறு காரணமா?**

இதேவேளை இந்த ஹெலிகொப்டர் விபத்துக்கும் அவர்களது மரணத்திற்கும் அமெரிக்காதான் காரணம் என்றும் ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை ஈரானின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை மிக மோசமாகப் பாதித்துள்ளது எனவும் குறிப்பாக விமானங்களுக்கான உதிரிப் பாகங்களை ஈரானுக்கு விற்கவும் அமெரிக்கா தடை விதித்துள்ளது' என்றும் மற்றொரு தரப்பில் குற்றம் சாட்டப்படுகின்றது.

ஜனாதிபதி பயணித்த ஹெலிகொப்டர் பெல்ட் 212 ரக அமெரிக்க உற்பத்தியாகும். இது குறைந்தது 30 ஆண்டுகள் பழைமையானது. இவ்வாறான மேலும் 10 ஹெலிகொப்டர்களை ஈரானிய இராணுவம் வைத்திருப்பதாக நம்பப்படுகிறது.

ஈரான் அமெரிக்காவின் எதிரி நாடாகும். அப்படியிருக்கையில் அமெரிக்க உற்பத்தி ஹெலிகொப்டரை எந்த நம்பிக்கையுடன் ஈரான் பாவிக்கிறது என்ற கேள்வியும் நிலவுகிறது.

ஈரானில் 1979 இல் இஸ்லாமிய புரட்சி ஏற்பட முன்னர் அமெரிக்காவிடம் கொள்வனவு செய்யப்பட்டவற்றில் இந்த ஹெலியும் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகிறது. 1979 இற்கு முன்னர் ஈரானும் அமெரிக்காவும் மிக நெருங்கிய நட்புநாடுகளாகும். 1979 இக்கு பின்னர் தான் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்த ஹெலியில் 15 பேர் பயணிக்கலாம். இதனை தீயணைப்புப் பணிகளுக்கும், சரக்கு போக்குவரத்து மற்றும் ஆயுதமேந்திய உளவுப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

அமெரிக்க பொருளாதாரத் தடையினால் அமெரிக்கா தயாரித்த ஆயுதங்கள் மற்றும் வாகனங்களை பராமரிப்பதில் ஈரான் சிரமங்களை எதிர்கொண்டுள்ளது. அந்த வகையில் இந்த ஹெலிகொப்டரும் உரிய பராமரிப்பை பெற்றிருக்கவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.





**சீரற்ற காலநிலையா? ஹெலியின் தொழில்நுட்பக் கோளாறா? இல்லையேல் வேறேதும் புரியாத காரணங்களா?**

**எதிரி நாடுகளின் சதியா?**

மேலும், ஈரானில் இஸ்லாமிய புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்நாடு பலஸ்தீனுக்கு முழுமையான ஆதரவு நல்கிவருகிறது. இந்நிலையில், கடந்தாண்டு ஒக்டோபர் 07 ஆம் திகதி பலஸ்தீனின் காஸா மீது இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்தது. அந்த யுத்தத்திற்கு எதிராக காஸாவில் ஹமாஸ் தாக்குதல்களை முன்னெடுக்கின்ற அதேநேரம், லெபனானின் ஹிஸ்புல்லா, யெமனின் ஹூதிக்கள், ஈராக், சிரியாவிலுள்ள ஆயுதக் குழுக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த ஆயுதக் குழுக்கள் ஈரான் ஆதரவு பெற்றவை. அவற்றுக்கு ஈரானே ஆயுதங்களை வழங்கி வருகின்றது என்று இஸ்ரேலும் அமெரிக்காவும் கூறிவருகின்றன.

இந்தச் சூழலில் சிரியாவின் தலைநகரில் வைத்து ஈரானின் குடியரசு காவல் படையின் உயரதிகாரிகள் சிலர் இலக்கு வைத்து கொல்லப்பட்டனர். அந்த வகையில் சிரியாவின் டமஸ்கஸிலுள்ள ஈரான் கொன்சியூலர் அவலுவலகத்தின் மீது கடந்த ஏப்ரல் முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் குடியரசு காவல் படையின் முக்கிய தளபதி ஜெனரல் ஷாஹிடி உள்ளிட்ட 08 பேர் அடங்கலாக 16 பேர் கொல்லப்பட்டார்கள்.

அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் ஏப்ரல் 13 ஆம் திகதி, இஸ்ரேல் மீது ஏவுகணைகளையும் ஆளில்லா விமானங்களையும் கொண்டு நேரடியாகவே தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடி கொடுக்க இஸ்ரேல் முயற்சி செய்த போதிலும் அதற்கு அமெரிக்கா இடமளிக்கவில்லை. அதனால் ஏப்ரல் 19 ஆம் திகதி பெரிய எடுப்பில் அல்லாது சாதாரணமாக தாக்குதல் நடத்திவிட்டு அமைதி அடைந்தது இஸ்ரேல்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு, கடந்த ஏப்ரல் மாதத்தின் ஆரம்பப்பகுதியில், 'ஈரான் பல ஆண்டுகளாக எமக்கு எதிராக நேரடியாகவும் பினாமிகள் மூலமாகவும் செயல்பட்டு வருகிறது. அதனால் ஈரான் மற்றும் அதன் பினாமிகளுக்கு எதிராக தற்காப்பு நடவடிக்கைகளை இஸ்ரேல் முன்னெடுத்து வருகிறது. எமக்கு தீங்கு விளைவிப்பவர்கள் அல்லது நமக்கு தீங்கு செய்ய திட்டமிட்டால், நாங்கள் தீங்கு செய்வோம்' என்று எச்சரித்திருந்தார்.

என்றாலும் ஜனாதிபதி ரைசியும் அவரது குழுவினரும் பயணித்த ஹெலிகொப்டர் விபத்துக்கு உள்ளான சொற்ப நேரத்தில் 'இவ்விபத்துக்கும் எமக்கும் எந்த சம்பந்தமில்லை' என்று இஸ்ரேல் குறிப்பிட்டது.

**முஸ்லிம் உலகின் ஒற்றுமைக்கான முயற்சிகள்**

இவை இவ்வாறிருக்க, ஈரானின் ஜனாதிபதியாக இப்ராஹீம் ரைசி 2021 இல் பதவியேற்ற பின்னர் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் செய்யத் அலி காமெனெயின் வழிகாட்டலில் முஸ்லிம் நாடுகளுடன் நெருக்கமான நட்புறவை வளர்ப்பதிலும் முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதிலும் கூடுதல் கவனம் செலுத்தி வந்தார்.

அந்த அடிப்படையில் சவுதி அரேபியாவுடன் ஏழு வருடங்களாக நிலவிய முரண்பாடு 2023 மார்ச்சில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதோடு, தூதரக உறவுகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. அத்தோடு அமைதியான அணுசக்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் சவுதியுடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் இம்மாத ஆரம்பப்பகுதியில் ஈரான் அறிவித்தது.

அதேநேரம் ஈரானின் ஹெர்மான் நகரில் கடந்த ஜனவரியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான், ஈராக், சிரியாவில் செயற்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நிலைகள் மீது ஈரான் தாக்குதல்களை நடத்தியது. இதன் விளைவாக ஏற்பட்ட இராஜதந்திர முறுகல்கள் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டன. அத்தோடு காஸா யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து பலஸ்தீன மக்களுக்கு விடிவைப் பெற்றுக்கொடுப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளை பிராந்தியத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஈரான் விரிவாக முன்னெடுத்தது.



மர்லின் மரிக்கார்...

# தேசிய வைத்தியசாலையாக தரமுயர்ந்த காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலை

## இந்நாட்டின் மூன்றாது தேசிய வைத்தியசாலை





இலவசக் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான அதிக வாய்ப்புகள் கிடைத்திருப்பது இந்நாட்டு மக்களுக்கு கிடைக்கும் சிறப்பான ஆசீர்வாதமாகும், இது நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கின்றது. மக்கள் ஆரோக்கியமாக இருக்குமளவுக்கு, நாட்டின் அபிவிருத்திப் பயணமும் வேகமாக இருக்கும். அந்தப் பயணத்திற்கு வலுச் சேர்க்கக்கூடிய ஒரு சிறப்புப் பணி அண்மையில் இடம்பெற்றது. காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலை அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் தேசிய வைத்தியசாலையாக மாற்றப்பட்டதே அதுவாகும்.

தென் மாகாணம் மற்றும் அதனை அண்மித்த மாகாணங்களில் உள்ள நோயாளிகளுக்கு மகப்பேற்று பராமரிப்புச் சேவைகள் தவிர்ந்த மூன்றாம் நிலை சேவைகளை வழங்கும் பிரதான சுகாதார நிலையமாக இதுவரை இயங்கி வந்த கராபிட்டிய போதனா வைத்தியசாலை, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை சுகாதார சேவை நிலையங்கள் மற்றும், விசேட சேவைகளுக்காக நோயாளிகளை பராமரிப்பதன் மூலமே பிரசித்தமடைந்திருக்கின்றது. குறிப்பாக ருஹுனு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் அதனுடன் இணைந்த விஞ்ஞாக பீடங்களின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக கராபிட்டிய கற்பித்தல் பிரிவு இயங்கி வருகின்றது. காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் தனித்துவமான முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, இந்த வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரப்படுத்தி காலி தேசிய வைத்தியசாலை என பெயரிடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டமை காலி மாவட்டம் மாத்திரமின்றி, தென் மாகாண சுகாதாரத் துறையே பெற்ற வெற்றியாகும்.

அதனடிப்படையில், இந்த வருட இறுதிக்குள், வைத்தியசாலையின் படுக்கை வசதி 2,858 ஆக உயர்வடையும். கராபிட்டிய போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாறியதன் மூலம் அது இந்நாட்டின் மூன்றாவது தேசிய வைத்தியசாலையாக மாறியுள்ளது. இதுவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையும் கண்டி தேசிய வைத்தியசாலையும் மட்டுமே இந்நாட்டில் தேசிய வைத்தியசாலைகளாக இருந்தன.

இது தொடர்பில் தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாக கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் எஸ். டி. யூ. எம். ரங்க தெரிவித்தார்.

“கராபிட்டிய போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படுவதன் மூலம் வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவைகள் மென்மேலும் அதிகரிக்கும். அதனடிப்படையில் இவ்வைத்தியசாலையிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் தென் மாகாண, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண மக்களுக்கு மிகவும் சிறப்பான சேவைகளை வழங்க முடியும். இவ்வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாறுவதன் மூலம் கராபிட்டிய இலங்கையின் மூன்றாவது தேசிய வைத்தியசாலையாக ஆகியிருக்கின்றது. இவ்வைத்தியசாலையை இந்நிலைக்கு கொண்டு வருவதற்கு முடிந்திருப்பது சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் ஆரம்ப தலையீட்டினாலாகும்.

ஒரு வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாறும் போது அதன் நன்மைகள் கிடைப்பது எமது மக்களுக்கேயாகும். வைத்தியசாலையின் கட்டில்களின் எண்ணிக்கை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிஔ வின் கட்டில்கள் அதிகரிப்பதைப் போன்று நிதி அதிகாரங்களும் அதிக வசதிகளும் அதிகரிக்கும். வசதிகள் அதிகரிக்கும் போது அதன் மூலம் மக்களுக்கு அதிக சேவைகளை வழங்க முடியும். தற்போது மருத்துவமனையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்திற்கும் வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்களின் பெரும் ஒத்துழைப்பு கிடைத்து வருகின்றது. படுக்கைகள், மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அதிக உள்ளக நோயாளிகளுக்கு மருத்துவ வசதிகளை வழங்கவும் முடியும். எம். ஆர். ஐ. ஸ்கேனர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், மக்கள் தங்கள் சேவைகளை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.



தற்போது வைத்தியசாலையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. மருத்துவ மற்றும் சத்திரச் சிகிச்சை வார்ட் பிரிவுகள், பற் சிகிச்சைப் பிரிவுகள், கற்றல் பிரிவுகள், புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவை அவற்றில் சிலவாகும். இந்த வைத்தியசாலை இந்த நிலைக்கு உயர்ந்திருப்பது எம் அனைவருக்கும் பெருமையாகும்" என அவர் மேலும் கூறினார்.

2013ம் ஆண்டு பெப்ரவரி 04ஆம் திகதி கராபிட்டிய சிறுநீரக பாதுகாப்பு சங்கம் உருவாக்கப் பட்டதோடு, சிறுநீரக நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற பங்களிப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும். 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கராபிட்டிய வைத்தியசாலையில் முதலாவது சிறுநீரக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து இந்த சங்கம் உருவாக்கப் பட்டு கராபிட்டிய வைத்தியசாலையில் 09 மாடிகளைக் கொண்ட சிறுநீரக சிகிச்சைப் பிரிவை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக கராபிட்டிய வைத்தியசாலை அதிக படுக்கைகளைக் கொண்ட வைத்தியசாலையாக மாறும் எனவும், 2024ஆம் ஆண்டில் உபகரணங்கள் மற்றும் கட்டடங்களுக்காக 200 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அண்மையில் இடம்பெற்ற கராபிட்டிய சிறுநீரக பராமரிப்பு சங்கத்தின் 11ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். அவரது அந்த கருத்தை உறுதிப்படுத்தும் வகையில், கராப்பிட்டி போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக ஆக்குவது தொடர்பில் கருத்து தெரிவித்த அந்த வைத்தியசாலைக் குழு மற்றும் வைத்தியசாலையின் தரவு ஊக்குவிப்பு நிதியத்தின் தலைவரான பாலித அமரவர்தன இவ்வாறு கூறினார்.



“எங்கள் ஊரைச் சேர்ந்த அமைச்சர் ரமேஷ் பத்திரன வைத்தியசாலையை உயர்த்துவதற்கு பெரும் சேவையாற்றி வருகின்றார். கராபிட்டிய வைத்தியசாலை என்பது தென் மாகாணத்திற்கு மட்டுமன்றி அண்டைய மாகாணங்களுக்கும் சுகாதார சேவைகளை வழங்கும் ஒரு மருத்துவமனையாகும். தற்போது, 100க்கும் மேற்பட்ட விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் 450க்கும் மேற்பட்ட ஏனைய வைத்தியர்களும் இங்கு பணியாற்றி வருகின்றனர். இங்கு 73 வார்ட்டுகள் மற்றும் சுமார் 2,000 படுக்கைகளும் உள்ளன. இங்கு வெளிநோயாளர் பிரிவில் ஒரு வருடத்தில் சுமார் இரண்டரை முதல் மூன்று லட்சம் நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். சுமார் 05 இலட்சம் மருத்துவ நோயாளிகள் சேவைகளைப் பெற்று வருகின்றனர். ஆண்டுக்கு சுமார் 15,000 பெரியளவிலான சத்திர சிகிச்சைகள், ஆண்டுக்கு 200,000 சாதாரண சத்திர சிகிச்சைகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. நோயாளிகளுக்கான உடற் பயிற்சி செயல்பாட்டுப் பிரிவுகள், சுவாச நோய்ப் பிரிவுகள், கண் மருத்துவ சிகிச்சையைக் கொண்ட வார்ட்டுகள், புற்றுநோய் வார்ட்டுகளின் தொகுதிகள் இங்கு உள்ளன. மேலும், தெற்காசியாவின் மிகப்பெரிய மகப்பேற்று மருத்துவமனை சமீபத்தில் இங்கு திறக்கப்பட்டது.

அத்துடன், தென் மாகாண சிறுவர் வைத்தியசாலை, கற்றல் வார்ட் தொகுதி என்பன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. மற்றொரு அனைத்து வசதிகளுடன் கூடிய பல் மருத்துவமனை, சத்திர சிகிச்சைப் பிரிவுத் தொகுதியும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தேசிய வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படுவதன் மூலம் இந்தச் சேவைகள் அனைத்தையும் இன்னும் விரிவாகவும், செயற்திறன் மிக்கதாகவும் வழங்குவதற்கான வாய்ப்பு எமக்கு கிடைக்கும்”

இது தொடர்பில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

“சுகாதார அமைச்சினால் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு உபகரணங்கள் மற்றும் கட்டடங்களுக்காக இவ்வருடத்தில் 100 கோடி வீதம் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த வருடத்தின் பின்னர் கராபிட்டிய வைத்தியசாலையில் எந்த ஒரு நோயாளியும் தங்குவதற்கு கட்டில் இல்லாமல் போகாது. மற்றும் தேவையான அனைத்துக் கட்டில்களையும் வழங்கி தேசிய வைத்தியசாலைக்குப் பின்னர் அதிக கட்டில்களைக் கொண்ட வைத்தியசாலையாக கராபிட்டிய வைத்தியசாலையை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கராபிட்டிய வைத்தியசாலையின் 10 மாடிகளைக் கொண்ட சத்திரசிகிச்சை கட்டிடத்தின் பணிகள் நிறுத்தப்பட்டு தற்போது 3 வருடங்களாகின்றன. இதன் பணிகளை நிறைவு செய்வதற்குத் தேவையான 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி மத்திய பொறியியலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு அதற்குரிய கொந்தராத்து கடந்த வாரம் அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. பற் சிகிச்சைப் பிரிவின் வேலைகளை முடிப்பதற்கு 300 மில்லியன் தேவை. அந்த 300 மில்லியன் ரூபாய் நிதி இந்த வருடத்தில் வழங்கப்பட்டுள்ளது.

பக்கவாதப் பிரிவின் பணிகளை நிறைவு செய்வதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்த வைத்தியசாலையின் நவீனமயப்படுத்தல் மற்றும் வர்ணம் பூசுவதற்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது. உயர்கல்வி அமைச்சின் கற்றல் பிரிவுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கி, அதன் நிர்மாணப் பணிகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்படும். 230 மில்லியன் பெறுமதியான புதிய இதய வடிகுழாய் பிரிவு, கேத்லேப் பிரிவு, MRI Scanner இயந்திரம், CT Scanner இயந்திரம் போன்ற அனைத்து இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோயாளர் பராமரிப்புச் சேவைகளுக்கு மேலதிகமாக இந்த வைத்தியசாலையில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் கராபிட்டிய வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படுவதால் நாட்டின் முழு சுகாதார துறைக்கும் அது நன்மை பயக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

**ஹினிதும ரவீந்திர லியனகே**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

---

**வார இறுதிக் கேள்வி**



# எலோன் மஸ்க், ஜனாதிபதி சந்திப்பும் இலங்கையின் எதிர்காலமும்

*Ashley vence எழுதிய எலோன் மஸ்க் என்ற தலைப்பிலன அவரது வாழ்க்கை வரலாறு ருக்லந்தி பெரேராவால் சிங்களத்தில் 'எதிர்காலத்தை மாற்றிய மனிதன் எலோன் மஸ்க்” என மொழிபெயர்க்கப்பட்டு 2022 இல் சரசவி வெளியீடாக வெளியிடப்பட்டது.*

*Bloomberg வெளியிட்ட உலகின் முதல் பத்து பணக்காரர்களின் விபரங்களின்படி, மே 02, 2024 அன்றைய நிலவரப்படி உலகின் மூன்றாவது பணக்காரர் மஸ்க். ஆனால் மே 21 ஆம் திகதி நிலவரப்படி, அவர் உலகின் இரண்டாவது பணக்காரர் ஆனார்.*

10ஆவது உலக நீர் மாநாட்டில் பங்கேற்பதற்காக மே 18ஆம் திகதி இந்தோனேசியா சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகில் தனித்துவமான ஒருவரைச் சந்தித்து, எதிர்கால உடன்படிக்கைகளை மேற்கொள்ள அவருடன் கலந்துரையாடினார். அவர் புதிய தொழில்நுட்பப் புரட்சியின் முன்னோடி மற்றும் அதன் மூலம் சர்வதேச வணிக வலையமைப்பைக் கட்டியெழுப்பிய உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர் எலோன் மஸ்க்.

இலங்கையில் அதிகமானோர் அறியாவிட்டாலும் கணிசமானவர்கள் எலோன் மஸ்க் பற்றி அறிந்திருப்பார்கள் என நினைக்கிறேன். ஆஷ்லிவான்ஸ் எழுதிய எலோன் மஸ்க்கின் வரலாற்று கட்டுரை ருக்லந்தி பெரேராவால் 'எதிர்காலத்தை மாற்றிய மனிதன் எலோன் மஸ்க்' என மொழிபெயர்க்கப்பட்டு 2022 இல் சரசவி வெளியீடாக வெளியிடப்பட்டது.

எலோன் மஸ்க் உலகின் பத்து பணக்காரர்களில் ஒருவர். இருப்பினும், அவர் செல்வத்தால் சிறப்பு வாய்ந்தவர் அல்ல. ருக்லந்தி பெரேராவின் அவரது வாழ்க்கை வரலாறு மொழி பெயர்ப்பும் அதற்கு வழங்கப்பட்ட 'எதிர்காலத்தை மாற்றிய மனிதன்' என்ற பெயரும் அவரது தனித்துவத்தை கணிசமான அளவில் விளக்குகிறது என்று நினைக்கிறேன்.

எதிர்காலம் இன்னும் வரவில்லை. ஆனால் எலோன் மஸ்க் எதிர்காலம் வருவதற்கு முன்பே மாற்றியமைத்துள்ளார். அதுவே அவரது சிறப்பு. மே 2, 2024 நிலவரப்படி Bloomberg வெளியிட்ட உலகின் முதல் பத்து பணக்காரர்களின் விபரங்களின்படி, உலகின் மூன்றாவது பணக்காரர் மஸ்க். ஆனால் மே 21 ஆம் திகதியன்றைய நிலவரப்படி அவர் உலகின் இரண்டாவது பணக்காரர் ஆனார். இதற்குக் காரணம், இவருக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்கு விலைகள் சமீப நாட்களாக கணிசமாக உயர்ந்தமையாகும்.

மே 21, 2024 நிலவரப்படி, அவரது நிகர சொத்து மதிப்பு 201 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2023 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி 84.4 பில்லியன் டொலர்களாகும். உலகின் கணிசமான எண்ணிக்கையிலான நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட மஸ்க்கின் சொத்து மதிப்பு அதிகம். மனிதகுலத்தின் இருப்பு மற்றும் எதிர்காலத்திற்கான அவரது பங்களிப்பை அவரது இணைந்த மற்றும் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் குழுவால் அறிந்து கொள்ள முடியும்.

ஜூன் 28, 1971 இல் தென்னாப்பிரிக்காவில் பிறந்த அவர், அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பிஏ மற்றும் பிஎஸ்சி பட்டங்களைப் பெற்றார். அவர் 1995 இல் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் நுழைந்தார், ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு அங்கிருந்து விலகி தனது சகோதரர் கிம்பாலுடன் Zip 2 கம்பனியை நிறுவினார். 1999 இல், ஒரு நிறுவனம் Zip 2 கம்பனியை 307 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியது. அந்த ஆண்டு, மஸ்க் X.com கம்பனியை நிறுவினார். அது 2000 இல் PayPal ஆனது. 2002 இல் eBay அதை 1.5 பில்லியன் டொலருக்கு வாங்கியது. 2002 இல், மஸ்க் Space X ஐ நிறுவினார். இது எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்தில் மனிதக் குடியேற்றங்களை அமைக்கும் குறிக்கோளுடன் விண்வெளி பயணத்தில் ஈடுபட உருவாக்கப்பட்ட ஒரு தனியார் நிறுவனம் ஆகும். 2004 இல், அவர் மின்சார கார்களை உற்பத்தி செய்யும் டெஸ்லாவில் முதலீடு செய்தார். மேலும் 2008இல் அதன் தலைவராக ஆனார். 2006ல் சோலார்சிட்டி என்ற சூரிய சக்தி நிறுவனத்தை நிறுவினார். 2015 இல், அவர் OpenAI என்ற செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவினார். 2016ஆம் ஆண்டில், மனித மூளை மற்றும் கணினிகளுக்கு இடையே இணைப்புகளை உருவாக்கும் Neuralink என்ற நிறுவனம் நிறுவப்பட்டது. அவர் 2022 இல் twitter ஐ வாங்கி, அதற்கு x எனப் பெயர் மாற்றினார்.

மேலே உள்ள பட்டியலைப் படிக்கும் எவரும் அவரது ஒவ்வொரு அசைவும் உலகின் எதிர்காலத்தை மாற்றும் குறிக்கோளுடன் தொடங்கப்பட்டிருப்பதைக் காண்பார்கள். முறைமை மாற்றம் என்றால் என்ன என்று தெரியாமல் முறைமை மாற்றத்தை உருவாக்க முயற்சி; செய்யும் பலருக்கு,மஸ்க் பின்பற்றிய செயல்பாட்டின் மூலம் முறைமை மாற்றம் என்றால் என்ன என்று புரியும் வாய்ப்பு கிடைக்கும். எரிபொருளுக்குப் பதிலாக மின்சாரத்தில் கார்கள் இயங்கும் விதத்தில் மாற்றங்களை அறிமுகப்படுத்திய அவர், விண்வெளிப் பயணத்தில் மாற்றங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பதைக் காட்டினார்.

இவை அனைத்தும் பிரபஞ்சம் மற்றும் மனிதகுலத்தின் எதிர்கால இருப்பில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்தோனேசியாவில் நடைபெற்ற 10ஆவது உலக நீர் மாநாட்டின் போது இந்த அற்புதமான மனிதருக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. எலோன் மஸ்க் உலக நீர் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும், இந்தோனேசியாவில் தனது Space X நிறுவனத்தால் தொடங்கப்பட்ட Starlink இணைய அமைப்பை ஆரம்பிக்கவும் இந்தோனேசியா சென்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான இந்த கலந்துரையாடலில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தனவும் கலந்துகொண்டார்.

சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்ற இந்த கலந்துரையாடல், இலங்கையில் உள்ள அனைவருக்கும் குறைந்த செலவில் மற்றும் அதிகபட்ச செயல்திறனுடன் Starlink ஊடாக இணைய வசதிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பெரும்பாலும் கவனம் செலுத்தப்பட்டது. உயர் தொழில்நுட்ப செயற்கைக்கோள் வசதிகளின் அடிப்படையில் உலகின் 91 நாடுகளுக்கு குறைந்த விலையில் அதிவேக, இணைய வசதிகளை Starlink வழங்குகிறது. இதேவேளை, உலக வரலாறு, உலக அரசியலின் தற்போதைய நிலை போன்ற விடயங்கள் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டதுடன், இலங்கையின் நிலைமைகளை அவதானிக்க இலங்கைக்கு வருவதில் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இலங்கை ஜனாதிபதி மஸ்க்குக்கு அழைப்பு விடுத்துள்ளார். இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட ருவன் விஜேவர்தன, நாட்டின் அனைத்துப் பிரிவினரும் குறைந்த செலவில், அதிவேக, செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய வசதிகளை, இலங்கையில் பிராந்திய ரீதியாக அன்றி பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இக்கலந்துரையாடலின் பிரதான முடிவாக அமையும் என என்னிடம் தெரிவித்தார்.உலகை மாற்றிய அத்தகைய தொழில்நுட்ப முன்னோடி மற்றும் தொழிலதிபருடன் தொடர்பைப் பேணவும், ஒரே சந்திப்பில் உடனடி மற்றும் நீண்ட கால பயனைப் பெறக்கூடிய அத்தகைய இந்த நிகழ்வை பகுப்பாய்வு செய்யும் போது அடையக்கூடிய முடிவு என்னவென்றால், அனுபவமும் இயலுமையும் கொண்ட ஒரு தலைவராலேயே இது சாத்தியமாகும் என்பதாகும்.

எதிர்க்கட்சித் தலைவரும், சமகி ஜன பலவேகயவின் தலைவருமான சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்த ஒரு கருத்து என் நினைவுக்கு வருகிறது, ' சபாநாயகர் அவர்களே, இன்று எங்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. உலகில் எலோன் மஸ்க் என்ற பெரிய பணக்காரர் எலெக்ட்ரானிக் கார்களை தயாரிக்க உழைத்து வருவதையும் நீங்கள் அறிந்திருக்கலாம். இது டெஸ்லாவின் உற்பத்தி ஆலை என்று அழைக்கப்படுகிறது. இதற்குத் தேவையான வசதிகளை இந்தியா செய்து தராததால் சற்றே ஏமாற்றம் அடைந்துள்ளார். ஏன் எலோன் மஸ்க்கிடம் பேசி, அதிகபட்ச சலுகைகள் கொடுத்து, எலக்ட்ரானிக் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நம் நாட்டுக்கே பெற்றுத் தர முடியாது? எனது தந்தை இருந்திருந்தால் இன்று செய்திருப்பார்”; என முன்னாள் பிரதமர் பிரேமதாசவை மேற்கோள் காட்டி 2022 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூறினார். ஜனாதிபதி பிரேமதாச இன்று இல்லாத போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எலோன் மஸ்க்கைச் சந்தித்து, நாட்டுக்கு மிகவும் தேவையான, நாட்டின் பெரும்பாலான ஏழை மக்களுக்கு கிடைக்காத குறைந்த விலையிலான, அதிவேக இணைய வசதிகளை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்துள்ளார். பாலியில் புதிய இணைய அமைப்பைத் திறந்து வைத்து செய்தியாளர்களிடம் பேசிய எலோன் மஸ்க் கூறியதாவது: 'இணையத்தை அணுகினால் எதையும் கற்றுக்கொள்ளலாம். உங்கள் வணிகச் சேவைகளை உலகம் முழுவதும் விற்கலாம். எனவே இது எல்லையற்ற பலனைத் தரும் என்று நினைக்கிறேன்.'என்றார். எலோன் மஸ்க் உலகை மாற்றினார். அவர் தற்போதைய உலகத்தை அல்ல எதிர்கால உலகையே மாற்றியுள்ளார்.




இவ்வாறான எதிர்காலத்தைக் காணும் அறிவார்ந்த நிபுணர்களின் ஆதரவுடன் இலங்கையின் எதிர்காலத்தை வளப்படுத்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். எலோன் ரணில் சந்திப்பின் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாருக்கு அந்தத் திறன் உள்ளது என்பது பலராலும் எழுப்பப்பட்ட கேள்வியாகும்.



**களனி பல்கலைக்கழகத்தில் பொருளியல் பிரிவின் முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார**
தமிழில் வீ.ஆர்.வயலட்




ஹோமாகம வர்த்தகர்களின் பங்களிப்புடன், ஹோமாகம பிரதேச சபையால், நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள வெசாக் தோரணத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர், கலாநிதி பந்துல குணவர்தன மின்னொளி பரப்பி ஆரம்பித்து வைத்தார். ஹோமாகம பிரதேச செயலாளர் பீ.ஏ.டீ. சிந்தக, ஹோமாகம பிரதேச சபை செயலாளர் குமுதினி குலதிலக உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# IIADS இன் பொதுச் செயலாளராக கிர்பி டி லானெரோல் நியமனம்



இந்திய தேசிய அப்போஸ்தலிக்க மறை மா வ ட்ட (INA) நிர்வாகத்தின் கீழு ள்ள சர்வதேச சுதந்திர அப்போஸ்த லிக்க மறை மாவட்ட ஆயர் (IIADS) கிர்பி டி லானெரோல் (Kirby de Lanerolle) அதன் பொதுச் செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதன் மூலம் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் தெற்காசியா விலுள்ள சுமார் 11,000 தேவாலயங்க ளுக்கான ஆன்மிக வழிநடத்தல்களை அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஆயர் கிர்பி டி லானெரோல் அவரது மனைவி ஃபியோனாவுடன் (Fiona) இணைந்து ஆன்மிக பணியை முன்னெடுத்து வருகின்றார்.

இந்நிலையில் கொழும்பில் WOWlife எனும் தேவாலயத்தை அமைத்து அதன் மூலமாக அவர்கள் இருவரும் ஆன்மிக பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர் இலங்கையில் இன, மத ரீதியாக சிறுபான்மை சமூகங்களுக்குள் மத நல்லிணக்கத்தை வழங்கியுள்ளதுடன், அவரது ஆன்மிக பணியை பாராட்டி தேசிய விருதுகளுக் கும் அவர் அங்கீகரிக்கப்பட் டுள்ளார்.

ஆயர் கிர்பியினுடைய தொலைநோக்கு பார்வை மற்றும் தலைமைத்துவ பண்புகளால் உலகளாவிய திருச்சபையின் பொதுச் செய லாளராக இருந்து ஆன்மிக பணியை தொடர்ந்து முன்னெடுக்க வழிவகுக்கு மென, INA மறை மாவட்டம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
# சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 318 வெற்றிடங்கள் — டிரைவர்கள்

நிறுவனம் ஒன்றுக்கு கொழும்பு 08 மற்றும் அதனை சூழவுள்ள பகுதியில் வசிக்கும் அனுபவம் பெற்ற 40 வயதுக்கு உட்பட்ட ஓட்டுநர் ஒருவர் தேவை. C, C1 செல்லுபடியான ஓ ட்டுநர் அனுமதிப்பத்திரத்தை கொ ண்டிருத்தல் வேண்டும். ஆங்கி லத்தில் தொடர்பாடும் திறன் தேவை என்பதோடு ஒரு மாத த்தில் இரு முறை வெளியூரில் இரவில் தங்கி இருப்பதற்கு மு டியுமாக இருத்தல் வேண்டும். தொடர்புக்கு 0705363099, மின்னஞ்சல் careerke@gmail .com 034717

### 319 வெற்றிடங்கள் — வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு , பன்னிப்பிட்டியில் வீட்டில் சேவைக்கு பெண் ஊ ழியர் தேவை. சமையல், சுத்திகரிப்பு வேலை கள் உண்டு. அழையுங்கள் 07103509 3 0, சம்பளம் 35000/= 032990

### 320 வெற்றிடங்கள் — ஹோட்டல்கள், பேக்கரிகள்

கட்டுநாயக்க ஹோட்டலுக்கு வர வேற்பாளர்/ கெசியர் (ஆண்/ பெண்) ரூம் போய், சாரதி, குக் சேர்த்துக் கொள்ள ப்படு வர். 0703551339. 034365

றொட்டி சுடுபவர் , சமையலறை உதவியாட்கள், தேநீர் பான்ரி யாளர்கள் , பார்சல் செய்பவ ர்கள், கசியர் 22 வயதிற்கு குறைவானவர்கள், திருமணம் செய்யாதவர்கள், தங்குமிடம், உணவு இலவசம். திருப்தியான சம்பளம். 076 4099035, 071 9001955. 033440

### 321 வெற்றிடங்கள் — தோட்டத்துறை

கோழிப் பண்ணை ஒன்றில் தங்கி இருந்து பணியாற்றுவ தற்கு ஆண் பணியாளர்கள் தேவை. சம்பளம் 60000/ . ஹோமாகம கொடகம. 0777489793 034739

### 322 வெற்றிடங்கள் — மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

இரத்தினபுரி வேலைத்தளம் ஒன்றுக்கு கொத்தனார்கள் மற்றும் உதவியாளர்கள் தேவை. மாகா நிறுவனத்தில் வேலை பார்த்தவர்களுக்கு முக்கியத்துவம். தங்குமிடம், உணவு வழங்கப்படும். 071 5831989 034737

### 325 தொழில்துறை — பொது

தொழில் முகவர்கள் தேவையாக உள்ளது. கம்பஹா மாவட்டத்தி ன் ஏற்றுமதி நிறுவனத்திற்கு தங்கி இருந்து தொழில் புரிவ தற்கு 1845 வயதுக்கு இடை யிலான பெண் பணியாளர்க ளை தேடித்தரும் உங்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க ப்படும். மேலதிக விபரங்களு க்கு 077 1030782 034714

வேலைக்கு ஆட்சேர்ப்பு. தோட்ட த்தில் முகாமைத்துவம், நடுத லும் பராமரிப்பு போன்ற வே லைகளுக்கு ஆட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தங்க ள் பு கைப்பட பிரதியுடன் அடையாள அட்டை பிரதியையு ம் இணைத்து விண்ணப்பிக்க வும். இல. 217358, தினகரன் வாரமஞ்சரி, த.பெ . 2222, கொழும்பு. 0217358

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து — கொழும்பு மாவட்டம் — விற்பனைக்கு

மஹரகம பமுனுகம வீதிக்கு 500 மீற்றர் தொலைவில் 10 பேர்ச்சிற்கு அண்ணளவாக இடத்துடன் வீடும் விற்பனை க்குண்டு. 0725668741. 030513

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling
Contact Us:-
- 011 2 429 369
- 077 7 270 067
- 077 7 270 845
- adzsuo@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067








HOUSE FOR SALE
RATHMALANA
10 PERCH UPSTAIR HOUSE FOR SALE
4 BEDROOMS, 3 BATHROOMS, 1 SERVANT BATHROOM, 2 PANTRIES, 2 BALCONIES, PARKING FOR TWO VEHICLES, 100M FROM GALLE ROAD
0775 931 766










கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL
To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
(PV 120625)
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

RAJAGIRIYA
IDENTICAL TWO APARTMENTS FOR RENT
OVER LOOKING NELUM KULUNA. 1532 Sq ft each. Two bedrooms with balconies. Two large bathrooms. Open panty with large sitting and dining area with balcony. Parking slot for one vehicle, area for car wash. Minimum one year tenancy / Ideal for two years. Security deposit 6 months. AC , 24 hour security, Maintenance 9900/=
Monthly 135k first floor. 125k second floor per month. Negotiable.
Contact : 0759 733 008




விற்பனைக்கு
கல்கிசையில் வீடு மற்றும் காணி
காணியின் அளவு 24 பேர்ச்சர்ஸ்
கல்கிசை கடற்கரைக்கு 200 மீற்றர் மற்றும் புனித தோமஸ் நீச்சல் தடாகத்திற்கு 200 மீற்றரில் டி சேரம் வீதி மற்றும் டி சேரம் வீதியின் குறுக்கு வீதிகளின் விளிம்பில் உள்ள காணி. கல்கிசை கடற்கரையில் பரந்துள்ள பாறை – தயில் அமைந்துள்ளது. 6 அறைகள் கொண்ட அழகான வீடு.
குடியிருப்புக்கு அல்லது வர்த்தக நோக்கத்திற்கு பொருத்தமானது
எம்மை தொடர்பு கொள்ளவும் : 077 779 1820

RAJAGIRIYA
600 SQ FT MODERN BRAND NEW OFFICE AREA. FOR RENT
FULLY FURNISHED WITH ATTACHED BATHROOM 24 HOUR SECURITY. CAR PARKING FOR ONE VEHICLE.
Contact : 0759 733 008

Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

MATARA
COMMERCIAL LAND FOR SALE
AT THE HEART OF MATARA TOWN
KOTUWEGODA
32 Perches Land with a House
(Next to Income Tax Branch)
Suitable for any establishment
BANK FACILITIES AVAILABLE
011-2 733 876 | 077- 2 952 798



# ஈரான் ஜனாதிபதியின் மரணச்செய்தி கேட்டு கதறிய கையிந்து

## 'மத்தளை விமான நிலையத்தில் என்னை முத்தமிட்டு ஆசிர்வதித்தார்' என கலங்குகிறார்

ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராறாஹிம் ரைசி மே 19ஆம் திகதி ஈரான் மற்றும் அஜர்பைஜான் எல்லையில் நிர்மாணிக்கப்பட்ட அணையின் திறப்பு விழாவில் கலந்து கொண்டிருந்தார். அந்த அணை திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் திரும்பிக் கொண்டிருந்த போது அவர் பயணித்த ஹெலிகொப்டர் வர்சாகான் என்ற பகுதியில் தரையிறங்க முற்பட்ட வேளை காணாமல் போயிருந்தது.

அந்நாட்டின் அனைத்து பாதுகாப்புத் துறையினரும் மேற்கொண்ட பெரும் முயற்சியின் பின்னர் விபத்து இடம்பெற்ற இடம் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்விடத்தைச் சோதனையிட்ட போது ஈரான் ஜனாதிபதி, ஈரான் வெளிநாட்டமைச்சர் மற்றும் அந்த ஹெலியில் பயணித்த அனைவரும் ஹெலியுடன் சேர்ந்து தீயில் கருகிப் போயிருந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டது. இதில் ஈரான் ஜனாதிபதியும் ஏனைய குழுவினரும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. இந்த செய்தியை உலகமெங்கும் ஊடகங்கள் ஒளிபரப்பியதையடுத்து இலங்கையைச் சேர்ந்த கையிந்து மிகவும் மனவேதனைக்குள்ளாகினான். அந்த வேதனைக்கு காரணம் கடந்த 24ஆம் திகதி ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசியை மத்தள விமான நிலையத்தில் சிங்கள முறையில் வெற்றிலை கொடுத்து ஆயுபோவன் எனக் கூறி வரவேற்றது இந்த கையிந்துதான்.



நாம் தினகரனுக்காக கையிந்துவைத் தேடி அவர் வசிக்கும் எம்பிலிப்பிட்டி புதிய நகரில் அமைந்துள்ள அவரது இல்லத்தை நோக்கிச் சென்றோம். நாம் அவரது வீட்டை அடைந்த போது அவரது தந்தை தொழிலுக்குச் சென்றிருந்ததோடு, தாய் இரு சகோதரர்களுடன் பாட்டியின் வீட்டில் இருந்தார். அழகிய புன்னகையுடன் எம்மை வரவேற்ற கையிந்து இவ்வாறு தனது கதையைக் கூற ஆரம்பித்தார்.

"எனது தந்தை இந்த வரவேற்பு நிகழ்வு இடம் பெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே இவ்வாறு ஒரு வரவேற்பு நிகழ்வு இடம்பெற உள்ளதாக என்னிடம் கூறினார். எனினும் ஈரான் ஜனாதிபதியை வரவேற்கப் போவது யார் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அதன் பின்னர் அடுத்த நாள் நீங்கள் வரவேற்கப் போவது ஈரான் நாட்டு ஜனாதிபதியையே என என்னிடம் தந்தை கூறியபோது எனக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. எனக்கு ஒப்படைக்கப்பட்ட பணி ஈரான் ஜனாதிபதி மத்தளை விமான நிலையத்திற்கு வந்ததும் விமானத்திலிருந்து இறங்கும் போது வெற்றிலை கொடுத்து சிங்கள பாரம்பரிய முறையில் ஆயுபோவன் எனக் கூறி கும்பிட்டு அவரை வரவேற்பதாகும்.

அன்று நான் அவ்வாறே ஈரான் ஜனாதிபதியை வெற்றிலை கொடுத்து ஆயுபோவன் எனக் கூறி வரவேற்றேன். எனினும் ஈரான் ஜனாதிபதி எனது தலையைத் தடவி என் நெற்றியில் முத்தமிடுவார் என நான் எதிர்பார்த்திருக்கவே இல்லை. அன்று அவர் என் நெற்றியில் முத்தமிட்ட போது அது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அதேபோன்று அது எனக்கு அவர் மீது மிகுந்த பாசத்தையும் ஏற்படுத்தியது. அது மிகவும் உணர்வுபூர்வமான ஒரு சந்தர்ப்பம். அந்நேரம் ஈரான் ஜனாதிபதி அவரது மொழியில் என்னை வாழ்த்தினார்.




அவர் கூறிய எதுவும் எனக்கு விளங்கவில்லை. அது ஒரு புதுமையான மொழி. அவர் அன்று என்னை என்ன கூறி வாழ்த்தினார் என இன்று வரைக்கும் எனக்குத் தெரியாது. அந்த மொழியை எனக்கு மொழி பெயர்த்துக் கூற அவ்விடத்தில் ஒருவரும் இருக்கவில்லை. அனைத்துமே விரைவாகவே நடைபெற்று முடிந்தன. எனினும் அவர் மிகவும் அன்புடன் கூறியதால் அவர் என்னை வாழ்த்திப் பிராத்தித்துள்ளார் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

நான் பாடசாலைக்குச் சென்ற போது எனது வகுப்பு நண்பர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு நிறைய விஷயங்களைக் கேட்டார்கள். எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பற்றி மிகுந்த அக்கறையுடனும், மிகுந்த விருப்பத்துடனும் அவர்கள் என்னிடம் பேசினார்கள். எனினும் இவ்வாறான ஒரு விடயத்தைத் திடீரெனச் செய்ய வேண்டியிருந்ததை நான் கல்வி கற்கும் எம்பிலிப்பிட்டி ஸ்ரீபோதிராஜ வித்தியாலய அதிபரோ, எனது வகுப்பாசிரியையோ அறிந்திருக்கவில்லை. காரணம் அது ஈரான் ஜனாதிபதியின் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயம் என்பதனாலாகும். இதைப் பற்றி எவரிடத்திலும் கூற வேண்டாம் என என்னிடம் என் தந்தை கூறியிருந்தார். எனவேதான் நான் இதைப் பற்றி யாரிடத்திலும் எதுவும் கூறவில்லை. இந்த நிகழ்வைத் தொலைக்காட்சியில் பார்த்து அதில் நான் இருப்பதைக் கண்ட எனது நண்பர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருந்தார்கள். எனது உறவினர்களும் கூட அதனைப் பார்த்து அதைப் பற்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் பேசினார்கள். இவ்வாறான ஒரு நாட்டுத் தலைவரை வரவேற்கக் கிடைப்பது மிகவும் அதிர்ஷ்டமானது என்றும் கூறினார்கள். நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன் என எனது மாமியும் கூறினார்.

ஈரான் ஜனாதிபதி ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி மரணித்து விட்டார் என்பதை பெரும்பாலானோர் இரண்டு நாட்களின் பின்னர்தான் அறிந்து கொண்டனர். அன்று திங்கட்கிழமை என்பதால் நான் பாடசாலைக்குச் சென்றிருந்தேன். எனவே இதைப் பற்றி என்னால் அறிந்து கொள்ள முடியாமல் போனது. நான் பாடசாலையிலிருந்து வீடு வந்ததும், பாட்டி, எனது தந்தையின் தாய், எனக்கு இதைப் பற்றி கூறினார். மகனே, நீங்கள் மத்தளை விமான நிலையத்தில் மலர்மாலை அணிவித்து வரவேற்ற ஈரான் ஜனாதிபதி அவர் பயணித்த ஹெலிகொப்டர் விபத்திற்குள்ளாகி உயிரிழந்து விட்டார் எனக் கூறினார். எனக்கு தாங்க முடியாத கவலை ஏற்பட்டது. அவர் மத்தளை விமான நிலையத்தில் வைத்து எனது தலையைத் தடவி என் நெற்றியில் அன்புடன் முத்தமிட்டது எனக்கு நினைவிற்கு வந்தது. இப்படிப்பட்ட ஒருவருக்கு ஏன் இவ்வாறு நேர்ந்தது என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. என்னையறியாமலேயே என் கண்களில் கண்ணீர் பெருகியது. நான் எமது மதத்தின்படி அவருக்காக மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டேன்" என்று நீண்ட பெருமூச்சுடன் பேச்சை முடித்தார் கையிந்து.

கையிந்துவின் கதையை வேறு திசைக்குத் திருப்பினோம். கையிந்து எம்பிலிப்பிட்டிய ஸ்ரீ போதிராஜா வித்தியாலயத்தில் தரம் 6இல் கல்வி கற்கிறார். இரண்டு சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தில் கையிந்து சித்னத இரண்டாவது பிள்ளையாகும். இவரது மூத்த சகோதரர் யோனால் சித்னத 08ஆம் வகுப்பிலும் கற்று வருகின்றார். இளைய சகோதரர் ரித்திர நிம்னத மூன்றாம் தரத்தில் கல்வி கற்கிறார். பெற்றோர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கையிந்து உள்ளிட்ட இரண்டு சகோதரர்களின் பெரும்பாலான வேலைகளை பாட்டியே செய்து வருகின்றார்.

அவளது பெயர் பிரேமா ஜயசேகரவாகும். "எனது மூன்று பிள்ளைகளும் என்னுடன் மிகுந்த பாசமாக இருப்பார்கள்.நானும் அவர்களுடன் என் உயிரைப் போன்று அன்பு வைத்துள்ளேன். பாடசாலை சென்று விட்டால் அவர்கள் வீடு வரும் வரைக்கும் எதிர்பார்த்துக் காத்திருப்பேன். அவர்கள் பாடசாலையிலிருந்து வந்து ஆடைகளை மாற்றி உடல் கழுவிக் கொண்டு என்னிடம் வந்து உணவு ஊட்டச் சொல்லுவார்கள். பின்னர் விளையாடுவார்கள். பாடங்கள் படிக்கும் போது என்னிடம் வந்து சந்தேகங்களைக் கேட்பார்கள். மூவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள். மூவரும் எனது அரவணைப்பிலேதான் இருப்பார்கள். ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸி மரணித்த செய்தி வாசிக்கப்படுவதை நான் கண்டேன். இதனை நான் சின்ன மகனிடம் கூறியபோது அவர் மிகுந்த கவலைக்குள்ளானார். அவரது கண்கள் கண்ணீர் சிந்தியதை நான் கண்டேன். அதனைப் பார்த்து என் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. இவ்வாறான ஒரு திடீர் விபத்து அவருக்கு ஏற்படும் என என் மகன் கனவில்கூட நினைத்தும் இருக்க மாட்டார்" என்றார் அந்த தாய்.



"கல்வியில் எனக்குப் பிடித்த பாடம் கணிதமாகும். நான் 2023ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்றேன். நான் எதிர்காலத்தில் மின்பொறியியலாளராக வர வேண்டும் என ஆசைப்படுகின்றேன். மின்சார துறையில் முன்னேறுவதே எனது எதிர்பார்ப்பாகும். அதேபோன்று ஆங்கிலப் பாடத்திலும், நடனத்திலும் எனக்கு விருப்பம் அதிகம் " என கையிந்து கூறினார்.

*ரசிக கொட்டுதுரகே*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*

# கொல்லப்பட்டாரா ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

அரசுகளுக்கிடையிலான சர்வதேச அரசியலில் ஈரான் இஸ்ரேல் மோதல் தீவிரம் பெற ஆரம்பித்துள்ளது. ஈரான் தனது ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை (19) இழந்துள்ளது. ஹெலிக்கொப்டர் விபத்தில் அஜர்பைசான் ஈரான் நாட்டு எல்லையிலுள்ள அஜர்பைஜான் மாகாணத்தின் ஜோல்பா நகரத்திற்கு அருகே ஜனாதிபதி ரைசி மற்றும் ஈரான் நாட்டு வெளியுறவு அமைச்சர் உட்பட எட்டுப்பேர் பறந்து கொண்டிருந்த ஹொலி விபத்திற்கு உள்ளானதில் இத்தகைய துயரம் நிகழ்ந்துள்ளது. இது விபத்தா? அல்லது திட்டமிட்ட தாக்குதலா? என்ற கோணத்தில் பல உரையாடல்களும் தேடுதல்களும் விவாதங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கிறன. அதிக சந்தேகங்கள் ஒருபக்கம் அமைய அதிகமான சதிக்கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு முதன்மைப் படுத்தப்படுகிறன. இம்மரணத்துக்குப் பின்னால் உள்ள யதார்த்தத்தை தேடுவதே இக்கட்டுரையின் நோக்கமுமாகும்.

ஹமாஸ் இஸ்ரேல் போரின் பிரதான பங்காளி ஈரான் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். ஏனைய சக்திகள் முன்பின்னாக செயல்பட்டாலும் அடிப்படையில் ஈரான் என்பது இஸ்ரேல் அமெரிக்கா நன்கு தெரிந்து கொண்ட நாடுகள் என்பது அறிந்தவிடயம். மேற்குலகத்தின் உலகளாவிய கட்டமைப்புக்கும் நலன்களுக்கும் விரோதமான எத்தகைய நகர்வுகளையும் ஒரு காலப்பகுதியிலும் மேற்குலகம் ஏற்றுக் கொள்வதில்லை என்பதை கண்டு கொள்ள முடிந்தது. அதில் உலகளாவிய ரீதியில் தென்பூகோள நாடுகளுக்கு அதிக அனுபவமுண்டு. இந்தியா சிறப்பான அனுபவத்தை அடைந்துள்ளது. மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி போன்ற தலைவர்களின் நிலையை ஆதாயம் தேடும் கொலைகளாக நிகழ்த்திவிட்டு தற்போது மேற்குக்கு இசைவான ஆட்சியாளரை நிறுத்தி நாடுகளுக்கிடையிலான உறவுகளை நகர்த்தி வருகிறது. அத்தகைய வரிசையில் 600க்கும் மேற்பட்ட கொலை முயற்சியில் தப்பிக்கொண்ட ஒரே தலைவராக கியூபாவின் பெடல் காஸ்ரோ மட்டுமே காணப்படுகிறார். லுமும்பா முதல் யசீர் அரபாத் வரை மேற்குலகத்தின் நலனுக்கு விரோதமான தலைவர்கள் ஆதாரமற்று கொல்லப்பட்ட வரலாற்றை நினைவில் கொள்வது அவசியமானது. சதாம் உசேன் மற்றும் கேணல் கடாபி உட்பட தலைவர்களை, தெளிவான உபாயங்களை வகுத்து, மேற்குலகம் பெரும் கதையாடல் மூலம் கொலைகளை கையாண்டுள்ளது. இதனை எல்லாம் சதிக்கோட்பாடு என்று கடந்து விட்டு செயல்பட முடியாது. அத்தகைய வரிசையில் ரைசியும் மேற்குலகத்தின் நலனுக்கு எதிரானவர்.

ரைசியின் மேற்குலகத்தின் நலனுக்கு எதிரான திட்டமிடல்கள் அதிகமாகக் கொண்ட ஜனாதிபதியாக விளங்கியவர். பிரதானமாக ரஷ்யா, வடகொரியா, சீனா உட்பட்ட உலக அரசியலின் ஓரணியை வடிவமைப்பதிலும் அதற்குள் ஏனைய நாடுகளை இணைப்பதிலும் கவனம் கொண்டவர். ரஷ்யா உக்ரைன் போரில் அதிகமான இராணுவ உதவிகளை ரைசி வழங்கியுள்ளார். இந்தியாவுடன் இணைந்து கொண்டு வலுவான பொருளாதார உட்கட்டுமானங்களை ஏற்படுத்தி வருபவர். இலங்கைக்கு ரைசியின் பொருளாதார ஒத்துழைப்பு அவ்வாறே அஜர்பைஜானுக்குமான ஈரானின் உதவி மேற்குலகத்தின் உதவி மூலமான ஆக்கிரமிப்பை சிதைக்கிற கோட்பாடாக உள்ளது. தனித்து இஸ்ரேலிய அமெரிக்கப் போர் காஸாவை நெருக்கடிக்கு உள்ளாக்கியது மட்டுமல்ல மேற்குலகத்தின் உலகளாவிய அரசியல் பொருளாதார இராணுவக் கொள்கைக்கும் விரோதமாகச் செயல்பட்டவர் இப்ராகிம் ரைசி. நீண்டகால நோக்கில் மேற்குலகத்தை சவாலுக்கு உட்படுத்தும் கொள்கையை தென்பூகோள நாடுகள் மத்தியில் ஏற்படுத்தி விடுவார் என்ற அச்சம் அமெரிக்கா உட்பட்ட மேற்கிடமிருந்தது. ரஷ்யாவையும் சீனாவையும் அரவணைத்துக் கொண்டு நகரும் அணுகுமுறை மேற்குக்கு அபாயமானதாகவே அமைந்திருந்தது.



இத்தகைய சூழலிலேயே ஈரான் ஜனாதிபதி கொல்லப்பட்டார். இதன் மூலம் ஈரானின் ஆட்சியை தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தலைமையினூடாக நகர்த்துவதே மேற்குலகத்தின் திட்டமிடலாகும். ரைசிக்கு பின்னர் ஈரானை ஆட்சி செய்யப்போகும் தலைமையுடன் மேற்குலகம் கூட்டுச்சேர முனையும்.



அதிலும் நெருக்கடி ஏற்படுமாயின் கொலைகளை கண்டுபிடிக்க முடியாத வழிமுறையினூடாக நிகழ்த்தும். இது இஸ்ரேல் அமெரிக்க கூட்டின் உத்தியாக உள்ளது. ஈரானின் இராணுவத் தளபதி, அணு விஞ்ஞானி என்ற வரிசையில் ரைசி மீதான படுகொலை அரங்கேற்றப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்களை உலகம் தேடிக்கொண்டே இருக்கும். ஒரு போதும் கண்டு கொள்ள முடியாது. அதற்கு அமைவாகவே படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. இதனை அமெரிக்கா இஸ்ரேல் கூட்டாக மேற்கொண்டதற்கு மேலே குறிப்பிட்ட ஆதாரத்தைக் கடந்து நேரடியாக இருக்கும் ஆதாரங்களை தெரிந்து கொள்வது அவசியமானது.

ஒன்று, ஈரான் ஜனாதிபதியுடன் பயணித்த ஏனைய இரு ஹெலிக்கொப்டர்களும் பத்திரமாக நாட்டுக்குள் வந்துள்ளன. ஏன் ரைசி பயணித்த ஹெலி மட்டும் காணாமல் போனது என்பதற்கான விடை ஹெலியிலுள்ள குறைபாடு மற்றும் காலநிலையிலுள்ள குழப்பம் போன்ற சந்தேகங்களுடன் முடிவுக்கு வருகிறது. இதனை திட்டமிட்டு மொசாட் மற்றும் சிஐஏ தனது முகவர்கள் ஊடாக வெளிப்படுத்தியிருக்க வாய்ப்பு அதிகமுண்டு.

இரண்டு, ரைசிக்கு எதிரான உள்நாட்டுச் சக்திகள் இத்தகைய வேலையை செய்திருக்கலாம் என்று உரையாடப்படுகிறது. இன்றைய சூழலில் ஈரானின் உள்நாட்டுச் சக்திகள் தனது தாய்நாட்டுக்கு துயரம் விளைவிக்கும் நகர்வை மேற்கொள்ள முயலுமா? என்ற கேள்வி இயல்பானது. அத்தகைய சூழலால் ஒட்டுமொத்த ஈரானும் காணாமல் போவது மட்டுமல்ல மேற்காசியாவின் இருப்பே காணாமல் போகும். அது இஸ்ரேலுக்கு அடிமையாவதற்கு சமமானது. அத்தகைய செயலை ஈரானிய குடிமகன் மேற்கொள்வானா என்பது தான் முக்கியமானது. அதனால் அத்தகைய செய்திகளும் உரையாடல்களும் திட்டமிட்டு சூழலைக் குழப்பும் நடவடிக்கையாகும். மூன்று, மிக முக்கியமான விடயமாக உள்ளது. ரைசியின் ஹெலிகொப்டர் அஜர்பைஜானில் தரையிறங்கும் முன்னர் அமெரிக்காவின் சி - 130 விமானம் ஏன் தரையிறங்கியது என்பது அஜர்பைஜானிய அரசாங்கத்திற்கே குழப்பமாக உள்ளது. அவ்வாறான ஒரு செயல் ரைசி இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் அமெரிக்க விமானம் இலங்கைக்குள் வருகை தந்ததாகவும் தகவல் உண்டு. அப்படியாயின் ஏன் அமெரிக்க விமானம் அஜர்பைஜானுக்கு வருகைதந்ததென புரிந்து கொள்வது முக்கியமானது. அது மட்டுமன்றி இஸ்ரேல் அஜர்பைஜானுடன் இராஜாங்க உறவுகளைக் கொண்டுள்ள நாடு என்பதையும் கவனத்தில் கொள்வது சிறப்பானது. அத்தகைய வாய்ப்புகளை மொசாட் பாவிக்க வாய்ப்புகள் அதிகம். அதனை அஜர்பைஜான்கூட கண்டு கொள்ள முடியாது. நான்கு, ஈரானின் முதல்கட்ட விசாரணை வெளியாகியுள்ளது. அதில் எந்த தாக்குதலும் ஹெலிக்கொப்டர் மீது நிகழ்ந்ததாக ஆதாரங்கள் கிடைக்கவில்லை என தெரியவருகிறது. இங்கு ஒரு விடயத்தை குறிப்பிட்டாக வேண்டும். ஈரானின் இராணுவத் தளபதி சுலைமானி கொல்லப்பட்டதும் ஈரானின் அணுவிஞ்ஞானி மொஹசன் பக்ரிட் கொல்லப்பட்ட முறைமையை விளங்கிக் கொள்ள வேண்டும். இருவரும் அண்டவெளி தொழிநுட்பத்தின் பிரயோகத்தின் மூலமே கொல்லப்பட்டனர். அத்தகைய சூழலில் இத்தாக்குதல் சைபர் மூலம் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம். சிஐஏ மற்றும் மொசாட்டின் கொலைகள் அவ்வாறானதாகவே வளர்ச்சியடைந்துள்ளன. ஆதாரங்களைக் கண்டு கொள்ள முடியாதவாறு நிகழ்த்துவது. அதனை தேடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிவிட்டு செல்வது என்று பல உத்திகளைக் கொண்டுள்ளன. விமானத்திலிருந்து அல்லது செயற்கைக் கோளிலிருந்து சைபர்த் தாக்குதலை நிகழ்த்தும் தொழில் நுட்பத்தை இரு நாடுகளும் கொண்டுள்ளன. ஐந்து, ஈரானின் முதல்கட்ட விசாரணையில் வெளியான அறிக்கையில் ஈரானின் பலவீனங்களை மறைப்பதாக உள்ளது. அதன் வலுவற்ற இராணுவ கட்டமைப்பும் புலனாய்வுத் துறையின் அவதானமின்மையும் மட்டுமன்றி ஐந்து அணுவிஞ்ஞானிகளையும் இராணுவத் தளபதியையும் இழந்த பின்பும் எச்சரிக்கையுடன் ஈரானிய ஆட்சியாளர்கள் செயல்படத் தவறியமை பற்றிய குறைபாடுகள் வெளிவருவதை அறிக்கை தடுத்துள்ளது. இதனால் உள்நாட்டிலும் இராணுவத்திற்குள்ளும் நிகழக்கூடிய பாதிப்புகளை தவிர்க்க இந்த அறிக்கை முயன்றிருக்கலாம். அதனை எல்லா அரசுகளும் மேற்கொள்வது வழமையானது. அண்மையில் இஸ்ரேல் கூட ஈரானின் தாக்குதலில் 99 சதவீதமான தாக்குதலை முறியடித்துவிட்டதாக அறிக்கை இட்டதை நினைவு கொள்ளுதல் வேண்டும். எனவே ஈரானின் முதல்கட்ட அறிக்கையில் எத்தகைய தெளிவான பதிலும் அமையவில்லை என்பதற்காக மொசாட்டும் சிஐஏ உம் தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வரமுடியாது. ஆனால் இதற்கு பதிலளிக்கும் தரப்பாக ஈரான் இல்லாத நிலை வளர்கிறது. அது இஸ்ரேலுக்கும் மேற்குலகத்திற்கும் பாரிய வெற்றியாகும். அதே நேரம் ரஷ்ய ஜனாதிபதியின் அணுகுமுறை வேறுவிதமானதாக உள்ளது. அது ரைசிக்கு இன்னோர் பதிலீட்டைச் சாத்தியப்படுத்துமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

ஆறாவது, ரைசி மீதான தாக்குதல் பாரிய அல்லது மூன்றாம் உலக போரை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் மேற்குலக ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது. இத்தாக்குதலை அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டு மேற்கொள்ளவில்லை என்பதாக பல சப்புக் கட்டுத்தனமான காரணங்களை மேற்குலக ஆய்வாளர்களும் முன்வைக்கின்றனர். ஒரு பெரும் போரை தவிர்க்க முனைகிறார்கள். அதுவே மேற்குலகத்தின் ஜனநாயகம், தாரண்மைவாதம் , மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்டங்கள். இவ்வாறு பலவிடயங்களை குறிப்பிட்டுக் கொள்ள முடியும்.



எனவே அனைத்து ஆதாரங்களையும் தேடுவதைக் காட்டிலும் தாக்குதலின் மூலம் எதுவோ அதனை அடிப்படையாகக் கொண்டு அளவிடும் போது இஸ்ரேல், அமெரிக்காவின் பங்கை புரிந்து கொள்ள முடியும். இது ஒரு கூட்டு தாக்குதல் நடவடிக்கை. இஸ்லாமிய நாடுகளின் தலைவர்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலையையே ரைசி மீதான தாக்குதலும் தந்துள்ளது. இதனை விட காடைத்தன அரசியல் வேறு எதுவாகவும் அமையாது. இதுவே மேற்குலகத்தின் இறுதி உத்தியாகவுள்ளது. கடந்தகாலம் முழுவதும் அதனையே மேற்குலகம் தென்பூகோள நாடுகளின் தலைவர்கள் மீது நிகழ்த்தியுள்ளது. முடிந்தவரை அத்தகைய தலைவர்களை வளைத்துப்போட முயல்வது அல்லாத சூழல் ஏற்பட்டால் முடித்துவிடுவது. அமெரிக்கா இஸ்ரேல் அத்தகைய நகர்வையே மேற்கொண்டு தனது இருப்பை உறுதிப்படுத்தி வருகிறது.

# வரலாற்று தடம் பதித்த பெருந்தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான்





## இன்று (26.05.2024) சௌமியபவனில் புகைப்பட கண்காட்சியும், விசேட பூஜையும் இடம்பெறும்

### அமரரின் 4ஆவது சிரார்த்த தினத்தையொட்டிய சிறப்புக்கட்டுரை

தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

பெருந்தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் எம்மைவிட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது. அவர் எங்களுடன் இல்லை என்ற மனக்குறை இருந்தாலும் அவரது வழிகாட்டல்களின் படியே நாங்கள் பயணிக்கின்றோம் என்ற உணர்வு எமக்கு மனநிறைவையே தருகின்றது.

எமது நாளைய நாட்கள் பிரகாசமாக விளங்க அவர் மலை நாடெங்கும் நம்பிக்கையை விதைத்தார். அதையே வளர்த்தார். அதற்குப் பாத்திரமாகவே வாழ்ந்தார். சிறந்த தலைமையாகவே பரிணமித்தார்.

அரசோடு இணைந்து மலையக சமூகம் ஏனைய சமூகங்களைப் போல சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற இலட்சிய நோக்குடனேயே செயல்பட்டு வந்தார். அவரது தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்ற வெற்றிகள் ஏராளம்.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் 90களில் இ.தொ.காவின் அரசியல் நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்தினார். 93இல் இ.தொ.காவின் உத்தியோகபூர்வ நிதிச் செயலாளராகவும் 94இல் பொதுச் செயலாளராகவும் பதவியேற்றார்.

இதே ஆண்டிலேயே முதற் தடவையாக பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கி 74,000 வாக்குகளைப் பெற்றார்.

2000, 2004, 2010 ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றிபெற்றது மாத்திரமின்றி மலையகத் தமிழ் பிரதிநிதிகளில் ஒவ்வொரு தேர்தலிலும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றவர் என்ற பெருமையும் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு உண்டு.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கொள்கைப்படி ஆளும் கட்சிகளில் பங்காளியாவதன் மூலமே மலையகத்தின் அபிவிருத்திக்கு உறுதுணை புரிய முடியும் என்பதற்கேற்ப, அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆளும் கட்சி எது வென்றாலும் அதில் அங்கத்துவம் பெற்றாலும், மலையக மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி ஆளும் கட்சியை எதிர்க்கவும் ஒரு போதும் தவறியதில்லை.

பெருந்தோட்டங்களில் வாழும் இளம் தலைமுறையினரின் ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்கிலும் அவர்களது சமூக அபிவிருத்தி கருதியும் ஆறுமுகன் தொண்டமானின் எண்ணத்தில் உதித்த பிரஜா சக்தி திட்டம் சிறப்பாக இன்று வரை அதன் இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

மலையகத்தில் எத்தனை கட்சிகள் முளைத்தாலும் எத்தகைய பிரயத்தனங்கள் செய்தாலும் மக்களின் அபிமானம் மிக்க தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் தான் என்பதை கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் பதிவு செய்திருக்கிறது.

சரித்திரம் போற்றும் சாதுர்யமான ஒரு தலைமைத்துவம், தலைவணங்காத சாணக்கியம், ஆச்சரியமூட்டும் அரசியல் அணுகுமுறை, சரியெனப்பட்டதை தயங்காமல் சொல்லும் தைரியம். இதுதான் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அடையாளங்கள். ஆளுமையை பறைசாற்றும் ஆதாரங்கள்.


அவரது 30 வருட கால சமூக, அரசியல், தொழிற்சங்கப் பயணத்தில் தொய்வே காணாத கம்பீர வழிகாட்டல். தேசிய தலைமைகள் கூட தேடிவந்து கூட்டணி கொள்ளும் வகையில் அவரது தனித்துவபாணி தலைதூக்கி நிற்கிறது.

இ.தொ.கா மீது எமது மக்கள் அபார நம்பிக்கை வைத்துள்ளார்கள். என்றுமே அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக அது செயல்படும். எம்மோடு சேர்ந்தவர்கள் சோர்ந்து போகமாட்டார்கள்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் நான்காவது நினைவேந்தலில் அவரது கொள்கைகளை மெய்ப்பிக்க உறுதி பூணுவோம்.







## அரசாங்கத்தின் உறுமய வேலைத் திட்டம்;

# தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கும் உறுதிப் பத்திரங்கள்

**தற்போது இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீளமுடியாது திண்டாடிக் கொண்டிருக்கும்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை அரசாங்கத்தினால் வழங்குவது இயலாத காரியம். எனவேதான் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள பத்தாயிரம் வீடுகளுக்கான திட்டத்தில் முதல் கட்டமாக 1300 வீடுகளை நிர்மாணிக்க தீர்மானித்து செயலில் இறங்கியுள்ளார்.**

இன்டர்நெட் யுகம் என்று வர்ணிக்கப்படும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் மனிதனின் நாளாந்த வாழ்வில் பலவிதமான நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்த நாட்டிலுள்ள பெருந்தோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களில் கணிசமானோர் இன்னும் ஆங்கிலேயரினால் கட்டிக் கொடுக்கப்பட்ட லயன் அறைகளிலேயே பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்தவர்களாக அவல நிலையில் வாழ்கிறார்கள்.

1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான தேர்தல் பிரசார மேடைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் தோட்டத் தொழிலாளர்கள் தாம் குடியிருக்கும் வீடுகளை முன்புறமாகவும் பின்புறமாகவும் விஸ்தரித்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுவதோடு அந்த குடியிருப்புகளை சுற்றியுள்ள காணிகள் அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும் என கோரினார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான பெரியசாமி சந்திரசேகரன் தோட்டத் தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு பெருந்தோட்டங்களில் ஏழு பேச்சஸ் காணி வழங்கப்பட்டு அந்த காணிகளில் தனித்தனி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

அந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஆட்சியமைக்க மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் ஒரு ஆசனமே உதவியது. அதற்கு பிரதியுபகாரமாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, தனது அமைச்சரவையில் பெருந்தோட்ட வீடமைப்பு பிரதிய மைச்சராக பதவி வழங்க, பெரியசாமி சந்திரசேகரன் தனது பதவி காலத்தில் 6500 வீடுகளை தனித்தனி வீடுகளாக நிர்மாணித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கினார்.

அதற்குப் பின்பு இந்த நாட்டில் பதவிக்கு வந்த ஏனைய அரசாங்கங்களும் அதே நடைமுறையை பின்பற்றினாலும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதில் அதிகளவில் கரிசனை காட்டவில்லை.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தில் மலையக புதிய கிராமங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரான பழனி திகாம்பரம், தோட்டத் தொழிலாளர்களுக்கான ஏழு பேச்சஸ் விஸ்தீரணமுள்ள காணிகளில் தனித்தனி வீடுகளை நிர்மாணித்து கிராமங்களை அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் சமூக சேவையாளர்களின் பெயர்களை சூட்டி, தோட்டத் தொழிலாளர்களிடம் ஒப்படைத்தார்.

ஒருசில வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய பிரதமர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அழைப்பை ஏற்று நோர்வூட் நகரில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றியபோது, தோட்டத் தொழிலாளர்களுக்காக பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை வழங்குவதாக வாக்குறுதி அளித்தார்.

தற்போது இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீள முடியாது திண்டாடிக் கொண்டிருக்கும்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை அரசாங்கத்தினால் வழங்குவது இயலாத காரியம்.

எனவேதான் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள பத்தாயிரம் வீடுகளுக்கான திட்டத்தில் முதல் கட்டமாக 1300 வீடுகளை நிர்மாணிக்க தீர்மானித்து செயலில் இறங்கியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 09.05.2024 வியாழக்கிழமை தொலைக்காட்சியொன்றில் அன்றிரவு 10 மணி 30 நிமிடம் தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை இடம்பெற்ற Rebuild Srilanka நிகழ்ச்சியில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கிட்ணன் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த நாளாந்த அடிப்படை சம்பளமான 1350 ரூபாவும் ஊக்குவிப்பு தொகையான 350 ரூபாவும் பறிக்கும் மேலதிக கொழுந்துக்கு கிலோ ஒன்றிற்கு 80 ரூபாவும் வழங்குவது சாத்தியமா என்பது பற்றி அவர்களின் கருத்துகளை தெரிவித்தார்கள். தேசிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கருத்து தெரிவித்தபோது தான் மலையக புதிய கிராமங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் நிர்மாணித்த வீடுகளுக்கான காணியுறுதிப் பத்திரங்களை வழங்கியதாகவும் கூறினார்.



தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, தோட்டத் தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு பெருந் தோட்டங்களில் பத்து பேச்சஸ் காணி வழங்கப்பட்டால் சட்டத்தரணிகளாக, வைத்தியர்களாக இயந்திர வல்லுநர்களாக, பேராசிரியர்களாக, கல்விப் பணிப்பாளர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக மற்றும் உயர் பதவிகள் வகிப்பவர்களாக உள்ள தோட்டத் தொழிலாளர்கள், அவர்களின் பெற்றோர்களுக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பார்கள் என பழனி திகாம்பரம் அந்த கலந்துரையாடலின் போது தெரிவித்தார். அவரின் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

ஆனால், இந்தக் காலகட்டத்தில் தமக்கென வீடுகளை நிர்மாணித்துக் கொள்ளாத தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பெருந்தோட்டங்களில் காணிகள் வழங்குவது இயலாத காரியம்.

ஆகவே, தற்கால ஸ்வர்ண பூமி காணியுறுதிப் பத்திரங்களை கொண்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் வீடுகளை நிர்மாணித்து பல தசாப்தங்களாக காணியுறுதிப் பத்திரங்களை பெறாதுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் அதன் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்பு அதனை வழங்க வேண்டும்.

**தற்கால ஸ்வர்ணபூமி காணியுறுதிப் பத்திரங்களை கொண்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் வீடுகளை நிர்மாணித்து பல தசாப்தங்களாக காணியுறுதிப் பத்திரங்களை பெறாதுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் அதன் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்பு அதனை வழங்க வேண்டும்.**

அவ்வாறு காணியுறுதிப் பத்திரங்கள் வழங்கப்படும் போது, தோட்டத் தொழிலாளர்கள் தமது சொந்த வீடுகளில் சுதந்திரமாகவும், பெருமகிழ்வுடனும் வாழ வழிகிட்டும்.

–இவதன்

# தாதி சேவை



அன்று நான்
வெள்ளையாடை மாணவி
இன்று
வெள்ளையாடை தாதி

சேவை அது
என்னுடன் பிறந்தது
சேயை தூக்குவதும்
தாயை கரம் கொடுத்து
அணைப்பதும் என் வேலை

பிறந்த உயிரை கண்டும்
பிரிந்த உயிரை தேடியும்
உதவும் உன்னத சேவை
மனித நேயத்தின் துணைப்படை

**கலா ரசிகா,**
*மஹரகம, தனியார் வைத்தியசாலை*

# செயற்கைப் பூங்கொத்து


என்றும் பதினாறாய்
இருக்குமிந்தப் பூங்கொத்து
என்று வந்து குந்தியதோ
இன்னுமது வாடவில்லை
மலரின் இதழொளியோ
மங்கியதாய்க் காணவில்லை
இலையின் துளிரழகோ
என்றுமது கோணவில்லை
தண்டு மரங்களெல்லாம்
தரங்கெட்டுப் போகவில்லை
மனிதன் பிறந்திருந்து
வாடுகிறான் சில நாளில்
கை, கால் அவயங்கள்
களையிழந்து போகின்றன
வயோதிபச் சின்னங்கள்
வந்து வந்து குவிகின்றன
தோற்றம் சிதைவடைந்து
தொல்லையுற வைக்கின்றன

மனிதன் சிலநாளில்
மாறி மாற்றம் கொண்டாலும்
மனிதனால் செய்த இந்த
மலர்க்கொத்து வாடவில்லை
வாழுமட்டும் அவன் பெயரை
மக்கள் மதிக்கின்றனர்
மடிந்த பின்னரவன் செயலையே
மக்கள் மதிக்கின்றனர்
எல்லை கொண்ட நம் வாழ்வில்
இயன்ற மட்டும்
நன்மை செய்தால்
இறப்புக்குப் பின்னரும் நாம்
இன்பமுடன் வாழ்ந்திடலாம்

**கலாபூஷணம், கலைமணி,**
**ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை,**
**சம்மாந்துறை.**




# வானமே எல்லை



தளராத நம்பிக்கை
கொண்டே தினமும்
தாராள மனதோடு
புறப்படு நீயும்

இலக்கின் வரமும்
கொண்ட முயற்சியும்
இலகுவில் தருமே
அதுவே பயிற்சியும்

வெற்றியின் உச்சியில்
கம்பளம் விரிக்கும்
வெல்லமாய் வாழ்வும்
என்றும் இனிக்கும்

இடைவிடாத முயற்சியில்
வியர்வை தெறிக்கும்
இடரும் விலகியே
இன்பத்தில் பூரிக்கும்

சூரியனின் சேவையாய்
துணிந்தே எழுந்திடு
சோம்பலை விலக்கியே
நம்பிக்கையில் துளிர்த்திடு

அவனா? இவனென்று
உலகமும் போற்றும்
அவஸ்தை வாழ்வை
மறைத்தே தேற்றும்

வானமே எல்லை
புறப்படு இன்றே
வளமும் உனக்கே
எடுத்திடு நன்றே

சிறிய உளியால்
மலையும் கலையாகும்
சிந்தித்த மனமே
களிப்பின் நிலையாகும்

வாழ்ந்து சாதித்தால்
இறந்தும் வாழலாம்
வாழ்த்தும் மாலையாகும்
உலகையே ஆளலாம்

**ஏரூர் கவிமாமணி**
**எம்.ரி.எம்.அன்ஸார்.**
*ஏறாவூர்.*

# பகட்டான வாழ்க்கை !

பாரம்பரிய உணவுகளே
பத்திரப்படுத்திடும்
வாழ்வை நேரமறிய
உண்பதே நெறிப்படுத்திடும்
நம்முடலை

நாட்டு மரக்கறியும் நாட்டு முட்டையும்
நாமறிந்த சத்துணவு
நாகரிகம் மிஞ்சிப் போனதாலே
நார்ச்சத்தும் வெறும் கனவு

வாழை இலையில் சோறு கட்டி
வயலுக்கு கொண்டு போனவரும்
மண்குடத்திலே நீர் நிறைத்து
மனதார குடித்தவரும்

கிரயமின்றி கிணற்று நீரை
கிரமமாய் பருகியவரும்
பழஞ்சோறும் சம்பலும்
பலமான உணவென்று கருதியவரும்

தண்ணீர்ச்சோறும் தயிர்சாதமும்
தரமான காலை உணவென்றவரும்
கட்டுக்கோப்பான உடம்புக்கு
கட்டியம்கூறி களிப்படைந்தவரும்
அம்மியில் மிளகாய் அரைத்து
அதிருசியாய் புசித்தவரும்
மண்சட்டி மண்பானையில்
மனதார சமைத்து சாப்பிட்டவரும்

பருவம்பார்த்து காய்பறித்து
பதம்பார்த்து சோறு சமைத்தவரும்
பரிகசிப்பைப் பரிசாக்கி
பகட்டுக்கு படம் காட்டுகிறார்

பிரொய்லர் கோழியும் பிரியாணியும்
இரசாயனத்தில் ஆக்கிய கறியும்
மருந்தடித்த பழங்களும்
லைன் தண்ணீரும்

இலத்திரனியல் உபகரணங்களும்
இசைவான தொடர்பு சாதனங்களும்
இரண்டறக் கலந்திங்கே
இதயங்களை ஆட்டுவிக்க

நவீனத்துவமும் நாகரிகமும்
நம்மிடையே கோலோச்ச
புதினமான பழக்கங்களால்
பூரிப்பும் புதிராகிப் போகுதே
வியாதிகளும் வருத்தங்களும் நாம்
விரும்பாமலேயே
விலாசமிட வைத்தியசாலையும்
கிளினிக்குமாய் வாழ்க்கையைக்
கடத்துகிறோம்

பகட்டுக்கான உணவுகளும்
பகட்டைக்காட்டும் செயல்களும்
படை படையாய் பெருகுவதால்
பாதகம்தான் விளைகிறதே

பாரம்பரிய உணவுகளை
வாழ்வில் பாடமாய்
நாமும் எடுத்திடுவோம்
நேரமறிய உண்பதை
நெறிமுறையாய்
நாமும் பற்றிடுவோம்

**உசனார் எம்.பஷீர்,**
**ஏறாவூர்.**

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு



கூடி உண்ணும் காக்கைகளிடம்
கோடியாய் மின்னும் தாரகைகளிடம்
விஞ்சி நிற்கிறது ஒற்றுமை...

ஆண்டவனின் ஆன்மிகப் படைப்பாம்
மானிடத்திடம் மட்டும்
தஞ்சமாயானதே வேற்றுமை...

ஏற்றத்தாழ்வு சீற்றம் கொள்ள
ஒற்றுமை எங்கே
தோற்றம் கொள்ளும்...?

சாதி மதம் மழுங்கிச் செல்ல
மனிதம் இங்கே
ஈடேற்றம் கொள்ளும்...

பிரிவினைகளைப் பூஜிக்க
நீயும் பட்டமரமென்றாவாய்.
பிணைப்புக்களைப் பதப்படுத்த
நீயோ பச்சைமரமென்றாவாய்.

ஒற்றை வடிவமாய்
ஒட்டிடும் ஒவ்வாமையும்,
ஒன்றுபட்ட கரங்களென்றாகிட
ஓரங்கட்டி ஓடிப்போகும்.


குலபேதம் ஏந்திட நீயும்
ஏகாந்தமும் நிலைகுலைந்து போகும்.
பாகுபாடு துறந்திட எங்கும்
சுகந்தம் மணம் கமழும்.

சாதிகள் மறந்து
சக மனிதர்களென்றாகிட,
சமத்துவம் நிலத்தினில்
சிலையாய் நிற்கும்.

கூடி வாழ்ந்து
கோடி சேர்ப்போம் எங்கும்
ஒற்றுமை ஓங்க
ஒன்றித்துக் கைகோர்ப்போம்.

**பாத்திமா சில்மியா**
**மாவனல்லை.**

# மனவலியின் மிகையில்...



சிறு வேதனை எனினும்
மனதளவில்
பாறாங்கல்லெனவே கனக்கிறது

பாதை வழி சாதாரணமாக
பயணம் முடியாதிருக்கிறது

புன்னகைகள் தூரம் போய்
ஒளித்துக் கொண்டன

வார்த்தைகள் கோர்வையற்று
விட்டேத்தியூர்வலம் செல்கின்றன

முகிழ் மகிழ்ச்சி ஸ்தம்பிக்க
மலர்ச்சி தொலைக்கிறது முகம்

பதில் மட்டும் உரைத்து
மூடிக்கொள்ளும் இதழ்கள்

கேள்விகளை விளங்கிக்கொள்ள
மூளை கனநேரம்
எடுத்துக் கொள்கிறது

சிறு பிழை தானெனினும்
தீர விசாரிக்காத முடிவுகள்

தலைவிரி கோலமாக
கேவலச்சிரிப்பை உருவாக்கும்
அந்நியச்சூழல்

அதுவே அந்திமமாகும்
உறவின் தழலாய்ப் புகையும்

மனவலியின் மிகையில்
மனவலிமை
தோற்றொழிந்து கிடக்கிறது..

விடு ... கொஞ்ச காலம்
கடந்து போகட்டும்

புறக்கணிப்பின் உச்சத்தில்
குடியிருக்கும்
வெற்றியின் மச்சங்கள்
நீ யாரெனப் பறைகையில்
இவ்வுலகம் உணரும்!!!

*Dr ஜலீலா முஸம்மில்*
*ஏறாவூர்*

# விடியும் பொழுதாய்....



இரத்த வெறியர்களின்
குற்ற உணர்வுகள்
இன்னும் துளிர்விடவில்லை......
அருள் மணக்கும்
மண்ணிலே உயிர்
துடிக்கும் போராட்டம்.....
இருள் அகற்ற இறைவனுக்கு
இன்னும் நேரம் வரவில்லை.....
அங்குமிங்கும் பார்க்கையில்
அவலக்குரல்கள்...
சிதறிக் கிடக்கும் உடல்கள்...
பதறித் தவிக்குது
எம் நெஞ்சங்கள்...
பரிதாபம்தான்
மிச்சங்கள்.....

குள்ள நரிகளும்
குரைக்கும் நாய்களும்
நேசிக்கும் நண்பனாய்ப்
போனதுதான் வியப்பு..!!
சொல்லொணாத் துயரம்
சோகத்தின் நிறமும்
சிவப்பாய் தெரிகிறது....
புனிதமிக்க பூமியில்
மனிதம் ஒரு தூசாக....

விலை மதிக்க முடியாத
உயிர்களெல்லாம்
தலை சாய்த்து கிடப்பது
இலையுதிர் காலம் போல....
வேடிக்கை பார்த்து நிற்கும்
ஈரம் இல்லாத இதயங்கள்....
கண்ணிருந்தும் பார்க்க
முடியாத குருடர்கள்....

வாய் இருந்தும் பேச
முடியாத ஊமைகள்....
இறுகிப் போன இதயங்கள்......
பாலைவனத்திலும் புல்
முளைக்கும்...
அது சோலை வனமாகி
சுகம் தரும் விருட்சங்களாக
கண்ணில் தெரிவது
வெகுதூரத்தில் இல்லை...!!

*கவிதாயினி. மாஜிதா தவ்பீக்*
*மருதமுனை.*

# நல்ல மனங்கள் நாடாதே



பாலூமூட்டி எம்மை படிக்கவைத்து
பாங்குடனே கதை சொல்லி
தூங்கவைத்தவள் தாய்
தாலாட்டி தடவிப் பாராட்டி அரவணைத்து
அடக்கி ஆள நீ நினைக்காதே

பள்ளி செல்ல பாதையும் காட்டி
அள்ளி அணைத்து ஆசை முத்தம் ஊட்டி
கள்ளி யாக வந்த கருத்தறுத்த
காதலி யிடம் தொடர்பு வைக்காதே

ஒற்றுமை யாக வாழும்படி
அறிவைச்சொல்லி
ஆறறிவுள்ளவனாக
அன்பை நல்கி
மாற்றீடவே மதிப்பெண்ணை
மறுதலித்த
மதி இல்லா
ஆசிரியரை மதித்திடாதே

வறுமையில் வாழ்லிழந்து வழி தவறி
திறமையுடன் திட்டம் வகுத்து
திழைத்திட்டபோது
உறவு சொல்லி உள்ளொன்று
வைத்த உபத்திரவம்
தந்த பாதகனின் பாதைவழி போகாதே

கருத்தொருமித்த வளை
கன்னிகாதாரம் பூண்டு
திருமணப் பந்தலில் திளைத்தபோது
மறுமணம் செய்ய வழி வசைபாடிய
மருமகளை மனத்தினில்
ஒருநாளும் நாடாதே

நல்லவனைப்போல் நாளும்
நல்லவனாக நடித்து
வல்லவனாக வாழ்வுக்கு
வசந்தம் தந்திடவே
பொல்லாங்கு செய்ய பொய்யுரைத்த
போக்கிரி யவளின் செயலை கண்டிடாதே

இருமனம் கொண்ட திருமணச்சந்தையில்
ஒருமனம் பூண்டு ஒன்றாக நின்றிடவே
நறுமணம் வீசி நயவஞ்சகம் புரிந்த
நல்லவனாக நடித்த நாசச் செயலை
மறந்திடாதே

*உடப்பூர் வீரசொக்கன்*

# Queen Cobra பிரபாலினியின் இன்னிசை மழையும் CD வெளியீடும்




இலங்கையின் முதல் தமிழ் பெண் இசையமைப்பாளர் Queen Cobra பிரபாலினி பிரபாகரன் வழங்கும் இன்னிசை மழை இசை நிகழ்ச்சி, இசைத்தட்டு வெளியீடு மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பு என்பன நாளை திங்கள் (27) மாலை 3.30 முதல் கொழும்பு வெள்ளவத்தை சபையர் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி பரமேஸின் 'உனக்கு தெரியுமா' பாடலுடன் 50 பாடல்கள் அடங்கிய 50 வருட இசைத்தென்றல் தொடர் அடங்கிய இசைத்தட்டே வெளியிடப்படுகின்றது.பாராளுமன்ற உறுப்பினர்களான த.மு.கூ தலைவர் மனோ கணேசன், ம.ம.மு தலைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளும் இந்நிகழ்விற்கு மும்மொழி எழுத்தாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமை தாங்குகிறார். தினகரன் தினசரி மற்றும் தினகரன் வாரமஞ்சரி வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் முன்னிலை வகிப்பதோடு புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் முதல் இசைத்தட்டை பெறுவதோடு, கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் தில்லை எஸ் நடராஜா, ஐ.ம.ச உதவி செயலாளர் உமா சந்திரபிரகாஷ், ஐ.தே.க மாவட்ட அமைப்பாளர் சு. ஆனந்தகுமார், மூத்த பாடகர்களான எஸ் முத்தழகு, எஸ் கலாவதி உள்ளிட்டோர் சிறப்பு இசைத் தட்டுக்களை பெறுகிறார்கள். ஊடகங்கள் சார்பாக வீரகேசரி தினசரி மற்றும் ஞாயிறு வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், சக்தி தொலைக்காட்சியின் பணிப்பாளர் எம். குலேந்திரன், சூரியன் வானொலியின் பணிப்பாளர் எஸ். நவனீதன், கெப்பிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் எம்.எப்.சியா உல்ஹசன், சிரேஷ் ஒளிபரப்பாளர் யூ.எல்.யாக்கூப், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூத்த அறிவிப்பாளர் நாக பூஷணி கருப்பையா, டான் தொலைக்காட்சி பணிப்பாளர் நிரோஷன் இராமானுஜம், டான் நிகழ்ச்சி நிறைவேற்று தயாரிப்பாளர் எம்.கவிதா உள்ளிட்ட கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

1968 கள் தொடக்கம் ஈழத்து மெல்லிசை மன்னர் என பிரபலம் பெற்றுள்ள மூத்த கலைஞர் எம்.பி பரமேஸின் மகளான பிரபாலினி பிரபாகரன் ஏற்கனவே 'Cobra Queen' என்ற ஆடியோ ஆல்பம் மூலமாகவும் ஏனைய படைப்புகள் வாயிலாகவும் புலம்பெயர்ந்த நாடுகளில் பிரசித்தி பெற்றுள்ளதோடு இவர் இயற்றி இசையமைத்துள்ள தாயக மண்வாசனை பாடல்கள் மூலமாகவும் ஈழத்தின் முதலாவது தமிழ் பெண் இசையமைப்பாளர் எனவும் அறியப்படுகிறார்.

இந் நிகழ்வில் பிரபாலினியுடன் ரியோ கலைஞர்கள் வழங்கும் இன்னிசை மழையுடன் பல்வேறு கலை அம்சங்களும் இடம்பெறுவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கம்பன் கழகம் நடத்திய இலக்கியப் போட்டி முடிவுகள்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 2024ஆம் ஆண்டுக்கான கொழும்புக் கம்பன் விழா எதிர்வரும் ஜுன் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சு, கவிதை, திருக்குறள் மனனம், இஸ்லாமிய இலக்கியப் போட்டி ஆகியவற்றின் முடிவுகளைக் கம்பன் கழகம் வெளியிட்டுள்ளது.

இவ் விழாவை முன்னிட்டு, கொழும்புக் கம்பன் கழகம், முன்னாள் செயலர் பொன். பாலசுந்தரம் நினைவாக நடத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தை சிவபாலன் ஜெயலஷ்மியும் மூன்றாம் இடத்தை வி. ரிஷிகேசும் பெற்றுக்கொண்டுள்ளனர். இப்போட்டிக்கு முதற் பரிசு வழங்கப்படவில்லை.

பேச்சுப் போட்டிகள் இலக்கிய ஆர்வலர் அமரர் துரைவிஸ்வநாதன் ஞாபகார்த்தமாக இரு பிரிவுகளில் இடம்பெற்றன. மத்திய பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தை சிவஸ்கந்தசர்மா சர்ஜனாவும், இரண்டாம் இடத்தை கிருஷ்ணன் விஷ்ணுப் பிரியனும் மூன்றாம் இடத்தை மிஷாரி அகமட் மற்றும் சதீஷ்குமார் துசானி ஆகியோரும் பெற்றுக்கொண்டுள்ளனர். மேற் பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தை மோகன ராஜ் ஹரிகரனும் இரண்டாம் இடத்தை ஜெயரூபன் ஹரிசும் மூன்றாம் இடத்தை சந்திரகுமார் ஹக்ஷிந்தும் பெற்றுக் கொண்டுள்ளனர். நாவலர் நற்பணி மன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் என். கருணையானந்தன் நினைவாக நடத்திய திருக்குறள் மனனப் போட்டியில் முதலாம் இடத்தை பிரசன்ன வருண் ராகவர்த்தினியும் இரண்டாம் இடத்தை பிரசாந்தன் சரண்யாவும் மூன்றாம் இடத்தை க. மௌனிதாஸ்ரீ பிரமாஸ்மி சைத்தன்யாவும் பெற்றுக்கொண்டுள்ளனர். இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அனுசரணையில் இடம்பெற்ற இஸ்லாமியப் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தை எஸ். தர்னிஷனும் இரண்டாம் இடத்தை எம். ஹுமைத்தும் மூன்றாம் இடத்தை ஹிஷ்மா ஹுஸைனும் சிறப்புப் பரிசை எம். ஏ. அப்துல்லாவும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பானது, ஜுன் 14 ஆரம்பமாகி கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் இடம்பெறும் என்பதையும், கம்பன் கழகம் அறியத்தந்துள்ளது. இம்முறை இடம்பெறவுள்ள கம்பன் விழாவில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளிலிருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அறிஞர் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். பட்டிமண்டபம், கருத்தரங்கம், சிந்தனை அரங்கம், நாடக அரங்கம், நாட்டிய அரங்கம், வழக்காடு மன்றம் முதலிய பல இலக்கிய, கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

# சிலிண்டர்களை நிரப்பும் வசதியுடன் புதிய திருப்பத்தை அடைந்துள்ள லிற்றோ கேஸ்




வர்த்தக மஞ்சரி

இலங்கையின் தேசிய திரவப் பெற்றோலிய வாயு வழங்குனரான லிற்றோ காஸ் நிறுவனத்தின் சபுகஸ்கந்தை மௌபிம நவீன களஞ்சியம் மற்றும் கேஸ் நிரப்பும் வசதி என்பன புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கும் நிகழ்வு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணியாட்தொகுதியின் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

பிராந்தியத்தில் உள்ள மிகப் பெரிய எரிவாயு முனையங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மௌபிமவில் அமைந்துள்ள இந்த வளாகம் தொடர்ச்சியான எரிவாயு விநியோகம், சேவைகள் மற்றும் செயற்பாடுகளின் மேம்பாட்டில் லிற்றோ கேஸ் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை புலப்படுத்துகின்றது. 1984ஆம் ஆண்டு நிறுவனம் இயங்கிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மௌபிம எரிவாயு நிரப்பும் வளாகம், 40 வருடங்களின் பின்னர், சர்வதேச செயற்பாடு மற்றும் பாதுகாப்பு தரநிலைகளுக்கு அமைய வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. மௌபிம வளாக வசதிகள் புனரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல்களுக்காக ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவு செய்யப்பட்டிருப்பதுடன், 10, 15 வருட காலத்துக்குத் தேசிய எரிவாயுத் தேவையைத் தொடர்ச்சியாகவும், வினைத்திறனாகவும் வழங்குவதை இது உறுதிப்படுத்தும். 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கெரவலப்பிட்டிய எரிவாயு நிரப்பும் நிலையத்தில் தங்கியிருப்பதைக் குறைத்து கெரவலப்பிட்டிய வளாகத்தின் ஊடாக சிறந்த சேவை முன்னெடுக்கப்படும்.

லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான முதித பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில்,"வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பான முறையில் திரவப் பெற்றோலிய வாயு சிலிண்டரினைப் பெற்றுக் கொடுப்பதற்கும், தொடர்ச்சியான எரிவாயு விநியோகத்தை உறுதிப்படுத்துவது அவசியமானது.

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் எமது வழிகாட்டலின் கீழ் 2 மில்லியனுக்கும் அதிகமான குடும்பங்கள் விறகு அடுப்பிலிருந்து எரிவாயுப் பயன்பாட்டுக்கு மாறியிருப்பதுடன், இதன் ஊடாக நாட்டில் எரிவாயுப் பயன்பாடு கணிசமான அளவு அதிகரித்தது." என்றார்.

# தனது வணிக அடித்தளத்தை விரிவுபடுத்தும் Kaspersky



உலகளாவிய இணையப் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தனியுரிமை நிறுவனமான Kaspersky, இலங்கை, கம்போடியா மற்றும் பங்களாதேஷ் உட்பட ஆசிய பசிபிக்கிலுள்ள (APAC) புதிய பிரதேசங்களில் அதன் விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளது. இந்த மூலோபாய நடவடிக்கையானது, பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் முழுவதும், குறிப்பாக நிறுவன இணையப் பாதுகாப்பு சந்தையில் டிஜிட்டல் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் நிறுவனத்தின் பணியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை இது குறிக்கிறது. இணைய அச்சுறுத்தல்கள் உலகளவில் தொடர்ந்து உருவாகி, பெருகி வருவதால், Kaspersky அதன் முழுமையான இணையப் பாதுகாப்பு தீர்வுகள் சேவைகளை APAC இல் வளர்ந்து வரும் சந்தைகளுக்கு விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தைக் கொண்டுள்ளது. புத்தாக்கமான தீர்வுகள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதில் நிரூபிக்கப்பட்ட சாதனையுடன், கம்போடியா, இலங்கை மற்றும் பங்களாதேஷில் தனிநபர்கள், அரசாங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இணைய பாதுகாப்பு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள நிறுவனம் தயாராக உள்ளது. Kasperskyஇன் இந்த புதிய பிராந்தியங்களில் தனது சந்தை தடத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கையானது, அரசு, நிதி, சுகாதாரம் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள நிறுவனங்களுக்கு அவன் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப செயல்படும் இணைய பாதுகாப்பு தீர்வுகளை பெற்றுக் கொள்ள உதவும்.

# உணவு சேவைகள் துறையில் சர்வதேச முன்னோடியாகத் திகழும் Sysco



உணவு சேவைகள் துறையில் சர்வதேச முன்னோடியாகத் திகழும் Sysco LABS இன், Global inhouse Centre (GIC), இலங்கையில் தனது பத்து வருட பூர்த்தியை கொண்டாடியது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், அமெரிக்க தூதரக அதிகாரிகள், அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் தலைமைத்துவ அதிகாரிகள், Sysco வின் சர்வதேச தொழில்நுட்ப தலைமைத்துவ அணியினர், Sysco LABS தலைமைத்துவ அணியினர் மற்றும் ஊடக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் Sysco நிறைவேற்று உப தலைவரும் பிரதம தகவல் மற்றும் டிஜிட்டல் அதிகாரியுமான டொம் பெக் உரையாற்றும் போது, Sysco இன் தற்போதைய மற்றும் எதிர்கால செயற்பாடுகளில் தொழில்நுட்பத்தின் முக்கிய பங்கு தொடர்பில் குறிப்பிட்டார். "உலகளாவிய ரீதியில் 725,000 க்கும் அதிகமான வாடிக்கையாளர் பகுதிகளில் 72,000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு, வெற்றிகரமாக இயங்குவதற்கு அவசியமான பரந்த தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி Sysco செயலாற்றுகின்றது. சர்வதேச சந்தை முன்னோடி எனும் வகையில், புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு Sysco இயங்குவதுடன், புதிய தொழில்நுட்பத்தை பின்பற்றுகின்றது. இந்த நிலையில் இலங்கையின் அணி எமக்கு போட்டிகரமான அனுகூலத்தை வழங்குகின்றது." என்றார்.பெக் மேலும் குறிப்பிடுகையில், Sysco LABS இன் வளர்ச்சி மூலோபாயத்தில் முக்கிய உள்ளங்கமாக, Sysco வின் சர்வதேச பிரசன்னத்தில் முக்கிய செயற்பாட்டாளராக அமைந்திருப்பதுடன், பரந்த வலையமைப்பில் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

# தலைமைத்துவ விருதுபெற்ற ஏழு இளம் தலைவர்கள்



குளோபல் சிஇஓ போரத்தினால் நடத்தப்பட்ட தலைமைத்துவத்துக்கான விருது வழங்கும் நிகழ்வில் மெக்ஸன்ஸ் ஹோல்டிங்ஸ் (Macksons Holding) நிறுவனத்தின் ஏழு திறமையான இளம் தலைவர்கள் Global CEO 45 Under 45 Leadership Excellence Platinum Award விருது பெற்றுள்ளனர். கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது விருது பெற்றவர்களின் சாதனைகள் மற்றும் தொலைநோக்கு சிந்தனையுடனான தலைமைத்துவத்திற்கு அங்கீகாரமும் வழங்கப்பட்டது. நிறுவனத்தின் இளம் தலைவர்களான சிமர் மில்பர், இஸ்மாயில்ஹு சைன், அஹமத் சாபி, மிஸஹா மிஸ்வர், அக்லா மிஸ்வர், அமானி மிஸ்வர்,

மற்றும் ஸாரா மிஸ்வர் ஆகியோர் இந்த சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மிஸ்வர் மக்கீன் இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாராட்டி வாழ்த்தியுள்ளார். விருது பெற்றவர்கள் முகாமைத்துவப் பணிப்பாளருடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொணடனர்.

# 3ஆவது தடவையாகவும் EDGE சான்றிதழ்; கொண்டாடுகின்றது NDB வங்கி




பாலின சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள முன்னணி நிதி நிறுவனமான தேசிய அபிவிருத்தி வங்கி [NDB], மூன்றாவது தடவையாக பாலின சமத்துவத்திற்கான (EDGE) சான்றிதழ் பெற்றமையை பெருமையுடன் அறிவிக்கிறது. இந்த மதிப்புமிக்க அங்கீகாரம், உள்ளடக்கிய பணியிடத்தை உருவாக்குவதற்கான NDBயின் தற்போதைய அர்ப்பணிப்பையும், அதன் செயல்பாடுகளின் அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவத்தையும் வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பான செயற்பாடுகளையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

பாலின சமத்துவத்திற்கான உலகின் முன்னணி மதிப்பீட்டு முறை மற்றும் வர்த்தகச் சான்றிதழ் தரமான EDGE சான்றிதழ், தொழில் புரியும் இடத்தில் பாலின சமத்துவத்தை உறுதி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. மீண்டும் ஒருமுறை இந்த சான்றிதழை பெற்றதன் மூலம், நிதித் துறையில் பாலின சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மை நடைமுறைகளை மேற்கொள்ளும் ஒரு முன்னோடி நிறுவனமாக NDB வங்கி தனது நிலையை உறுதிப்படுத்துகிறது.

NDBயானது பல ஆண்டுகளாக, பாலின சமநிலை, சமமான வேலைக்கு சம ஊதியம் மற்றும் நிறுவனத்திற்குள் பெண்களுக்கு தொழில் முன்னேற்ற வாய்ப்புகளை உறுதிப்படுத்தல் ஆகியவற்றுக்காக வடிவமைக்கப்பட்ட பல முன்முயற்சிகள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்தியுள்ளது. இந்த முயற்சிகளில் தலைமைத்துவ பயிற்சித் திட்டங்கள், நெகிழ்வான பணி ஏற்பாடுகள், உடல் நலம் மற்றும் நல்வாழ்வுக்கான ஆதரவுத் திட்டங்கள் ஆகியவை அடங்கும்,

EDGE மூலோபாயம் மற்றும் IFC ஆகியவற்றுடன் இணைந்து, NDBயானது ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், தலைமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி மற்றும் வழிகாட்டல் திட்டங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை முறையாக மதிப்பீடு செய்து மேம்படுத்தியுள்ளது.

முஜாமலாவின் "ரூஹின் சிறகுகள்"

# உணர்வு பூர்வமான கவிவரிகளால் உள்ளத்தை தொடும் கவிதைத் தொகுதி

பெயரிலேயே படிம அழகை அப்பிக் கொண்டு அண்மையில் வெளிவந்திருக்கின்றது முஜாமலாவின் "ரூஹின் சிறகு கள்" என்ற நவீன கவிதை நூல். 90 பக்கங்களில் 45 கவிதைகள் நூலில் அடங்கியிருக்கின்றன.

முஜாமலா அம்பாறை மாவட்டம், நிந்தவூரைச் சேர்ந்த படைப்பாளி. பத்து வருடங்களுக்கும் மேலாக, ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறு தளங்களிலும் பங்களிப்புச் செய்து வருபவர். பத்திரிகை, வானொலி, குழும இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு காட்டி வரும் அவருடைய முதலாவது கவிதைத் தொகுதி இது. நிந்தவூர்ப் பிரதேசத்தில் இருந்து, முதன்முறையாக வெளிவருகின்ற ஒரு பெண்படைப்பாளியின் கவிதை நூல் என்ற பெருமையும், இந்த நூலுக்கு உண்டு.

ரூஹின் (ஆன்மாவின்) சிறகுகள் என்ற நூல்

கருத்து நிலைகளில், போக்குகளில்

எடுத்துரைப்பு முறைகளில் சுதந்திரத் தன்மையைப் பேணுகின்ற கவிதைகளைக் கொண்டிருக்கின்றது. விதி முறைகள், வரையறைகளில் இருந்து விலகி மூடப்படாத, திறந்த நவீன கவிதை வடிவத்தில் உணர்வுகளை வடிக்கிறார் கவிஞர். அன்பை, துன்பத்தை, துயரத்தை ஏமாற்றத்தை, வலியை கவிதையாக்கித் தருகிறார் அவர்.

"உண்மைகளை
வேண்டுமென்றே காணாமலாக்கும்
உறவின்
நிலை மாற்றங்களை என்ன வென்பது?
உரத்துப் பேசவோ
பிரிந்து போகவோ மனமின்றி
அழுது துடைக்கும் ஆன்மா
கடக்க முனைகையில்,
சொட்டு நின்று கேட்கிறது
இந்த ஏமாற்றத்தின் விலாசங்கள்
இன்னும்
நீளுமா வென.
நான் மட்டும் எப்படி உறுதிபடக் கூற..
சுருக்குக் கயிறுகளும்
எச்சரிக்கை கழுத்தும்
திடுக்கிடும் திடீர் திருப்பங்களோடு
தினமொரு வியப்பளிக்கையில்.."
(நான்மட்டும் எப்படி)

உறவுகளாக நாம் நினைத்துக் கொண்டிருப்பவர்களே ஏமாற்றத்தை தந்து துயருறச் செய்வதை சிக்கலற்ற வரிகளில் நமக்குத் தந்திருக்கின்ற கவிதை அது.




"மெலிந்துதிரும்
புன்னகையின் மொழிகளை அள்ளிக் கொள்கிறேன்.
கலைந்த அதன் உருவம் சிதைந்து விடக் கூடாதென
புலன்களை மேம்படுத்தி
குளிர் காலமொன்றைக் கசியவிட்டு
வளர்க்கிறேன் எப்போதும்"
(எத்தனை ஆயுதங்கள்)

கவித்துவமான மொழி நடையில், இயல்பான சொற்களில் கவிதை அழகு பெறுகிறது.

'மெலிந்துதிரும் புன்னகையின் மொழிகள்', 'குளிர்கால மொன்றை கசியவிட்டு வளர்த்தல்' போன்ற சொல்லாடல்கள் மீள, மீள வாசித்து இரசிக்கத் தக்கவை.

முஜாமலா பெண் கவிஞர் என்ற வகையில்,பெண்களின் மீதான திணிப்பையும், பாதுகாப்பின்மையையும் அனுபவக் குறிப்பாக, பெண்களின் குரலாகப் பதிவு செய்கிறார்.

"உயிர் இருக்குதெனக் காட்டிக் கொள்ள முடியாதபடி
காலமென்ற பெயருக்குள் மறைந்து கிடக்கிறது
பெண்மை."
(காலமென்ற பெயருக்குள்)

என்று அவர் கூறுகின்ற வரிகளில் பெண்கள் அடக்கப்படுவதையும், அவர்களின் அவஸ்தைகளையும் நம் உணர்வுகளில் பரவச் செய்து விடுகிறார் .

ஈழத்தில் நவீன கவிதை இருவேறு தளங்களில் இருந்து வளர்த்தெடுக்கப் பட்டு வருகின்றது. நவீன கவிதையை 'செய்யுள்' வடிவத்தில், இலகுபடுத்திய, பேச்சோசைப் பண்புடைய, ஒத்திசைப்பு பெற்ற கவிதை வடிவமாக எழுதுபவர்களாக ஒரு சாராரும் (மஹாகவி, எம் ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இவ்வணியின் முன்னோடிகளாக அடையாளப் படுத்தப்படுவர்) எந்தவித செய்யுள் விதிமுறைகளுக்குள்ளும் அடங்கிப் போக விரும்பாது 'உரைநடையிலே'யே நவீன கவிதைகளை எழுதுபவர்களாக இன்னொரு சாராரும் உள்ளனர். முஜாமலா இரண்டாவதாகக் குறிப்பிட்ட அணியைச் சேர்ந்தவர்." அவரின், இந்நூலை வாசிப்பவர்கள் படிமச் சிக்கலுக்குள் அகப்படாத தனித்துவப் போக்குடைய நவீன கவிதைக்காரராக அவரை அடையாளம் காணமுடியும்.

முஜாமலாவின் நூலுக்கு அணிந்துரை, பின் அட்டைக் குறிப்பு என்பவற்றை முறையே கலாநிதி எப்.எச். ஏ. ஷிப்லி (சிரேஷ்ட விரிவுரையாளர்,தெ.கி.ப), கவிஞர் றியாஸ் குரானா (இலக்கியச் செயற்பாட்டாளர்) ஆகியோர் வழங்கியிருக்கின்றனர்.

'ரூஹின் சிறகுகள்' நூலில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கவிதைகள் நவீனத்துவக் கூறுகளை உள்வாங்கியிருப்பதாக' கலாநிதி ஷிப்லி விதந்துரைப்பதையும்,'சொற்களைச் சுண்டி அதிரச் செய்து விடுகின்ற கவித்துவ முடையவராக' முஜாமலாவை குரானா அடையாளப் படுத்துவதையும் ஈண்டு எடுத்துரைப்பது பொருத்தமானதாகும்.

முஜாமலாவுக்கு நமது பாராட்டுக்கள்.

கவித்துவ நுட்பங்களை இன்னும் தேடிக் கற்றுக் கொண்டவராக இலக்கிய உலகில் மேலும் புகழ்பெற நமது வாழ்த்துகள்.

நூல் : ரூஹின் சிறகுகள்
வெளியீடு: கடல் பதிப்பகம், மதுரை.
தொடர்பு: வானம்பாடி முஜாமலா, வைத்தியசாலை வீதி, நிந்தவூர், இலங்கை.
விலை: 160/= (இந்திய ரூபாவில்)

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

# சர்வமத தலைவர்களுக்கு கௌரவம்






வரக்காபொல தமிழ் சமூக அபிவிருத்தி பேரவையின் 6ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி சர்வமத தலைவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளனர். "பெருந்தோட்ட சமூகத்தின் கனவுகள்" எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு மகாவலிகேந்திர நிலைய காமினி திசாநாயக்க அரங்கில் இந்திய தூதரகத்தின் ஆலோசகர் எல்டோஸ் மத்யூ புன்னூஸ், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலக பதிவாளர் நாயகம் சஞ்சீவ விமலகுணரத்ன ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்திய வம்சாவளி மக்களின் உலகளாவிய அமைப்பின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பி.பி தேவராஜ் கலந்துகொண்டிருந்தார்.

20 வருடங்களாக நாட்டின் சமயங்களுக்கிடையேயும் இனங்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் பௌத்த மத குரு வணக்கத்திற்குரிய கலகம தர்மரன்சி தேரர், இந்துமத குரு சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, இஸ்லாமிய மதகுரு மௌலவி அல்ஹச் அல்சீக் ஹசன் மௌலானா, கிறிஸ்தவ மத குரு அருட்தந்தை நிஷான் குரே ஆகியோருக்கு தமிழ் அபிவிருத்தி பேரவை சார்பாக கோமதி அம்மாள் கௌரவ சமாதான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணம் அன்பளிப்பு



பிறந்த குழந்தைகளின் கேள்விப் புலனை உடன் பரிசோதனை செய்யும் உபகரணமொன்றினை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் காது, மூக்கு தொண்டை விசேட பிரிவுக்கு, கண்டி றோட்டரி கழகத்தினர் அன்பளிப்புச் செய்தனர்.

அறுபத்தைந்து இலட்சம் பெறுமதியான இம் மருத்துவ உபகரணத்தை, மன்னார் றோட்டரி கழகத்தின் ஒருங்கிணைப்பின் மூலம், கண்டி றோட்டரி கழகத்தினர் அன்பளிப்புச் செய்தனர். இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.எம். அஸாத், றோட்டரி கழகத்தின் தலைவர், காது மூக்கு தொண்டை விசேட வைத்திய நிபுணர் ஜேசுராஜ் பெரேரா, டாக்டர் பிரியதர்சன், டாக்டர் ரோய், டாக்டர் ஜோகராசா மற்றும் ஏனைய றோட்டரி கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மலையக இலக்கியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய அந்தனி ஜீவா!







**படைப்பின் இலட்சியம் சமுதாயத்தின் தேவையாக இருக்க வேண்டும். அதில் மண்ணின் மணம் இருக்க வேண்டும். கலைஞன் மானுடம் படைக்கும் ஆத்மாவின் ராகமாகத் திகழ வேண்டும்" என்ற தமது கூற்றின் வழி நின்று இலக்கியம் படைத்து வரும் அந்தனி ஜீ வாவின் புகழ் ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். இன்று மே 26ஆம் திகதியன்று 80ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் அந்தனி ஜீ வாவை (மே 26, 1944) வாழும் போதே வாழ்த்துவோம்!**



எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற்சங்க செயற்பாட்டாளர், இதழாளர், பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமை படைத்த அந்தனி ஜீவா, 2010இல் எதிர்வு கூறியது மலையகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

மலையக மக்களின் வாசிப்புத்திறன் மிகக் குறைந்து விட்டது. வாசிப்பதே இல்லை என்ற அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. ஒப்பீட்டளவில் இலக்கியம், மொழி ஆகிய துறைகளில் ஏனைய சமூகங்களைவிடவும் மலையக மக்கள் மிகவும் பின்தங்கிவிட்டதாக மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா 2010 ஓகஸ்டில் கூறினார்.

பாடசாலை மட்டத்தில் மொழி வளர்க்கப்படுவது குறைந்து விட்டது. வாசிப்பும் இல்லை தமிழ் மொழி வளர்க்கப்படுவதுமில்லை என்றால், இலக்கியவாதிகளால் என்ன செய்யமுடியும்? நாமே பாதை வெட்டி பயணிக்கும் காலத்திற்குத் தள்ளப்பட்டு விட்டோம். ஏனைய சமூகங்கள் ஏற்கனவே வெட்டப்பட்ட பாதையில் நீண்ட தூரம் சென்று கொண்டிருக்கின்றன. அதுவும் கரடு முரடு இல்லாத பாதை. எமது நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஓரிரு நல்லெண்ணம் படைத்த பெருந்தகைகளால் ஏதோ பயணம் தொடர்கிறது என கொழுந்து சஞ்சிகை கண்டி இந்து காலாசார மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது உரை நிகழ்த்திய சஞ்சிகையின் ஆசிரியர் அந்தனி ஜீவா விசனப்பட்டார்.

மலையகத்தில் நீண்ட காலமாக 'கொழுந்து' சஞ்சிகையை 31ஆவது இதழ் வரை 20க்கும் மேற்பட்ட வருடங்கள் தனிமனிதனாக வெளியிட்டு வருவதென்பது கற்பனை செய்ய முடியாத ஒன்றாகும்.

மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா, 1944 மே 26இல் பிறந்தார். கலையையும், இலக்கியத்தையும் வெறும் பொழுதுபோக்குக்காக அல்லாது, சமூக விழிப்புணர்வுக்கான ஊடகமாகக் கருதித் தமது பணியை மேற்கொண்டு வருபவர்.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் மலையகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எழுத்தாளரும் கவிஞருமாக அந்தனி ஜீவா விளங்குகிறார்.

**சமூக விழிப்புணர்வின் ஊடகர்:**



கொழும்பு சுவர்ண வீதியிலிருந்த தமிழ்ப் பாடசாலையிலும் பம்பலப்பிட்டி புனித மரியாள் கல்லூரியிலும் கல்வி கற்ற அந்தனி ஜீவாவின் தந்தை செபஸ்டியன்; தாய் லட்சுமி அம்மாள் ஆவார். 1960இல் எழுதத் தொடக்கி, இவர் கண்டியூர் கண்ணன், மாத்தளை கௌதமன், கவிதா ஆகிய புனைப்பெயர்களிலும் எழுதியுள்ளார். சுதந்திரன், மாணவன், தமிழுருவி, திருமகன், கலைமலர், மாணவமலர், மாலைமுரசு, ஈழநாடு, சிந்தாமணி, சிரித்திரன், அமுதம், தேசபக்தன், நவமணி, தினகரன் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார். நாடகத்துறையிலும் பங்களித்துவரும் இவர் எழுதிய முதல் நாடகமான 'முள்ளில் ரோஜா' 1970 இல் மேடையேறியது. 1970களில் தொழிலாளர் வர்க்கப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட அக்கினிப் பூக்கள், வீணை அழுகின்றது முதலான நாடகங்களை உருவாக்கினார்.

இவற்றில் வீணை அழுகின்றது என்ற நாடகத்திற்கு இலங்கை அரசு தடை விதித்ததும் நாடே அறிந்தது. 1980களில் தெரு நாடகங்களை கொழும்பு, மலையகப் பகுதிகளில் நடத்தியுள்ளார். மலையக இலக்கியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்: மலையக இலக்கியங்களையும், இலக்கியக் கர்த்தாக்களையும் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமையும் அந்தனி ஜீவாவுக்கு உண்டு.

மலையகத்தில் தமிழ் வளர்த்தோரும், கலை வளர்த்தோரும், மலையக மக்களிடம் உரத்த சிந்தனைகளை விதைத்தோரும், மலையக மக்களின் விடுதலைக்கு உழைத்தோரும் எனப் பன்னிருவர் பற்றிய தகவல்கள் அடங்கிய 'மலையக மாணிக்கங்கள்' என்னும் நூலை 1998ஆம் ஆண்டு கொழும்பு துரைவி வெளியீடாக கொண்டு வந்தார்.

**மலையக இலக்கியச் சுடர்**

கொழும்பு நாவல திறந்த பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்ற அந்தனி ஜீவா தினபதி, செய்தி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்.

கொழுந்து, குன்றின் குரல் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் வெளியிட்ட ஜனசக்தி என்ற மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 31.10.1984 அன்று சுட்டுகொல்லப்பட்டதன் எதிரொலியாக தினகரன் வாரமஞ்சரியில் 'அன்னை இந்திரா' எனும் தலைப்பில் தொடராக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பானது நூலாகவும் வெளிவந்தது. அத்துடன் ஈழத்தில் தமிழ் நாடகம் (1981), அன்னை இந்திரா (1985), காந்தி நடேசையர் (1990), மலையகமும் இலக்கியமும் (1995), முகமும் முகவரியும் (1997), மலையக மாணிக்கங்கள் (1998), அக்கினிப் பூக்கள் (1999), சி. வி. சில நினைவுகள் (2002) குறிஞ்சிக் குயில்கள் (2002), மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (2002), மலையகம் வளர்த்த கவிதை (2002), கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள் (2002), திருந்திய அசோகன் (2003), நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம் (2003), மலையகத் தொழிற்சங்க வரலாறு (2005), சிறகு விரிந்த காலம் (2007), ஒரு வானம்பாடியின் கதை (2014) போன்ற நூல்களை அந்தனி ஜீவா எழுதியுள்ளார்.

**கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியர்:**

மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா, தான் செயலாளராகப் பணியாற்றும் மலையக வெளியீட்டகம் மூலம் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அந்தனி ஜீவா கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார்.

மலையக பெண்களின் எழுத்துக்களை தொகுத்து குறிஞ்சி மலர்கள் (சிறுகதைகள், 2000), குறிஞ்சிக் குயில்கள் (கவிதைகள், 2002), அம்மா (சிறுகதைகள், 2004) போன்ற தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் இவர் அரச சாகித்திய விருது, அரச இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

**மலையகமும் இலக்கியமும் நூல்:**

'மலையகமும் இலக்கியமும்' என்னும் நூலில் மலையக இலக்கியத்தின் வரலாற்றுப் பின்னணி, வாய் மொழி இலக்கியம், மலையகமும் கவிதையும், மலையகமும் சிறுகதையும், மலையகமும் நாவல்களும், மலையகமும் கலைகளும் முதலிய தலைப்புகளில் மலையக இலக்கிய வரலாற்றை விரிவாக அந்தனி ஜீவா பதிவு செய்துள்ளார். மலையகக் கவிதைகளின் வளர்ச்சி பற்றி கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக தாம் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'மலையகம் வளர்த்த கவிதை' என்னும் நூலை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் வாயிலாக 2002ஆம் ஆண்டு வெளியிட்டார். மலையக இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து வரும் 12 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து 'குறிஞ்சி மலர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டவர் அந்தனி ஜீவாவே. மலையகத்தின் தேர்ந்த 21 பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்து 'குறிஞ்சிக் குயில்கள்' என்னும் நூலினை 2002ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கொண்டு வந்தார்.

'அம்மா' என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து, சென்னை கலைஞன் பதிப்பகத்தின் மூலம் கொண்டு வந்தார். 'புதிய வார்ப்புகள்' என்ற வரிசையில் இளைய தலைமுறை எழுத்தாளர்களையும், 'பெண் பிரம்மாக்கள்' என்ற தலைப்பில் பெண் படைப்பாளர்களையும் கொழுந்து இதழ்களில் அறிமுகப்படுத்தியவர் அந்தனி ஜீவா. மலையக இலக்கியத்திற்கு புத்துயிர் அளித்த அந்தனி ஜீவா "கலை இலக்கியச் செயற்பாடுகள் எனக்களிப்பது ஊதியமல்ல, உயிர்" என்ற உயர்ந்த லட்சியத்தை மனதில் ஏற்றுச் செயல்பட்ட பெருமைக்குரியவர்.

**ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சு:**

அந்தனி ஜீவா ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சுக்களையும், புதிய தரிசனங்களையும் கொண்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளார். மலையகத்தில் 1980களில் வீதி நாடகங்களை முதன் முதலில் ஆரம்பித்தவர் என்ற பெருமை அந்தனி ஜீவாவையே சேரும். இவர் 1980ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்குச் சென்று வீதி நாடக முன்னோடியான பாதல் சர்கார் சென்னையில் நடத்திய பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றார். மக்களுடன் நேரடியானதும், நெருக்கமானதுமான தொடர்பினை ஏற்படுத்தும் சிறந்த கலை ஊடகமான தெரு நாடகங்கள் அந்தனி ஜீவாவின் முயற்சியால் மலையகத்தில் புத்துயிர் பெற்றது. 'அலைகள்' நாடகம் இலங்கை கலாசாரப் பேரவை 1978ஆம் ஆண்டு நடத்திய தேசிய நாடக விழாவில் இரு விருதுகளைப் பெற்றது. அத்துடன் கொழும்பிலும், மலையகத்திலும் பல வீதி நாடகங்களை நடத்தியுள்ளார். இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 1994ஆம் ஆண்டு நடத்திய தமிழ் நாடக விழாவில் இவரது 'ஆராரோ ஆரிவரோ' என்ற நாடகம் விருது பெற்றது. மகாகவி பாரதி, ஆராரோ ஆரிவரோ, கவிதா, பறவைகள், வெளிச்சம், சாத்தான் வேதம் ஓதுகின்றது, ஒன்று எங்கள் ஜாதியே, அக்கினிப் பூக்கள், தீர்ப்பு, வீணை அழுகின்றது, முள்ளிள் ரோஜா, அலைகள், பறக்காத கழுகுகள் முதலிய நாடகங்கள் உட்பட 14 நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

'முள்ளில் ரோஜா' என்ற பெயரில் அந்தனி ஜீவா எழுதி இயக்கிய நாடகம் 1970 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்ட முதல் நாடகமாகும். இந் நாடகம் அந்தனி ஜீவாவை ஈழத்து தமிழ் நாடக உலகில் பரவலாக இனம் காட்டியது.

அந்தனி ஜீவாவின் புகழ் ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும் .

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# கனவாகிப் போன காதல்

அன்றைய மாலைப் பொழுது அரவிந்தனுக்கு மகிழ்ச்சியாக இருக்கவில்லை. கலவரப்பட்டுப் போனான். தந்தை தருமலிங்கம் திடுமென அக்பர் விடுதியில் அவன் அறையில் வந்து அமைதியாக இருந்ததுதான் காரணம். மகாவலி கங்கையை அண்மித்து, பொறியில் பீடத்தை அடுத்து அழகிய சூழலில் உள்ளது அக்பர் விடுதி. ஊரில் இருந்து அதிகாலையில் பஸ்சில் புறப்பட்ட தருமலிங்கம் அன்று மாலை அக்பர் விடுதியை வந்தடைந்தார். அரவிந்தன் பல்கலைக முகம் வரும் போது முதல் தடவை வந்து போனவர். மறக்காமல் அரவிந்தன் அறைக்கே வந்து விட்டார். அறையில் அவன் றூம்மேற் சிவகுமாரும் கூடவே இருந்தான்.

"தன் காதல் வீட்டுக்கு தெரிந்திருக்குமோ" மனதில் எழுந்த முதற் கேள்வி அது.

"அம்மாவும் சுகமின்றி இருக்கிறா அங்கும் எதாவது..". தந்தையைக் கண்ட அரவிந்தனுக்கு மனதில் பல்வேறு குழப்பங்கள்.

அரவிந்தன் இப்போது மூன்றாம் வருட பொறியியல் பீட மாணவன். எதிர்காலம் பற்றிய கனவுகள் அவனுள் அதிகம். படிப்பில் அதிக ஈடுபாடு கொண்ட அமைதியான சுபாவம் கொண்டவன்.

புதிய மாணவ அணியினர் பேராதனை பல்கலை வந்து இரு வாரங்கள் கடந்திருந்தது. அவர்களை 'ராக்கிங்' செய்ய சீனியர்ஸ் அலைந்தனர். சீனியர்ஸ் கண்களில் இருந்து தப்புவது கடினந்தான். அரவிந்தனின் நண்பர்களும் புதிய மாணவர்களை தேடிப் பிடித்து ராக்கிங் செய்வதில் குறியாய் இருந்தனர். அரவிந்தனுக்கு இரு வருடங்களாக ஒரு ஏக்கம் இருந்தது. அவன் மனது தேடிய 'கேர்ல் பிரண்ட்' அவனுக்கு இன்னும் கிடைக்காமை தான் அது.

"டேய் மச்சான் இண்டைக்கு நமக்கு லெக்ஸர் இல்லடா.. '

ஆட்ஸ் பகல்டி' பக்கம் போவம் ராக்கிங் பண்ணலாம்". அரவிந்தன் சிவகுமாரை அழைத்தான். சிவகுமார் 'ராக்கிங்' செய்வதில் மகா கில்லாடி.

"போவம் மச்சான். லெக்ஸர் முடிஞ்சி அவை வெளியே வருவினம் மடக்கிப் பிடிக்கலாம்". அரவிந்தன் நீண்ட நாள் கனவு அது. அவன் மனசு அலை பாய்ந்தது.

"மச்சான் வெள்ளை உடையில் வருவினம் இலகுவில் பிடிக்கலாம்".

அன்றைய 'ராக்கிங்' அரவிந்தன் கனவுக்கு கட்டியம் சொன்னது. கலைப்பீட மாணவி மனோகரி அரவிந்தன் கண்ணில் தனியே சிக்கியதுதான்.

"ஏய்.. வா இங்கே".

அரவிந்தன் அழைப்பை அவளால் மீற முடியவில்லை.

"உன் பெயர் என்ன" பயம் அவளை பாடாய் படுத்தியது.

"மனோகரி.." ஒற்றை வார்த்தையில் ஒரு சொல் உதிர்ந்தது. அவளது பதிலும்.. அழகும் அரவிந்தனை ஈர்த்தன.

"என் மனது எண்ணியவாறு இருக்காள்". அவன் மனம் அன்றே உறுதி செய்தது.

"இவள்தான் எனக்கு உரியவள். அவளை அடிக்கடி காண மனம் உந்தியது. 'ராக்கிங்' செய்யும் சாக்கில் மனோகரியை அழைத்து கதைப்பதை வழமையாக்கி கொண்டான். மனோகரி என்னதான் செய்வாள்.

"சீனியராச்சே..

'ராக்கிங் பீரியட்' வரை சமாளிக்க வேண்டும்" அவள் மனது சொல்லியது.

அரவிந்தனுக்கோ மனோகரியை காணாமல் இருக்க முடியவில்லை. மனோகரியை தேடி வருவான். மனோகரிக்கு 'ராக்கிங்' பயம். "சீனியருக்கு பணிந்தால் 'ராக்கிங்' செய்ய மாட்டினம்" அவள் எண்ணம் அதுவாய் இருந்தது.

அரவிந்தனோ தன் அழைப்பை ஏற்று.. மனோகரி வருவதை தனக்கு சாதகமாக்கிக் கொண்டான். "மனோகரியிடம் இனி நான் காதலைச் சொல்லலாம்" அதற்கான தருணம் பார்த்து இருந்தான்.

மனோகரி பெயருக் கேற்ற அழகு. சுருட்டைமுடி.. கழுத்தில் சின்ன தாய் மின்னும் ஒரு தங்கச் செயின் அவளுக்கு இன்னும் அழகு தந்தது. புதிய மாணவர்களின் 'ராக்கிங் பீரியட்' முடிவதற்கு சில நாட்கள் இருந்தன. அரவிந்தன் தன் காதலை சொல்ல அந்த சந்தர்ப்பம் கனிந்து வந்தது.

"அவள் தன் காதலை ஏற்றுக் கொள்வாளா" என்ற தவிப்பும் அரவிந்தனை ஆட்டிப் படைத்தது.

காதல் நினைவுகளில்..அரவிந்தன் மூழ்கிய அந்தக் கணம்..தந்தையின் செருமல் சத்தம் அணை போட்டது.

"அப்பா வீட்டில் ஏதும் பிரச்சினையா கடிதம் ஏதும் போடாமலே ஏனப்பா..".

"அதெல்லாம்.. எதுவும் இல்ல உன்ன பாக்கத்தான் நான் வந்தன். நான் காலையில் போய்விடுவன்".

"அப்பா வாங்க.. குளிக்கலாம்".

"சிவா அப்பாவ நீ குளிக்க கொண்டு விடு மச்சான். நான் கன்ரீனில் சாப்பாடு எடுத்து வாறன்". புறப்பட்டான்.

"அப்பா.. ஏன் அமைதியாக இருக்கிறார். பிரச்சினை பெரிதுதான் போலும்". சாப்பாடு எடுத்து வரும் போது இந்தச் சிந்தனை அவன் மனதை நெருடியது.

"அப்பா இன்னும் குளித்து முடியல்ல போலும்.. சிவகுமார் எங்க போனான்". அறையில் அவர்களை காணாது யோசித்தான். கதிரையில் அமர்ந்தான். மீண்டும் அவனைக் காதல் நினைவுகள் ஆட்கொண்டன.

"மனோகரி.. நான் உங்கள பற்றிய விபரங்கள கேட்டதை பிழையாக நினைக்க வேண்டாம்".

"நீங்கள் சீனியர்.. கேட்டால் நான் சொல்ல வேண்டும் அதுதான் சொன்னன்".

அரவிந்தனிடம் இருந்த 'ராக்கிங்' பயம் போய் இருந்தது. "மனோகரி என்னப் பற்றி தெரிந்து கொள்ளும் எண்ணம் இல்லையா".

"அதெல்லாம் எனக்கு தெரிய வேணாம்".

"ஏன்..".

"தெரிஞ்சி நான் என்ன செய்வது".

"சரி.. நான் சொல்றன்" அமைதியாக இருந்தாள்.

"மனோகரி என்னைக் கொஞ்சம் நிமிந்து பாரேன். ஏன்.. கேட்க கூட விருப்பம் இல்லையா..".

"சரி சொல்லுங்க.. நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறன்".

"நான் தேர்ட் இயர் எஞ்சினியரிங்".

"சரி..".

"என் பெயரைக் கூட தெரிந்து கொள்ள விரும்பல்லையா".

"சரி.. சொல்லுங்க".

"அரவிந்தன்".

"சரி".



"ஒரு வார்த்தைக்கு மேல் வராதா மனோகரி".

"அரவிந்தன் நடவடிக்கை 'ராக்கிங்' போல இல்லையே.. அவனைப் பற்றி எல்லாம் சொல்ல வேண்டிய அவசியம்தான் என்ன". அவளுள் சந்தேகம் எழுந்தது.

"இப்பெல்லாம் அரவிந்தன் என்னிடம் கதைப்பது எல்லாமே வேறு விதமாக இருக்கு..".

றூம்மேற் சத்தியாவிடம் மனோகரி சொன்னாள்.

"ஏன் மனோ இன்னுமா சந்தேகம்.. அரவிந்தன் உன்னை லவ் பண்ணுறான்.. நான் அப்படித்தான் நிறைக்கிறன்".

"சீ போடி அப்படி இருக்காது".

"மனோகரி தினமும் அரவிந்தன் வாரான். உன்ன அழைச்சு போய் கதைக்கிறான்.. ஏன்..".

"உனக்கு வேற வேல இல்ல.. வீணாக கற்பன பண்ணாத.. நான் குளிக்கப் போறன்".

அடுத்து வந்த நாள் மனோகரியை அழைத்தான் அரவிந்தன். "மனோகரி நாம கேன்டீன் போய் ஒரு டீ குடிப்போமே உங்க.. றூம்மேற் சத்தியாவையும் அழையுங்க" தயங்கினாள் மனோகரி.

"கன்ரீனுக்கு அழைத்து போனால் தான்.. நான் என் காதலை சொல்ல முடியும்" மனதில் ஒத்திகை பார்த்து கொண்டான். "வேறு யாராவது மனோகரி மேல் கண் வைத்திருக்கலாம்.. அதற்கு நான் இடம் வைக்கக் கூடாது".

"நான் றூமுக்கு போகலாமா..".

அரவிந்தன் சிந்தனையை மனோகரியின் கேள்வி தடை செய்தது.

"மனோகரி கன்ரீனுக்கு அழைச்சன்.. நானும் கொஞ்சம் கதைக்க வேணும்".

"கன்ரீனுக்கு வேண்டாம். இப்பவே சொல்லுங்க.. நான் போகணும்".

"இப்பவா..".

"ம்ம்".

"இப்பவே நான் சொல்லப் போய் மனோகரி மாட்டன் என்றால்..".

"சரி மனோகரி அவசரம் எனில் போங்க நாளைக்கு சொல்றன்".

அரவிந்தனை சற்று புன்முறுவலுடன் நிமிர்ந்து பார்த்தாள். தூரமாய் நின்ற றூம்மேற் கூடவே விரைந்து சென்று இணைந்து கொண்டாள். அறைக்குக் போய் கட்டிலில் கிடந்தவாறு நடந்து சம்பவத்தை அசை போட்டாள்.

"அரவிந்தனின் அறிவும், அழகும் கண்டு அவன் மேல் எனக்கு ஓர் ஈர்ப்பு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அரவிந்தன் என்னிடம் விருப்பம் கேட்க இருக்கிறான் என்பது ஓரளவு புரியுது. எனக்குத்தான் என்ன செய்வது என்று தெரியவில்லை.." குழம்பிப்போனாள்.

றூம்மேற் சத்தியா விடுவாளா.. கேள்விகளால் துளைத்தெடுத்தாள். அரவிந்தன் தன்னிடம் கன்ரீன் போக அழைத்தது உட்பட ஒன்று விடாமல் சொன்னாள். "அரவிந்தன் உன்ன லவ் பண்ணுவது எனக்கு தெரியுது மனோகரி"."எனக்கும் அந்த சந்தேகம் இருக்கு சத்தியா".

"மனோகரி.. நீ இருந்து பார் அரவிந்தன் அவன் காதலை நாளைக்கு கட்டாயம் சொல்வான். உனக்கும் அதில விருப்பந்தானே".

"பயமாக இருக்குடி வீட்ட தெரிஞ்சா என்னாவது".

"ஏண்டி.. அப்படி நீ நினைக்கா.. வீட்ட தெரிஞ்சா என்ன.. அரவிந்தன் ஒரு எஞ்சினியர் உன் வீட்ல ஒன்னும் கோபப்படமாட்டாங்க அரவிந்தன் நல்லவனா இருக்கான். நீ வீட்ட பிறகு சொல்லன்".

"எனக்கு எதுவுமே தெரியல்ல.. ஒரே குழப்பமாக இருக்கு சத்தியா".

அரவிந்தனின் நினைவுகளில் மூழ்கிய மனோகரிக்கு நள்ளிரவுக்கு பின்புதான் நித்திரை வந்தது.

அன்றும் விரிவுரை முடித்து வந்தாள் மனோகரி.

அரவிந்தன் அங்கு நின்றிருந்தான். சைகையால் மனோகரியை அழைத்தான்."சத்தியா நீ றூமுக்கு போ.. நான் வருவன்..அரவிந்தன் அழைக்கிறான்".அரவிந்தனை நோக்கி ஒருவித பதற்றத்துடன் போனாள். "மனோ.. என நான் அழைக்கட்டுமா".

புன்னகையுடன் நிமிர்ந்து பார்த்தாள். அரவிந்தன் மனதிற்குள் பட்டாம் பூச்சிகள் சிறகடித்தன.

"இன்றைக்காவது கன்ரீன் போகலாமா.. மனோ". மனோகரி வெட்கத்தில் முகம் சிவந்தாள். 'வூஸ்' கன்ரீன் அந்த காதலருக்கு இடம் கொடுத்தது.

"இரு மனோ டீ எடுத்து வாறன்". "மனோ.. எல்லாவற்றையும் நான் உங்களிடம் சொல்லி இருக்கன். நான் உன்னை.. நேசிக்கிறன்.. ஐ லவ் யு மனோ". புன்னகை அவளிடம்.. ஆனாலும் ஒரு மௌனம்." என்ன மனோ.. மௌனம்"." இல்ல.. வீட்ட நினைச்சா பயம் வருது எனக்கு". "எதுக்கு பயம்.. வீட்டுக்கு சொல்லி விடு மனோ". அரவிந்தனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஐ.. லவ்.. யு அரவிந்..". அரவிந்தன் மகிழ்ச்சி கடலில் தத்தளித்தான்.

மனதுக்குப் பிடித்த காதலி.. சொல்லவா வேணும். நேரம் ஐந்து மணி.. கன்ரீன் கடிகாரம் அலாரம் அடித்து சொன்னது. "இனி போக வேணும்"

அவசரம் காட்டினாள். "போவம்.. மனோ நானும் வாறன்". ராமநாதன் விடுதிக்கு கிளம்பினர்.

மனோ அரவிந்தனோடு நெருக்கமாக வந்து கொண்டு இருப்பதை விடுதிக்கு வெளியே வந்த சத்தியா கண்டாள். "வெல்கம். வாங்க... வாங்க" வரவேற்றாள். மனோகரி வெட்கம் காட்டினாள்.

"பார்ட்டி இல்லையா அரவிந்தன்"

சத்தியா உங்களுக்கு இல்லாமலா.. பாக்கலாம்".இருவரிடமும் விடைபெற்று விடுதி போய் சேர்ந்தான்.

"அரவிந்..வரும் வெள்ளிக்கிழமை குறிஞ்சி குமரன் கோயில் போய் வருவோமா".

"மனோ.. அதுக்கென்ன போய் வருவோம் நம் முதற் பயணமல்லவா".

பனி விலகாத அமைதியான அந்த அதிகாலை வேளையில் குறிஞ்சிக் குமரன் போய் தரிசித்து வந்த அற்புதமான பயணத்தில் அவன் மனம் லயித்து கிடந்தது.

"அரவிந்தா என்னடா பகல் கனவா.. உன் நோட்ஸ் கொப்பி திறந்தபடி கிடக்கு".

ஆழ்ந்த நினைவுகளில் இருந்த அரவிந்தனை றூமேற் சிவகுமார்.. தட்டி அசைத்தான்.

"டேய்.. அப்பா எங்கடா இன்னும் குளிச்சு முடிச்சு வரல்லையா".

"வாறார்டா நீ சாப்பாட எடுத்து வந்திட்டியா".

"அதெல்லாம் எடுத்து வந்திட்டான்."

குளித்து விட்டு வந்த தர்மலிங்கம் இப்பவும் அமைதியாக இருந்தார். "அப்பா சாப்பிடுவம் வாங்க" அவர் பார்சலை மேசையில் தனியாக எடுத்து வைத்தான் சிவகுமார்.

"அப்பா நீங்க கதையுங்க.. நான் பக்கத்து றூமுக்கு போய் வாறன்" சாப்பிட்டு முடிய மெல்ல நழுவப் பார்த்தான் சிவகுமார்.

"தம்பி நீயும் இருடா நான் வந்த காரியத்த சொல்றன். நீரும் கேக்கணும். அப்பதான் உன் நண்பனுக்கு உறைக்கும்". வாய் திறந்தார் தருமலிங்கத்தார்.

மனோகரி விடுமுறைக்கு வீடு போய் வந்திருந்தாள். "மனோ.. வீட்டில் உன் லவ்வ சொன்னியாடி".

"போடி.. நீ வேற.. சொன்னால் என்ன நடக்குமோ.. பயத்தில நான் வாயே திறக்கல்ல சத்தியா.. நான் சொல்வதாய் இல்ல.. நடக்கிற எதுவோ நடக்கட்டும்".

"சரிதான்.. விடு. லவ் பண்ணுவது தப்பா.. என்ன". வீடு போய் வந்த அசதியில் கட்டிலில் சாயந்தாள் மனோகரி. அரவிந்தன் கூடவே விடுமுறைக்கு முன் பேராதனை 'பார்க்..' 'தலதா..' போய் வந்த ஞாபகம் அவள் மனதில் காட்சிகளாக விரிந்தது.

"தலதா மாளிகை இன்றுதான் வந்து பாத்திருக்கன். கூட்டம் அதிகமாக இருக்கு.. அரவிந்".

"மனோ.. நாமும் கூட்டத்தோடு கூடவே போவம்." எண்கோண மண்டபம் கண்டு வியந்தனர்.

"மனோ.. கண்டி லேக் அழகினை பாருங்க.. அற்புதமாக இருக்கு. வாவியில் குவியும் மீன்கள பாருங்க அரவிந்". பொரி வாங்கி போட்டனர். மீன்கள் ஒன்று கூடும் அழகை ரசித்து மகிழ்ந்த நினைவுகள் வந்து போனது.

"மனோகரி 'றீகலில்' அந்த ஏழு நாட்கள் படம் ஓடுது.. 'ரென் தேர்ட்டி மெட்னி' பாப்பம்..".

"ஓ.. நல்ல பிளான் போல எதுவும் என்னிடம் சொல்லல".

"பிளான் எதுவும் இல்ல மனோகரி.. இப்பதான் தோணிச்சு". படம் பார்த்த அன்றைய நிகழ்வு மறக்க முடியாத ஒன்றுதான்.

கோழி பிரியாணி ஹோட்டலில் சாப்பிட்ட உடன் பஸ் எடுத்தனர். 'பார்க்' வந்து சேர்ந்தனர். மூன்று மணி ஆகி இருந்தது.

"அரவிந்.. முதலில 'ஒகிட்ஸ்' பிறகு 'றோஸ் கார்டன்'.. சரிதானே..". "ஓகே.. மனோ.." கையோடு கை கோர்த்த படி போன அந்த அற்புதமான பயணம் கண் முன் வந்து முட்டியது.

"அரவிந்.. இந்த ஒகிட்ஸ.. பாருங்க என்ன வடிவா இருக்கு. அதோ அங்க.. கொஞ்சம்.. பாருங்க அதுவும் அழகுதான்". குதூகலித்தாள்."மனோ இன்னும் பல இடம் பாக்க வேணும்". "ம்ம்.. போவோம் அரவிந்". பூங்காவை ஒட்டி வளைந்து செல்லும் மகாவலி கங்கைக் கரை, ஓங்கி வளர்ந்த மூங்கில்கள், அழகான சீமன்ட் இருக்கை, அதில் அமர்ந்து இருந்து மகிழ்ந்த தருணங்கள் நினைவில் வந்து போனது.


அன்று விடுதி வந்து சேர ஆறு மணிக்கு மேலானது. "மனோகரி என்ன விழித்துக் கொண்டு கனவா". சுயநினைவுக்கு வந்தாள் மனோகரி.

**(19 ஆம் பக்கம் பார்க்க)**

வெல்லாவெளி
விவேகானந்தம்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி

இல: 122



திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 122
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 122

### இடமிருந்து வலம்

1. ஒருவர் பணம் பதவிகளால் தேடிக்கொள்ளும் மதிப்பு அல்லது புகழ்
5. தந்தை
7. தென்னை, பனை போன்ற மரங்களில் ஓலைகளைத் தாங்கியிருக்கும் பகுதி
8. நாய் குரைப்பது மாத்திரமல்ல இதனையும் செய்யும் (திரும்பியுள்ளது)
9. நான்கு திசைகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
11. நறுமணம் (குழம்பியுள்ளது)
12. ஜாதி
13. ஒரு வாழையினம் (குழம்பியுள்ளது)
14. ஆடை குழம்பிக் காணப்படுகின்றது.
16. நிலத்தில் வளரும் இது கால்நடைகளுக்கு உணவு(திரும்பியுள்ளது)
17. குதிரை
18. சூரியன் (குழம்பியுள்ளது)
20. ஒரு விஷ ஜந்து திரும்பிப் போகின்றது

### மேலிருந்து கீழ்

1. பிறரை மதிக்காத போக்கு
2. சோர்வுத் தன்மை
3. எளிதில் புரிந்து கொள்ளத் தெரியாதவனை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
4. மழைக்கு மட்டுமல்ல வெயிலுக்கும் இது தேவை
5. சிறிதும் விட்டுக் கொடுக்காத மனநிலை
6. நீர் அருந்தத் தூண்டும் உணர்வு
10. இதுவும் ஒருவகை சங்கு
11. சேறு
13. வேதனை தரும் உணர்வு (தலைகீழ்)
14. ஒரு கறிச்சரக்கு(குழம்பியுள்ளது)
15. உறுதி அல்லது நிலையானது
16. கேள்விக்குரிய விடை குழம்பிவிட்டது
19. அரைப்பங்கு (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 121

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. அற்புதம்
5. பசி
7. துவரை
8. தர
9. வறுமை
11. சபதம்
13. ஆடை
14. பம்பரம்
15. தோணி
16. காவல்
18. இன்பம்
20. விருட்சம்
21. ரதி
22. வெள்ளம்

**மேலிருந்து கீழ்**

1. அறுவடை
2. புதுமை
3. தரை
4. வம்சம்
5. பரதம்
6. சிதம்பரம்
10. ஆறு
12. பரதன்
14. பணி
15. தோல்வி
16. காரம்
17. வசதி
18. இருள்
19. பணம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 121

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **பி. நடேசன்,** 435/36 ஏ. 3ஆம் குறுக்கு, பூம்புகார், மட்டக்களப்பு | **எம்.எஸ்.எம் பாளுக்,** 418/3 சென் ரீட்டா வீதி, கொச்சிக்கடை | **பாத்திமா ரஸ்மியா,** 14 பி, குனேபான மடிகே , மடவளபஸார் |

### பாராட்டு பெறுவோர்

**1. ஏ.டபிள்யூ.எம் நவாஸ்,**
மாவனல்ல

**2. என்.கே.வேணி,**
பலாங்கொடை

**3. ஹிமா மரியம் முஜாஹித்,**
ரம்புக்கனை

**4. எம்.ஏ. அத்தாஸ்**
மாத்தறை

**5. வி.பாலேந்திரா**
கொழும்பு 06

**6. ரஜினி சிவஞானம்,**
மட்டக்களப்பு

**7. எம். பாசிர்,**
ஹம்பாந்தோட்டை

**8. எம்.எப். இர்ஷாத்**
கொழும்பு 11

**9. ஏ.சி. ஸ்ரீதரன்**
கொழும்பு 06

**10. என்.சிவசீலன்**
நீர்வேலி

# வாரபலன்



26.05.2024 - 01.06.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் சுமத்திய வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். திடீர் மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நன்மை தரும். பெண்கள் மற்றவர்களால் ஏற்படும் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மெத்தனப் போக்கு காணப்படும்.

## ரிஷபம்

**கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

உழைப்பினால் வெற்றி அடைவீர்கள். வீண்செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாகச் செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வில்லாமல் பணியாற்ற வேண்டியிருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம். உறவினர்களிடம் கவனம் தேவை. பெண்களுக்கு மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்கள் கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதற விடலாம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். இலாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். வீடு, வாகனம் வாங்குவது, அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பர். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

பிரச்சினைகளை சமாளிக்கும் திறமை உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். அதிகமாக உழைப்பதன் மூலம் வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் எல்லா பிரச்சினைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பெண்களுக்கு எடுத்த காரியம் தடைப்பட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மனதில் எதைப்பற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

செயல்களில் வேகம் அதிகரிக்கும். தந்தையின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு தடைகளை தாண்டி கல்வியை கற்க செய்யும் முயற்சி வெற்றி பெறும். சிறப்பாக படித்து முடிப்பர்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் வேலையை சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தினரால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பெண்களுக்கு தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். விளையாட்டுப் போட்டிகளில் திறமை வெளிப்படும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

தடைகள் அகலும். பணவரத்து சீராக இருக்கும். வேலைப்பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டியிருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறைச் சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். கௌரவம் பாதிக்கும் படியான சூழ்நிலை வரலாம். தொழில் வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள் மேலதிகாரிகளுடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தினரால் திடீர் பிரச்சினைகள் அதனால் வாக்குவாதம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு ஆகியவை அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி, நன்றாக நடந்து முடியும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகிச் சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சினையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டியிருக்கும். மாணவர்கள் வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

மனச் சஞ்சலம் நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சினை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பணத் தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தரும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பெண்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. மாணவர்கள் சக மாணவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். எனவே நிதானமாக இருப்பது நல்லது. சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விஷயங்களால் மன நிறைவை அடைவீர்கள். எதிர்ப்பாலினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, இரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். பெண்களுக்கு எந்த பிரச்சினையையும் சமாளிக்கும் திறமை கூடும். மாணவர்கள் எதையும் அவசரப்படாமல் நிதானமாக செய்வது நல்லது.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

நீண்ட நாட்களாக தடைப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்துக்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள், மேலதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை குறையும். பெண்கள் அதிகம் பேசுவதைத் தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமடைய கூடுதல் கவனத்துடன் படிப்பீர்கள்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதூரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

# 11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 37

## தமிழ் சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டிய சாதிய வாதமும் மத வாதமும்

தமிழக அரசியலில் முக்கிய அங்கமாகவும் இந்தியாவின் கவனத்தை ஈர்த்தவராகவும் தொல் திருமாவளவன் விளங்குகிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்கான குரலாக தன்னை அடையாளப்படுத்தி நிற்பவர். சட்டம், சமூகம், அரசியல், கல்விக்கான சம வாய்ப்பு சகலருக்கும் கிடைக்க வேண்டும் என்ற கோசத்துடன் தனது அரசியலை முன்னெடுத்து வருபவர். உலகில் ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்கள் பாதிப்பிற்குள்ளாகும் போது அவ் விடயம் தொடர்பிலான கண்டனத்தை பதிவு செயவதோடு, அதற்கு எதிராக குரல் கொடுப்பதில் முன் நிற்பவராகவும் திகழ்கிறார். தமிழகத்தில் வாழும் முஸ்லிம்கள் உட்பட்ட சிறுபான்மையாக வாழும் இனக்குழுமங்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். அம்பேத்காரின் அடிச்சுவட்டை பின்பற்றும் ஆளுமையாகவும் இவரை அடையாளம் காண முடியும். தமிழ் நாட்டு சட்டப் பேரவை உறுப்பினராக பதவி வகித்த நிலையில் சிதம்பரம் தொகுதியின் உறுப்பினராக இந்திய மக்களவையிலும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

17 ஒகஸ்ட் 1962 இல் பிறந்த தொல் திருமாவளவன் மதுரை தடய அறிவியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, ஒடுக்கப்பட்ட சிறுத்தைகள் இயக்கத்தோடு தொடர்பைக் கொண்டிருந்தார். ஏனைய மாநிலங்களோடும் தொடர்புபட்டிருந்த ஒடுக்கப்பட்ட சிறுத்தைகள் இயக்கத்தின் தமிழகப் பிரிவை உருவாக்கிய மலைச்சாமி கொலை செய்யப்படுகிறார். 1972ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி இயக்கமாகவே இவ் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மலைச்சாமியின் கொலையைத் தொடர்ந்து அவருக்கு இடம்பெற்ற நினைவேந்தல் கூட்டத்தில் அமைப்பின் தலைவராக தொல் திருமாவளவன் தெரிவு செய்யப்படுகிறார். சாதி ஒழிப்பு, சாம்பவர் எழுச்சி, தமிழ் தேசியம், மக்கள் விடுதலை போன்ற நோக்கங்களை முதன்மைப்படுத்தி "விடுதலை சிறுத்தைகள் கட்சி" எனும் தமிழ் மயப்படுத்திய பெயரோடு திருமாவளவன் தனது அரசியலை முன்நகர்த்துகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களை கொண்டு அமையும் தேசியமே தமிழ் தேசியம் எனப்படுகிறது. தேசிய இனம் தமிழர், தேசிய மொழி தமிழ், தேசம் தமிழ் தேசம் என்ற பொருண்மையுடன் முன் நகர்த்துவது குறித்த அவதானத்தைக் கொண்டதாக தமிழ் தேசிய கோஷம் அமைகிறது. இறையாண்மையுள்ள தமிழ் தேசம் எமது இலக்கு எனும் கருதுகோளே தமிழ் தேசியம் என வரையறுக்கப்படுகிறது. பிற மொழியினர் தமிழர்கள் மீது செலுத்தும் மேலாதிக்கத்தை விடுவித்துக்கொள்ளும் நிலைப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான அழுத்தத்தை பிரயோகிப்பதாகவே அது அமையப்பெறுகிறது. அது தமிழர்கள் மீது பிரயோகிக்கும் சமூக, பொருளாதார, அரசியல் சிக்கல் நிலைகளில் இருந்து விடுவித்துக்கொள்ளும் நோக்கில் விரிவுபெறும் கருத்தியல் ஆகிறது.

தமிழர்களின் நிலப்பரப்புடன் மொழி, சமூகம் ஆகிய அம்சங்களின் இணைப்பினை வலியுறுத்துகின்றது எனலாம். "உலகமயத்தால் நசுக்கப்படும் உழவர்கள், தொழிலாளர்கள், ஒடுக்குண்ட சாதியினர், ஒதுக்கப்படும் சாதியினர், ஒதுக்கப்படும் சிறுபான்மையினர், சிறு நடுத்தர தொழில் முனைவோர் முதலிய புரட்சிகர சக்திகளை உலகமய எதிர்ப்பில் ஒன்றிணைக்கின்ற மகத்தான புரட்சிகர ஆற்றல் தமிழ் தேசியம் தான். சூழல் பாதுகாப்பு, மரபான தொழில்நுட்பப் பாதுகாப்பு, மனித உரிமை பாதுகாப்பு ஆகிய தளங்களில் உலகமயத்திற்கு எதிராக களம் அமைப்போர் ஒன்றிணைய வேண்டிய தளமும் தமிழ் தேசியம் தான். தமிழ்த் தேசிய புரட்சி தான் உலகமயத்தை முறியடிக்கும் ஆற்றல் கொண்டது." என்ற கி.வெங்கட்ரமனின் கூற்றும் கவனிக்கத்தக்கது.

தமிழ் தேசியத்தின் வெளிவாரியான பகையாக அமைவது இந்திய தேசியம் என்ற தில்லி ஏகாதிபத்தியம் ஆகும். அகப் பகையாக அமைவது தமிழர்களிடத்தே இரண்டற கலந்த சாதியம் ஆகும். இந்திய தேசியம் பல தேசிய இனங்களின் ஒற்றைத் தன்மையை வலியுறுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது எனலாம். தமிழ் தேசியம் என்பது தமிழர் என்ற ஒரே தேசிய இனத்திற்குள் காணப்படும் வேற்றுமைகளை களையச் செய்வதை நோக்காகக் கொண்டுள்ளது. சாதிக் கட்டமைப்பு என்பது எல்லா சாதிகளினதும் ஒன்றிணைந்த ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அவற்றை பகுதிபகுதியாக இல்லாமல் செய்யவோ, மாற்றமடையச் செய்யவோ முடியாது. முழுமையாக ஒழித்தால் மாத்திரமே சாத்தியமாகும். தமிழகத்தின் சாதியொழிப்பு அரசியலில் தமிழ் தேசியம் தீர்க்கமாக பங்காற்றியுள்ளதை அறிய முடிகிறது. தமிழ்த்தேசியத்தின் தந்தை பாவலேறு பெருஞ்சித்திரனார் சாதி ஒழிப்பிற்கான ஒரு திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்தியமை கவனிக்கத்தக்கது. தமிழர்களுக்கு எதிரான போக்கை கடைப்பிடிக்கும் சனாதன தர்மம் பற்றிய எதிர்ப்பு சிந்தனையோடும் இதன் தொடர்ச்சி நிலை விரிவு பெறுகின்றமையும் கவனிக்கத்தக்கது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி என்ற பெயர் மாற்றத்துடன் அவ் அமைப்பிற்கான கொடியை தயார்ப்படுத்தும் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. சிவப்பு நீல நிறங்களுடன் நட்சத்திரமும் கொடியில் அங்கம் வகிக்கிறது. 1990 ஏப்ரல் 14 மதுரையில் முதல் முதலாக அக்கொடி ஏற்றப்படுகிறது. 1999ஆம் ஆண்டின் பின்னர் விடுதலை சிறுத்தைகள் கட்சி தேர்தலில் களம் காண முனைகிறது. அத் தீர்மானத்தை அடுத்து முனைவர் தொல்.திருமாவளவன் தான் வகித்த அரசப் பணியை துறக்கின்றார். 2009ஆம் 2019ஆம் ஆண்டுகளில் பாராளுமன்ற தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சாம்பவர் உட்பட்ட ஒட்டு மொத்த தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்துதல், தனித் தமிழ் வளர்ச்சிக்கு உதவுதல், சாதிய அடக்குமுறைக்கு எதிராக கருத்திடுதல், இந்து தத்துவ கொள்கையை எதிர்த்தல் போன்றவை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முக்கிய கொள்கைகளாக அரசியல் செயற்பாடுகளாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது கொள்கைகளுடன் கூடிய எழுத்துருவாக்கங்கள் நூல்களாகவும் பிற மொழிகளில், குறிப்பாக ஆங்கிலத்திலும் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அவரது படைப்புகளில் சனாதன தர்மம் குறித்த எதிர்ப்பு பார்வை முக்கியத்துவம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். அவ்வாறே திருமா திரைப்படங்களில் நடித்துள்ள அவதானமும் கவனத்திற்குரியதாகும்.நிகழ்வில் பங்கேற்ற திருமாளவனின் உரை மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியதாக அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அவரது உரை பின்வரும் சாராம்சத்தை கொண்டிருந்தது. பல்வேறு நாடுகளில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. பேரறிஞர் அண்ணா தலைமையில் இரண்டாவது மாநாடு தமிழகத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் தமிழுக்கு பங்காற்றிய அறிஞர் பெருமக்களுக்கு மெரினா கடற்கரையில் சிலைகள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில் ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மதுரையில் வெற்றிகரமாக நடைபெற்றது. ஜெயலலிதாவின் ஒருங்கிணைப்பில் தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான முக்கியத்துவம் பெற்ற மாநாடுகளின் வரிசையில் பதினோராவது மாநாடு மலேசிய மண்ணில் மலேசிய ஆட்சியாளர்களின் ஒத்துழைப்போடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மொழி வளர்ச்சிக்குரிய மாநாடாக அல்லாமல் இன நலன்களுக்கான நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டவைதான் இத்தகைய மாநாடுகள். எத்தனையோ துன்பங்களை கடந்தும், எத்தனையோ நெருக்கடிகளை சந்தித்தும் தமிழ் என்றும் தனித்துவத்தை இழக்காமல் உலகில் முதுமொழியாக தடம் பதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புதிய சொற்களை உருவாக்கிக் கொண்டு தன்னை தகவமைத்து இயங்கிகொண்டிருக்கும் மொழியாக தமிழ் விளங்குகிறது. இம் மொழி நமது தொன்மையை அடையாளப்படுத்துகிறது. நம்முடைய கலாசாரத்தை உலகிற்கு உணர்த்துகிறது. நாம் பின்பற்ற வேண்டிய தத்துவ நெறிமுறைகளை உலகிற்கு எடுத்துச் சொல்கிறது. கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் ஊடகமாக மாத்திரம் நம் மொழியில்லை. மனித குலத்தின் அல்லது ஓர் சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, வலிமை, நாகரிகம், அனைத்தையும் பாதுகாக்கக்கூடிய பெட்டகமாகவும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஊடகமாகவும் மொழி விளங்குகிறது. இந்தியாவைப் பொறுத்த வரையில் சமஸ்கிருதம் அப்படிப்பட்ட வரலாற்று பின்னணியைக் கொண்டது என்ற கருத்து உண்டு. ஆனால் அச் சமஸ்கிருதம் இன்றைக்கு மக்களால் பேசப்படக்கூடிய ஒரு மொழியாக இல்லை. தமிழுக்கு சமகாலத்தில் சமஸ்கிருதம் தோன்றியதாக மொழியியலாளர்கள் கூறுவார்கள். ஆனால் சமஸ்கிருதம் வலுவிழந்து போய் விட்ட நிலையில் தமிழ் இன்னமும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. தமிழுக்கு அத்தகைய உயிர்ப்பு எங்கிருந்து வந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மொழி உயிர்ப்போடு இருப்பதற்கு இனம் உயிர்ப்போடு இருக்க வேண்டும். இனம் உயிர்ப்போடு இருப்பதற்கு மொழி உயிர்ப்போடு இருக்க வேண்டும். மொழி வேறு, இனம் வேறு என்று இருக்க முடியாது.



ஆகவே மொழியை காப்பாற்ற வேண்டியது இனத்தின் கடமை. இனத்தை நெறிப்படுத்த வேண்டியது மொழியின் பொறுப்பு. இந்த நிலையில் மொழிப் பற்றையும் இனப்பற்றையும் ஒரு தேசியமாக வளர்த்தெடுப்பதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். தேசியவாதம் என்பது பல்வேறு புழக்கத்தில் கட்டமைக்கப்பட்ட சொல்லாகிறது. இந்திய தேசியவாதமும், தேசிய வாதம்தான். தமிழ் தேசிய வாதமும், தேசிய வாதம்தான். ஒட்டு மொத்தமாக, உலக நாடுகள் ஒன்றிணைப்பை காட்டுகின்ற சர்வதேசியமும், தேசிய வாதம்தான். தமிழ் தேசியம் என்பது மொழி உணர்வோடும் இன உணர்வோடும், நின்று விடக்கூடியதல்ல. அவ்வாறே நான் தமிழன் என அடையாளப்படுத்துவதோடு நிறைவு பெற்றுவிடக் கூடியதுமல்ல. மாறாக வரலாறு, வாழ்வியலை அர்த்தபூர்வமாக முன்னெடுக்கும் கோட்பாடாகவே அதனை முன்னெடுக்க முடியும். மொழி வழி தேசியம், மத வழி தேசியம், இன வழி தேசியம் என கட்டமைக்கப்படுகிறது. ஆனால் எந்தவொரு தேசிய வாதமும் வெறுப்பு அரசியலை கொண்டதாக அமைந்து விடக்கூடாது.

நாங்கள் தமிழர்கள் என்பதால் ஏனைய இனத்தவர்களை வெறுக்க வைக்கும் செயற்பாடுகள் தமிழ் தேசியத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையாது. இனவாதம் வளர்கின்ற போது இன வெறுப்பாக வலிமை பெறும். அது தமிழ் தேசியமாக வளராது,

மலராது. மதவழி தேசியங்களும் அப்படித்தான். வெறுப்பு நிலையில்லாத நிலையில் அவ்வவ் மத தேசியங்களும் வளர்ச்சி பெறல் வேண்டும். அது வெறுப்பு நிலையை ஏற்படுத்திவிடக்கூடாது சாதிய வாதம், மதவாதம் என்பது தமிழ் சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டியவைகளாகும். அப்படியானால்தான் இப்படிப்பட்ட மாநாடுகளின் நோக்கம் நிறைவேறும். உலகில் வாழும் ஏழரைக்கோடி தமிழர்களின் வரலாற்றை, வாழ்வியலை, பண்பாட்டை, பாதுகாக்க வேண்டிய பொறுப்பில்தான் தமிழ் தேசியத்தை நோக்கி ஒன்று திரள்கிறோம். மாறாக பிற இனங்களின் வெறுப்பில் எதிர்ப்பு அரசியலை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருத்தல் வேண்டும்.

*பயணம் தொடரும்...*

# ஒரே சூலில் 4 குழந்தைகள் பிரசவித்த தாய்

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சாதனை

ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வரலாற்றில் மருத்துவத்துறையில் புதியதொரு சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே. கலாரஞ்சனி தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒரு தாய்க்கு ஒரு சூலில் நான்கு குழந்தைகள் பிறந்து ஒரு மாதம் கடந்த நிலையில் ஆரோக்கியமாக இருப்பது மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும் என மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் திருமதி கலாரஞ்சனி மேலும் தெரிவித்தார்.

ஒரே சூலில் 4 குழந்தைகளைப் பெற்ற 25 வயதுடைய தாயையும் குழந்தைகளையும் ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கும் நிகழ்வு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி கே.கலாரஞ்சனி, உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி மைதிலி, மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி என் சரவணன், குழந்தை நல வைத்தியர் உட்பட வைத்தியர்கள், தாதியர்கள், மருத்துவத் துறை சார்ந்த பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில், கடந்த மாதம் 23ஆம் திகதி மட்டக்களப்பு மண்முனைப் பற்று புதுக் குடியிருப்பு பிரதேசத்தை சேர்ந்த ஹரிகரன் கிருஸ்ணவேணி எனும் 25 வயது தாய்க்கே ஒரே சூலில் நான்கு குழந்தைகள் இயற்கையான முறையில் பிறந்துள்ளன. மூன்று பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையுமாக 4 குழந்தைகளை இத்தாய் பிரசவித்துள்ளார். இந்த நான்கு குழந்தைகளும் பிறந்து ஒரு மாதம் கடந்த நிலையில் தேக ஆரோக்கியத்துடனும் போதிய உடல் நிறையுடனும் இருப்பதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் திருமதி கலா ரஞ்சனி மேலும் தெரிவித்தார். இதன் போது கருத்துத் தெரிவித்த மகப் பேற்று வைத்திய நிபுணர் டொக்டர் சரவணன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வரலாற்றில் இது முதல் தடவையாகும்.

இயற்கை கருத்தரிப்பின் மூலம், எந்தவிதமான செயற்கை இடையீடுகளும் இன்றி நான்கு குழந்தைகள் ஒரு தாய்க்கு ஒரே சூலில் ஒரே தடவையில் பிறந்தது மாத்திரமன்றி, ஒரு மாதம் கழிந்துள்ள நிலையில் நான்கு குழந்தைகளும் மிகவும் ஆரோக்கியத்துடன் இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

4 குழந்தைகளைப் பெற்றுக்கொண்ட தாய், வெளிநாட்டில் கர்ப்பம் கருத்தரித்து இலங்கை திரும்பி எங்களது வைத்தியசாலைக்கு வந்த போதுதான் தாயின் மீது நாங்கள் கூடிய கவனம் செலுத்தினோம்.

தாயை அதிக கரிசனையுடன் பராமரித்தோம். கடந்த மாதம் 23ஆம் திகதி 4 குழந்தைகளும் பிறந்தன. குழந்தைகளும் தாயும் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கின்றனர்.



தாய் எங்களது வைத்திய ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி நடந்து கொண்டதும் அனைத்தும் சாதகமாக அமைந்ததற்குக் காரணமாகும். இவ்வாறு ஒரு சூலில் 4 குழந்தைகளை பிரசவிப்பது என்பது அரியதாகும்.

உலகில் 5 இலட்சத்து 72 பேரில் ஒருவருக்கே இவ்வாறு இயற்கை முறையில் ஒரே சூலில் நான்கு குழந்தைகள் கிடைக்கும். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையை பொறுத்தவரைக்கும் இது முதற்தடவையாகும். இது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கும் ஒரு சாதனையாக அமைவதுடன் அதன் முன்னேற்றத்தையும் காட்டுகிறது. இந்த வேளையில் தாய்க்கு நன்றி தெரிவிப்பதுடன் வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் ஏனைய வைத்தியர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார் 4 குழந்தைகளின் தாயான ஹரிகரன் கிருஷ்ணவேணி இதன்போது வைத்தியர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் தான் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். வைத்தியர்கள் கிருஷ்ணவேணிக்கு அன்பளிப்புக்களும் வழங்கினர்.

கிருஷ்ணவேணியின் கணவர் தற்போது கட்டார் நாட்டில் வசித்து வருகிறார்.

குறித்த நான்கு குழந்தைகளையும் வளர்ப்பதில் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த தாய் "இல்லை எந்த விதமான சிக்கல்களும் இல்லை.

தாராளமாக வளர்க்க முடியும். அதற்கான வசதிகள் எம்மிடம் தாராளமாக உண்டு என பதிலளித்தார்








இலங்கை இராணுவம்

**விலைமனுக்கோரல்**

1. விஜயபாகு காலாட்படை படைப்பிரிவு மையம், விஜயபாகு காலாட்படை நிலையத்தில் போயகனே முகாமில் நிர்மாணிக்கப்பட்டுவரும் அதிகாரிகளின் உத்தியோக பூர்வ இல்லத்தின் கட்டுமான நடவடிக்கைகளுக்கு தேவையான பொறியியல் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கோருவதற்காக பொறியியல் பொருட்கள் வகைப்பாட்டின் கீழ் கொள்வனவு செய்வதற்கு தகுதியான விலைமனுதாரர்களினால் முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்களுக்கு படைப்பிரிவு மையம், விஜயபாகு காலாட்படை, இராணுவ முகாமில் போயகனே டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலுக்கான கொள்முதல் ஆவணங்கள் **2024.05.29** ஆம் திகதி முதல் **2024.06.18** ஆம் திகதி வரை வார நாட்களில் **0800** மணி முதல் **1600** மணி வரை விஜயபாகு காலாட்படை படைப்பிரிவின் 'B' நுழைவாயிலுக்கு அருகில் உள்ள ஆர்ச்சர்ஸ் வெளியீட்டுப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் **2024.06.19** ஆம் திகதி **1100 மணிக்கு** படைப்பிரிவு மையம், விஜயபாகு காலாட்படை, இராணுவ முகாமில் போயகனே எனும் முகவரியில் திறக்கப்படும்.

3. குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.promise.lk** என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

அ. விஜயபாகு காலாட்படை படைப்பிரிவு
தொலைபேசி இலக்கம் - 0372223594

கொள்முதல் பிரிவு,
காலாட்படை மையம்,
விஜயபாகு காலாட்படை படைப்பிரிவு,
இராணுவ முகாம்,
போயகனே - குருணாகல்


## கனவாகிப் போன காதல்.... 

17 பக்கம் தொடர்ச்சி

"ஒண்ணும் இல்ல சத்தியா.. கொஞ்சம் பழைய ஞாபகங்கள் அதுதான்".

தருமலிங்கத்தார் செருமிய படி தொடங்கினார். "அரவிந்தன்.. இஞ்ச பார் உனக்கு மூணு தங்கச்சிமார் இருப்பது உனக்கு மறந்து போச்சா".

த ர்மலிங்கதார் கோபம் அரவிந்தனை நிலை குலைய வைத்தது. "அப்பா ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறார்" புரிந்து அவனுக்கு.

"அப்பா..".

"நீ இப்ப பேசாத.. நான் தான்.. பேச வேணும்".

கூடவே இருந்த சிவா மூச்சு விட மறந்தான். "நான் எல்லாம் தெரிஞ்சுதான் வந்திருக்கன். இனி உன் விளக்கம் எனக்குத் தேவல்ல".

"சிறிதான் சொல்லி இருக்கான். மனோகரி கிடைக்காத குமுறல் அவனுக்கு".மனதுக்குள் திட்டினான் அரவிந்தன்.

."இஞ்ச பார்.. சுத்தி வளைச்சுப் பேசத் தெரியல்ல எனக்கு. இந்த காதல் கத்தரிக்காய் எல்லாம் உனக்கு வேணாம். இத்தோட விட்டுத் தொலை..".

தர்மலிங்கத்தாரின் முதற் குண்டு வெடித்தது. துடித்துப் போனான் அரவிந்தன்.

"அப்பா..".

"நீ என்னிடம் எதுவும் பேசவேணாம்"

அவன் வாயை அடைத்து விட்டார். தனது காதல், மனோகரிக்கு கொடுத்த நம்பிக்கை எல்லாம் ஒரு கணத்தில் நொறுங்கியது.

"எப்படியும் நான் மனோகரியை கட்டுவேன்" சொல்லத் துடித்த அவனை அவரது உருட்டல் பார்வை கட்டுப்படுத்தியது.

"உன் அம்மாவுக்கும் சுகமில்ல.. கல்யாண வயதில் உன் தங்கைமார்.. என் பென்சன் பணத்தில் நான் என்ன செய்ய முடியும்? உன்ன படிப்பிச்சி விட்டிருக்கன்" அவன் சுமையைச் சுட்டிக் காட்டினார்.

"தன் காதல் கனவாகி போகுமோ"

மனோவை நினைக்க பகீரென்றது. குடும்பத்தில் மூத்தவன் அவன். அதுவும் எஞ்சினியர் ஆகப் போகிறவன். இத்தோடு தலைக்கு மேல் பாரிய சுமை.

"உன் வாழ்க்கை, உனது எதிர்காலம் பற்றி எல்லாம் எனக்கு கனவுகள் இருக்கு.. அத நீ பாழாக்க வேணாம்" தேள் கொட்டுவது போல கொட்டினார்.

"நான் அந்த குடும்பத்த விசாரிச்சன்.. அது உனக்கு வேணாம். நாங்க உசிரோடு இருக்கிறதா.. குடும்பத்தோடு சாகிறதா நீயே முடிவு செய்".

இரண்டாவது குண்டை தூக்கிபோட்டார் தர்மலிங்கத்தார். அரவிந்தன் சிதறுண்டு போனான்.

"உன் வாழ்க்கை இடை நடுவில சீரழியக் கூடாது.. நீ வாழ வேண்டிய பருவத்தில உன் வாழ்க்கையைத் தொலைக்கக் கூடாது. தம்பி சிவகுமார் நீ உன் நண்பனுக்கு எடுத்துச் சொல்".

"நான் காலையில புறப்படுறன். இனி சொல்ல எதுவும் இல்ல.. கொம்மாவுக்கு நோய் சற்று கடுமை உடனே வந்து பார்" கண்டித்து விட்டு தூங்கப் போனார்.

" அவரிடம் இனி எதுவும் பேச முடியாது.. பேசிப் பயனுமில்ல.." அவர் குணம் அரவிந்தனுக்குத் தெரியும்.

பிரமை பிடித்தவனாக தூங்கப் போனவன்.. தூக்கமின்றி புரண்டான் காலையிலதான் தூக்கமே வந்தது. தகப்பன் காலையில் போனதே அவனுக்குத் தெரியாது.

"டேய்.. எங்கடா போறா.. உன் கொப்பர் ஆட்டம் காட்டிப் போட்டு போறார்.. நீ என்னடா செய்யப் போறா..".

"சிவா.. நான் மனோகரிய சந்திக்க வேணும் அவசரமாக வீட்ட போய் இதுக்கு முடிவு கட்டணும்".விடுதிக்கு விரைந்தான்.

"மனோகரி.. நான் கொஞ்சம் கதைக்க வேணும்..".

"அரவிந்.. என்ன திடீரென வந்து..".

"சொல்லுறன் மனோ.. அப்பா ஊரில இருந்து வந்து சத்தம் போட்டவர்.. நம் காதல்தான் மூல காரணம். காலை கிளம்பி போய் விட்டார்" அதிர்ச்சி அடைந்தவள் அழத் தொடங்கினாள்.

காலையில் அவள் தலையில் இடி விழுமென எதிர்பாக்கவில்லை.

"இவ்வளவுதானா.. அரவிந் எல்லாமே முடிஞ்சா பயமாயிருக்கு". தேம்பித் தேம்பி அழுதாள்.

"அழாத மனோ பாக்கலாம். ஒன்றுமாகாது". தடுமாறினான்.

"நான் உடனடியாக ஊருக்கு போகணும். என்ட பேச்ச அப்பா கேட்ட பாடில்ல.. அம்மாட்ட கதைக்கணும்". அவன் கையை இறுக்கமாக பிடித்தாள்.

"பயப்படாத.. மனோ.." அவள் கையை ஆதரவாக தடவிக் கொடுத்தான். "வாறன்.. மனோகரி" கண்ணீரோடு புறப்பட்டான்.

றூமுக்குள் ஓடிப்போன மனோகரி கட்டிலில் விழுந்து வாய்விட்டு அழத் தொடங்கினாள். "என்னடி நடந்தது மனோ ஏன் அழுறா" பாத்றூமில் இருந்து வந்த சத்தியா பதறினாள். ஏங்கி அழுதபடி ஒன்றும் விடாமல் சொல்லி முடித்தாள்.

"நீ இப்ப அழுவத நிறுத்து.. அரவிந்தன் போய் வரட்டும்.. பாக்கலாம். நீ மனத தளர விடாத.. மனோகரி" அணைத்தபடி ஆறுதல் கூறினாள் சத்தியா.

தர்மலிங்கத்தார் எல்லாம் ஒழுங்கும் செய்து விட்டார் கொழுத்த சீதனம். மகனுக்கு புதுக் கார்.. "மகள் மூவரையும் சீதனக் காசில கரைசேர்த்து விடலாம்" கணக்குப் போட்டார். இனி அரவிந்தன் வந்தால் சரி.

அரவிந்தன் அன்று பிற்பகல் வீடு வந்து சேர்ந்தான். தங்கைகள் பாசம் காட்டினர். "அண்ணா.. மதியம் ஏதும் சாப்பிட்டாயா". "ம்ம்.. சாப்பிட்டன்" அம்மாவின் அறைக்குப் போனான். நோயோடு போராடும் அம்மா கட்டிலில்..

"வா மகன் "வாஞ்சையோடு தடவிக் கொடுத்தாள். "அம்மா.. நான் உங்களோட கதைக்கணும்". "மகன் நீ போய் முதலில் குளிடா புறகு கதைப்பம்".

"அம்மா நான் இப்பவே கதைக்கவேணும்".

"எஞ்சினியர் ராஜலிங்கத்தின் மகளுக்கு பேசி முற்று பண்ணி இருக்கார் அப்பா. நாளை மறுநாள் திருமண ஏற்பாடும் செய்து விட்டார்

"அம்மா நீங்களுமா..".

"அந்தக் காதல் உனக்கு வேணாம். இது நல்ல இடம்.. பிள்ள நல்ல வடிவு".

"அம்மா.. என்னப் பாருங்க.."

தாயின் கையைப் பிடித்து கெஞ்சி அழுதான்.

"மகன்..எல்லா ஏற்பாடும் செய்தாச்சு.. நான் கண்ண மூட முன்.. உனது கல்யாணத்த பாத்தாகணும் நீ மறுக்காத".

அரவிந்தன் கையை எடுத்து தன் தலையில் வைத்து சத்தியமும் வாங்கி விட்டாள்.

"என் காதல் கனவாகவே போய் விட்டதா.. என்னால் இனி எதுவுமே செய்ய முடியாதா". அவனுக்கு அழத்தான் முடிந்தது. உள்ளம் உடைந்து போனான்.

குறித்த நாளில் அவன் திருமணம் நடைபெற்றது. 'எக்ஸாம்' எழுதவே கம்பஸ் வந்தான். இனி அரவிந்தன் எந்த முகத்தோடு மனோகரியை சந்திப்பான்.

றூம்மேற் சிவா மூலம் மனோகரிக்கு தனது கையாலாகாத் தனத்தை தெரியப்படுத்தி இருந்தான். மனோகரி என்னதான் செய்வாள். நொறுங்கிப் போனாள்.

"ஏமாறப் பிறந்தவளா நான்.. நம்பிக்கை தானே காதல்..அது எனது தப்பா".ஓராயிரம் கேள்விகள் அவள் உள்ளத்தைக் குடைந்தன.

அரவிந்தனின் நம்பிக்கை துரோகத்தை தாங்க முடியாத மனோகரியை மனநோயாளியாக்கியது.

பொதுப்பட்டம் பெற்று வெளியேறிய மனோகரிக்கு இரத்தப் புற்று நோய் எமனாக வந்தது. வாழ வேண்டிய இள வயதில் இந்த உலகை விட்டே போய் விட்டாள்.


# விலைமனுக்களுக்கான அழைப்பு

**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை**

**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியிலுள்ள உள்ளக விளையாட்டரங்கின் முன்மொழியப்பட்ட புதுப்பித்தல் வேலைகள்**

01. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியிலுள்ள உள்ளக விளையாட்டரங்கின் முன்மொழியப்பட்ட புதுப்பித்தல் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி தலைவரின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**வேலையின் நோக்கம்**

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியிலுள்ள உள்ளக விளையாட்டரங்கின் முன்மொழியப்பட்ட புதுப்பித்தல் வேலைகள்

புதுப்பித்தல் வேலைகளில் தற்போதுள்ள மலசலகூடத்தின் தரை/சுவர் ஓடுகள் என்பவற்றை அப்புறப்படுத்துதல் மற்றும் மலசலகூட பிரதேசத்தின் நீர்க் கசிவைத் தடுத்தல் மற்றும் மீள் தரையோடிடுதல், தற்போது கூரை ஸ்லெப் மீதுள்ள நீர்க்கசிவுத் தடுப்பை அகற்றுதல் மற்றும் புதிய நீர்க்கசிவுத் தடுப்பை பிரயோகித்தல், பிரதான அரங்க கூரையின் நீர்க் கசிவு திருத்தவேலைகள், தற்போதுள்ள வேலியை அகற்றுதல் மற்றும் வளவைச் சுற்றி புதிய வேலியை அமைத்தல், நிறப் பூச்சு உட்பட தற்போதுள்ள படலையின் திருத்தவேலைகள் என்பன உள்ளடங்குகின்றன.

கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி வளவில் இது அமைந்துள்ளது. நிர்மாணக் காலம் 120 நாட்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு 46 மில்லியன் ரூபாவாகும். (வெட் இன்றி)

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

CIDA பதிவு தேவைப்பாடு

பதிவுத் தேவைப்பாடு

விசேடத்துவம் : கட்டிடங்கள்

தரம் : பிரதான ஒப்பந்தக்காரர்கள் - C4 மற்றும் C5

04. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கான தகைமைத் தேவைப்பாடுகளின் உள்ளடங்குபவை:

- கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி அளவானது ஆகக் குறைந்தது 130.0 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளானது இந்தச் செயற்றிட்டத்திற்காக பிரத்தியேகமாக 35.0 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
- கடந்த ஐந்து வருடங்களில் 36.0 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியான இதனையொத்த தன்மை மற்றும் சிக்கல் தன்மையான ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தின் நிர்மாண அனுபவம்

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவல்களை கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. 2024.05.28ஆம் திகதி முதல் 2024.06.16ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப.2.30 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ.இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

07. 2024.06.20ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் விலைமனுக்களை பதிவுத் தபாலில் தலைவர், சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, த.பெ. இல. 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

08. சகல விலைமனுக்களுடன் 2024-06-20ஆம் திகதி முதல் 2024-10-21ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் வகையில் 500,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 91 நாட்களாகும் (2024.06.20ஆம் திகதியிலிருந்து 2024.09.18ஆம் திகதி வரையுமானது)

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024.06.10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெ. இல. 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி, நிர்வாகக் கட்டிடத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி,**
**த.பெ. இல. 2211,**
**ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரல்
## Invitation for Expression of Interest - (EOI)
## துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

"இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவு செய்வதனை விளம்பரப்படுத்துவதற்கு" ஆர்வமுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகள் கோருகின்றன.

**தகுதி பெறும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான நன்மைகள்:**

வெற்றிகரமாக கப்பல்களை பதிவு செய்வது இலங்கைக் கொடியை விளம்பரப்படுத்தும் நிறுவனங்களுக்கு அல்லது தனிநபர்களுக்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து கவர்ச்சிகரமான நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

மேலதிகத் தகவல்களுக்கு, பின்வரும் இணைய தளங்களைப் பார்வையிடவும்:

http://www.dgshipping.gov.lk/
http://www.portmin.gov.lk/

தலைவர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு

adz.lk
it's what you want

The Trusted Market place for Buying & Selling

Contact Us:-
- 011 2 429 369
- 077 7 270 067
- 077 7 270 845
- adzsuo@lakehouse.lk

## அனுபவம் வாய்ந்த கனரக வாகன ஓட்டுநர் உடனடியாக தேவை

- அதிக சம்பளம் மற்றும் சலுகைகள்
- வயது 20 குறையாத 50 அதிகமாகாது இருத்தல்.
- கனரக வாகனங்கள் ஓட்டிய அனுபவத்துடன் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல்.
- தேவையான போது மேலதிக நேரம் வேலை செய்ய தயாராக இருத்தல்.
- தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்.
- நேர்முகதேர்வுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.

**0112175743-7**

**0766731419**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## பதவி வெற்றிடம்

### பயிலுநர் முகாமைத்துவ உதவியாளர்
### (TRAINEE MANAGEMENT ASSISTANT)

மேற்கூறிய பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த. சா/த பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்** : கணனி பரிச்சயம் மற்றும் ஆங்கிலத்தில் புலமை மேலதிக தகைமையாகும்.

**வயது** : 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**கொடுப்பனவு** : ரூபா 1200/- நாளாந்தம்

**வேலைவாய்ப்பின் நியதிகள்** : நிரந்தரம் / ஒப்பந்தம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.

வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள இடத்திலிருந்து வருபவர்கள் மற்றும் வைத்தியசாலை வேலைகளில் அர்ப்பணிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.
நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2024 ஜூன் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2024-05-22**

## பணிநீக்கம் பற்றிய பொது அறிவிப்பு



**திரு. தர்மராசா யதுர்ஷன்**

தே.அ.இல 932324342 V

விற்பனை பிரதிநிதி

மேற்கண்ட ஊழியர் அல்லது Transco Marketing (Pvt) Ltd இன் முன்னாள் ஊழியர் 06 திகதி மே மாதம் 2024 முதல் எங்கள் நிறுவனத்தின் ஊழியர் இல்லை என்பதை பொது மக்கள் மற்றும் இது தொடர்பான அனைத்து தரப்பினருக்கும் இவ்விளம்பரம் மூலம் தெரிவித்து கொள்கிறோம்.

மேலே குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து Transco Marketing (Pvt) Ltd உடன் தொடர்புடைய எந்தவொரு வணிகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது நடத்தவோ மேலே குறிப்பிட்ட நபர் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவும். இவர் பணிநீக்கம் செய்யப்பட்ட திகதிக்குப் பின் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் / பரிவர்த்தனைகளுக்கு Transco Marketing (Pvt) Ltd நிறுவனம் பொறுப்பேற்காது.

TRANSCO

Transco Marketing (Pvt) Ltd.
No.296, Main Street, Colombo 11.
info@transco.lk

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை

### வாகனத் தரிப்பிடத்தைப் புதுப்பித்தல் – போகம்பர விளையாட்டரங்கு

01. கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ நீங்கலாக 17 மில்லியன் ரூபா அண்ணளவான கிரயச் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் போகம்பர விளையாட்டரங்கு - வாகனத் தரிப்பிடத்தை புதுப்பித்தல் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

இந்த வேலையானது தரை வேலைகள், இன்டர்லொக் பதித்தல், கொங்கிறீட் வேலைகள், நிலச்சீராக்கம் மற்றும் ஏனைய தொடர்புடைய வேலைகளை உள்ளடக்கும். செயற்றிட்ட கால எல்லையானது 60 நாட்களாகும்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும். இப்பெறுகையின் மொத்தச் செலவின் மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016(ii) என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரயோகிக்கப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் C-5 மற்றும் C-6 ஆகிய வகுதிகளின் கீழ் பெருந்தெருக்கள் நிர்மாண வேலைகளுக்கான பிரதான ஒப்பந்தக்காரராக **CIDA** பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தேவைப்பாடுகள் பின்வருமாறு:

(அ) கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி ஆகக் குறைந்த பெறுமதியானது 40 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளானது இந்தச் செயற்றிட்டத்திற்காக பிரத்தியேகமாக 15 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவல்களை சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெறுகைப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. 2024.05.28ஆம் திகதி முதல் 2024.06.18ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3500.00 ரூபாவை (பெசேவ உட்பட) சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதிக்கு செலுத்திய பின்னர், போகம்பர விளையாட்டரங்கின் தலைவருக்கு மற்றும் கொழும்பு-13, சுகததாச உள்ளக விளையாட்டரங்கு, நிர்வாகக் கட்டிடம், பெறுகை அதிகாரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.

07. 2024.06.19ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் விலைமனுக்களை பதிவுத் தபாலில் தலைவர், சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபையின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

08. விலைமனுக்களுடன் 170,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (செல்லுபடியாகும் காலப்பகுதியானது 97 நாட்கள் - 2024.06.19ஆம் திகதியிலிருந்து 2024.09.04ஆம் திகதியன்று வரையும்)

09. விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 77 நாட்களாகும் (2024.06.19ஆம் திகதியிலிருந்து 2024.08.05ஆம் திகதிவரையுமானது)

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024.06.07ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கண்டி போகம்பர விளையாட்டரங்கில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

தொலைபேசி : 0112445677/**0706130199**
தொலைநகல் : 0112445675
மின்னஞ்சல் : **psnsca@yahoo.com**

* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER adz it's what you want Classified

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

WE ACCEPT

Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

## எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையை பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா ???

பிரதேச அபிவிருத்தி வங்கியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தொழில் வல்லுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### உதவி பொது முகாமையாளர் – நிதி முகாமைத்துவம்

**அடிப்படை தகைமைகள்**

1. குறைந்தபட்சம் பின்வருவனவற்றுள் ஒரு தொழில்வான்மை நிறுவனமொன்றின் அங்கத்துவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
   a) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL)
   b) அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் சங்கம் (ACCA)
   c) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் (CIMA)
   (அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது பட்டப்பின்படிப்பு அல்லது வங்கியியல் தொடர்பான தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும். )
2. 15 வருட முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். 03 வருட சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்துடன் வங்கி/ நிதித் துறையில் 08 வருடங்கள் காணப்படல் வேண்டும்
3. வயது 50 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

### உதவி முகாமையாளர் – நிதி

**அடிப்படை தகைமைகள்**

1. குறைந்தபட்சம் பின்வருவனவற்றுள் ஒரு தொழில்வான்மை நிறுவனமொன்றின் அங்கத்துவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
   a) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL)
   b) அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் சங்கம் (ACCA)
   c) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் (CIMA)
   (அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது பட்டப்பின்படிப்பு அல்லது வங்கியியல் தொடர்பான தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும். )
2. வங்கி அல்லது நிதித்துறையில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவம்.
3. தரவு பகுப்பாய்வு திறன் மற்றும் அறிக்கையிடல் திறமைகள் இருக்க வேண்டும்.
4. வயது 35 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

**ஊதியம்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி வங்கித்துறையில் காணப்படும், கவர்ச்சியான ஊதியம் மற்றும் சம்பள கொடுப்பனவுக்கு உரித்தாகுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

தயவு செய்து உங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்களுடன் careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2024 ஜூன் மாதம் 04 ஆம் திகதிக்கு முன்னர் மின்னஞ்சல் விடயப் பரப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்ய தவறும் அல்லது தவறான தகவல்கள் உட்படுத்தப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்கள் இவ் ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலிருந்து எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தல் மற்றும் இவ் ஆட்சேர்ப்பை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கே உரித்தாகும்.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி,
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk

## பெறுகை அறிவித்தல்

### கல்வி அமைச்சு

**திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு**

### தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பின்வருமாறு பயிற்சி உபகரணங்களை வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவைகளுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

1.

| உருப்படி விபரம் | மொத்த அளவு | விலைமனு இல. | விலைமனு பிணை தொகை (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடி |
|---|---|---|---|---|
| 1. ஹைப்ரிட் மோட்டார் கார் | 01 | IFB No: NAITA/P&S/PRO/TE-AETI (2024) | உருப்படி ஒன்றுக்கு ரூபா 60,000/- | 2024.09.20 |
| 2. மின்சார மோட்டார் கார் | 01 | IFB No: NAITA/P&S/PRO/TE-AETI (2024) | உருப்படி ஒன்றுக்கு ரூபா 50,000/- | 2024.09.20 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. விலைமனுதாரர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் மேலுள்ள உருப்படியை வழங்கல் மற்றும் நிறுவுதலில் பெற்ற இதனையொத்த அனுபவம் விண்ணப்பத்திற்கான தகுதியாக அமையும்.
4. ஆர்வமுடைய தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் ராஜகிரிய, வெலிகட, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, 971, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் வழங்கல்கள்) அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024.05.27 ஆம் திகதி தொடக்கம் 2024.06.19 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை NAITA வின் பெறுகைப் பிரிவில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். தொலைபேசி: 0112888782-5
5. வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு பதிவை பெற்றவராகவும் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தகுதி அளவுகோலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா நான்காயிரத்தை (ரூபா 4,000) செலுத்தி 2024.05.27 ஆம் திகதி தொடக்கம் 2024.06.19 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை ராஜகிரிய, வெலிகட, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, 971, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), உதவிப் பணிப்பாளருக்கு (நிர்வாகம் மற்றும் வழங்கல்கள்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். (மேலுள்ள முகவரியின் NAITA நிதிப் பிரிவுக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஜூன் 12 ஆம் திகதி மு.ப. 10.00க்கு ராஜகிரிய, NAITA தலைமை அலுவலகத்தில் (3ஆவது மாடி கேட்போர்கூடம்) நடைபெறும்.
8. கேள்வியின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 ஜூன் 20 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, ராஜகிரிய** என்ற முகவரிக்கு அசல் மற்றும் நகல் என வெவ்வேறாக பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொடுத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "NAITA விற்காக பயிற்சி உபகரணம்" என்று குறிப்பிடுதல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்/ விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு அவை ஏற்கப்படமாட்டாது.
9. 2024 செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்ட வடிவத்தில் இலங்கையின் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க, மேல் குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பெறுமதி ஒன்றுக்காக "விலைமனு பிணை" ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது 2024 செப்டெம்பர் 20 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
11. அந்த விலைமனுக்களுக்காக பல தேர்வுகள்/ மாற்று கூறுவிலைகள் ஏற்கப்படும்.
12. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் அனைத்து விலைமனுக்கள், விலைமனுவின் பகுதியை நிராகரித்தல் அல்லது ஒட்டுமொத்த கேள்விமனுவையும் ரத்துச் செய்யும் உரிமை பெறுகைக் குழு வசமானது என்பதோடு மேலும், பெறுகை தொடர்பான அனைத்து உரிமைகளையும் அவர்கள் வைத்திருப்பார்கள்.

தலைவர்
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை**
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, ராஜகிரிய.

2024.05.26

# வறக்காபொலை தமிழ்ச் சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஆறாவது ஆண்டு விழா






வறக்காபொலை தமிழ்ச் சமூக அபிவி ருத்தி மன்றத்தின் ஆறாவது ஆண்டு விழா, கொழும்பு மாகாவலி கேந்திர நிலையத்தில் அதன் தலைவி திருமதி கோமதி பாலசுப்பிரமணியம் தலைமையில் விமர்சையாக நடைபெற்றது.

கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இந்திய தூதரக அபிவிருத்தி ஆணையாளர் எல்டோஸ் மெத்தியு புன்னோஸும், கௌரவ அதிதியாக அரச சார்பற்ற நிறுவனத்தின் பதிவாளர் நாயகம் சஞ்சீவ விமலகுணரத்னவும், சிறப்பு அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜும் கலந்து கொண்டனர்.

வண. கலாநிதி சாஸ்திராபதி கல்கமுவ தம்மஸ்ரீ நாயக்க தேரோ, கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திரக்குருக்கள் பாபு சர்மா, அஸ்ஸெய்யத் கலாநிதி ஹசன் மௌலானா, வண.பிதா நிசான் குரே ஆகியோரின் சமய வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

வாழ்த்துரையை வறக்காபொலை ஸ்ரீ பத்திரகாளி அனுமான் கோயில் பிரதம நிர்வாகி சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் வழங்கினார்.

வறக்காபொலை தமிழ்ச் சமூக அபிவிருத்தி மன்ற பணிப்பாளர் சபை உறுப்பினர் பி. சுலக்சன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். நிகழ்வுகளை பி.கீர்த்தானா, எஸ்.லினாஷினி, கே.பிரதிக்ஷா, டி.செஷானி, ஆர்.எம்.கே.ஹர்ஷனி ஆகியோர் நிகழ்வுகளை மூன்று மொழிகளிலும் அழகாக தொகுத்து வழங்கினார்கள்.மன்ற உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

**தொகுப்பு
யுகவர்ஷிகா வசிகரன்**





அபிநயக்ஷேத்திர நடனப் பள்ளியும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமும், இணைந்து நடத்திய "கச்சேரி மேளா 3" நிகழ்வு கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை, இந்திய கலாசார நிலையத்தின், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலாசூரி திவ்யா சுஜேனின் மாணவி செல்வி பிரிதிகா சஞ்சீஸ்குமாரின் பரதநாட்டிய ஆற்றுகை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி அதிபர் அருந்ததி இராஜவிஜயனுக்கான கௌரவத்தை பெற்றோர் வழங்குவதையும், மாணவியின் சிறப்பு நடனத்தோற்றத்தையும் கலந்துகொண்ட சகமாணவிகள் பிரிதிகா சஞ்சீஸ்குமாரை வாழ்த்துவதையும் காணலாம்.






பாலகிருஷ்ணன் தம்பதிகளின் புதல்வியும், நிருத்ய நர்த்தனாலய நடனப்பள்ளியின் இயக்குனர் சாந்தி கணேசராஜாவின் மாணவியுமான கவிதாஞ்சலி பாலகிருஷ்ணனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த (19)ஞாயிறுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் நுவான் கோதாகொடவும், கௌரவ விருந்தினராக நர்த்தனாலய நடன இயக்குனர் யசோதரா விவேகானந்தனும், நாட்டிய கலா மந்திரின் நிறுவனரும் இயக்குநருமான திருமதி கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனும் கலந்துகொள்ள, சிறப்பு விருந்தினர்களாக வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், நல்லாயன் பெண்கள் மகா வித்தியாலயம் முன்னாள் அதிபர் அருட் சகோதரி சிறியா புஷ்பம், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கவிதாஞ்சலியின் நடனத்தையும், அதிதிகள் கௌரவிக்கப்படுவதையும். மாணவிக்கான கௌரவத்தை ஆசிரியர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# அமீரக பல்கலைக்கழகத்தில் தமிழக மாணவி முதலிடம்!

## துணைவேந்தர் பாராட்டு



ஐக்கிய அரபு அமீரகம் அல் அய்ன் நகரில் இயங்கிவரும் அரசு U A E U பல்கலைக்கழக்தில் மருத்துவ உளவியல் முதுகலை பட்ட மாணவியான ரிஃபா பாத்திமா, அமீரகத்தில் முதல் மாணவியாக தேர்ச்சிபெற்றார்.

அதற்கான சிறப்பு சான்றிதழ் கடந்த ஏப்ரல் 24 அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டது, முதலிடம் பெற்ற மாணவி ரிஃபா வை துணைவேந்தர் காலிப் அலி அல்ஹத்தாமி பாராட்டி கௌரவித்தார்.

இந்த ஆராய்ச்சி கற்கையில் மனித மூளையின் வேறுபாடுகளை பகுப்பாய்தல், கோளாறுகள், தன்மைகள் போன்றவற்றை கண்டறிதல் மற்றும் சரி செய்தல் மேலும் செயற்கை நுண்ணறிவு அறிவியல் (artificaial Inteligence science) மூலமாக உளவியல் பிரச்சினைகளுக்கு எளிதான தீர்வுகாணுதல் ஆகியவை அடங்கும்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியை சேர்ந்த இவர் இதேபோல் இளங்கலை படிப்பிலும் அமீரகத்தில் முதல் மாணவியாக தேர்வானார். அதற்காக அமீரக அரசு இவருக்கு பத்தாண்டிற்கான கோல்டன் விசா வழங்கி கௌரவித்துள்ளது. இவரது இருசகோதரிகளும் படிப்பில் முதலிடம் பெற்று அரசின் கோல்டன் விசா பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது தந்தை செய்யது அபுதாஹிர் துபாய் நகரில் சொந்தமாக நிறுவனங்களை நிர்வகித்து வருவதோடு சமூக சேவைகளையும் செய்துவருகிறார். முதன்மை மாணவியாக வந்த ரிஃபா கருத்துக் கூறும்போது, "இது மிகுந்த மகிழ்ச்சியான தருணம்.

எனது படிப்பு, திறமை முதலியவற்றை உலக பெண்களின் முன்னேற்றத்திற்காக, குறிப்பாக பெண் குழந்தைகள் அவர்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல்களை கண்டறிந்து அதிலிருந்து வெளியேறுவதற்கும், மாணவிகள் மனதளவில் ஊக்கம்பெற்று கல்வி, பொருளாதாரம், சமூக மேம்பாடு போன்றவற்றில் அக்கறை செலுத்துவதற்கும் என் அறிவை முழு அர்ப்பணிப்புடன் செயல்படுத்துவேன்.

கல்வியால் நான்பெற்ற பலனை மானுடம் பயன்பெற செய்வதே என் இலக்கு" என்கிறார்.

# பேராசிரியர் சி.பத்மநாதனின் "ஆதிகால யாழ்ப்பாணம்" இன்று வெளியீடு



பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய ஒரு மறைந்து போன நாகரிகத்தின் தரிசனங்கள் “ஆதிகால யாழ்ப்பாணம்” என்ற நூலின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இன்று 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஜனாதிபதி சட்டத்தரணி க.கனக ஈஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் செல்வி. பிரியங்கா ஆன் பிரான்சிஸ் தமிழ் வாழ்த்தினை பாட, வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விக்குழு செயலாளர் த.இராஜரட்ணம் நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் சட்டத்தரணி நடராஜா காண்டீபனும், நூல் அறிமுகவுரையை பேராசிரியர் அ.சர்வேஸ்வரனும் நிகழ்த்துவார்கள்.

நூல் பற்றிய கருத்துரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன், வண.கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார், பேராசிரியர் பரமு. புஸ்பரட்ணம் ஆகியோர் வழங்குவார்கள்.

ஏற்புரையை நூலாசிரியர் பேராசிரியர் சி. பத்மநாதன் வழங்க. நன்றியுரை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் க.இரகுபரன் வழங்குவார்.

# வெற்றிக் கனியை பறிக்கப்போவது யார்?

## பா.ஜ.க.வா? காங்கிரஸ் கூட்டணியா?

**இந்தியா ஒரு நோக்கு**
**வாராந்த அலசல்**
**நந்தவனம் சந்திரசேகரன்**



இந்தியாவின் மக்களவைத் தேர்தலுக்காக 7 கட்டமாக நடத்தப்பட்ட தேர்தலில் 5 கட்ட தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. வெற்றி வாய்ப்பு யாருக்கு என்பதை உலகமே உற்று நோக்கி வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி நடந்து முடிந்த முதல் கட்ட தேர்தலில் 102 தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் 66.24 விகித வாக்குகள் பதிவாகியுள்ளன. 26ஆம் திகதி நடந்த 2ஆவது கட்டத் தேர்தலில் 88 தொகுதிகளில் 66.71 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

மே மாதம் 7ஆம் திகதி 3ஆவது கட்டமாக தேர்தல் நடந்த 94 தொகுதிகளில் 65.68 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன மே.13ஆம் நடந்த 4ஆவது கட்டமாக 96 தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் 69. 16 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன மொத்தமாக பார்க்கும்போது நடந்து முடிந்த 4 கட்ட தேர்தங்களில் 67 வீத வாக்குகள் பதிவாகி உள்ளது. இந்தியாவில் மொத்தம் 97 கோடி வாக்காளர்கள் உள்ளனர். முதல் 4 கட்டங்களில் நடந்த தேர்தலில் 45 கோடி பேர் வாக்களித்து இருக்கிறார்கள் மீதமுள்ள 5,6,7 ஆம் கட்ட தேர்தல்களிலும் மக்கள் தேர்தல் விழிப்புணர்வுடன் வாக்களித்திருப்பார்கள் என்றே அரசியல் கட்சிகள் நம்புகின்றன.

கடந்த கால தேர்தல்களை விட இந்த தேர்தலில் தனிமனித தாக்குதல் கூடுதலாகவே இருந்தது என்றே சொல்லலாம். தேர்தல் ஆணையம் கண்டிக்கின்ற அளவில் தாக்குதல் சூடாக இருந்தது என்பதையும் காண முடிந்தது. காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணியை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகளை பா.ஜ.க. தலைவர்கள் ஒவ்வொரு மேடையிலும் முழங்கி வருகிறார்கள். ஊழல்களின் தாய் காங்கிரஸ் கட்சி என்றும் இந்தியா கூட்டணி முற்றிலும் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்றும் 21ஆம் நூற்றாண்டில் இந்தியா, இந்தியா கூட்டணியின் பாவங்களுடன் முன்னேற முடியாது என்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு, காங்கிரஸ் கட்சி சரியான பதிலடி கொடுக்க முடியாமல் திணறுகிறது என்பதையும் மறுக்க முடியாது.


ஏழைகளின் செல்வத்தை எக்ஸ்ரே செய்து திருடுவது தான் காங்கிரஸ் கட்சியின் கொள்கை. வணிகத்தொழிகள், தொழிலதிபர்கள், முதலீடுகளை எதிர்க்கிறார்கள். மக்களின் அடிப்படைகளை காங்கிரஸ் பறித்தது. மகாத்மா காந்தியின் சித்தாந்தத்தை காங்கிரஸ் மறந்து ஒரு குடும்பத்தை மேம்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. காங்கிரசும் அதன் கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்து நாட்டின் 60 ஆண்டு காலத்தை சீரழித்து 3 முதல் 4 தலைமுறையின் வாழ்க்கையை சீரழித்து விட்டது என்ற பா.ஜ.க.வின் குற்றச்சாட்டுகளால் 5ஆம், 6ஆம், 7ஆம் கட்ட தேர்தல்களில் பா.ஜ.க.வுக்கான வெற்றிவாய்ப்பில் முன்னேற்றம் இருப்பதாகவே தெரிகிறது.

அரசியல் விமர்சகர் பிராசாந்த் கிஷோரம் இதை உறுப்படுத்தும் விதமாக தனது கணிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தியாவில் நரேந்திர மோடி 3 ஆவது முறையாக ஆட்சி அமைப்பார் என்று உறுதிபட கூறும் அவர், 2019ஆம் ஆண்டில் கிடைத்த அதே எண்ணிக்கை அல்லது அதை விட சற்று அதிகமான எண்ணிக்கையில் பா.ஜ.க மூன்றாவது முறையாக ஆட்சியமைக்கும். பா.ஜ.க.வுக்கு சவால் விடும் அளவில் இங்கே போட்டியாளர்கள் இல்லை.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக பெரிய அளவிலான கோப அலை இங்கே இல்லை. ஆதலால் பா.ஜ.க. வெற்றி பெற அதிக வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.






கணித்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சி 6ஆவது, 7ஆவது தேர்தலகளில் பலவீனம் அடைந்துள்ளமை அதன் போக்கில் தெரிகிறது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்கவிடாமல் செய்வோம் என்று மட்டுமே கூறி வருகிறார்.

அது எவ்வாறு என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. சமூகத்தில் வெறுப்பையும், பிரிவினையையும் பரப்பும் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்திற்கு எதிராகவும், அவர்களுக்கு எதிராகவும் மக்கள் இப்போது போராடுகிறார்கள்.

ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பை காப்பாற்றுவதற்காகவும் போராடுகிறார்கள். இதனால் மக்கள் தங்கள் ஆதரவை காங்கிரஸ் கட்சிக்கு அளித்து வருகிறார்கள் என்று கார்கே கூறுவது எந்தளவுக்கு மக்களிடம் தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்று பார்த்தால் பா.ஜ.க.வை முழுமையாக 24 மாநிலங்களில் தேர்தல் நடந்து முடிந்துள்ளதை கணக்கெடுத்து பா.ஜ.க. தலைவர்கள் ஆய்வு செய்துள்ள வரையில், வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளில் 370 இடங்களில் பா.ஜ.க.வுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதாக கண்டறிந்துள்ளனர். 6ஆவது, 7ஆவது கட்டமாக நடந்து முடிந்துள்ள தேர்தல்களிலும் பா.ஜ.க.வுக்கு வெற்றிவாய்ப்பு இருப்பதாகவும் தோற்கடிக்க காங்கிரசிடம் சரியான வியூகம் இல்லை என்பதும் உண்மையே. பா.ஜ.க.வுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியால் பலமான எதிர்ப்பலையை உண்டாக்க முடியவில்லை. இந்தியா கூட்டணியில் பிரதமராகும் தலைவர் ஒருவர் கூட இல்லை, என்ற உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் குற்றச்சாட்டுக்கும் காங்கிரசால் பதில் சொல்ல முடியவில்லை.

வெற்றி யாருக்கு என்பது ஜூன் 4ஆம் திகதிதான் தெரியும். ஆனால், பா.ஜ.க கூட்டணியினர் தாங்கள் வெற்றி பெற்று விட்டதாகவே முழங்கத் தொடங்கி விட்டனர். பிரதமர் தன்னை கடவுள் தான் அனுப்பி வைத்தார் என்று தனியார் தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்கியுள்ளதும் நாடும் முழுவதும் பெரிய சர்ச்சையாகியிருக்கிறது.

பிரதமர் நானே கடவுள் என்று சொல்ல வருகிறாரா? இது ஆணவத்தின் வெளிப்பாடு அல்லவா என்று சமூக ஊடகங்களில் வினா எழுப்பப்பட்டு வருகிறது.

மக்கள் பணி செய்யவே கடவுள் என்னை அனுப்பி வைத்துள்ளார் என்பதுதான் பிரதமரின் கருத்தாக இருந்தாலும், இது ஆணவப் பேச்சாக எடுத்துக் கொள்ளப்படும் என்று முன்யோசனையுடனும் அவர் பேசியிருக்க வேண்டும்.

ஏனென்றால் வெற்றி பெறுவதற்கு முன்பாகவே இவ்வாறான பேச்சுகள் வரும் போது ஒரு வேளை வெற்றி பெற்று விட்டால் இன்னும் என்ன மாதிரி எல்லாம் பேசுவார்களோ என்ற விமர்சனத்தையும் பா.ஜ.க. தலைவர்கள் எதிர்கொள்ள தேரிடும்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு

என்று திருவள்ளுவர் சொல்லவது போல, காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும்.

காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டு துன்புறுவர். என்பதை பா.ஜ.க. தலைவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வெற்றி என்பதை தலையில் வைத்துக் கொண்டாடலாம். ஆனால் அது தலைக்கனமாக மாறிவிடக் கூடாது.

# படித்ததும் பகர்வதும் 192



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### எதிர்காலத்துக்காக சேமிப்போம்!



ஒவ்வொருவரும் தவறாது ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய சிறந்த பழக்கம் 'சேமிப்பு' ஆகும். பல விடயங்களிலும் சேமிப்பு என்பது அவசியமாயினும் பணச் சேமிப்பே முக்கியத்துவம் பெறுகிறது. சேமிப்பு ஒருவரை சுதந்திரமானவராக மாற்றும்! தன்னம்பிக்கையை வளர்க்கும்!! அவரது எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்யும்!!!

பணத்தைச் சேமித்து வைக்கும்போது எதிர்காலத்தில் நீங்கள் செய்ய நினைக்கும் விடயங்கள் உள்ளிட்ட, எதிர்பாராத விதமாக ஏற்படும் செலவினங்கள் சிரமமின்றி நிறைவேற்றிக் கொள்ள வழிவகுக்கும். எதிர்கால வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கும், சிரமமான நேரங்களைச் சமாளித்துக் கொள்வதற்கும் எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கும் நல்ல சேமிப்பு நிச்சயமாக உதவிடும்.

ஒருவர் சேமிப்பை ஆரம்பிப்பதற்கு முன்னர், தான் ஒவ்வொரு விடயத்திலும் எவ்வளவு செலவு செய்கின்றார் என்பதை கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். பலருக்கு இது குறித்து சரியான எண்ணம் இருக்காது. ஆனால், சரியான முறையில் சேமிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கு, அவரது பணம் எந்த வழியில் செல்கின்றது என்பது பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும். தனது பணம் எங்கு செல்கின்றது என்பது பற்றி தெரிந்து கொண்ட பின்னர், அதிலிருந்து, தேவையற்ற செலவினங்களை குறைத்துக் கொள்ள முடியும். குறிப்பிட்ட சில தேவைகளுக்காக, அதிகளவு பணம் செலவிடுகின்றீர்கள் என்றால், அதற்கான செலவினங்களை இயன்ற வழிகளில் குறைக்க வேண்டும். இவ்வாறு அதிகளவு செலவிடப்படும் பணத்திலிருந்து ஒரு தொகையை சேமிக்க முயற்சிக்க வேண்டும்..

ஒரு செலவினத்தை மேற்கொள்ள முன்னர், அது அவசியமானதா? தவிர்க்க முடியாததா? என்பது பற்றி சிந்தித்தல் அவசியம். அது தமது சக்திக்கு மீறிய செலவினமாக இருந்தால், அல்லது அது தேவையற்றதாகக் கொள்ளக் கூடியதாக இருந்தால் அந்த செலவினத்தை நிறுத்திவிடுங்கள். அடிக்கடி உணவுக்காக வெளியிடங்களுக்கு செல்வதையோ, அளவுக்கு மீறிய விதத்தில் செலவிடுவதையோ, ஆடம்பரமாக செலவு செய்வதையோ கட்டாயமாக குறைத்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் எதிர்பாராத பெருந்தொகையை சேமிக்க முடியும். ஏதாவது ஒரு நோக்கத்துக்காக என, உதாரணமாக சுற்றுலாவுக்கு செல்லல் அல்லது ஏதாவது ஒரு பொருளை புதிதாகக் கொள்வனவு செய்தல் என்பவற்றுக்காக என்று சேமித்தால், அந்தத் தேவை நிறைவேறிய பின்னரும் கூட, குறுகிய கால அடிப்படையிலான அத்தகைய குறிக்கோள்களுக்காக சேமித்த பழக்கத்தைக் கைவிட்டுவிடாமல், தொடர்ந்து சேமிப்பதைத் தொடர வேண்டும். பலர், முதலில் செலவுகளைச் செய்த பின்னரேயே, மிகுதியாக உள்ளதை சேமிப்பது பற்றி சிந்திகின்றனர். இதனாலேயே, 'சேமிப்பு' என்ற விடயத்தில், பலரும் தோல்வியடைந்து விடுகின்றனர். சேமிப்பின் அடிப்படை, மிகப் பெரிய இரகசியம் என்பது, செலவழிப்பதற்கு முன்பே திட்டமிட்டு சேமிப்பதாகும். இவற்றை நன்கு சிந்தித்து இன்றைய செலவுகளை கட்டுப்படுத்தி அல்லது செம்மைப்படுத்தி, வீண் செலவுகளை தவிர்த்து சேமிக்கத் தொடங்கினால், நாளை நல்லதாக அமையும். உணர்ந்து சேமிப்போம். எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம்.

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### வலம்புரி கவிதா வட்டம் – '100'

"வகவம்" எனும் வலம்புரி கவிதா வட்டத்தின் 100ஆவது கவியரங்கம், இன்று 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. அதிலே 122 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய கவிதைத் தொகுப்பும் வெளியிடப்படுகிறது.. 'வகவம்' முதன் முதலாக 1981ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி தோற்றம் பெற்றுள்ளது. "தரணியெல்லாம் எங்கள் தாயகமாம்" எனும் கோட்பாட்டுடன் உருவாக்கப்பட்டது, கவிஞர்கள் தாஸிம் அகமது, நாகூர்கனி, கவின்கமல், கலைக்கமல் உட்பட்டோர் இதன் ஆரம்ப கர்த்தாக்களாக இருந்துள்ளனர். சிரேஷ்ட கவிஞர் நாகூர்கனி தலைமையிலேயே முதல் வகவ கவியரங்கம் நடைபெற்றுள்ளது.





தமிழ் முஸ்லிம் கவிஞர்களின் கூட்டமைப்பாக, சிறப்பாக இயங்கி வந்து, 1982 டிசம்பர் 28 ஆம் திகதி முதலாவது ஆண்டு விழாவையும் கொண்டாடியுள்ளது. ஆயினும் 1983இல் நாட்டில் ஏற்பட்ட ஜுலை இனக் கலவரத்தினால் இதன் செயற்பாடுகள் முற்றாக தடைப்பட்டு1995இல் மீளவும் இயங்கத் தொடங்கியுள்ளது. ஆயினும் அதன் பின்னர் இதன் செயற்பாடு முழுமையாக தடைப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் திகதி வகவம் மீண்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, நஜ்முல் ஹுசைனை தலைவராகவும், முர்ஷிதீனை செயலாளராகவும், வரதராணியை பொருளாளராகவும், மேமன்கவியை அமைப்பாளராகவும் கொண்டு புதிய உற்சாகத்துடனும், புதிய உத்வேகத்துடனும் இயங்கத் தொடங்கியுள்ளது. பின்னர் 'ஈழகணேஷ்' தருமலிங்கம் பொருளாளராகவும், தனபாலன் அமைப்பாளராகவும் பொறுப்பேற்றுள்ளனர். 2013இலிருந்து இன்று வரை, இடைவிடாது மாதாந்தம் பௌர்ணமி தினத்தன்று வகவ கவியரங்கங்கள், வெவ்வேறு கவிஞர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன.




இப்போது சாதனைக் கவியரங்கமாக, 100ஆவது கவியரங்கம் இடம் பெறுவது தமிழ் கவிஞர்களுக்கும், கவிதைகளை விரும்புவோருக்கும், இலக்கிய உலகுக்கும் பெரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இக்காலப்பகுதியில் பல கவிஞர்களதும், கலைஞர்களதும் பெயர்களில் அரங்குகள் அமைக்கப்பட்டு கவியரங்கம் இடம் பெற்றமை, பல கவியரங்குகளில் முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக பங்குபற்றியமை, காலஞ்சென்றவர்கள் அவ்வப்போது நினைவு கூரப்பட்டமை போன்ற பல விடயங்கள் இடம் பெற்றுள்ளமை விசேடமாக குறிப்பிடத்தக்கவையாகும். கொரோனா பெருந்தொற்று காலத்தில் உலகமே அடங்கியிருந்த பொழுதும் கூட இணைய வழியூடாக Zoom தொழினுட்பத்தின் மூலம் வகவ கவியரங்குகள் நடாத்தப்பட்டமை விசேட அம்சமாகும். இத்தகைய இணைய வழியில் நடாத்தப்பட்ட உலகின் முதலாவது கவியரங்கம் 'வகவத்தின் கவியரங்கம்' என்றால் மிகையல்ல.

கொழும்புக்கு வெளியே மினுவங்கொடையில் வகவத்தின் கவியரங்கம் ஒன்று மிக வெற்றிகரமாக நடைபெற்றமையும் விசேடமாக பதிவுசெய்ய வேண்டிய விடயமாகும். பிரபல மூத்த கவிஞர்களுடன் சிறிய கவிஞர்கள் வரை நூற்றுக்கணக்கான கவிஞர்கள் கவிதை பாடிட சந்தர்ப்பம் வழங்கிய, வகவம் பௌர்ணமி கவியரங்குகள் சாதனை படைத்துள்ளதை எவராலும் மறுக்க முடியாது.

100ஆவது கவியரங்கின் போது 122 வகவ கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய கவிதைத் தொகுப்பும் வெளியிடப்படுவது வகவ வரலாற்றின் சிறப்பானதொரு மைல் கல்லாகும். கவிதைகள் தொடர்பான எல்லா விடயங்களிலும் சாதனைகள் படைத்து வெற்றிநடை போடும் வகவத்தை தோற்றுவித்தவர்கள், வளர்த்தெடுத்தவர்கள், இப்போதும் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்கின்ற தலைவர் நஜ்முல் ஹுசைன், செயலாளர் முர்ஷிதீன், பொருளாளர் 'ஈழகணேஷ்' தருமலிங்கம், அமைப்பாளர் தனபாலன் உட்பட்ட நிருவாகக் குழுவினர், அவர்களுக்கு நேசக்கரம் நீட்டி ஆதரவளிப்போர், மாதாந்தம் கலந்து கொள்வோர், கவிதைகள் பாடுவோர் என்ற அனைத்து தரப்பினரையும் நாம் பாராட்டி மகிழ்கிறோம். வகவம் வெற்றிப்பாதையில் தொடர்ந்து வீர நடை போட உளமார வாழ்த்துகிறோம்.

## வாசித்ததில் வசீகரித்தது

### பேராதனை பல்கலைக்கழக 'அக்பர் மண்டபம்'



{பேராதனை பல்கலைக்கழகத்தில் 'அக்பர் மண்டபம்' மிகவும் பிரசித்தமானது. இந்த பெயரை இம்மண்டபத்துக்கு வைப்பதற்கு முயற்சி செய்தவர் காலஞ்சென்ற கலாநிதி எஸ்.எம்.ஏ. ஹஸன் என்பது பலரும் அறியாத விடயம். பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் எழுதிய "எஸ்.எம்.ஏ. ஹஸன் தற்கால முஸ்லிம் சமூக பண்பாட்டியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம்" என்ற நூலில் அவர் எழுதியுள்ளதை இங்கே தருகிறோம்.}

அக்பரின் பெயர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மண்டபம் ஒன்றில் பொறிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளை நிறைவேற்ற ஹஸன் வை.எம்.எம்.ஏ.மூலம் பல முயற்சிகளை மேற்கொண்டார். 1957களில் திருகோணமலையிலும், கொழும்பிலும் நடந்த அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க மாநாட்டில் ஹேந்தெனிய வை.எம்.எம்.ஏ கிளையின் சார்பில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஏதாவது ஒரு மண்டபத்திற்கு அக்பரின் பெயர் இடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஹஸன் முன்மொழிந்தார். அப்போது பேராதனைப் பல்கலைக்கழக செனற் சபையில் ஏ. எம். ஏ. அஸீஸ் அங்கத்தவராக இருந்ததால் இது நிறைவேறும் என ஹஸன் எதிர்பார்த்தார். ஆனால் அது நடக்கவில்லை. மீண்டும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் நடந்த கல்வி மாநாட்டில் இப்பிரச்சினை ஆராயப்பட்டது. அங்கு இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஹஸன் பேசினார். முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், செனட்டர் மசூர் மௌலான, மாத்தளை சாஹிராக் கல்லூரி அதிபர் எஸ்.எச்.ஏ. வதூத், கண்டி முஸ்லிம் வாலிபர் சங்கத்தலைவர் ஐ.எம்.யூசுப் ஆகியோர் ஹஸனின் "அக்பர் மண்டபப் பிரேரணையை ஆதரித்துப் பேசினர். பிரேரணை நிறைவேற்றப்பட்ட போதும் அதுவும் வெற்றியளிக்கவில்லை. கொழும்பு இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் தரவில்லையா? என்ற கேள்வி எழுந்தாலும், ஹஸன் தமது முயற்சியைக் கைவிடவில்லை. மகஜர் ஒன்றைத் தயாரித்து பல்கலைக்கழக உபவேந்தர் செர்.ஐவர் ஜென்னிங்ஸ்ஐ நேரடியாகச் சந்தித்துக் கையளிப்பது என்று ஹேந்தெனிய வை.எம்.எம்.ஏ. கிளை தீர்மானித்தது. கண்டி வை.எம்.எம்.ஏ. தலைவர் ஐ.எம். யூசுப் தலைமையில் ஹஸனும் பேராதனை வை.எம்.எம்.ஏ. செயலாளர் ஐ.எம்.தாஜுதீனும் முன்னர் கேட்டுப் பெற்றுக்கொண்ட நேரத்திற்கு அமைய உபவேந்தரை அவரது காரியாலயத்தில் சந்தித்தனர். ஹஸன் மகஜரை உபவேந்தரிடம் கையளித்தார். உபவேந்தர் மகஜரைப் படித்துப் பார்த்துவிட்டு தமது கருத்துக்களைக் கூறினார். அப்போது ஐவர் ஜென்னிங்ஸ் கூறியவற்றை ஹஸன் தமது வார்த்தைகளில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"நான் மகஜரைக் கையளித்தேன். அதனை வாசித்த உபவேந்தர் எமக்குக் கூறியது எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நீங்கள் கேட்பது அக்பர் ஞாபகார்த்தமாக ஒரு மண்டபம். ஆனால் அக்பர் இல்லாவிட்டால் இங்கு ஒரு பல்கலைக்கழகமே அமைந்திருக்காது. எனவே, It should be called 'Akbar Campus' என்று கூறிமுடித்த அவர் அப்போது கட்டப்பட்டுக் கொண்டிருந்த மண்டபத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த நெல் என்ற பெயருடன் அக்பர் என்பதையும் சேர்த்து "அக்பர் நெல்மண்டபம்" எனப் பெயர் வைப்பதாக உறுதியளித்தார். பின்னர் அவ்வாறே நெல்மண்டபம், "அக்பர் நெல் மண்டபமாக"ப் பெயரிடப்பட்டது."

இன்று பேராதனை பல்கலைக்கழகத்தில் 'அக்பர் மண்டபம்' (Akbar Hall) என்பது பிரசித்தமான பெயராக மாறியுள்ளது.

## நொறுக்குத் தீனி

### அதிகம் தூங்கும் இலங்கையர்!



உலகில் அதிக நேரம் உறங்கும் நாடுகளின் தரவரிசையில் இலங்கை 3ஆவது இடத்தை பிடித்துள்ளது. அதன்படி, இலங்கையில் வாழும் மக்கள் சராசரியாக இரவில் 8 மணி நேரம் உறங்குவதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலகில் உள்ள 60 நாடுகளில் வாழும் மக்களின் சராசரி தூக்கத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு, உலகில் எந்த நாட்டில் மக்கள் ஒரு இரவில் அதிக அளவு தூங்குகிறார்கள் என்பதைக் கண்டறிய இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு இரவும் சராசரியாக எந்த நகரத்தில் மக்கள் அதிகம் உறங்குகிறார்கள் என்பதை கண்டறியவும் ஐக்கிய இராச்சியத்தின் 40 நகரங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பல்கேரியா (Bulgaria), அங்கோலா (Angola) மற்றும் இலங்கை (Sri Lanka) ஆகிய நாடுகள் உலகில் அதிக நேரம் உறங்கும் நாடுகளின் தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன. அத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் நகரங்களின் தரவரிசையில் நார்விச் (Norwich) நகரம் முதலாமிடத்தை பெற்றுள்ளது.

## கொஞ்சம் சிரிங்க!

மனைவி (கோபமாக): யார் முட்டாள்? நீங்களா? நானா?

கணவன் (அமைதியாக): எல்லோருக்குமே தெரியும் நீ புத்திசாலி என்று... ஆதலால், கண்டிப்பாக நீ ஒரு முட்டாள் கணவனை தேர்ந்தெடுத்திருக்க மாட்டாய்...



இப்பகுதியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸப் (WhatsApp): 0777314207

# துப்பாக்கி முனையில் வந்ததெப்படி இரத்தக்கறை அதைக் கண்டுபிடிக்க முடியாதோ கதை முடியும் வரை!





ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

சிந்துஜன் கேட்ட கேள்விக்கு,

உடனே பதில் சொல்லாமல்,

சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்து விட்டு,

"வரப்போகிறவன் உண்மையிலேயே வேலைக்காரன் இல்லை !" என்றார்.

"என்னது வேலைக்காரன் இல்லையா?"

அதிர்ந்து போய் கேட்டான் சிந்துஜன்.

"ஆமாம் வேலைக்காரனைப் போல் மாறுவேடத்தில் வரும் இரகசிய பொலிஸ் காரர்!"

"என்னது பொலிஸ்காரரா "

"ஆமாம் ஏன்?"

"இல்ல இங்கதான் ஒரு பொலிஸ்காரர் இருக்கிறாரே அப்புறம் எதுக்கு இன்னுமொரு பொலிஸ்காரர்?"

"குறிப்பாக அவர் இங்கே வருவது துர்காவின் பாதுகாப்பிற்காகத்தான். என்னால் இங்கே இருந்து அவளை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்க முடியாது! அதனால் தான் இந்த ஏற்பாடு!"

"சிந்துஜன் ஏதோ சொல்லுவதற்கு வாய் திறந்த போது, யாரோ வாசலில் வந்து நிற்பது தெரிந்தது!

"யார் வேலனா... ம்... உள்ளேவா வேலா"

அடுத்து,

சிரஞ்சீவி சொன்ன புதிய வேலைக்காரன் வேலன், உள்ளே வந்தான்.

"ம் சிந்துஜா இதுதான் நான் சொன்ன அந்த வேலைக்காரன் வேலு!"

சிந்துஜனுக்கு அவனை அறிமுகப்படுத்தி வைத்தார் சிரஞ்சீவி, பிறகு,

வேலனின் பக்கம் திரும்பி,

"ம் வேலா உனக்கு எனது அறைக்குள்ளேயே ஒரு கட்டில் போடச் சொல்லியிருக்கிறேன். அதனால் நீ என்னுடனேயே தங்கிக் கொள். பகல் முழுவதும் நீ நன்றாகத் தூங்கலாம். ஆனால் இரவு முழுவதும் விழித்திருந்து துர்காவைப் பாதுகாக்க வேண்டும். பக்கத்து அறையில் தான் அவள் தங்கியிருக்கிறாள். இனி துர்காவிற்கு ஏதாவது நடந்தால் அதற்கு நீதான் பொறுப்பு!"

"ஏன் சேர் துர்கா மெடத்துக்கு அப்படி ஏதாவது நடந்துவிடும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?"

வேலன் இப்படிக் கேட்டதும் சிரஞ்சீவி,

அவனை நிமிர்ந்து பார்க்க

ஆமாம் என்பதைப் போல் தலையை ஆட்டினார்.

மறுநாள்,

அதிகாலையிலே எழுந்து கொண்ட சிரஞ்சீவி, சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு கொழும்புக்கு வந்து, அங்கிருந்து, பண்டாரவளையை நோக்கிப் பயணமானார். புகையிரதம் பண்டாரவளையை அடைந்தபோது, இரவாகி விட்டதால், இருவரும் ஓட்டல் விடுதி ஒன்றில் அறை எடுத்து தங்கி இருந்து,

மறுநாள் காலையிலேயே வாடகைக் கார் ஒன்றில், தியதலாவைக்குச் செல்லும் பாதை வழியாக, துப்பாக்கி முனையைத் தேடிச் சென்றார்கள். இதமான தென்றல் பதமாக வீசிக் கொண்டிருக்க, மலையகத்தின் இயற்கைக் காட்சிகளை இருவரும் ரசித்தபடி சென்றார்கள். இப்போது, மலைகள் நிறைந்த ஒரு பகுதிக்கு கார் வந்துவிட்டது!

இரண்டு மலைகளுக்கும் நடுவால் காரைத் திருப்பி திருப்பி ஓட்டினான் டிரைவர். சற்றுத் தொலைவில் துப்பாக்கி முனையைப் போலிருந்த ஒரு மலை தெரிந்தது.

"சேர் நீங்கள் அந்த மலையில் இருக்கும் காணியை விலைக்கு வாங்கப் போகிறீர்களா?"

இதுவரையில் அமைதியாக இருந்த டிரைவர் கேட்டான்.

"ஏன் அப்படி கேக்குறீங்க?"

"இல்ல சேர் நீங்க போற அந்த இடம் ரொம்பவும் பயங்கரமான ஒரு இடம். அந்த மலைப் பகுதியில் பேய்களும் ஆவிகளும் இருப்பதாக இந்தப் பகுதியில் உள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள்!

"இந்த இடத்திற்கு சொந்தக்காரன் யார்?"

அந்த இடத்தில் யுத்த காலத்து சிறைச்சாலை ஒன்று இருக்கிறது!"

"என்னது சிறைச்சாலையா?"

வியப்பை விழுங்கியபடியே கேட்டான் சிந்துஜன்!

"ஆமாம் சேர் ஜப்பான்காரர்களை இங்கேதான் வைத்திருந்தார்களாம் யுத்தக் காலத்தில். கிட்டத்தட்ட நூறு ஜப்பான் காரர்களை இங்கே தான் அடைத்து வைத்திருந்தார்களாம்! அந்தக்கால கட்டத்தில் திடீரென்று ஒரு வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட்டு பாதிப்பேருக்கு மேல் இறந்து விட்டார்களாம். இதனால் மீதியிருந்த ஜப்பான்காரர்களை வேறு இடத்திற்கு எடுத்துச் சென்றார்களாம். யுத்தம் சமாதானத்தில் முடிந்த பிறகு அரசாங்கம் இந்த இடத்தை ஏலத்தில் விட்டிருக்கிறது. ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த ஒருவன் லாபத்துக்கு இந்த இடத்தை வாங்கி இருக்கிறான். அப்படி அதை வாங்கிய அவன் அதில் குடியிருக்கவில்லை!"

"அப்போதெதற்கு வாங்கினானாம்?"

"அவன் ஒரு வேட்டைப் பிரியனாம். ஓய்வு நாட்களில் வேட்டையாடுவதற்கு, இங்கே வரும் அவன் அங்கேதான் தங்கி இருப்பானாம். ஒரே ஒரு முறை மட்டும் தான் தனது குடும்பத்துடன் இங்கே வந்து தங்கினானாம். அதோ அங்கே தெரியுது பாருங்கள் ஒரு தண்ணீர் குழி அதற்குள் விழுந்து அந்த வெள்ளைக்காரன் இறந்து விட்டான். அன்று இரவே அவனது மனைவியும் பாம்பு கடித்து இறந்து விட்டாள். அதன் பிறகு இந்தப் பகுதியில் இருந்த ஒருவருக்கு இந்த இடம் சொந்தமாகிவிட்டது என்றுதான் பலரும் பேசிக் கொண்டார்கள்! சிறிது நாட்கள் சென்ற பிறகு அவருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டதாம். இப்போது இந்த இடத்திற்கு சொந்தக்காரர் யார் என்பது யாருக்கும் தெரியாது! இந்த இடத்தில் இப்போது ஆவிகளும் பேய்களுக்கும் நடமாடுவதாக ஊருக்குள் பேசிக் கொள்கிறார்கள்"

அவன் சொன்ன கதையைக் கேட்டு

சிந்துஜனின் இதயத்திற்குள் ஒருவித அச்சம் ஏற்பட்டது!

இப்போது,

பாறைகளுக்கு நடுவில் போடப்பட்டிருந்த ஒரு கேட்டின் முன்னால்,

வாகனத்தை நிறுத்தினான் டிரைவர்.

"எதற்கும் நாங்கள் அங்கே போய் பார்த்துவிட்டு வருவோம் நீங்கள் எங்கும் போகாமல் இங்கேயே இருங்கள்!" என்று சொல்லிவிட்டு,

சிந்துஜனுடன் காரிலிருந்து கீழே இறங்கி,

கேட்டின் அருகில் வந்தார்!

அந்த கேட்டில் பெரிய ஒரு பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது!

தனது பைக்குள் இருந்த அந்த சாவிக் கொத்தை எடுத்து,

அதில் இருந்த பெரிய சாவியை பூட்டுக்குள் திணித்தார்.

அடுத்து,

எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் அது திறந்து கொண்டது.

கேட்டைத் தள்ளித் திறந்து கொண்டு இருவரும் உள்ளே வந்தார்கள்

உள்ளே,

காட்டுச் செடிகள் எவ்வித அச்சமும் இன்றி வளர்ந்திருந்தன.

அங்கே இருந்த வீட்டின் கதவும் பூட்டப்பட்டிருந்தது!

சாவிக் கொத்தில் இருந்த மற்ற சாவியை வைத்து கதவைத் திறந்தார்! உள்ளே, இருட்டு திருட்டுத்தனமாக ஆட்சி செய்து கொண்டிருந்தது.

ஆனாலும்,

உள்ளே இருந்த பொருட்கள் எல்லாமே தெளிவாகத் தெரிந்தன.

இருவரும்

மெல்ல மெல்ல அடிவைத்து,

உள்ளே நடந்தார்கள்!

சிலந்திகள் சிங்காரமாக வலை பின்னியிருந்ததனால்,

உள்ளே செல்வது கொஞ்சம் சிரமமாகத் தான் இருந்தது

அதேபோல்,

தூசும் எங்கும் மாசுபடியாமல் இருந்தது!

உள்ளே, நிறையவே அறைகள் இருந்தன! அவை எல்லாம் சிறைச்சாலைக்கு ஏற்றாற் போல் தயார்படுத்தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு அறைக் கதவுகளையும்



திறந்தபோது,

வௌவால்களின் வரவேற்பு அதிகமாகவே இருந்தது! எல்லா அறைகளையும் மிகவும் கவனமாக ஆராய்ந்தாலும்,

சிரஞ்சீவிக்கு தேவையான தகவல்கள் எதுவுமே கிடைக்கவில்லை! அடுத்தபடியாக,

சாப்பாட்டு அறை என்று சொல்லக் கூடிய ஓர் அறைக்குள் நுழைந்தார்கள்!

அந்த அறையின் மேசை மீது,

தூசு படிந்து போயிருந்த ஒரு பிங்கானும், கிளாசும் இருந்தது!

அந்த சாப்பாட்டு மேசையின் கோடியில்,

பாதி எரிந்து போயிருந்த ஒரு சிகரட்டும் இருந்தது! அதில் உள்ள தீ அணைவதற்கு முன்பே அதை மேசை மீது வைத்திருந்ததால்,

மேசையின் அந்த இடம் சற்று எரிந்து போயிருப்பதையும் சிரஞ்சீவி அவதானிக்கத் தவறவில்லை!

மேசையின் அருகில் இருந்த நாற்காலி, சற்று கதவின் பக்கம் திரும்பியிருந்தது!

"யாராவது இந்த மேசையில் இருந்து சாப்பிட்டிருக்கிறார்கள் சிந்துஜா. அந்த ஜன்னலைக் கொஞ்சம் திறந்து விடு புஸ் நாற்றம் தாங்க முடியவில்லை இந்த அறைக்குள் இருக்கும் தூசியைத் துடைப்பதற்கு தும்புத்தடி ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்! என்று சொல்லிய படியே சுற்றும் முற்றும் பார்த்தார்!

அவர் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை

சற்றுத் தொலைவில்,

பழைய தும்புத்தடி ஒன்று கிடந்தது

அதை எடுத்துவந்து,

தரையில் படிந்திருந்த தூசியைக் கூட்டித் தள்ளினார்!

தூசியை நன்றாகக் கூட்டி விட்ட பிறகு,

அந்த நாற்காலியின் அருகில்,

கறுப்பு நிறத்தில் ஏதோ கறை படிந்திருப்பது போல் தெரிந்தது! முழந்தாளிட்டு நன்றாகக் குனிந்து அந்தக் கறையை ஆராய்ந்து பார்த்தார் சிரஞ்சீவி!

"சிந்துஜா இங்க பாருடா இங்கே பழைய இரத்தக் கறை ஒன்றிருக்கிறது!" என்று கொஞ்சம் சத்தமாகவே சொன்னார் சிரஞ்சீவி!

"இரத்தக்கறையா! நன்றாகப் பாருங்கள் மாமா வேறு ஏதாவது கறையாக இருக்கப் போகிறது!" என்றான் வியப்புடன் சிந்துஜன்.

"இல்லை சிந்துஜா இது இரத்தக் கறைதான்! இந்த மாதிரியான எத்தனையோ இரத்தக் கறைகளை எனது ஆய்வில் நான் பார்த்திருக்கிறேன் அது எப்படி இருந்தாலும் இந்த இரத்தக்கறை படித்த மாபில் துண்டை நாம் கழற்றி எடுத்தாக வேண்டும்!" என்று அந்த பொறுப்பை அவனிடம் ஒப்படைத்துவிட்டு,

தொடர்ந்தும் தூசுபடிந்த தரையைக் கூட்டினார்.

ஏதோ நடக்கப் போகிறதென்று சிந்துஜனுக்குப் புரிந்து விட்டது.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 115

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | 08 | | 09 | | 10 |
| 11 | 12 | 13 | | 14 | 15 |
| | 16 | | 17 | 18 | |
| 19 | | | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ....................................................
வகுப்பு ....................................................
தொலைபேசி இல ....................................................
பாடசாலை பெயர் ....................................................
வதிவிட முகவரி ....................................................
....................................................
.............................. ....................................................
மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) உலகில் உயிர்வாழும் உயிரினங்களில் (மனிதன் மற்றும் பிராணிகளில்) உருவத்தில் மிகப்பெரியது இதுதான்.
(7) காட்டில் வாழும் அப்பாவி விலங்கு. உலகின் பல நாடுகளில் இவ்விலங்கு வாழ்ந்தாலும், அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு உருவ அமைப்புக் கொண்டனவாகும். இலங்கையில் வாழ்வது உடலெங்கும் வெண்ணிறப் புள்ளிகள் கொண்ட விலங்காகும்.
(11) மக்கள் கூட்டத்தைக் குறிக்கும் சொல்.
(14) நிலப்பகுதியில் ஊற்றெடுத்து உற்பத்தியாகி, பல ஊர்களையும் கடந்து பசுமையாக்கி, இறுதியில் கடலுடன் சங்கமிக்கின்ற நீர்நிலை இது. (தலைகீழான சொல்)
(17) சான்றோர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் குழுமியிருக்கும் அவை. (தலைகீழான சொல்)
(22) மரத்துக்கு மரம் கூட்டமாகப் பறந்து, பழங்களையும் வித்துக்களையும் உண்கின்ற பச்சைநிற அழகிய பறவை. (தலைகீழான சொல்)
(24) ஆட்கள் இருவரை தனது முதுகில் சுமந்தவாறு மிகவும் வேகமாக நீண்ட தூரம் ஓடக்கூடிய மிருகம். இம்மிருகம் இல்லாதிருந்தால் அக்காலத்தில் சாம்ராச்சியங்களே உருவாகியிருக்க முடியாது.

### மேலிருந்து கீழ்

(1) இச்சொல் இறைவனுடன் ஒன்றித்து நிற்கும் தியானநிலையைக் குறிப்பதாகும். பெரியார் எவராவது நல்லடக்கம் செய்யப்பட்ட புனிதமிகு இடத்தையும் இச்சொல்லால் குறிப்பிடுகின்றனர். (தலைகீழான சொல்)
(2) மழை பெய்வதற்கான அறிகுறியாக அல்லது மழை பெய்கின்ற வேளையில் வானில் தோன்றுகின்ற ஒளிக்கீற்று இது. ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய அனர்த்தம் இது.
(4) மரங்களின் கொப்புகளை இச்சொல்லால் குறிப்பிடலாம்.
(6) விரல்களின் நுனியில் உள்ளது. (தலைகீழான சொல்)
(14) தீய செயல் ஒன்றுக்காக இரகசியமாகத் தீட்டப்படுகின்ற சூழ்ச்சியைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(17) நமது வீடு, தொழில் நிலையங்கள், வீதிகள் போன்ற பல்வேறு இடங்களிலும் அன்றாடம் சேருகின்ற திண்மக்கழிவுகளைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(19) களிமண் ஓடு, மட்பாண்டங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கான மூலப்பொருள் இது.
(21) வீட்டின் மேற்பகுதியைக் குறிக்கும் சொல். ஓடு, கிடுகு, அஸ்பெஸ்டொஸ் தகடு போன்ற ஏதேனுமொன்றால் இது வேயப்பட்டிருக்கும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 114

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. பாலைவனம் 08. மனை 10. அகிலம்
14. மணி 16. சிலை 18. கல் 23. முக்கனி

**மேலிருந்து கீழ்**
01. பாண் 03. வங்கி 05. சிம்மம் 10. அணில்
14. மகள் 17. முதலை 20. கவி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 113

### பாராட்டு பெறுவோர்

**1. எச்.எப். ஹம்னா**
தரம் 06, கா/ முஸ்லிம் ம. கல்லூரி
இல. 206/17A, மஹமோதர, காலி.

**2. இப்திகார் ஸைத்**
தரம் 07, கே/மா/ சாஹிரா தேசிய கல்லூரி,
மாவனல்ல.

**3. எம். ஜெஹான் இர்பான்**
தம் 05B, கைரியா மு.ம. கல்லூரி,
இல. 155/32, எம்.எம். வீதி, மருதானை, கொழும்பு 10 .

**4. எம்.ஆர். அம்றத் அயானி**
தரம் 03, பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரி,
இல. 14, பர்ஹானா மன்ஸில், பாலமுனை 03.

**5. எம். உதிஸ்டா**
தரம் 08, ம.மா/ கொத் வடக்கு பூண்டுலோயா
தமிழ் வித்தியாலயம்,
வடக்கு பூண்டுலோயா, மேல் பிரிவு பூண்டுலோயா.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 115
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



ஈகை : பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது

**தெளிவுரை :**
தான் பெற்ற உணவை பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

# உலகில் சூரியன் மறையாத 6 நாடுகள்

சூரியன் கிழக்கில் தோன்றி, மேற்கில் மறைவதுதான் இயற்கை. அந்த இயற்கைதான் சில அதிசயங்களையும் நிகழ்த்துகின்றது. உலகில் சில இடங்களில் சூரியன் மறைவதே இல்லை. 24 மணி நேரத்தில் 20 மணி நேரமாவது அங்கே பகலாகவே இருக்கும். சில நாடுகளில் இரவு பொழுது குறைவாகவும் பகல் பொழுது அதிகமாகும் இருக்கும். ஆனால், சில நாடுகளில் இரவு என்பதே இல்லாமல் முழு நேரமும் பகலாகவே இருக்கும்.

**நோர்வே:**
உலகில் சூரியன் மறையாத நாடு நோர்வே. இது உலகின் ஆர்டிக் வட்ட பகுதியில் உள்ளது. இந்நாட்டில் மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை சூரியன் மறைவதே இல்லை. இங்கு ஒரு நாளைக்கு சுமார் 20 மணி நேரம் சூரிய வெளிச்சம் இருந்து கொண்டே இருக்கும். இரவு என்பதே இல்லை.

**கனடா:**
உலகின் இரண்டாவது மிகப்பெரிய நாடு இது. இந்த நாட்டில் பெரும் பகுதிகள் பனியால் மூடப்பட்டிருக்கும். ஆண்டு முழுவதும் பனிப்பொழிவுஇருக்கும். இந்நாட்டின் வட துருவத்தில் இனுவிக் என்ற பகுதியில் கோடை காலத்தில் தொடர்ந்து 50 நாட்கள் சூரியன் மறையாமல் இருக்குமாம்.

**ஸ்வீடன்:**
இந்த நாட்டில் மே முதல் ஆகஸ்ட் மாதம் வரை சூரியன் நள்ளிரவில் மறைந்து அதிகாலை 4.30 மணிக்கெல்லாம் உதயமாகிவிடுமாம்.

**ஐஸ்லாந்து:**
எங்கு பார்த்தாலும் அழகிய நீர்வீழ்ச்சிகளும், மலைகளும், பனிப் பாறைகளும், ஏராளமான வெந்நீர் ஊற்றுகளும் கொண்ட அழகிய நாடு.
இங்கு மே 10 முதல் ஜூலைவரை சூரியன் மறையாது.
இந்தக் காலங்களில்தான் அந்த நாட்டில் உள்ள மக்கள் மலையேறுதல், குகை வாசம், வன விலங்குகளை காணுதல், சைக்கிளிங் போன்ற விடயங்களைச் செய்கிறார்கள்.

**அலஸ்கா:**
இங்கும் மே மாத இறுதி முதல் ஜூலை மாத இறுதிவரை சூரியன் மறையாமல் இருக்கும். இங்கு கோடைக் காலத்தில் அதிகாலை 2 மணிக்கெல்லாம் சூரிய ஒளியில் மின்னும் பனி மலைகளை பார்ப்பது மிகவும் அழகாக இருக்கும்.


**பின்லாந்து:**
இந்த நாட்டில் ஒரு ஆண்டிற்கு மொத்தமே 73 நாட்கள் மட்டும்தான் சூரியன் இருக்கும். மற்ற நாட்கள் முழுவதும் பனிதான். இவ்வாறு பூமியில் சில காலத்திற்கு சூரிய அஸ்தமனமே நிகழாத இடங்கள் கூட உள்ளன.

## இவ்வார மழலை



ருத்விகா
தனேஸ்குமார் - உதயகார்த்திகா

## சிறுவர் சித்திரங்கள்




க. கிஷாலன்
தரம் 09, லைசாவி ஆங்கில பாடசாலை, கொழும்பு - 13.

# தொட்டாச்சிணுங்கி



தொட்டாச்சிணுங்கி இலைகளைத் தொடும்போது, அதன் தண்டுப் பகுதி ஒரு வகை அமிலத்தைச் சுரப்பதால் இலையின் கீழ்ப்பகுதி செல்களில் உள்ள திரவத் தன்மை நீங்கிவிடுகிறது. ஆனால், இலையின் மேற்பகுதி செல்களில் உள்ள திரவத்தன்மை நீங்குவதில்லை.
எனவே மேற்பகுதி இலையின் எடை காரணமாக, முழு இலையும் நெகிழ்ந்து வளைந்து மூடிக்கொள்கிறது.
இலை சுருங்கும் தாவரங்கள் அனேகம் உள்ளன. இதில் நாம் எளிதில் காணும் தாவரம் தொட்டாச்சிணுங்கி. பொதுவாக அனைத்து இலைகளும் பல செல்களின் சேர்க்கையால் ஆனவை. ஒவ்வொரு செல்லும் சில திரவப் பொருட்களை இலைக்குள் கொண்டிருக்கும். இந்தத் திரவத்தின் அழுத்த மாறுபாட்டின் காரணமாக செல்களும், அவற்றாலான இலையும் நிமிர முடிகிறது.
இலையின் உயிரணுவிலிருந்து திரவம் வெளியேறிவிட்டால் திரவ அழுத்தம் குறைந்து இலையின் உறுதித்தன்மை தளர்ந்துவிடும். புளிய மரம், தூங்குமூஞ்சி மரம் போன்றவை இரவு நேரத்தில் இவ்வாறே சுருங்குகின்றன.
சில தாவரங்கள் சூரிய ஒளி வரும் வரை சுருங்கியும் அல்லது தண்ணீர் ஊற்றாமல் விட்டு விட்டால் இலைகள் சுருங்கி விடும்.
தண்ணீர் ஊற்றிய பிறகு அதன் இலைகள் விரிந்து விடும்.



# மனித வாழ்வில் உயர்வு காண...

முதியோர், பெரியோர் வரலாறுகள் நமக்கெலாம்
முன் மாதிரியாய் வழிகாட்டி நிற்பவை என்பதுணர்க
சீரிய வழியில் பெரியோர் நடந்த வாழ்வு முறைகள்
சீர்மையாய் நமக்குப் புலப்படத்தான் அமைந்துளவே
ஜெகமெங்கும் வாழ்ந்த பெரியோரின் வாழ்வு முறையில்
'ஜெயம்' பெறும் நோக்கில் அவ்வழியில் வாழ்வை அமைத்திடுவோம்

கற்றறிந்த பண்டிதர் வழி செல்லக் கல்வி அவசியமே
காணும் பாமரரில் பெரியோர் நம்முன் உளர்
ஏழை எளியோர்க்கு உதவும் பாமரர் வழி செல்தல் பெருமையே
கோழைத்தனம் அகற்றிப் பண்பாடுள்ளோர் வழியை உணர்வோம்
சீமான் போல் பணம் செலவழிக்கும் பொதுச்சேவை முடியாவிடினும்
சிறுமைத் தனத்தில் உடல் ரீதியில் உழைத்துப் பொதுச்சேவை ஆற்றலாம்

பணம் செலவிட்டுப் பொதுச் சேவை ஆற்றுதல் ஒரு வழி
பண்பாட்டுடன் உடல் உழைப்பால் பொதுச்சேவை காணல் ஒருமுறை
வித்தியாசமான நடைமுறை பேணப் படினும்
வெவ்வேறு திசையன்று ஒரே திசையில் சேவை அமைந்திடும்
மனப்பாங்கில் உறுதிப்பாடும் தைரியமும் இருந்திடின்
மனித வாழ்வில் உயர்வைக் காணல் உறுதியே!

வெலிப்பன்னை அத்தாஸ்

# செய்து பாருங்கள்



# நுளம்புகள் விரும்பும் கருப்பு நிறம்



நுளம்புகள் இரு வழிகளில் நம்மை நெருங்குகின்றன. இவை பார்வை மற்றும் வாசனையுடன் தொடர்புடையவை என்று புளோரிடா பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் பேராசிரியர் ஜோனதன் டே குறிப்பிட்டுள்ளார்.
நுளம்புகள் மாலை நேரத்தில் அதிக பார்வைத்திறனைக் கொண்டுள்ளன. தனித்து நிற்கும் நிறங்களான கருப்பு, கடும் நீலம் அல்லது சிவப்பு நிற உடைகள் நுளம்புகளுக்கு எம்மை கண்டு கொள்வதற்கு எளிதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறத.
இந்த நிறத்தினால் உண்டாகும் வெப்பத்தை நுளம்புகள் எளிதாக உணர்கின்றன.
அதாவது, கடும் நிறங்கள் அதிகளவு வெப்பத்தை உறிஞ்சும் தன்மை கொண்டவை. கருப்பு நிறம் வெப்பத்தை அதிகளவில் உறிஞ்சும்.
இந்த வெப்பத்தை எளிதாக நுளம்புகள் உணர்ந்து தான் நம்மை கடிக்கின்றன. கடும் நிற ஆடைகளை அணிபவர்களை நுளம்புகள் கடிக்க முக்கிய காரணம் இது தான்.

# ஏலியன் மர்மங்கள்



வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா என்பது தொடர்பில் இன்று வரை பேசப்பட்டு வருகின்றன. ஆனால் அதற்கான தகுந்த ஆதாரங்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லை. அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் இந்தியா முதலிய நாடுகளில் UFO எனப்படும் ஏலியன்களின் பறக்கும் தட்டு வாகனங்கள் பல காலக்கட்டங்களில் உலகைக் கடந்து சென்றதாக பல நிகழ்வுகளில் கூறப்பட்டுள்ளன. ஆனால், இவற்றிற்கு சரிவர ஆதாரங்கள் இல்லை. பண்டைய காலங்களிலும் ஏலியன்கள் தொடர்பாக பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

கி.மு. 70 இல் ஜோசப்ஸ் என்பவர் கூறிய தகவலில் வானில் ஒரு வினோதமான காட்சிகள் தோன்றியதாகவும் அதில் மேகங்களைக் கிழித்துக் கொண்டு வான் ரதத்தில் வீரர்கள் வீரிட்டுச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது பொய் எனத் தோன்றினாலும் அந்த நிகழ்வைப் பலர் பார்த்ததாக சாட்சியம் கூறி உள்ளனர். ஜோசப்ஸ் கண்ட அந்த நிகழ்வைப் பலரும் கண்டதாக கூறியுள்ளனர். வானில் நடந்த போர் போன்ற அந்தக் காட்சிகளை பல யூதேய நகரங்களிலும் பலர் கண்டதாகக் கூறப்படுகின்றது. போர் நிகழ்வது போன்ற சத்தமும் ஆங்காங்கு வினோதமாக நிலத்தில் பூகம்பங்களும் தோன்றியதாக கூட மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மாவீரன் அலெக்சாண்டரும் இது போன்ற நிகழ்வை கண்டதாகக் கூறப்படுகின்றது. கி.மு. 329இல் அவர் தன் படைகளுடன் ஒரு ஆற்றங்கரையில் இருந்த போது திடீரென மேகங்களில் இருந்து சில்வர் கேடயங்கள் கீழே பறந்து வந்துள்ளன. அவற்றின் விளிம்பில் இருந்து நெருப்பு வெளிப்பட்டதாகவும் அதனைக் கண்டு அலெக்சாண்டரின் படை வீரர்கள், குதிரைகள் என்பன அச்சம் கொண்டதாகவும் மறுநாள் வரை அவர்கள் அவற்றைக் கடக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

கி.பி. 815இல் பிரான்ஸின் லியோன் என்னும் பகுதியைச் சேர்ந்த அகோர்பாட் என்னும் கிறிஸ்தவ மதகுரு, தான் வானில் ஒரு வினோதமான காட்சியைக் கண்டதாக எழுதி வைத்துள்ளார். அவர் அதனை மகோனியா எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவது அவர் வான்வழி மாலுமிகளைக் கண்டதாகவும் அவர்கள் பறக்கும் கப்பலில் மேகங்களை கடந்து சென்றனர் எனவும் கூறியுள்ளார். இதன் மூலம் அவர் ஏதோ அசாதாரண காட்சி ஒன்றைக் கண்டுள்ளார் என அறிய முடிகின்றது. இது குறித்து அங்கு இருந்த மக்களிடமும் எச்சரிக்கை செய்துள்ளார் அவர். இவ்வாறான நிகழ்வுகள் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன.

மாவீரன் நெப்போலியனுக்கும் ஏலியன்களுக்கும் இடையே தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகின்றது. நெப்போலியனின் மண்டையோட்டில் இருந்து ஒரு மைக்ரோ சிப்பை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கி.பி. 1794 ஆம் ஆண்டில் அவர் பல நாட்கள் காணாமல் போயிருந்தார். மீட்கப்பட்ட பின் தான் வித்தியாசமான மனிதனால் சிறைப்படுத்தப்பட்டிருந்ததாக அவர் கூறி இருந்தார். மேற்கொண்டு ஆய்வு செய்த போது அந்த மைக்ரோ சிப் அவரது சிறு வயதில் உடலில் வைக்கப்பட்டது கண்டறியப்பட்டது. இது ஏலியன் தொடர்பான விடயங்களை வலுவூட்டுகின்றது.

பழங்கால கட்டுமான பிரமிட்டுக்கள் கூட ஏலியன்களின் உதவியுடன் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் அது எந்த அளவு உண்மை என்பது அறியப்படவில்லை.

கு. அவினாஷ் - வத்தளை

# விளையாட்டு



# இரு 'குட்டி மாலிங்க' பற்றி பேசும் மாலிங்க



உலகக் கி ண்ணத்திற்கு சென்றிருக்கும் இலங்கை குழாத்தில் எப்போதை விடவும் இம்முறை பந்துவீச்சு பலமாக இருக்கிறது. சுழற்பந்தில் அணித்தலைவர் வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷனவுடன் வேகப்பந்தில் துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பதிரண மற்றும் நுவன் துஷார என நம்பிக்கை தருகிறது.

குறிப்பாக ஒன்றல்ல இரண்டு குட்டி மாலிங்கக்கள் இந்த அணியில் இடம்பெற்றிருப்பது முக்கிய அம்சம். இதனைப் பார்த்து முதலில் மகிழ்ச்சி அடைபவர் லசித் மாலிங்கவாகத் தான் இருப்பதார்.

இதில் நுவன் துஷாரவுக்கு மாலிங்க கடந்த இரண்டு மாதங்களாக அவர் மும்பை இந்தியன்ஸில் ஆடியபோது பயிற்சி அளித்து வந்தார். மதீஷ பதிரணவை அவர் கடந்த காலங்களில் போதுமானவரை வழிநடத்தி இருக்கிறார்.

'இது என்னை எவ்வளவு மகிழ்ச்சி அளித்திருக்கிறது என்பதை என்னால் கூற முடியாதிருக்கிறது' என்கிறார் மாலிங்க.

'டி20 போட்டிகளில் எப்போதும் யோக்கருக்கு முக்கிய இடம் இருக்கிறது. ஏனென்றால் அது சிக்ஸர்கள் போகாமல் தடுக்கிறது. ஒரே மாதிரி யோக்கர்களை போட முடியுமான இரு வீரர்கள் ஒரே தொடரில் இருப்பது அபாரமானது. உண்மையிலேயே அது சிறப்பானது' என்று 'கிரிக்கின்போ' இணையதளத்திற்கு அளித்த பேட்டியில் மாலிங்க கூறுகிறார்.

மாலிங்க தனது கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்திலேயே யோக்கர்களால் உலகப் பிரபலம் பெற்றார். வழக்கத்துக்கு மாறாக கையை தாழ்வாகக் கொண்டுவந்து யோக்கர் வீசும்போதும் அதன் மதிப்பே தனி. அந்த வாய்ப்பை மாலிங்க கிரிக்கெட் ஆடிய காலத்தில் முழுமையாக பயன்படுத்திக் கொண்டார்.

நுவன் துஷார மற்றும் மதீஷ பதிரண இருவரும் மாலிங்கவை பின்பற்றியே பந்து வீச ஆரம்பித்தார்கள் என்று குறிப்பிட முடியாது. என்றாலும் இருவரும் மாலிங்கவின் பந்துவீச்சு பாணி கிடைக்கப்பெற்றிருக்கிறது. எனவே அவர்களின் யோக்கர்களும் மாலிங்க அளவுக்கு பலமானது.

தொழில்நுட்ப ரீதியில் இப்படிச் சொல்லலாம், சம்பிரதாயமாக வேகப் பந்து வீச்சாளர்கள் ஒருவர் யோக்கர் பந்து வீச முயலும்போதும் அவர்களின் கை உயரச் சென்று பந்து உயர்ந்து வரும் அப்போது தவறி புல்டோஸ் பந்தாக மாறினால் துடுப்பாட்ட வீரர்களுக்கு நல்ல விருந்தாகிவிடும். ஆனால் மாலிங்க பணியில் பந்து வீசும்போது பந்து தாழச் செல்வதால் அது புல்டோசராக சென்றாலும் துடுப்பாட்ட வீரருக்கு சுதாகரிப்பதற்கு போதிய காலம் இருக்காது.

மாலிங்க கிரிக்கெட் ஆடிய காலத்தில் அதனை நன்றாக பார்க்க முடிந்தது. அவரது தாழ்வான புல்டோஸ் பந்துகள் கூட துடுப்பாட்ட வீரர்களுக்கு முகம்கொடுக்க கடினமாகவே இருந்திருக்கிறது. அதிலும் கடைசி ஓவர்களில் அவர் ரிவர்ஸ் ஸ்விங்கும் செய்வதால் துடுப்பாட்ட வீரர்கள் எப்போதுமே தடுமாற்றம் காண்பார்கள்.

பத்திரணவின் பந்துவீச்சில் இதனை தெளிவாகப் பார்க்க முடிகிறது. 2022 ஜனவரி தொடக்கம் அவரின் யோக்கர், புல்டோஸ் அல்லது துல்லாமல் செல்லும் பந்துகளில் அவர் விட்டுக்கொடுத்த ஓட்ட விகிதம் 8.13. இது குறைந்தது 300 பந்துகளை வீசிய நிலையில் வேகப்பந்து வீச்சாளர்களில் மூன்றாவது சிறந்ததாக உள்ளது. பஸால் ஹக் மற்றும் ஜெஸ்பிரிட் பூம்ரா ஆகியோருக்கு மாத்திரமே அவர் பின் தங்குகிறார். இதில் தூஷார சற்று பின் தங்கி 9.57 விகிதத்தை பெற்றபோதும் ஒப்பீட்டளவில் அதுவும் சிறந்ததுதான்.

'ஒரே நாட்டில் இவ்வாறான வளங்களை நான் முதல்முறை பார்க்கிறேன்' என்கிறார் மாலிங்க. இலங்கையின் பந்துவீச்சு வரிசை உலகில் சிறந்ததாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

வளர்ந்து வரும் வீரர்கள் மாலிங்கவை பின்பற்றினால் அது அதிர்ச்சிக்குரிய செய்தியாக இருக்காது. ஏனென்றால் ஒரு வேகப்பந்து விச்சாளராக அவர் உச்சத்தையே தொட்டிருக்கிறார். பாகிஸ்தானிலும் கூட மாலிங்க பாணியில் பந்து வீசுபர்கள் உருவாகி வருகிறார்கள். அவர்களில் முக்கியமானவர் சமான் கான். சர்வதேச கிரிக்கெட்டில் இது வழக்கமாகக் கூட மாறலாம்.

'19 வயதுக்கு உட்பட்ட மட்டத்தில் இதுபோன்று பந்துவீசுபவர்களை என்னால் காண முடிகிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பந்து வீச்சாளர் ஒருவரும் இதே போன்று பந்துவீசுகிறார். என்னைப் போன்ற பந்துவீச்சாளர்கள் அதிகம் வருவது எனக்கு கோபத்தையும் கூட ஏற்படுத்துகிறது' என்று சிரித்துக்கொண்டே கூறுகிறார் மாலிங்க.

'இந்த மட்டத்தில் அவர்கள் திறமையுடன் ஆடுகிறார்கள் என்றால் நான் என்ன செய்ய முடியும்? அவ்வாறு வருவதையிட்டு நான் அதிகம் மகிழ்ச்சி அடைகிறேன். எனது கலை பற்றி எனக்குத் தெரிந்த அனைத்தையும் நான் அவர்களுக்கு கற்பித்துக் கொடுப்பேன்.'

**என்னைப்போல் துஷார...**

இந்த இரு பந்துவீச்சாளர்களில் துஷார அதிகம் தன்னைப் போல் இருப்பதாக மாலிங்க குறிப்பிடுகிறார். 'இடது கை துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து உள்ளே வரும் வகையில் அவர் சுவிங் செய்வதோடு வலது கை வீரர்களுக்கு லாவகமாக பந்து வெளியே செல்கிறது. அவரிடம் நல்ல மெதுவான பந்து வீச்சுகளும் இருக்கிறது. அதில் என்னுடைய பாணி இல்லாதபோதும் நன்றாக இருக்கிறது. அது தவிர அவரிடம் நல்ல யோக்கர் பந்துகள் உள்ளன. இப்போது அவர் பயிற்சியில் அகல யோக்கர்கள் மற்றும் நேரடி யோக்கர்களை வீசுவதில் நல்ல கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்.'

ஐ.பி.எல். இல் துஷாரவின் பந்து வீச்சு மோசமில்லை. ஏழு போட்டிகளில் அவர் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு விட்டுக்கொடுத்த ஓட்ட விகிதமும் 9.88 ஆக இருந்தது. அவர் தனது சர்வதேச கிரிக்கெட்டை வலுவாகவே ஆரம்பித்திருக்கிறார். எட்டுப் போட்டிகளில் 11 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். பங்களாதேஷுக்கு எதிராக கடைசியாக ஆடிய தொடரில் அவரது பந்துவீச்சு மாலிங்கவை நினைவுபடுத்துவதாக இருந்தது. ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய அவர் 20 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

'முதலில் அவர் போட்டியை வென்று கொடுக்கும் வீரர்' என்று துஷார பற்றி மாலிங்க கூறினார். 'ஆனால் போட்டியின்போது களத்தடுப்பாளர்களை எப்படி அமைப்பது என்பது பற்றி அவர் சற்று குழப்பம் அடைகிறார். சர்வதேச மட்டத்தில் அவருக்கு போதிய அனுபவம் இல்லாதது இதற்கு காரணமக இருக்கும். அவர் சொற்பமான சர்வதேச போட்டிகளிலேயே ஆடி இருக்கிறார்.

அதனால் அவருக்கான திட்டமிடலை அணியினர் மேற்கொள்ள வேண்டும். அணித்தலைவர் அவருடன் இருக்க வேண்டும். அவர் எப்படியான பந்தை வீசப்போகிறார் என்பதை அணித் தலைவர் தெரிந்திருக்க வேண்டும். அப்போதே அதற்கு ஏற்றவாறு களத்தடுப்பை அமைக்க முடியும்' என்கிறார் மாலிங்க.

**பெரிய மனம் படைத்த பத்திரண**

துஷாரவின் கை உயர வருவது மற்றும் உயரும் மணிக்கட்டு ஆரம்பத்திலேயே அவர் பந்தை சுவிங் செய்ய உதவுகிறது. ஆனால் பதிரணவின் கை மாலிங்கவை விடவும் தாழ்வாக வருவதால் அவர் மத்திய மற்றும் கடைசி ஓவர்களில் பந்துவீசவே பொருத்தமானவர் என்று பார்க்கப்படுகிறது. அதனைத் தெரிந்தே கடந்த இரண்டு பருவங்களிலும் சென்னை சுப்பர் கிங்ஸ் அவரை கச்சிதமாக பயன்படுத்தியது.

அவர் யோக்கர் வீசுவது பந்துவீச்சின் வேகத்தை அதிகரித்திருக்கிறார். ஐ.பி.எல். இல் அவரால் அடிக்கடி மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தை தாண்ட முடிந்தது. இது அவரை முக்கிய கடைசி ஓவர் வீரராக மாற்றி இருக்கிறது.

'மதீஷவை எந்த பயமும் இன்றி இன்னிங்ஸ் ஒன்றின் கடைசிக் கட்டத்தில் பயன்படுத்த முடியும்' என்கிறார் மாலிங்க.

'மத்திய ஓவர்களில் கூட துடுப்பாட்ட வீரர்கள் ஸ்திரம் அடையாது இருந்தால், ஷோர்ட் பந்துகள் வீச வேண்டுமானால், சுழற்பந்து வீச்சாளர்களுடன் இணைந்து வேகமான யோக்கர்களை வீச வேண்டுமானால் கூட அவர் பொருத்தமானவர். அவர் புதிய பந்தில் அதிகம் வீச மாட்டார், எனவே, அவரை மத்திய ஓவர்களில் பயன்படுத்த முடியும்.

வனிந்து ஒரு பக்கத்திலும் மதீஷ மறு பக்கத்திலும் பந்து வீசினால் இரு பக்கங்களிலும் விக்கெட் வீழ்த்தும் பந்துவீச்சாளர்கள் இருப்பார்கள். வனிந்து ஒரு பக்கத்தில் இறுக்கினால் மதீஷவுக்கு எதிராக ஓட்டங்கள் பெற வேண்டும் என்பது துடுப்பாட்ட வீரர்களுக்கு தெரியும். அப்போது விக்கெட் வீழ்த்த அதிக வாய்ப்பு ஏற்படுகிறது.'

உண்மையில் ஐ.பி.எல். இல் அதிக விக்கெட் வீழ்த்தியவர்களில் மதீஷவும் இருக்க வேண்டும். ஆறு போட்டிகளில் அவர் 13 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அவர் தொடரில் சற்று தாமதமாகவே களமிறங்கினார். உபாதையால் முன்கூட்டியே வெளியேறிவிட்டார். உலகக் கிண்ணத்திற்கு அவர் உடல் தகுதி பெறுவார் என்று இலங்கை நம்புகிறது.

'அவரின் மிகப்பெரிய ஆயுதம் அவரது வேகமும் யோக்கரும் தான். அவர் சிறு காயத்திற்கு உள்ளாகி இருப்பதால் வேகம் சற்று குறைந்திருக்கிறது. எனவே அதில் இருந்து மீண்டு வருவது பற்றி அவர் அவதானம் செலுத்த வேண்டும்' என்றார் மாலிங்க.

'என்றாலும் மதீஷவிடம் நான் பார்க்கும் மிகப்பெரிய விடயம் அவருக்கு பெரிய மனது. போட்டியில் அவர் சாதகமான மனநிலையுடனேயே இருப்பார். அது அவருக்கு எம்மால் கற்றுக் கொடுக்க முடியாதது. அது அவரிடம் இயற்கையாக இருக்கிறது. அவர் ஐ.பி.எல். இற்கு வந்த முதல் ஆண்டில் கூட எந்த பயத்தையோ அல்லது சந்தேகத்தையே வெளிப்படுத்தவில்லை.

இந்த நேரத்தில் இது தான் வேண்டும் என்று நாம் அவரிடம் கூறியால், அதனைச் செய்ய அவரால் முடியும். அவருக்கு முடிவெடுக்கும் திறன் இருக்கிறது. தனது சிந்தனையில் அவர் தெளிவாக இருக்கிறார்.'

துஷாரவுடன் சேர்ந்து அவர் கடைசி ஓவர்களில் பந்து வீசுவதை எம்மால் பார்க்க முடியுமா?

'அவர் துஷாரவுடன் இணைந்தால், அவர்களைப் போன்ற இரு யோக்கர் பந்துவீச்சாளர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதை என் வாழ்நாளில் முதல்முறை பார்ப்பதாக இருக்கும். கடைசி நான்கு ஓவர்களில் அவர்களில் ஒருவர் எட்டு யோக்கர்களையும் மேலும் மற்றவர் எட்டு யோக்கர்களையும் வீசினால் அந்த 16 பந்துகளிலும் உங்களால் சிக்ஸர் அடிக்க முடியாது. அப்படி பார்ப்பது எனது வாழ்நாளில் முதல்முறையாக இருக்கும். தேர்வாளர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது' என்று மாலிங்க பதிலளித்தார்.



# இன்று பலப்பரீட்சையில் KKR-SRH அணிகள்!!!



ஒரு மாதமாகவே ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய கிரிக்கெட் திருவிழா இன்றுடன் முடிவடைகின்றது. இன்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சன்ரைசஸ் ஐதராபாத் அணியுடன் மோதவுள்ளது. சென்னையின் ஐபிஎல் கனவும் தகர்ந்துள்ளது. தோனி இனிமேல் விளையாடாவிட்டால் சென்னையின் எதிர்காலம் என்ன என்ற கேள்விக்குறியும் உள்ளது.

புதிய கேப்டன், ஏலத்தில் எடுக்கப்பட்ட புதிய வீரர்கள், முதல் வெற்றி, புள்ளிப்பட்டியலில் 3ஆவது இடம் வரை ஏற்றம் என உற்சாகமாக ஐபிஎல் 2024 சீசனைத் தொடங்கியது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி.

வழக்கம்போல் இந்த முறையும் சிஎஸ்கே தான் சாம்பியன், ப்ளே ஆஃப் சுற்றில் வெல்லப்போகிறது, தோனியின் வழிகாட்டலில் சிஎஸ்கே கோப்பையை வெல்லும் என்றெல்லாம் ரசிகர்கள் சிஎஸ்கே அணியின் செயல்பாடு குறித்து புளங்காகிதம் அடைந்தனர்.

ஆனால், ஐபிஎல் தொடரில் உயிர்ப்பித்து நின்றிருக்க வேண்டிய முக்கியமான ஆட்டத்தில் சிஎஸ்கே அணியின் ஒட்டுமொத்த பலவீனமும் அம்பலமானது. முக்கியமான ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியிடம் தோல்வி அடைந்து ஐபிஎல் பயணத்தைப் பாதியிலேயே முடித்துக்கொண்டு வெளியேறியது 5 முறை சாம்பியன் வென்ற சிஎஸ்கே அணி.

2024 ஐபிஎல் சீசனில் சிஎஸ்கே அணி 14 போட்டிகளில் விளையாடி 7 வெற்றி, 7 தோல்வி என 14 புள்ளிகளுடன், நிகர ரன்ரேட் 0.392 என 5ஆவது இடத்தைப் பிடித்து, ப்ளே ஆஃப் செல்லாமல் லீக் சுற்றோடு வெளியேறியது.

ஆனால், தொடக்கத்தில் முதல் 8 போட்டிகளில் ஒரு வெற்றி, அதன்பின் தொடர்ந்து 6 வெற்றிகளைக் குவித்து ஆர்சிபி அணி யாரும் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் சிஎஸ்கேவைச் சாய்த்து ப்ளே ஆஃப் சுற்றுக்குள் சென்றிருக்கிறது.

ஐபிஎல் தொடரின் முதல் பாதி சுற்று முடியும் போது ஆர்சிபியின் நிலையைப் பார்த்து, ஆர்சிபி வெளியேறிவிடும் என்று அந்த அணியின் ரசிகர்களே பேசத் தொடங்கி, கருத்துக்களைப் பதிவிட்டனர். ஆனால் அனைத்துக் கணிப்புகளையும் ஆர்சிபி அணி பொய்யாக்கி, ப்ளே ஆஃப் சுற்றுக்குள் சென்றிருக்கிறது.

ஐபிஎல் வரலாற்றில் 2024 சீசன் தான் சிஎஸ்கே அணியின் 3வது மோசமான ஆட்டம் என்பது தெரியவந்துள்ளது. 2008ஆம் ஆண்டிலிருந்து சிஎஸ்கே அணியின் ஐபிஎல் வெற்றி சதவீதம் குறைந்தபட்சம் 55 சதவீதத்துக்கு மேல் இருந்து, அதிகபட்சம் 68 சதவீதம் இருந்துள்ளது.

எந்தெந்த சீசனில் வெற்றி சதவீதம் குறைந்ததோ அந்த சீசனில் சிஎஸ்கே மோசமாக அடிவாங்கியது. குறிப்பாக 2020ஆம் ஆண்டு சிஎஸ்கே வெற்றி சதவீதம் 42.86 ஆகவும், 2022ஆம் ஆண்டில் சிஎஸ்கே வெற்றி சதவீதம் வெறும் 28.57 சதவீதமாகவும் இருந்தது. அதற்கு அடுத்தாற்போல் 2024 சீசனில் சிஎஸ்கே வெற்றி சதவீதம் 50 சதவீதம் இருந்துள்ளது.

ஆக, ஐபிஎல் வரலாற்றில் சிஎஸ்கே அணியின் மோசமான செயல்பாடாக 2024 ஐபிஎல் சீசன் அமைந்திருக்கிறது என்பதை புள்ளிவிவரங்கள் வாயிலாக அறியலாம்.

இதில் 2022ஆம் ஆண்டு ஐபிஎல் சீசனில் சிஎஸ்கே லீக் சுற்றோடு வெளியேறியதற்கு முதல் காரணம், சிஎஸ்கேவின் கேப்டன்சி மாற்றம் குறித்த அறிவிப்புதான். சிஎஸ்கே கேப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமிக்கப்பட்டு, பின்னர் நீக்கப்பட்டு மீண்டும் தோனி நியமிக்கப்பட்ட குழப்பம் தோல்விக்கு இட்டுச் சென்றது.

அதேபோன்ற குழப்பம் 2024 சீசன் தொடக்கத்திலும் ஏற்பட்டது. ஐபிஎல் சீசன் தொடங்கும்வரை தோனிதான் கேப்டன் என்று அனைத்து ரசிகர்களும் எதிர்பார்த்த நிலையில் திடீரென ருதுராஜ் கெய்க்வாட் நியமிக்கப்பட்டது, அதிர்ச்சியையும், அவர் எவ்வாறு வழிநடத்தப்போகிறார் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது.

அது மட்டுமல்லாமல் 2024 ஐபிஎல் சீசன் போட்டியின் இடையே டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணியின் அறிவிப்பும் சிஎஸ்கே ஆட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஏனென்றால் சிஎஸ்கே அணிக்காக கடந்த சில சீசன்களாகச் சிறப்பாக விளையாடிவரும் ருதுராஜ் கெய்க்வாட் இந்திய அணிக்கான டி20 உலகக் கோப்பைக்கான அணியில் இடம் பெறவில்லை ஆனால், ஷிவம் துபே, ஜெய்ஸ்வால் இடம்பெற்றது குறித்து சமூக வலைத்தளங்களில் பெரிய விவாதத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவும் இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்பதுதான். ஆனால், கெய்க்வாட் கடந்த சில சீசன்களாக சிறப்பாகச் செயல்பட்டநிலையில் அவருக்கான இடம் இந்திய அணியில் இல்லை.

ஆனால், இந்த ஆதங்கத்தை கெய்க்வாட் எந்த ஆட்டத்திலும் வெளிப்படுத்தவில்லை, அவரது பேட்டிங் திறன் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றபோதிலும், மனதளவில் அவருக்கு இது தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும், அவரின் தன்னம்பிக்கையை அசைத்துப் பார்த்திருக்கும் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள். அதேவேளை 2024 ஐபிஎல் தொடரில் எப்போதும் இல்லாத வகையில் பேட்டிங்கின் மூலம் பல உலகசாதனைகளை படைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அணியில் இருக்கும் அதிரடி வீரர்களும் 200250 ஸ்டிரைக் ரேட்டில் விளையாடி, பந்துவீச்சாளர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிவருகின்றனர்.

'பந்துவீச்சாளர்கள் பாவம் பா' என கூறுமளவு 30 முறைக்கும் மேல் 200 ரன்களுக்கு மேலான மொத்த ஓட்டங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதுவரை ஐபிஎல் தொடரில் படைக்கப்பட்டுள்ள அனைத்து பிரமாண்ட சாதனைகளும் பேட்டில் இருந்து மட்டுமே வந்துள்ளன.

## அதிவேகமாக 1000 சிக்சர்கள்

கடந்த ஐபிஎல் தொடர்களில் இல்லாதவகையில், நடப்பு ஐபிஎல் தொடரில் குறைவான பந்துகளில் 1000 சிக்சர்கள் அடிக்கப்பட்டுள்ளது. "பந்துவீச்சாளர்ளை யாராவது காப்பாத்துங்க" என பல ஜாம்பவான் வீரர்களே சொல்லுமளவு, நடப்பு ஐபிஎல்லில் பேட்ஸ்மேன்கள் பந்துவீச்சாளர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.

கடந்த 2023 மற்றும் 2022 ஐபிஎல் தொடர்களில் 15390 பந்துகள், 16269 பந்துகளில் 1000 சிக்சர்கள் அடிக்கப்பட்டதே சாதனையாக இருந்து வந்தது. இந்நிலையில் நடப்பு ஐபிஎல் தொடரில் வெறும் 13079 பந்துகளிலேயே 1000 சிக்சர்கள் அடிக்கப்பட்டுள்ளது.

## டி20 வரலாற்றில் மிகப்பெரிய ரன்சேஸ்

கடந்த ஏப்ரல் 26ம் திகதி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கு இடையேயான ஐபிஎல் போட்டியில், டி20 கிரிக்கெட் வரலாற்றில் அடிக்கப்பட்ட மிகப்பெரிய ரன்சேஸ் பதிவுசெய்யப்பட்டது.

முதலில் ஆடிய கொல்கத்தா அணி 261 ரன்களை குவித்து எட்டவே முடியாத ஒரு இலக்கை பஞ்சாப் அணிக்கு நிர்ணயித்தது. ஆனால் நம்பிக்கையை கடைசிவரை விடாமல் இருந்த பஞ்சாப் கிங்ஸ் அணி, வெறும் 18.4 ஓவர் முடிவிலேயே 262 ரன்களை குவித்து உலகசாதனை ரன்சேஸை பதிவுசெய்தது. இதற்கு முன்பு 259 ரன்களை சேஸ் செய்ததே டி20 கிரிக்கெட்டில் பதிவுசெய்யப்பட்ட அதிகபட்ச ரன்சேஸ்ஸாக இருந்த நிலையில், பஞ்சாப் கிங்ஸ் அணி அதை உடைத்து புதிய சாதனையை வரலாற்றில் எழுதியது.

## ஒரு டி20 போட்டியில் மட்டும் 42 சிக்சர்கள்

262 ரன்கள் ரன்சேஸ் செய்த கொல்கத்தா மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில், ஒரு டி20 கிரிக்கெட் போட்டியில் அடிக்கப்பட்ட அதிகபட்ச பவுண்டரிகள் மற்றும் சிக்சர்கள் பதிவுசெய்யப்பட்டன.

இரண்டுபுறமும் சிக்சர் மழைகளை பொழிந்த அணிகள் மொத்தமாக 37 பவுண்டரிகள், 42 சிக்சர்களை அடித்து உலகசாதனையை படைத்தனர். இதற்கு முன்பு 38 சிக்சர்கள் அடிக்கப்பட்டதே அதிகப்படியான சிக்சர்களாக இருந்தது.

## 287 ரன்கள் குவிப்பு

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிராக ருத்ரதாண்டவம் ஆடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பேட்டர்கள், ஐபிஎல் வரலாற்றில் அதிகபட்ச மொத்த ஓட்டங்கள் என்ற 287 ரன்களை குவித்து மிரட்டிவிட்டனர்.

இது ஐபிஎல் வரலாற்றில் அடிக்கப்பட்ட அதிகபட்ச டோட்டல் மற்றும் சர்வதேச அளவில் அடிக்கப்பட்ட இரண்டாவது அதிகபட்ச டோட்டல் என்ற மிரமாண்ட சாதனையாக மாறியது.

அபிஷேக் சர்மா (35 சிக்சர்கள்), டிராவிஸ் ஹெட் (31), ஹென்ரிச் கிளாசன் (31) முதலிய மூன்று சன்ரைசர்ஸ் ஹைதராபாத் வீரர்கள், 2024 ஐபிஎல் தொடரின் பெரிய ஹிட்டர்களாக மாறி ஒரு புதிய வரலாற்று சாதனைக்கு SRH அணியை அழைத்துச்சென்றனர்.

ஒரு ஐபிஎல் தொடரில் 146 சிக்சர்களை அடித்திருக்கும் சன்ரைசர்ஸ் அணி, இதற்கு முன்பு 2018ம் ஆண்டு சிஎஸ்கே அடித்திருந்த 145 சிக்சர்கள் சாதனையை உடைத்து புதிய சாதனை படைத்துள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2024 மே 26 ஞாயிற்றுக்கிழமை
திரைப்பட, ஆவணப்பட இயக்குனர் –
சிறுகதை எழுத்தாளர் ஹஸீன் ஆதம்

# 26 ஆண்டுகளாக காணாமல்போனவர் அண்டை வீட்டில்!



அல்ஜீரியாவில் 26 ஆண்டுகளுக்கு முன்னர் ஆடவர் ஒருவர் காணாமல் போனதை வீட்டார் வேதனையுடன் மறந்து பல காலமாகிவிட்டது.

ஆனால் அந்த ஆடவர் அத்தனை காலமும் அடுத்த வீட்டில்தான் இருந்திருக்கிறார்.

அங்கிருக்கும் நிலவறை ஒன்றில் இருந்து அண்மையிலேயே கண்டுபிடிக்கப்பட்டார்.

1990களில் அல்ஜீரியாவில் வெடித்த சிவில் யுத்த காலத்திலேயே ஒமர் பின் ஓம்ரான் என்ற ஆடவர் காணாமல்போனார்.

அப்போது அவர் தனது பதின்ம வயதுகளின் கடைசி பகுதியில் இருந்தார்.

அவர் வளர்ந்த வீட்டில் இருந்து வெறுமனே 200 மீற்றர் தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பின் ஓம்ரானுக்கு இப்போது 45 வயது ஆகிறது. அவரை சிறைப்படுத்தி வைத்திருந்த 61 வயது ஆடவர் ஒருவரை கைது செய்ததை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

அல்ஜீரிய அரசு மற்றும் இஸ்லாமியவாத குழுக்களுக்கு இடையிலான ஒரு தசாப்தம் நீடித்த மோதலுக்கு மத்தியிலேயே பின் ஓம்ரான் காணாமல்போனார்.

இந்தப் போரில் 200,000 பேர் கொல்லப்பட்டு மேலும் 20,000 பேர் வரை கடத்தப்பட்ட நிலையில் பின் ஓம்ரானும் அவர்களில் ஒருவராக இருக்கக் கூடும் என்றே குடும்பத்தினர் நம்பி வந்தார்கள்.



ஆனால் அந்த ஆடவர் அண்டை வீட்டின் வைக்கோல்களுக்கு பின்னால் ஆட்டுத் தொழுவத்தில் மறைந்திருந்தார். பொலிஸாருக்கு கிடைத்த அநாமதேய அழைப்பில், பின் ஓம்ரான் தனது அண்டை வீடுகளில் ஒன்றில் ஆட்டுத் தொழுவம் ஒன்றுக்குள் இருப்பதாக கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸார் வீடு வீடாக சோதனை நடத்த ஆரம்பித்தார்கள். அப்போதே பின் ஓம்ரான் கண்டுபிடிக்கப்பட்டார். தாம் அடைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து சில நேரங்களில் தமது குடும்பத்தினரை காண்பதாகவும், அவர்களை கத்தி கூப்பிட்டால் தம்மை பிடித்து வைத்திருப்பவர்களுக்கு கேட்கும் என்பதால் அதனை செய்யவில்லை என்றும் பின் ஓம்ரான் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அவர் உயிருடன் இருப்பது தெரியாமலேயே அவரது தாய் 2013 ஆம் ஆண்டு மரணித்திருக்கிறார்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# கொலையா? தற்கொலையா?

எலிசா லாம் என்ற பெண்ணின் மரணம் உலக மகா மர்மங்களில் ஒன்று. கனடா நாட்டு மாணவியான அவர் 2013 ஜனவரி 31 ஆம் திகதி காணாமல்போனார். லொஸ் ஏஞ்சல்ஸில் இருக்கும் சிசில் ஹோட்டலில் தங்கி இருந்த போதே அவர் காணாமல்போனார். பெப்ரவரி 19 ஆம் திகதி ஹோட்டலின் தண்ணீர் தொட்டியில் இருந்து அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது. மேலோட்டமாகப் பார்த்தால் இதில் என்ன மர்மம் இருக்கிறது என்று கேட்பீர்கள். ஆனால் துப்பறிந்தால்தான் இதில் ஏகப்பட்ட மர்மங்கள் இருக்கின்றன.

லாம்மின் மரணத்திற்கு முன்னரான சி.சி.டி.வி கெமராக்களை பார்த்தால் அவர் அங்கு ஏதோ பதற்றத்திலேயே இருந்திருக்கிறார். யாருக்கோ பயப்பட்டு ஒளிந்து கொள்வது, லிப்டிற்குள் அசாதாரணமாக நடந்து








கொள்வதையும் பார்த்தால் ஏதோ இருக்கிறது என்று புரிந்துவிடும்.

ஆனால் அவர் பைபோலர் கோளாறு என்ற நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் கூறுகிறார்கள். என்றாலும் அவரது பெற்றோர் தமது பிள்ளைக்கு அப்படி ஒரு நோய் இல்லை என்று கூறுகிறார்கள். வீடியோவை ஆராய்ந்தவர்கள், உண்மையிலேயே அவர் யாருக்கோ பயந்தே இவ்வாறு நடந்து கொள்கிறார் என்று அடித்துக் கூறுகிறார்கள். அதாவது வெளியிடப்பட்ட வீடியோக்கள் திருத்தப்பட்டே வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதுவே பலத்த சந்தேகம்.

அது ஒருபக்கம் இருக்க ஹோட்டலில் தண்ணீர் தொட்டி இருக்கும் பகுதிக்கு சாதாரண ஒருவருக்கு நுழைய முடியாது. கடவுச் சொல்லை கொடுத்தே அதற்கான கதவை திறக்க முடியும். அது ஹோட்டல் பாதுகாப்பு அதிகாரிகளிடமே இருக்கிறது. மற்றது தண்ணீர் தொட்டி கூட 12 அடி உயரம் கொண்டது. ஏணி வைத்தே ஏற முடியும். அக்கம் பக்கத்தில் ஏணி கூட இல்லை.

அப்படி இருக்க அவர் எப்படி அந்த நீர்த் தொட்டிக்குள் தற்கொலை செய்து கொண்டிருக்க முடியும்?

கொலை என்றால் அதற்கான தெளிவான ஆதாரங்கள் எங்கே. ஹோட்டல் ஊழியர் ஒருவரால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடக்கிது. அமெரிக்க உளவுப் பிரிவின் வேலை என்றும் சிலர் சந்தேகம் எழுப்புகிறார்கள்.

ஆனால், ஒன்பது ஆண்டுகள் கடந்தும் இந்த மர்மத்தை உடைக்க எந்தத் துப்பும் கிடைக்கவில்லை.



என்னதான் மீனுக்கு நீந்த தெரிஞ்சாலும் அதால மீன் குழம்பு புல நீந்த முடியாது.



வாங்க.. வாங்க..! நீங்க மாப்பிள்ளை வீட்டுக்காரரா? பொண்ணு வீட்டுக்காரரா..?"
"ம்ம்.. நான் பொண்ணோட பழைய வீட்டுக்காரர்..!"



ஒரு ஆளு ஒரு காக்கா வளர்த்தானாம், அந்த காக்காவ தொட்டா ரொம்ப ஸாப்ட்டா இருக்குமாம். அவன் அதுக்கு என்ன பேர் வைப்பான்? MY CROW SOFT



மனைவி : அரை மணி நேரமா நான் நாயா கத்துறேன். நீங்க பேசாம இருந்தா என் னங்க அர்த்தம்?

கணவன் : எனக்கு நாய் பாஷை தெரியா துனு அர்த்தம்.



கோபு : ஒட்டப்பந்தயத்துல தங்க மெடல் வாங்கினா "ஊக்க மருந்து"ன்னு சொல்லி தடை செஞ்சிடுறாங்க. சரி கடைசில வந்தவங்களையும் ஏன் செக் பண்றாங்க?

பாபு : இவங்க ஏதாவது "தூக்க மருந்து" சாப்பிட்டு இருப்பாங்களோன்னுதான்.



நோயாளி : டாக்டர் டாக்டர் எனக்கு பாத்து நாளா ஒரே இருமல் டாக்டர்

டாக்டர் : இருமல் வந்து பத்து நாளா என்னையா செய்து கொண்டிருந்தாய்

நோயாளி : இருமிக்கொண்டிருந்தேன் டாக்டர்

டாக்டர் : ???



நண்பர் 1 : பரவாயில்லையே நாங்க எவ்வளவு அடிச்சும் உங்க பையனுக்கு "ழ" வரவே இல்லை. இன்னிக்கு கரெக்டா சொல்றானே. என்ன செஞ்சீங்க?

நண்பர் 2 : நீங்க எவ்வளவு அடிச்சும் வராத "ழ" அவன் தண்ணியடிச்சதும் தானா வந்துடுச்சு.



உன்னை நாளைக்கு காலைல 5 மணிக்கு தூக்குல போடப்போறோம்.
ஹா ஹா ஹா எதுக்கு சிரிக்கற?
நான் எழுந்துக்கறதே 9 மணிக்குத் தானே?



சீடன் : குருவே நீங்கள் புலி தோலின்மேல் உட்காருகிறீர்களே ஏன்??

குரு : புலியின்மேல் உட்கார்ந்தால் புலி கடித்துவிடும் அதான் இதில் உட்காருகிறேன்.



ஒருவன் : உன்னை கடிச்ச கொசுவை ஏன்டா அடிக்காம விட்டுட்டே

மற்றொருவன் : அதுக்குள்ள என் ரத்தம் ஓடுதுடா அதான் விட்டுட்டேன்.



வாங்க.. வாங்க..! நீங்க மாப்பிள்ளை வீட்டுக்காரரா? பொண்ணு வீட்டுக்காரரா..?" "ம்ம்.. நான் பொண்ணோட பழைய வீட்டுக்காரர்..!" ஒருத்தரைச் சிரிக்க வைக்க முயற்சி செஞ்சேன்.. கொலை முயற்சின்னு உள்ளே தள்ளிட்டாங்க.. ஏன்..? "பஸ்ஸில் தொங்கிட்டு வந்தவரை கிச்சுக் கிச்சு மூட்டக்கூடாதாம்.



எதுக்கு ஓட்டைக் குடையை எடுத்துட்டு வந்திருக்கீங்க? இல்லேன்னா மழை நின்னுடுச்சுன்னா எப்படித் தெரியும்?



என்னோட காதலிக்கு ஏதாவது பரிசு தரணும். என்ன தரட்டும்? ஒரு தங்க மோதிரம் வாங்கிக்கொடு. வேற ஏதாவது பெரிசா சொல்லு. ஒரு பெரிள டயர் வாங்கிக்கொடு.

# மலேசியாவில் இனிய நந்தவனம் இலக்கிய சங்கமம்

திருச்சி யிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் மாத இதழ் ஏற்பாட்டில் இலக்கிய சங்கமம் நிகழ்வும் இனிய நந்தவனம் 27வது ஆண்டு மலர் அறிமுகமும் மலேசியாவில் கோலாலம்பூர், செந்தூல் முத்தமிழ் படிப்பகத்தில் 20 5 2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. முத்தமிழ் படிப்பக செயலாளர் விலயா மணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழறிஞர் அரசேந்திரன் இனிய நந்தவனம் முதல் பிரதியை வெளியிட டத்தோ டாக்டர் கலைவாணர் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார் இவர் பேசும் போது உலகத்தில் பலவிதமான அருங்காட்சியகங்கள் இருக்கின்றன . ஆனால் தமிழர்களின் அடையாளத்தை காட்டக்கூடிய தமிழர்களுக்கான அருங்காட்சியகம் எங்கும் இல்லை அதை உருவாக்க உலகத்தமிழர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்

மலேசியா தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் மோகனன் பெருமாள் சிறப்புரையாற்ற கவிஞர் ந.பச்சை பாலன், முனைவர் ராஜகோபால். எழுத்தாளர் மகேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாட்டிலிருந்து நிகழ்வில் கலந்து கொண்ட ஒசூர் அறம் இலக்கிய அமைப்பின் தலைவர் அறம் கிருஷ்ணன், புலவர் தி.வே. விஜயலட்சுமி, கவிஞர் நேசா ஆகியோர் கருத்துரை வழங்க புலவர் நாச்சியப்பன் கவிதை வாசித்தார் , முன்னதாக இனிய நந்தவனம் மாத இதழின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார், மலேசியா எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.









# சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா











கொழும்பு 10, மாளிகாவத்தை லக் செத செவன தொடர்மாடி குடியிருப்பில் இயங்கும் சன சமூக இளைஞர் மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிறன்று சித்திரை புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை இங்கே காணலாம்.

## இன்று வலம்புரி கவிதா வட்டத்தின்

# 100 ஆவது கவியரங்க விழாவும் "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும்

வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டத்தின் 100 ஆவது கவியரங்க விழாவும் "வகவ க் கவிதைகள்" நூல் வெளியீடும் இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு, கொழும்பு 7 ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தில் நடைபெறும். வலம்புரி கவிதா வட்டத் தலைவர் என். நஜ்முல் ஹுஸைன்





தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக ஈஸ்வரன் பிரதர்ஸ் அதிபர் கணேஷ் ஈஸ்வரன் கலந்து கொள்கிறார்.



வகவ சிரேஷ்ட ஸ்தாபகர், சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர்கனி முன்னிலை வகிக்கிறார்.

சிறப்பு அதிதிகளாக தினகரன், தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், வீரகேசரி மற்றும் வீரகேசரி ஞாயிறு வெளியீடு பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் சிவா ராமசாமி, ஞானம் ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஷியா, கெப்பிட்டல் டிவி/ கெப்பிட்டல் எப்.எம். பிரதானி ஷியாஉல் ஹசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா விசேட பேச்சாளராக பங்கேற்கிறார். கலாபூஷணம் தமிழ்த்தென்றல் அலி அக்பர் தலைமையில் 100 ஆவது கவியரங்கம் இடம்பெறும்.

இந்நிகழ்வின் போது வகவக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும் இடம்பெறும்.

வகவப் பொருளாளர் ஈழகணேஷுக்கு வகவ விருதும் வழங்கப்படும்.

வலம்புரி கவிதா வட்டச் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

# "மதுர கீதங்கள்" மாபெரும் இசை நிகழ்ச்சி











இலங்கை வானொலி தென்றல் எப். எம். ஏற்பாட்டில் 14 வது "மதுர கீதங்கள்" மாபெரும் இசை நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை விசாரத, கலாபூஷணம் ஏ. மகேந்திரன் மாஸ்டர் நெறியாள்கையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. நிகழ்வில் அதிதிகள் மங்கள விளக்கேற்றுவதையும் பொலிஸ்மா அதிபர் சார்பாக கலந்துகொண்ட மேல்மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்ன கௌரவிக்கப்படுவதையும், பிரபல பாடகர்கள் கலைஞர் கலைக்கமல், பிரகாஷ், பிரஷாந்தினி பாடுவதையும் பொலிஸ்மா அதிபரின் வாழ்த்துச் செய்தியை பிரதி பொலிஸ்மா அதிபர் வாசிப்பதையும் படங்களில் காணலாம்.



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்



இலங்கையின் பிரபல பாடகிகள்

வாசகர்களின் அழகான தருணங்களில் எடுத்த செல்பி படங்களை செந்தூர வார இதழுக்கு 077 312 454 3 என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

# கலையும் இலக்கியமும் வாழ்வை மேம்படுத்தும் அற்புதமான கருவிகள்

## திரைப்பட, ஆவணப்பட இயக்குனர் சிறுகதை எழுத்தாளர் ஹஸீன் ஆதம்

**உங்களது சொந்த இடம் , இலக்கியப் படைப்புகள் மற்றும் சினிமா பிரவேசம் சம்பந்தமான தொடர்புகள் பற்றிய விபரங்களை ஒரே பார்வையில் தாருங்கள்?**



நான் அக்கரைப்பற்றை பிறப்பிடமாகக் கொண்டவன். சிறு வயதில் இருந்து நூல்களை விரும்பி வாசிக்கும் பழக்கம் உள்ளவன். எல்லாவற்றையும் வாசிப்பவன் என்பதை விடவும் நெறிப்படுத்தப்பட்ட வாசிப்பு பழக்கம் இளவயதில் நண்பர்கள் மூலமாக கிடைத்தது. அந்த வாசிப்பு சிறுகதைகளை எழுத வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்தியது. முதல் கதையை எழுத சகோதரியும் தூண்டுதலாக இருந்தார். முதலில் சிறியதும் பெரியதுமாக எட்டுக்கதைகள் என்ற கதை தொகுப்பு வெளியானது. பின்னர் அது விரிவாக்கம் பெற்று பூனை அனைத்தும் உண்ணும் கதை தொகுப்பு வெளியானது. அந்த கதை சொல்லும் ஆற்றல்



திரையில் இருந்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணம் திரைப்பட இயக்குநராக வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. அதற்கான சில குறும்படங்களை செய்து பார்த்ததும் விரிவாக சினிமாவை கற்றால் நல்லது என்ற எண்ணம் வந்தது. இந்தியா வந்து முயற்சிக்க தோன்றியது. அதன் பயனாக தங் கர்பச்சான் வெற்றிமாறன் இருவரிடமும் உதவி இயக்குநர்களாக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

**நீங்கள் உதவி இயக்குநராக இருந்திருக்கிறீர்கள். அதன் அனுபவத்தை கூற முடியுமா?**

தமிழ்நாட்டில் உதவி இயக்குநராக இருப்பது என்பது ஒரு வாழ்க்கை முறை. நாம் ஆயுளுக்குமான பாதையை தேர்ந்தெடுத்து செல்வது. நமது ஆளுமைப் பண்பை வளர்ப்பதற்கான முகாந்திரமான இயக்குநர்களை தேர்வு செய்கிறோம் என்ற பெரிய பொறுப்பு இல்லாமல்தான் அவர்கள் கீழ் பணியாற்ற ஆரம்பிக்கிறோம். அவர்கள் ஆளுமை பண்பு நமக்குள் நிச்சயம் உள்வாங்கப்பட்டு வாழ்க்கையை பார்க்கும் தன்மையும் செயல் திறனும் வளர்கிறது. அவர்களோடு வேலை செய்யும் காலம் கற்கும் காலம் என்பதால் வருவாய் குறைவாக இருப்பதால் அதனால் வரும் பொருளாதார அழுத்தங்களை எதிர் கொள்வது சிரமமாகவும் இருந்தது. தமிழ் நாட்டு வாழ்வனுபவமும் நண்பர்கள் கிடைத்ததும் தமிழ் வாழ்வின் பெரும் பரப்பை நீக்கமற அனுபவிக்க கிடைத்ததும் மகிழ்ச்சி.

பேசாத சினிமா பேசத்தொடங்கி இன்று கிராபிக்ஸ் வரை பல மாற்றங்கள் இல்லையா...இன்றைக்கு இந்த சினிமா எந்தளவுக்கு சமூகத்திற்கு பயனுள்ள வழிகாட்டியான விடயங்களை தருகிறது? எல்லாம் வியாபார நோக்கிலா பார்க்கப்படுகிறது ?

சினிமாவில் நல்ல விசயங்களை கண்டிப்பாக சொல்ல வேண்டி இருக்கிறது. அதைத்தான் பார்வையாளர்கள் இறுதியாக எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள். அதுதான் அவர்கள் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தும். ஆனால் அதற்கு இடையில் நீண்டகாலம் சினிமாவை நுகர்ந்து பழகியவர்களை பார்வையாளர்களாக வைத்திருக்க உணர்வுகளை ஏற்படுத்த கையாளும் உத்திகள் வழி தவறி போயும் விடுகிறது. அறத்தை போராடி நிலை நிறுத்த முயற்சிக்கும் எண்ணமுள்ளவர்கள் முன்னரை விடவும் அதிகம் உள்ள காலம் என்று கூட நினைக்கத் தோன்றுகிறது.



**சர்வதேச அளவில் கவனம் பெறுவதற்காக இன்று பல கலைஞர்கள் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. உங்களை நிலை நிறுத்தி கொள்ள நீங்கள் எதிர் கொண்ட சவால்கள் பற்றி கூறுங்கள் ?**

இப்போது தமிழ் திரைப்படம் என்பது உலகப்படங்கள் திரையிடப்படும் முக்கியமான திரைப்பட விழாக்களில் சாதாரணமாக திரையிடப்படுகின்றன. சுமார் பதினைந்து வருடமாக இந்த போக்கு உருவாகி உள்ளது. அதன் தொடர்ச்சியாக வந்த திரைப்படங்களில் முக்கியமானது கூழாங்கல் திரைப்படம். அது எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைக்கும் புதிய திரை மொழியுடன் வந்திருந்தது. அதன் ஒளிப்பதிவாளர் விக்னேஷ் உடன் அவர் இயக்கிய திரைப்படத்துக்காக *Melbourne film festival* இல் நல்வாய்ப்பாக. அமைந்தது.



அதோடு உலகில் எல்லா நாட்டு படங்களையும் தேடி பார்க்கிறோம். உலகின் முக்கிய எழுத்தாளர்களினது எழுத்தையும் ஆழ்ந்து படிக்கிறோம்.

**பூனை அனைத்தும் உண்ணும் ‘ என்ற சிறுகதை தொகுப்பின் மூலமாக சமூகத்தில் ஆளுமை மிக்க எழுத்தாளராக இனங்காணப்பட்டிருக்கிறீர்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் எழுத்துக்களில் நிலைநாட்டிக் கொண்ட மாற்றம் முன்னேற்றம் என்ன ?**




எழுத்து நம்மை இந்த வாழ்வை நின்று ஒரு தரம் பார்க்க செய்கிறது. நமக்கு பார்வை இருப்பதால் எழுதுகிறோம் எழுதுவதால் ஒரு பார்வை உருவாகிறது. அது நமக்கும் பிறருக்கும் உதவியாக இருக்கிறது.

**Broken Board குறுந்திரைப்படத்தை கூறுங்கள் .....அத்தோடு உங்களது ‘ செங்கவெள்ளை’ சிறுகதையைப் பற்றியும் சொல்ல முடியுமா?**

அந்த குறும்படத்துக்கு அவுஸ்திரலிய அரசாங்கத்தின் விருது கிடைத்தது. ஒன்று இரண்டு நாள் இடைவெளியில் செய்து முடித்தது. முக்கி யமான செய்தி அதில் அடங்கி இருக்கிறது. கடல் மார்கமாக அவுஸ்திரேலியா செல்வதில் இருக்கும் சிக்கல் பற்றியது.

*You tube* யில் பெருந் தொகையினாரால் பார்க்கப்பட்டது. செங்கவெள்ளை கதை பற்றி கேட்டீர்கள் அது காடு சார்ந்த வாழ்க்கை அனுபவத்தை பெறுவதற்கான நல்ல கதை. மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இலங்கை கதைகளில் தொகுப்பாக வந்த நூலில் இடம் பெற்றிருக்கிறது. அதை ஒலி வடிவமாக பதிவேற்றி இருந்தார்கள்.



கேட்பதற்கு அவ்வளவு இனிமையாக அழகாக இருந்தது.

**இப்போது தனியாக ஒரு முழுநீள திரைப்படத்தை இயக்க இருக்கிறீர்கள் ...அக்கதையின் கருப்பொருள் இலங்கையுடன் சம்பந்தப்பட்டதாக இருக்குமா?**

இல்லை.முதலில் இலங்கை கதை ஒன்று பண்ணுவதாக இருந்தது. அப்புறம் முதலில் இதை பண்ணுவதே தயாரிப்பு விடயங்களில் சாதகமாக இருந்ததால் இந்த கதை முடிவானது, முழுமையாக தமிழ் நாட்டில் நடைபெறும் கதையாக அது இருக்கின்றது.

**இலங்கையில் படம் தயாரிக்கும் எண்ணம் உள்ளதா...வர்த்தக ரீதியில் இலங்கை தமிழ்ப் படத்தின் வெற்றி எப்படி உள்ளது.. சர்வதேச ரீதியில் எப்படி பேசப்படுகிறது..?**

இலங்கை தமிழ்ப் படத்தில் கோமளி கிங் திரைப்படம் அண்மையில் எடுக்கப்பட்டு வர்த்தக ரீதியாக முறையாக திரைக்கு வந்த திரைப்படம்.மக்களை சென்று அடைவதில் பல சிக்கல்களை எதிர் கொண்டது. நாம் இங்கு இருந்து ஒரு திரைப்படத்தை எடுத்து வியாபார ரீதியாக வெற்றி பெறுவதற்கு வேறுமாதிரி திட்டமிட வேண்டும் என்று தோன்றியது..

**நீங்கள் ஒரு தயாரிப்பாளராக இயக்குநராக இருக்கிறீர்கள். மேலும் பாடலாசிரியராக, ஒளிப்பதிவாளராக, நடிகனாக என்றும். வலம் வருகிறீர்களா?**

இயக்குநராக வலம் வருவதே பெரிய பணியாக இருக்கிறது முதலில் அதில் நல்ல பெயர் வாங்குவோம்.

**உங்களுக்குக் கிடைத்த விருதுகள் மற்றும் இறுதியாக நேர்காணலில் சொல்ல விரும்புவது என்ன?**

என்னுடைய கதைளைப் பற்றி நண்பர்கள் விரிவாக எழுதி இருக்கிறார்கள். அவற்றை தொகுத்து மூன்றாம் பதிப்பில் பிற் சேர்க்கையாக வைத்திருக்கிறோம். அவையே எனக்கு கிடைத்த உயரிய விருதாக நினைக்கிறேன்.

இறுதியாக இந்த நேர்காணலில் சொல்ல விரும்புவது செந்துாரம் இதழுக்கு நன்றி. அத்தோடு கலையும் இலக்கியமும் வாழ்வை மேம்படுத்தும் அற்புதமான கருவிகள் அதற்கு வாசிப்பும் திரைப்படம் பார்ப்பதும் இன்றி அமையாத விடயங்கள்.



பாத்திமா நஸீரா


# 15 நாடுகளுக்கு மேல் பயணம் செய்து 18 நூல்களை வெளியிட்டதில் பெருமிதம்

## தினகரன் அலுவலகம் வந்த எழுத்தாளர் திருநெல்வேலி சங்கரன்கோவில் அருணகிரி

எழுத்தை ஆ ளக்கூடிய ஒரு எழுத்தா ள ர், வரலாற்றுச் சிற ப்பு மிக்க எழுத்தாளர், காலத்தை வென்ற ஒரு எழுத்தாளர் என எழுத்துலகில் எல்லையற்ற நிலையில் திருநாமங்கள் பலவற்றை பெற்று ஒளிமயமாக எழுதி வருகின்ற ஒரு எழுத்தாளர் பழநிசாமி அருணகிரி. இவரது தந்தையாரும் ஒரு எழுத்தாளர். தந்தையின் வழியில் தனக்கென ஒரு தனி வழியைப் பின்பற்றி எழுதி வருகிறார் இவர் கடல் கடந்த நாடுகளுக்கு எல்லாம் சென்று அந்தந்த நாடுகளின் அருமை பெருமைகளை எல்லாம் அலசி ஆராய்ந்து அந்நாடுகளின் அருமை பெருமைகளை எல்லாம் எழுதி நூல்களாக வெளியிட்டு வருகின்றார்.



திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலைச் சேர்ந்தவர் இவர். 1984ஆம் ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டு வரை இரண்டு வருட காலம் பூட்டான் நாட்டில் உள்ள உருக்கு நிறுவனத்தில் டொலமைட் சுரங்கத்தில் கடமையாற்றினார்.



1987ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகாலம் டில்லியிலுள்ள இன்டோ டைனமிக்ஸ் என்ற தனியார் நிறுவனத்தில் கடமையாற்றி இருக்கின்றார்.

இவரின் நிர்வாகத்திறனும் எளிமையும் அவருடைய பலம் என்றாலும்

அவரின் தனித்துவம் ஒன்று இருக்கின்றது. தன் கொள்கைகளை எதற்கும் சமரசம் செய்யாமல் வாழ்ந்து இருக்கின்றார். ஆனால் பொது நிகழ்விற்காக அனைவருடனும் இணைந்து செயல்படுவது மற்றும் எல்லோரையும் சமமாக நடத்துவது இந்த பழக்கம் அரசியலுக்கு வரும் அனைவரிடம் இருக்க வேண்டியது. மாநில அரசின் திட்டங்களை மக்களுக்கு ஏற்றவாறு மாற்றுதல் போன்றவை கொஞ்சம் சிக்கலான பணி உள்ளாட்சிப் பிரதிநிதியின் தொலைநோக்கு பார்வையால் மட்டுமே இது சாத்தியம். தன் திட்டங்களை மாநில அரசின் திட்டங்களாக மத்திய அரசின் திட்டங்களாக மாற்றும் தன்மை கொண்டவர். இறுதிவரை நகர் மன்றத் தலைவர் பதவியைத் தாண்டி வரவில்லை என்பது ஆச்சர்யமே. ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் என்ற நூலையும் இவர், விகடன் பிரசுரமாக வெளியிட்டுள்ளார். அதில் கவிஞர் காசி ஆனந்தன், எஸ். பொ. மறவன்புலவு, சச்சிதானந்தன், மாஸ்டர் நவம், கே. ஜி. மகாதேவா, யாழூர் துரை, நூல் கேட்டும் செல்வராஜா, வ. ஐ. ச. ஜெயபாலன், அந்தனி ஜீவா, வீரகத்தி தனபாலசிங்கம், ஆகியோரைப் பற்றியும் அவர்களைப் போன்று மேலும் பலரைப் பற்றியும் எழுதியுள்ளார்.

18 ஆய்வு நூல்களை வெளியிட்டு 107 நூல்களை தாமே தட்டச்சு செய்து பதிப்பித்து இலக்கிய உலகைச் சுற்றி வலம் வரும் இந்த தமிழ் இலக்கிய நாயகன் 15 நாடுகளுக்கு மேல் பயணம் செய்துள்ளார். இவர் எழுதிய நூல்களில் இவர் முதன்முதலில் எழுதிய நூல் உலகம் சுற்றும் வாலிபன். அமெரிக்க, இங்கிலாந்து, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளைப் பற்றி எழுதியுள்ளார்.

இந்த நாடுகளின் சிறப்புக்களையும் பற்றியும் அந்த நாடுகளில் தாம் பெற்ற அனுபவங்களைப் பற்றியும் அந்த நூலில் எழுதியுள்ளார். இவரது இரண்டாவது நூல் ஆல்ட்ஸ் மலையில் அருணகிரி. இதில் நோர்வே, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பெற்ற பயண அனுபவங்களைப் பற்றி எழுதியுள்ளார். அவற்றோடு அவர் தனது வெளிநாட்டு சுற்றுலாப் பயணங்களையும் அந்தந்த நாடுகளில் தாம் பெற்ற அனுபவங்களையும் அவர் நிறுத்திவிட வில்லை,




ஜப்பான், சீனா, ஹொங்கொங், மகால் ஆகிய நாடுகளுக்கு சென்றதைப் பற்றியும் எழுதி ஜப்பானில் அருணகிரி என்ற நூலை எழுதி வெளியிட்டார். இவர் அடிக்கடி விமானத்தில் பயணம் மேற்கொண்டு சென்று வந்ததால் விமானம் குறித்தும் ஆய்வு செய்து "வாங்க பறக்கலாம்" என்ற தொனிப் பொருளில் விமானங்களைப் பற்றி நூலொன்றை எழுதி வெளியிட்டார். விமானங்கள் பற்றி தமிழில் எழுதப்பட்ட முதலாவது நூல் இது என்ற பெ ரு மை ை ய பெற்றுள்ளது.



ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு வி மா ன த் தி ல் பறந்து வந்தவர் விமானங்களைப் பற்றி எழுதியது போல் அந்த மான் தீவுக்கு கப்பலில் சென்று வந்த அருணகிரி "அந்தமானில் அருணகிரி" என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

இவர் தமிழகத்தில் இருந்தாலும் 37 வெளிநாடுகளில் பணியாற்றுகின்றவர்களைப் பற்றி எழுதி "உலக வலம்" என்ற பெயரில் நூலொன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்த 37 நாடுகளுக்கும் சென்று வந்தவர்களிடம் அவர்களின் அனுபவங்களை கேட்டு அறிந்து இந்த நூலை வெளியிட்டுள்ளார். ஆசியா, ஐரோப்பா ஆகிய நாடுகளைப் பற்றி எழுதி நூல்களை வெளியிட்டு வந்த இவர், 22 கிழக்கு ஆசிய நாடுகளைப் பற்றி எழுதி வெளியிட்ட நூல் கிழக்கின் கதை.

உலக அளவில் மிகவும் பிரபல்யம் பெற்ற சதுரங்கம் போட்டி பற்றியும் அதன் விதிமுறைகள் பற்றியும் தமிழில் முதன் முதலில் நூலொன்றை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவரும் இவர் தான்.

இது போல, "நாடாளுமன்றத்தின் கதை", என்ற நூலை எழுதி வெளியிட்டவர், தனது ஊரான சங்கரன்கோவிலைப்பற்றியும் அதன் நகர வரலாறுப் பற்றியும் "சங்கரன்கோவில்" என்ற தலைப்பில் நூலொன்றை எழுதி வெளியிட்டார். 25 ஆண்டுகளில் 15 ஆயிரம் பேரைச் சந்தித்து அவர்களைப் பற்றி எழுத்தில் பதிவு செய்த ஒருவர் இவர். 15க்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணம் செய்துள்ள இவர், 107 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இவருடைய எட்டுப் படைப்புகளை விகடன் பதிப்பகம் வெளியிட்டு இருக்கின்றது. தாம் பெற்ற இன்பம் பெற வேண்டும் இந்த வையகம் என்ற நன்னோக்கத்தோடு எல்லோரும் எழுத வேண்டும் என்ற குறிக்கோளுடன் 17 புதிய எழுத்தாளர்களை இவர் உருவாக்கி இருக்கிறார்.


இவ்வாறு பல்வேறு பெருமைகளைப் பெற்ற இந்த இளம் எழுத்தாளர் அண்மையில் எமது லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு வந்து தினகரன் பத்திரிகைப் பற்றியும் தினகரன் வார மஞ்சரி பத்திரிகையை பற்றியும் அறிந்து பெருமிதம் கொண்டார்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# பிரதமர் மோடியாக சத்யராஜ்





பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்க்கை வரலாற்றை தழுவி உருவாகும் படத்தில், நடிகர் சத்யராஜ் பிரதமர் மோடி கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான சத்யராஜ், ‘பாகுபலி’ படத்தின் ‘கட்டப்பா’ கதாபாத்திரம் மூலம் பரவலான கவனத்தை ஈர்த்தார்.

அண்மையில் அவரது நடிப்பில், ‘சிங்கப்பூர் சலூன்’, ‘அன்னபூரணி’ ஆகிய படங்கள் வெளியாகின. அடுத்ததாக அவரது நடிப்பில் ‘வெப்பன்’ திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், பிரதமர் மோடியின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக கொண்டு உருவாகும் படத்தில் சத்யராஜ் பிரதமர் மோடியாக நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து அதிகாரபூர்வமான தகவல்கள் விரைவில் வெளியாகும் எனக் கூறப்படுகிறது.

கடந்த 2007ம் ஆண்டு பெரியார் ஈ.வே.ராமசாமியின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக கொண்ட படத்தில் நடித்திருந்தார் சத்யராஜ். அந்தப் படத்துக்கு ‘பெரியார்’ என தலைப்பிடப்பட்டிருந்தது. தற்போது அவர் பிரதமர் மோடி கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

# “கதைகளைப் புனைவது வருத்தமளிக்கிறது” சைந்தவி வேதனை



“தாங்கள் பெற்ற செய்திகளின் அடிப்படையில் கதைகளைப் புனைவதைப் பார்ப்பது வருத்தமளிக்கிறது. குறிப்பாக நாங்கள் ‘ப்ரைவேசி’யை கோரிய பிறகும் இந்த நிலை தொடர்கிறது” என சைந்தவி ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், “பல யூடியூப் வீடியோக்களைச் சேர்ந்தவர்கள் தாங்கள் பெற்ற செய்திகளின் அடிப்படையில் கதைகளை புனைவதைப் பார்ப்பது வருத்தமளிக்கிறது. குறிப்பாக நாங்கள் ‘ப்ரைவேசி’யை கோரிய பிறகும் இந்த நிலை தொடர்கிறது.

எங்கள் விவாகரத்து என்பது எந்தவொரு வெளிப்புற சக்தியினாலும் நிகழ்ந்தது அல்ல. மேலும் ஆதாரமற்ற முறையில் ஒருவரை மோசமாக சித்தரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த முடிவு எங்கள் முன்னேற்றத்திற்காக நாங்கள் இருவரும் பரஸ்பரம் சேர்ந்து எடுத்த முடிவு.நானும் ஜி.வி.பிரகாஷும் பள்ளிப் பருவத்தில் இருந்தே 24 வருட நண்பர்கள். அந்த நட்பை தொடர்ந்து பேணுவோம்” எனப் பதிவிட்டுள்ளார்.

இதனை பகிர்ந்து கருத்து தெரிவித்துள்ள ஜி.வி.பிரகாஷ்குமார், “தங்களின் சொந்த அனுமானங்களின் அடிப்படையில் சேனல்கள் சொல்லும் கதைகள் உண்மைக்கு புறம்பானது. மேலும் சிலர், தங்களின் சொந்த கற்பனை மற்றும் கதைகளின் அடிப்படையில் சிலரின் குணாதியசங்களை மோசமாக சித்தரித்து குளிர் காய்கிறார்கள். இவர்களைத் தவிர எங்களின் கடினமான காலத்தில் ஆதரவளித்த மற்றவர்களுக்கு நன்றி” என தெரிவித்துள்ளார்.

ஜி.வி.பிரகாஷ் சைந்தவி விவாகரத்து: இசை அமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமார், தனது பள்ளித் தோழி சைந்தவியை காதலித்து வந்தார். கடந்த 2013ம் ஆண்டு இவர்கள் திருமணம் சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவர்களுக்கு 4 வயதில் அன்வி என்ற மகள் இருக்கிறார். இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் சகோதரி ரெஹானாவின் மகனான ஜி.வி.பிரகாஷ் இசை அமைப்பதோடு படங்களில் ஹீரோவாகவும் நடித்து வருகிறார்.

சைந்தவி, பின்னணி பாடி வருகிறார். ஜி.வி.பிரகாஷுக்கும் சைந்தவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதை அடுத்து கடந்த 6 மாதமாக பிரிந்து வாழ்வதாகக் கூறப்பட்டது. இவர்கள் இருவரும் அதனை அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சில யூடியூப் மற்றும் செய்தி நிறுவனங்களில் தவறான தகவல்கள் பரப்பபட்டதற்கு எதிராக இருவரும் தற்போது கருத்து தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உருவக்கேலி விமர்சனங்களுக்கு அன்னா ராஜன் பதில்



“நான் நோயுடன் போராடிக் கொண்டிருக்கிறேன். இருந்தபோதிலும், வீட்டில் முடங்கிவிடாமல் தொடர்ந்து என்னால் முடிந்தை செய்து கொண்டிருக்கிறேன். பிடிக்கவில்லை என்றால் தவிர்த்து விடுங்கள்” என மலையாள நடிகை அன்னா ராஜன் தன் மீதான உருவக்கேலி விமர்சனங்களுக்கு பதிலளித்துள்ளார்.கடந்த 2017ம் ஆண்டு திரையரங்குகளில் வெளியாகி வரவேற்பை பெற்ற மலையாள படமான ‘அங்கமாலி டைரீஸ்’ படத்தில் லிச்சி கதாபாத்திரத்தின் மூலம் கவனம் பெற்ற நடிகை அன்னா ராஜன். அவர் ஆட்டோ இம்யூன் தைராய்டு (autoimmune thyroid) நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தனது உடல் எடையில் ஏற்ற இறக்க மாற்றங்கள் நிகழும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நடனமாடி வெளியிட்டிருந்த வீடியோவை பலரும் ட்ரால் செய்தனர். மேலும், உருவக்கேலி தொடர்பான கருத்துகளை வெளியிட்டனர். இது தொடர்பான விமர்சனங்கள் குறித்து பேசியுள்ள அவர், “உங்களுக்கு என்னுடைய வீடியோ பிடிக்கவில்லை என்றால் கருத்தை பதிவிடுங்கள். அதை விடுத்து மோசமான உருவக்கேலி தொடர்பான கமெண்டுகளை பதிவிடுவது வருத்தமளிக்கிறது.நான் ஆட்டோ இம்யூன் தைராய்டு நோயுடன் போராடிக் கொண்டிருக்கிறேன். சில நேரங்களில் என் உடலில் எடை கூடும். சில நேரம் எடை குறையும். கடந்த 2 ஆண்டுகளாக மூட்டுவலி, உடல் வீக்கம் உள்ளிட்டவற்றால் அவதிப்பட்டு வந்த போதிலும், நான் வீட்டில் எதுவும் செய்யாமல் அமைதியாக முடங்கிப் போகவில்லை. என்னால் முடிந்ததை சிறப்பாக செய்துவருகிறேன். உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் தவிர்த்துவிடுங்கள்” என தெரிவித்துள்ளார்.அன்னா ராஜனை பொறுத்தவரை, ‘அங்கமாலி டைரீஸ்’ படத்தில் அறிமுகமானவர், ‘மதுர ராஜா’, ‘அய்யப்பனும் கோஷியும்’, ‘ரெண்டு’ உள்ளிட்ட படங்களில் நடித்து கவனம் பெற்றவர். கடைசியாக 2022ஆம் ஆண்டு வெளியான Z‘திரிமலி’ படத்தில் நடித்திருந்தார்.

# “ரசிகர்களே எனது பலம்!” மம்மூட்டி



“எனது ரசிகர்களே என்னுடைய மிகப் பெரிய பலம். 42 ஆண்டுகளாக அவர்கள் என்னை கைவிடவில்லை” என நடிகர் மம்மூட்டி நெகிழ்ச்சியாக பேசியுள்ளார்.மம்மூட்டி நடிப்பில் உருவாகியுள்ள ‘டர்போ’ மலையாள படத்தின் புரொமோஷன் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய நடிகர் மம்மூட்டி, “என்னுடைய மிகப் பெரிய பலம் எனது ரசிகர்கள் தான். 42 ஆண்டுகளாக அவர்கள் என்னை கைவிடவில்லை.

இதன் பிறகும் அவர்கள் என்னை கைவிடமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்” என்றார்.தொடர்ந்து, “டர்போ திரைப்படம் இரண்டு தனி நபர்களின் அனுபவத்தையும், அவர்களின் மோசடியையும் விவரிக்கிறது. இதை நாம் அரிதாகவே கேள்விப்பட்டிருப்போம். ஜோஸ் என்பவர் மாஸ் ஹீரோ இல்லை. அப்பாவியான ஜோஸ் அறியாமல் செய்யும் தவறு தான் படம்.

பின்விளைவுகளைப் பற்றி அறிந்துகொள்ளாமல் எல்லாவற்றிலும் தலையிடுபவர் தான் ஜோஸ்.ஒரு சில சூழ்நிலைகளில் ஒருவருக்கு தன்னையறியாமல் ஒரு பலம் கிடைக்கும். ஜோஸும் அப்படியான ஒரு சக்தியை பெறுவது தான் ‘டர்போ’ திரைப்படம்” என்றார். ‘டர்போ’ படத்தில் மம்மூட்டி ஜோஸ் கதாபாத்திரத்தில் நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# சூர்யாவின் புதிய படத்தில் பூஜா ஹெக்டே



நடிகர் சூர்யா, சிறுத்தை சிவா இயக்கும் ‘கங்குவா’ படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டார். அடுத்ததாக அவர் சுதா கொங்கரா இயக்கும் ‘புறநானூறு’ படத்தில் நடிக்க இருப்பதாக அறிவிப்பு வெளியானது.

இதில் துல்கர் சல்மான் , நஸ்ரியா உட்பட பலர் நடிக்க இருந்தனர்.

இந்நிலையில் இந்தப் படத்துக்கு கூடுதல் நேரம் தேவைப்படுவதால் அதைத் தள்ளி வைப்பதாக அறிவித்தனர்.

இதையடுத்து, சூர்யாவின் 44வது படத்தை கார்த்திக் சுப்புராஜ் இயக்குகிறார்.

இதற்கான அறிவிப்பு சில வாரங்களுக்கு முன் வெளியானது. இதை சூர்யாவின் 2டி நிறுவனம் தயாரிக்கிறது. சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். இதில் சூர்யா ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்க இருக்கிறார்.

இதன் படப்பிடிப்பு ஜூன் 2ம் திகதி அந்தமானில் தொடங்குகிறது. அங்கு 40 நாட்கள் தொடர்ந்து படப்பிடிப்பு நடக்க இருக்கிறது.

# மோடியை புகழ்ந்த ராஷ்மிகா

கடந்த பத்து ஆண்டு கால பிரதமர் மோடியின் ஆட்சியில் இந்தியா கண்டுள்ள வளர்ச்சியை புகழ்ந்து நடிகை ராஷ்மிகா மந்தனா பேசியுள்ளார்.

நாட்டிலேயே மிக நீளமான கடல்வழி பாலமாக அமைக்கப்பட்டுள்ள ‘அடல் சேது’ பாலம் குறித்து இதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2016 முதல் திரைப்படங்களில் நடித்து வருகிறார் ராஷ்மிகா. கன்னட சினிமாவில் என்ட்ரி கொடுத்து தெலுங்கு, தமிழ் மற்றும் இந்தி மொழி படங்களில் தற்போது நடித்து வருகிறார்.

இந்தச் சூழலில் அண்மையில் நேர்காணல் ஒன்றில் அவர் தெரிவித்தது.

“மும்பை நவி மும்பை நகரங்களை இணைக்கும் வகையில் நாட்டிலேயே மிக நீளமான கடல்வழி பாலமாக அமைக்கப்பட்டுள்ளது ‘அடல் சேது’ பாலம். இதன் மூலம் இரண்டு மணி நேர பயணம் இருபது நிமிட பயணமாக மாறியுள்ளது. இது சாத்தியம் என நாம் யாராவது நினைத்துப் பார்த்திருப்போமா?

இதுபோன்ற உள்கட்டமைப்பு வசதிகளால்தான் எளிதில் நம்மால் பயணம் மேற்கொள்ள முடிகிறது.

இது எனக்கு பெருமை அளிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் நாடு கண்டுள்ள வளர்ச்சியைப் பாருங்கள். இது அற்புதமானது.உள்கட்டமைப்பு சார்ந்த திட்டமிடல் அபாரமாக உள்ளது.

இளம் தலைமுறையை கொண்டுள்ள இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியா ஸ்மார்ட்டான நாடு. இளம் பாரதியர்கள் வாக்களிக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு அந்த பொறுப்பு உள்ளது. அவர்கள் சரியான திசையில் பயணிக்கிறார்கள் என மக்கள் நம்புகிறார்கள். இந்த வளர்ச்சி இதோடு நிற்கக்கூடாது. வளர்ச்சிக்காக வாக்களியுங்கள்” என ராஷ்மிகா தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களுக்கு கல்வியை பெற வழிவகுப்பது பெற்றோரின் கடமை

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்.

ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் நல்ல உதவி, அவனைக் கற்றோர் அவையிலே முதன்மை பெற்றவனாக இருக்கச் செய்தலே ஆகும். —புலியூர்க் கேசிகன்

(திருக்குறள் புதிய உரை) தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.



குழந்தை எனும் சொல் மென்மையையும் வெகுளியையும் குறிக்கிறது. தொழிலாளர் எனும் சொல் சுழன்று உழலும் உழைப்பைக் குறிக்கிறது உலகெங்கும் உள்ள பிரச்சினைகளில் குழந்தை தொழிலாளர்கள் பிரச்சினை என்பது தீரா நோயாக இருக்கிறது. இலவச கல்வி சில நாடுகளில் இலவச மத்திய உணவு என்பவற்றைக் கொடுத்தும் பள்ளிக்கு செல்லாமல் தொழிலாளிகளாக மாறும் கொடுமை,

மாற்றும் கொடுமை யாரால் வந்தது என்று சொல்ல முடியும் எல்லா நாடுகளிலும் சட்டவிரோதமாக குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பெரிய சர்வதேச நிறுவனங்களில் கூட இக்கொடுமை நடைபெறுகிறது. குழந்தைத் தொழிலாளர் முறைக்கு முக்கிய காரணம் குடும்ப வறுமையே என்ற வாதத்தை முன்வைத்தனர்.

பல இடங்களில் பெற்றோர் படும் கடனை அடைக்கவும், பொறுப்பற்ற பெற்றோர்களின் காரணமாக வயிற்றுப் பசிக்கும், பராமரிக்க யாருமற்ற அனாதைகளான குழந்தைகளும் தொழிலாளர்களாக மாற்றப் படுகின்றனர். ஆய்வாளர்களின் கண்காணிப்பு இல்லாத இடங்களிலும், பத்திரிகைகளின் கண்களுக்கு எட்டாத வகையிலும் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். எந்த தட்பவெப்பநிலையிலும் குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். குறைந்த சம்பளத்தில் குடும்பச் சூழ்நிலைக்காக பணிபுரிகின்றனர். பாலியல் தொழில், குவாரி, விவசாயம், பெற்றோரின் தொழிலில் உதவுதல் மற்றும் சிறிய வணிகத்தில் (உணவுப் பொருள் விற்பனை) குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். சில குழந்தைகள் சுற்றுலா வழிகாட்டியாகவும், ஓட்டல் மற்றும் கடைகளில் வெயிட்டர்களாகவும் வேலை செய்கின்றனர். சில குழந்தைகள் அட்டை தயாரித்தல், ஷூக்களை பொலிஷ் செய்தல், குடவுனில் பொருட்களை அடுக்குதல், சுத்தம் செய்தல் போன்ற கடினமான பணிகளில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். தொழிற்சாலை மற்றும் இனிப்புக்கடைகளில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் முறைப்படுத்தப்படாமல், மறைமுகமாக பணிக்கு உட்படுத்தப்படுகின்றனர். தெருக்களில் பொருட்களை விற்பனை செய்தல், விவசாயப் பணி செய்தல் போன்ற மறைமுகப் பணிகளில், தொழிலாளர் குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு ஒழுங்குமுறை) சட்டம் 1986, 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை 18 வகையான தொழில்கள், 65 வகையான உற்பத்தி வழிமுறைகள் ஆகியவற்றில் ஈடுபடுத்துவதை முழுமையாகத் தடை செய்துள்ளது. 14 வயது முடிந்து 18 வயது முடியாத நிலையில் உள்ளவர்களை விடலைப்பருவத்தினர் என்று இந்தச் சட்டம் வரையறை செய்கிறது. குழந்தை தொழிலாளர்களாக வைத்திருப்பவர்கள் பெரும் இலாபம் குறைந்த ஊதியத்தில் கூடிய வேலை வாங்க முடியும். அவர்களின் வயதுக்கு மீறிய செயற்பாடுகளில் ஈடுப்படுத்தி கூடிய வேலை வாங்க முடியும், தொழிலாளர்களுக்கான சட்ட ரீதியான கொடுப்பனவுகளை கொடுக்க வேண்டியதில்லை. போன்ற காரணங்களால் குழந்தை தொழிலாளர்களை அதிகமாக சட்டத்திற்கு புறம்பாக வைத்து கொள்கிறார்கள். சிறுவர்களுக்கான உரிமைகளின் மிகசிறந்த உரிமை கல்வி பெரும் உரிமையாகும். அந்த கல்வியை ஒவ்வொரு பெற்றோரும் இந்த சமூகமும் பிள்ளைக்கு கொடுக்க வேண்டியது அவசியமாகும். சிறுவர்களை தொழிலுக்கு அனுப்பும் பெற்றோர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அதே போல குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முதலாளிமார்களும் இடை தரகர்களும் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கு நீதியின் தண்டனை கடுமையாக்கப் பட வேண்டும்.

சிறுவர்கள் நாளைய உலகின் தலைவர்கள். அவர்களை கல்வி பாதையில் கடப்பதுக்கு நாம் அனைவரு கைகொடுப்போம்.



கவிஞர் நடராஜா
தாமரைச்செல்வி...

# வளையோசை கலகலவென...



வளைகாப்பில், எல்லோரும் கண்ணாடி வளையலை தான் கர்ப்பிணிப் பெண்ணுக்கு அணிவிப்பார்கள்! கண்ணாடி வளையல் அணிவதற்கு என்ன காரணம்?

அந்த கண்ணாடி வளையல் சத்தம் கேட்டால், குழந்தையின் மூளை வளர்ச்சி அதிகரிக்கும், வாஸ்தவம் தான்! ஆனால், இதில் நமக்குத் தெரியாத அறிவியல் ரீதியான உண்மையும் ஒன்று மறைந்திருக்கின்றது. ஒரு பெண் கர்ப்பம் தரித்த எட்டாம் மாதத்தில் இருந்து, ஒன்பதாம் மாதத்திற்குள் அந்த பெண்ணின் வயிற்றில் இருக்கும் குழந்தை முழுமையான வளர்ச்சியை அடைந்திருக்கும். அந்த சமயத்தில்தான் முறைப்படி வளைகாப்பும் நடத்துவார்கள் அல்லவா? இது நம் நாட்டினுடைய வழக்கம். ஆனால், இதேபோல் மேலைநாடுகளில் ஒரு வழக்கத்தை பின்பற்றி வருகிறார்கள். அது என்னவென்றால், பெண்கள் கர்ப்பம் தரித்த எட்டாம் மாதத்தில் இருந்து ஒன்பது மாதத்திற்குள் அந்தப் பெண்ணின், வயிற்றுப்பகுதியில் டால்பின் எழுப்பும் சத்தத்தை ஒலிக்கச் செய்கிறார்கள். அதாவது டால்பின் எழுப்பக்கூடிய அந்த ஒலி அலை வரிசை, வயிற்றுக்குள் இருக்கும் குழந்தையின், மூளையைத் தூண்டி, அறிவாற்றலை வளரச் செய்வதாக, ஒரு ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த டால்பின் தெரபிக்கு வெளிநாடுகளில், லட்ச லட்சமாக பணமும் வாங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்னவென்றால், அந்த டால்பின் வெளிப்படுத்தும், ஒலி அலை வரிசையும், கண்ணாடி வளையலில் இருந்து வெளிவரும் ஒலி அலை வரிசையும், ஒன்றாக இருக்கின்றது என்பது விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்ட டால்பின் தெரபி சிகிச்சை பற்றிய இந்த தகவல் ஆனது, அந்த காலத்தில் இருந்துவந்த, நம் முன்னோர்களுக்கு எப்படி தெரியும். பல நூறு ஆண்டுகளாக கடைப்பிடித்து வரும் வளைகாப்புக்கு பின்னால், இப்படி ஒரு ஆச்சரியமூட்டும் தகவலை நம்முடைய முன்னோர்கள், விஞ்ஞானம் வளராத காலத்திலேயே எப்படி இதையெல்லாம் கண்டுபிடித்து இருப்பார்கள்? என்று சற்று சிந்தித்துப் பார்த்தால் மெய்சிலிர்க்க தான் செய்கிறது. நம் முன்னோர்கள் செய்த ஒரே ஒரு தவறு என்ன தெரியுமா? அவர்கள் கண்டுபிடித்த விஷயங்களை எல்லாம், நமக்கு சடங்குகள் என்று சொல்லிக் கொடுத்தார்களே தவிர, அவைகளை சைன்ஸ் என்று யாருமே சொன்னதில்லை. அவர்கள் செய்த மிகப் பெரிய தவறு அது ஒன்று மட்டும்தான்.



# வகவம் நூறாவது கவியரங்கின் கருத்துகள்

**வலம்புரி கவிதா வட்டத்தின் நூறாவது கவியரங்க விழா இன்று பி.ப. 3.30 மணிக்கு கொழும்பு 7, ஜே. ஆர். ஜயவர்தன மண்டபத்தில் நடைபெறுகிறது. அந்த வெற்றிப் பயணம் பற்றி வகவத் தலைவர், பொருளாளர், தேசிய அமைப்பாளர் தெரிவித்த கருத்துகள்**

இன்றைய மாலைப் பொழுது வலம்புரி கவிதா வட்டம் தனது நூறாவது கவியரங்கினை விழாவாக கொண்டாடும் இனிய பொழுது. அதற்கு இணையாக 122 வகவக் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து "வகவக் கவிதைகள்" எனும் நூலையும் வெளியிடுகின்றது.

வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டம் கடந்த பத்தாண்டுகளாக ஒரு வெற்றிப் பயணத்தை மேற்கொண்டுள்ளமைக்கு இன்றைய விழா சாட்சிப் பகர்கின்றது.

முடங்கிப் போயிருந்த வகவத்திற்கு 2013 ஆம் ஆண்டு மீண்டும் புத்துயிரூட்டி அது எங்குமே தனது பயணத்தை நிறுத்திவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து இன்று இந்த இலக்கைத் தொட்டிருக்கிறோம். எமது செயற்குழு உறுப்பினர்கள், எமது கவிஞர்கள் இதன் பின்னணியில் தூணாக நின்றிருக்கிறார்கள்; நின்று வருகிறார்கள்.

நூறாவது விழா கொண்டாடுகிறோம் என்றதுமே அதற்கான பொருளாதார உதவியை அவர்களே வழங்கி "கவிஞர்கள் வறுமையின் சொந்தக்காரர்கள்" என்ற வாசகத்தைப் பொய்யாக்கியுள்ளனர். இந்நிகழ்வுக்காக இதுவரை வெளியிலிருந்து ஒரு ரூபாயைக் கூட அனுசரணையாக பெறவில்லை என்பது வகவத்தை நிமிர்ந்து உட்கார வைத்துள்ளது.

அடைமழை பெய்து கொண்டிருக்கும் வேளைகளில் கூட எமது கவியரங்குகள் வழமைபோலவே நடந்திருக்கின்றன. இது கவிஞர்கள் எமது வகவத்தை எத்துணை தூரம் நேசிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இக் கவியரங்க மேடையில் ஏறி நின்று கவிதை பாடுவதை கவிஞர்கள் பெருமையாக நினைக்கிறார்கள். பிரபல கவிஞர்களும் வளர்ந்து வரும் கவிஞர்களும் எமது மேடையை நல்லதொரு களமாக நினைக்கிறார்கள். வேறு மேடைகளில் கவிதை பாடவும் எமது கவிஞர்கள் "வகவக் கவிஞர்கள்" எனும் அடையாளத்தோடு அழைக்கப்படுகிறார்கள்.

எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வகவம் சேதாரமின்றி தொடர்கிறது என்பது சாதனையே. 1981 ல் அது முதலில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதனது மூன்றாவது அமர்விலிருந்து அதில் இணைந்து கொண்ட நான் இந்த பத்தாண்டுகள் அதன் தலைவராக இயங்கி வருகிறேன். தலைவன் என்று சொல்வதை விட அதன் தொண்டனாக இருந்து செயல்பட்டு அதன் பெற்றோர்களை 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கச்' செய்துள்ளேன் என திண்



என். நஜ்முல் ஹுசைன்தலை

ணமாக நம்புகிறேன்.

மீள் ஆரம்பத்தின் முதல் கவியரங்கில் பிரபல தொழிலதிபர் தெ. ஈஸ்வரனுடன் இணைந்து அதிதியாக கலந்து கொண்ட தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரை வகவம் என்றுமே மறக்காது. அன்று எங்களுக்குத் தந்த ஒத்துழைப்பு கிஞ்சித்தும் குறையாது இந்த நூறாவது கவியரங்கு வரை தொடர்கிறது. எம் கவியரங்க மேடைகளில் இதுவரை கவிதை பாடியோர் இருநூறு பேர்வரை இருக்கலாம். அவ்வாறு பாடிய ஒவ்வொரு கவிஞரின் படமும் தினகரனில் இடம்பெற்றிருக்கிறது என்பது மகிழ்ச்சியுடன் பதியப்பட வேண்டிய தகவலாகும். அதற்காக வகவம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டம் புதிய தலைமுறையினரின் பங்களிப்புடன் தனது பயணத்தைத் தொடரும்.

இன்று மாலை 3.30 க்கு கொழும்பு 7, ஜே. ஆர். ஜயவர்தன மண்டபத்திற்கு வருகை தந்து எமது நூறாவது கவியரங்க விழாவையும், "வகவக் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழாவைவையும் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**என். நஜ்முல் ஹுசைன்**
**தலைவர்,வலம்புரி கவிதா வட்டம்**
**(வகவம்)**

தேசியமட்டத்தில் கவிதைக்கான ஓர் அமைப்பு இல்லாத வேளை தலைநகரில் தமிழ்க் கவிஞர்களின் ஒன்றுக்கூடலே வகவம் என்னும் வலம்புரி கவிதா வட்டம். 1981ல் துவக்கம் பெற்றது.

இது தமிழக வானம்பாடிகளை நம் ஞாபகத்திற்கு கொண்டு வருகிறது. ஐந்து தாசப்த கால வரலாறே இன்றைய கவிதைக் கொண்டாடங்களின் அச்சாணி என்றால் பிழையாகாது. நாடளாவிய ரீதியில் இரு நூறுக்கு மேற்பட்ட கவிஞர்களையும், பல பிராந்திய கவியரங்குகளையும், கவிதை கலந்துரையாடல்களையும் வகவம் நிகழ்த்திய சாதனைகள் எனலாம். இடைக்கிடையே ஏற்பட்ட சில சூழ்நிலைகளைத் தவிர்த்துப் பார்த்தால், தொடர்ச்சியாக நூறு கவியரங்குகள் என்பது பத்து ஆண்டு கால சாதனையாகும். இதற்குள் ஒரு கவியரங்கிலிருந்தும் நான் விலகவில்லை என்பது கவிதை மீது எனக்கிருந்த ஆர்வத்தின்

எல்லையாகிறது. நான் மட்டுமல்ல ஒவ்வொரு பௌர்ணமியையும் என்னைப் போன்று கவிதைக்காக செலவளித்தவர்களை நினைத்துப் பார்க்கையில் பெருமையாய் இருக்கிறது. அந்தச் சந்திப்புக்கள் எங்களை

இணைத்த கவிதை பாலங்



– கவிஞர் ஈழகணேஷ்

கள் எனலாம். வகவ வானத்தைப்

பாருங்கள். இங்கு நட்சத்திர கவிஞர்கள் உலாவுகிறார்கள்.

நூற்றி இருபத்திரண்டு கவிஞர்களின் வகவக் கவிதைகள் தொகுப்பு என்பது எமது கவிதை பரப்பில் தனி அடையாளம். இதுவரை எந்தவொரு கவிதையமைப்போ வேறு படைப்பிலக்கிய அமைப்போ உள்ளூரில் இவ்வளவு தொகையினரை கொண்டு வெளியிட்டிருக்குமா என்பது

சந்தேகமே. பல்வேறு இடங்களில் நாங்கள் கவியமர்வு

நடத்தியிருக்கிறோம், பல புதிய அறிமுகங்களைச் சந்தித்திருக்கிறோம்.

நண்பர்களாகி இருக்கிறோமென்றால் வகவம் ஒரு சக்திமிக்க அமைப்பு என்பது கண்கூடு. இது தொடரும்! ஸ்தாபகர்களாகட்டும், தலைவராகட்டும், செயலாளராகட்டும், இவர்களோடு இணைந்த வகவ கைகளின் உதவியே இன்றைய இவ்விழாவின் வெற்றியாகிறது. ஒட்டுமொத்த கவிஞர்களின்உற்சாகமும் உதவியும் என்றும் வகவத்திற்கிருக்கும் வரை இதன் வாசல்கள் திறந்துகொண்டே இருக்கும்.... எல்லோரும் கவிதை வாசிக்க !

**கவிஞர் ஈழகணேஷ்**
**பொருளாளர் வலம்புரி கவிதா வட்டம்**

வலம்புரி கவிதா வட்டம் தனது நூறாவது கவியரங்கினை நடத்துகின்ற வேளை அதன் பயணத்தை எண்ணிப் பார்க்கின்றேன். அந்தப் பயணத்தின் ஆரம்ப முதல் அதனோடு இயங்கியிருக்கின்றேன் என்பதை நினைத்து புளகாங்கிதமடைகிறேன்.

தலைநகரில் தமிழ் வளர்க்கும் ஒரு முன்னணி அமைப்பாக எங்கள் வலம்புரி கவிதா வட்டம் இருக்கின்றது. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று திறந்த வெளி கவியரங்குகளை நடத்தி தமிழின் நாதம் எங்கும் ஒலிக்க வழி வகுக்கின்றது. கடந்த 10 ஆண்டுகளாக அது கொஞ்சமும் சளைக்காது தனது பணியினை முன்னெடுத்து வந்துள்ளது. பல முன்னணிக் கவிஞர்கள் கவிதை பாடும் இந்த மேடையில் பல இளம் கவிஞர்களையும் அறிமுகப்படுத்தி உள்ளது. மேடையில் எவ்வாறு கவிதை பாட வேண்டும் என்ற உத்தியைக் கற்றுக் கொடுத்துள்ளது. மேடையில் கவிதை பாடும் கவிஞன் அதற்கான விமர்சனத்தை உடனடியாகவே பெற்றுக் கொள்கிறான். இது அவனைப் புடம் போடுகிறது. வெறுமனே வரிகளைப் பாடும் கவிஞர்களை உருவாக்



– எஸ். தனபாலன்,

காமல் தரமான கவித்துவமிக்க கவிஞர்களை உருவாக்குவதில் வகவம் முனைப்போடு செயல்படுகிறது.

வகவம் அரச விருதான கலாபூஷணம் விருது போன்றவற்றை எங்கள் கவிஞர்கள் பெறுவதற்கு வழி வகுத்திருக்கின்றது. அது மட்டுமல்ல எமது கவிஞர்கள் உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் கவிதை முழங்கி வருவது இந்த அமைப்பின் சாதனையாகும். இன்று நூறாவது கவியரங்கினை எட்டிப் பிடித்திருக்கும் இந்த வகவத்தின் சாதனைகள் இந்த கவிஞர்களின் ஒத்துழைப்போடு என்றென்றும் தொடரும்.

**எஸ். தனபாலன், தேசிய அமைப்பாளர் வலம்புரி கவிதா வட்டம்**


# பரதக்கலையில் சிறந்து விளங்கும் புலேந்திரன் சசிகாந்தன்



புலேந்திரன் சசிகாந்தன் தென்மராட்சி என்று அழைக்கப்படும் சீர்சால் பதியில் மருதமும் நெய்தலும் மண்டிக் கிடக்கும் கைதடி நாவற்குழி கிராமத்தின் கலையாபரணக் கோட்டையைப் பூர்வீகமாகக் கொண்ட சின்னையா புலேந்திரன் என்பவருக்கும் சைவத்தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலமாகவும், பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகின்ற நல்லூர் கந்தசாமி கோவிலை தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற கிராமமாகவும், சைவப் பெருமக்களின் காவலனாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த இடமாக கொள்ளப்படுகின்ற, கிராமமாகவும் காணப்படுகின்ற நல்லூர் எனும் புனித பூமியை பூர்வீகமாகக் கொண்ட திருமதி அரங்கநாயகி புலேந்திரன் என்பவருக்கும் கனிஷ்ட புதல்வனாக 19800810 அன்று பிறந்தவரே புலேந்திரன் சசிகாந்தன்.

இவருடைய பூர்வீகம் நல்லூர் கிராமமாகக் காணப்பட்டாலும் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக இவரும் இவரது குடும்பத்தினரும் இடம்பெயர்ந்து புகையிரத நிலைய வீதி சுன்னாகம் என்னும் முகவரியில் குடியேறினர்.

பு. சசிகாந்தன் தனது ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயத்திலும் பின்னர் தனது உயர் கல்வியை யா/ கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்றார்.



ஆடல் வல்லானாகிய நடராஜப் பெருமான் உவந்து ஆடுகின்ற பரதக் கலையினை தன்னகத்தே கொண்டு விளங்கினார் இவரது தந்தையார். இவருடைய தாயாரும் நடனக் கலையில் அதிக ஈடுபாடு கொண்டவர். இவர் யா/கனகரத்தினம் மத்திய கல்லூரியில் உயர்தரம் கற்றவர். இவரது குரு கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா ஆவார். தாயாரின் கலை ஈடுபாட்டினாலும், சகோதரியின் கலை ஈடுபாட்டினாலும் (சகோதரி பத்மஸ்ரீ கே. அடையாறு லக்ஷ்மணனின் மாணவியாகிய குணரட்ணம் சிவரஞ்சினி) ஆசிரியரிடம் கற்று கலையிலே ஈடுபாடு கொண்டதன் காரணத்தினாலே தனது சகோதரனை நடன ஆசிரியராக ஆக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் நடனக் கலையை தரம் ஆறு தொடக்கம் தரம் பதின்மூன்று வரை மிகுந்த ஆர்வத்துடனும், பக்தி சிரத்தையுடனும் கற்பித்தனர். இவருடைய கலையின் வளர்ச்சிக்கு தந்தையும், சகோதரர்களும், சிறிய தாயாரும் உறுதுணையாக நின்று தோள் கொடுத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஆடல் வல்லானாகிய நடராஜப் பெருமானின் கலையினை மனப்பூர்வமாக ஏற்று. நாட்டியக் கலாவித்தகர் ஸ்ரீமதி ஜெயந்தி சுகிர்தன் என்பவரிடம் பரதநாட்டியக் கலையினை உரிய முறையில் பயின்றுள்ளார். 'குருவருள் இன்றேல் திருவருள் இல்லை'' என்பதற்கிணங்க, குருவின் நல்லாசிகள் காரணமாகவும் இவரது விடாமுயற்சியின் விளைவாகவும் க.பொ.த. உயர்தரத்தில் அதி சிறந்த பெறுபேற்றினைப் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கு தெரிவாகி அந்த உயர் கல்வி நிறுவனத்திலும் மிக சிறந்த முறையில் கற்று பரதநாட்டிய சிறப்பு நுண்கலைமானி பட்டதாரியாக வெளியேறினார்.

இவ்வாறு உரிய தகுதியுடன் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய இவர், உலகம் போற்றும் உயரிய சேவையாகிய ஆசிரியர் சேவையில் இரண்டாயிரத்து பதினொறாம் ஆண்டு இணைந்தார். இவரது முதல் நியமனப் பாடசாலை மடுவலயத்தில் அமைந்துள்ள மன்/ காக்கையன் குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகும். இந்தப் பாடசாலையில் 2011 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியில் இப்பாடசாலை மாணவர்களின் ஆற்றுகை சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டு வலயம் மாவட்டம் மாகாணம் வரையும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இம் மாணவர்களின் பாம்பு நடன ஆற்றுகையானது வடமாகாணத்தில் பௌர்ணமி தினத்தில் இவர்களின் ஆற்றுகை சிறப்பாகப் பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது. பின்னர் 2013 தொடக்கம் 2018 வரையான காலப் பகுதியில் வில்பத்து சரணாலயப் பகுதியில் அமைந்துள்ள மகாவித்தியாலயத்தில் பல மாணவர்களை உருவாக்கியது மட்டுமல்லாமல் பல தரப்பட்ட நிகழ்ச்சிகளில் மாணவர்களின்

ஆற்றுகைகள் சிறப்புவாய்ந்து காணப்பட்டது. கலாச்சார நிகழ்வுகள், சமூர்த்திப் போட்டிகள், வழிபாட்டுத் தலங்கள், தமிழ்த்தினப்போட்டிகள் போன்றவற்றில் இவர்களின் நடன ஆற்றுகை சிறப்பிற்குரியன.

இவர்களின் வெற்றி பிரபல்யமான பாடசாலைகளுடன் போட்டியிட்டு வலயம், மாகாணம், மாவட்டம் வரையில் வெற்றிவாகை சூடியுள்ளனர். பின்னர் முதல் நியமனக் காலப் பகுதியை

வெளிமாவட்டத்தில் சிறப்பாக கடமையாற்றி சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்று வந்து ஆரம்பக் கல்வியினைப் பயின்ற பாடசாலையான யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நியமனத்தை 2018 இல் பொறுப்பேற்றார். அப் பாடசாலை தனது தாய்ப் பாடசாலை என்ற பெருமையுடன் நாட்டுக் கூத்து, தனிநடனம்,குழுநடனங்கள் வெற்றி பெற்றமையும், அதிகூடிய சிறப்பு பெறுபேறுகளை க.பொ.த சாதாரண தரத்தில் பெற்றமையும், விசேட கல்வி மாணவர்களின் குழுநடனம் வெற்றி பெற்றமையும் குறிப்பிடப்பாலது.

இவ்வாறு பணிபுரியும் வேளையில் 2019 ஆம் ஆண்டு பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்தில் பயின்று உரியமுறையில் தொழில் தகைமையில் சித்திபெற்றார். பின்னர் 2020 தொடக்கம் இன்றுவரையும் யா/அராலி இந்துக் கல்லூரியிலும், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் தனது ஆசிரியர் சேவையினை வழங்கி வருகின்ற போது யா/ அராலி இந்துக்கல்லூரி மாணவர்களின் ஆற்றுகை வலயம், மாவட்டம், மாகாண நிலையில் வெற்றி பெற்று அகில இலங்கை நடனப் போட்டியில் நாட்டிய நாடகம் முதலாமிடத்தையும் ஆண் கரகாட்ட நடனம் இரண்டாமிடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமன்றி தமிழ்த்தினப்போட்டி, அரச சார்பற்ற நிறுவனங்களின் போட்டிகள் பலவற்றில் வெற்றிபெற்றமையும் போற்றுதற்குரியது. யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை மாணவிகளின் ஆற்றுகையும் சிறப்பிற்குரியவை. தனிநடனம், காவடிச்சிந்து, பாரதியார் பாடல், பந்துநடனம், புத்தாக்க நடனம், தேயிலைக்கொழுந்து நடனம் அனைத்தும் இரண்டாம் நிலைகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கலாச்சார நடனப்போடடியில் வெற்றி, தமிழ்த்தினப் போட்டி, அகில இலங்கை நடனப்போட்டிகளில் இம் மாணவிகளின் சாதனைகளும் குறிப்பிடத்தக்கவை. இந்நடன நிகழ்ச்சிகளின் வெற்றிக்கு ஆசிரியரின் வழிநடத்தலே காரணமாகும். இவர் தான் கற்பிக்கும் பாடசாலையில் மிகுந்த கலையார்வத்துடன் மாணவர்களிற்கு பரதக்கலையினை போதித்து மாணவர்களின் சிறந்த நடன ஆற்றுகைகளை வழங்குவதற்கு வழிகோலியவராகத் திகழ்கின்றார்.

இவருக்கு 'நாட்டியக் கலாவித்தகர்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (2009) மேலும் இலங்கை கல்வி அமைச்சரால் வழங்கப்படுகின்ற உயர் கௌரவ விருதாகிய 'குரு பிரதீபா பிரபா' (2016) இவருக்கு ஜனாதிபதியினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி தனது நடனக்கலையை ஆலயங்கள், உயர் நிறுவனங்கள், ஆகியவற்றில் ஆற்றுகைகளாக அறிக்கை செயதன் காரணமாக உயர் விருதுகள் பாராட்டு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் பெற்ற ஓர் ஆசிரியராக இவர் திகழ்கின்றார்.


இவர் 2023ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை முடித்து முதுகலைமாணி பட்டத்தில் முதல் தரச்சித்தியில் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் கலையை வளர்க்கும் நோக்கில் பத்திரிகைகளில் நடனக் கலை சார்ந்த கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். 'இரு தசாப்தங்களின் பின் நாட்டுக் கூத்திற்கு பெருமை சேர்த்த மாதா கிராமம்'



எனும் தலைப்பில் வீரகேசரி பத்திரிகையிலும் எழுதியுள்ளார். சைவசித்தாந்தத்தில் ஆடற்கலையின் முக்கியத்துவம், (தினக்குரல் வெளியீடு) மடுக் கீற்று என்னும் சிறப்பு மலரில் 'என்றிக் ஏம்பரதோர் நாட்டுக் கூத்தின் சிறப்பு, மானுடவியலில் பரதம், ஆலயங்களில் ஆடற்கலை, உளவியலும் ஆடற்கலையும், கலைகளின் தோற்றம் தெய்வீக சார்புடையது. என்ற கட்டுரையையும் எழுதியுள்ளார்.

இவர் 'அரங்க நாயகி நர்த்தனாலயம்' என்னும் நிறுவனத்தினை இயக்கி வருகின்றார். இவ்வாறு நடனக்கலையை தனது உயிராகக் கருதி இவர் 'அரங்க நாயகி நர்த்தனாலயம்' என்றும் நிறுவனத்தினை இயக்கி வருகின்றார். இவ்வாறு நடனக்கலையை தனது உயிராகக் கருதி ஆத்மார்த்தமாக பணிபுரிகின்ற ஆசானாக விளங்குகின்றார்.



முனைவர்
கே. ஈஸ்வரலிங்கம்

# நவீன வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம்

## அனுபவங்களை பகிர்கிறார் செய்தி அறிவிப்பாளர் சஹ்ரான்

இன்றைய விஞ்ஞான உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு (AI ) தொழில்நுட்பம், நவீன வா ழ்க்கையில் பல்வேறு தாக்கங்கள் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. பல்வேறு துறைகளில் வியாபித்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் ஊடகத்துறையில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்தி வாசிக்கும் போக்கு வேகமாக வளர்ந்து வருகிறது. பல்வேறு மொழிகளில் செய்தி வாசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அண்மையில் பல்வேறு ஊடக நிறுவனங்களில் தமிழில் செய்தி வாசிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (Artificial Intelligence) பயன்படுத்தி மே மாதம் 08ஆம் திகதி இரவு செய்தி அறிக்கையை தமிழ் பேசும் மக்களுக்கு சுவிட்சர்லாந்து ஜெனீவாவை தலைமையகமாக கொண்டு இயங்கும் Geneva Times தமிழ் வழங்கியிருந்தது.

ஜனாதிபதி விருது உள்ளிட்ட பல தேசிய விருதுகளை வென்ற ஊடகவியலாளரும் செய்தி அறிவிப்பாளருமாகிய எஸ்.டி.எம். சஹ்ரான் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முழுமையான செய்தி அறிக்கையை தயாரித்து இருந்ததோடு அவரே செய்தி வாசிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

உலகில் தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை (AI) பயன்படுத்தி முழுமையான செய்தி அறிக்கையொன்று ஒளிபரப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும் என்று குறிப்பிடப்படுகிறது.

இன்று உலகளவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் (AI) தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் ஊடகத்துறையில் இவ்வாறானதொரு முயற்சி பற்றி பலராலும் பேசப்பட்டுவருகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் முழுமையான செய்தி அறிக்கையை மேற்கொண்ட ஊடகவியலாளரும் செய்தி தொகுப்பாளருமாகிய சஹ்ரானிடம் ரொம்ப பிஸி பகுதிக்காக நாம் செவ்வி கண்டோம்.



'Genava Times தமிழ், தமிழ் AI செய்தி தொகுப்பாளரை அறிமுகப்படுத்துவதில் மார்தட்டிக்கொள்ள முன்வரவில்லை. உலகில் முதல் முழு AI செய்தி தயாரிப்பையே அறிமுகப்படுத்தியிருக்கிறது. ஒரு தனி நபரால் AI உதவியுடன் முழு செய்தி அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (AI) உருவாக்கப்பட்டது மற்றும் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கத்தை Geneva Times தமிழ் நிறைவேற்றியிருக்கிறது. தைரியமாக சவாலை எதிர்கொண்டுள்ளோம்' என்று சஹ்ரான் தெரிவித்தார்.

***நீங்கள் (AI) தொழில்நுட்பத்தை எவ்வாறு செய்தி அறிக்கையில் செயல்படுத்துகிறீர்கள்?***

சுமார் பத்து வருடங்கள் இலங்கையில் தேசிய தொலைக்காட்சி செய்தி அறையில் பணியாற்றிய அனுபவம் எனக்கு இருக்கிறது. அதேபோல நெதர்லாந்து பிரான்ஸ் தென் கொரியா சீனா ஆகிய நாடுகளில் நேரடியாக செய்தி தயாரிப்பில் பயிற்சி நிமித்தம் கலந்து கொண்ட அனுபவமும் எனக்கு இருக்கிறது. உலகில் எந்தவொரு தொலைக்காட்சி அறிக்கையிடலையும் மேற்கொள்ள அதற்குப் பின்னால் பல நபர்கள் கடமையாற்றுவர். முழுமையான ஒரு தொலைக்காட்சி செய்தி அறிக்கையிடலை மேற்கொள்வதென்பது இலகுவான விடயமல்ல. செய்தி அறையில் செய்தி ஆசிரியர், செய்தி தொகுப்பாளர், செய்தி தயாரிப்பாளர், மொழி பெயர்ப்பாளர்கள், தட்டெழுத்தாளர், வரைகலை மற்றும் அனிமேஷன் வடிவமைப்பாளர் உள்ளிட்ட பலர் பணியாற்றுவர். அதேபோல கலையகத்தில் கேமரா மேன், விஷன் மிக்சர், ஆடியோ மிக்சர், லைட்டிங் என்று இன்னும் சிலர் செயற்படுவார்கள். ஆனால் இவர்கள் எவரும் இல்லாமல் ஒரு தனி நபராக AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தமிழ் செய்திகளுக்காக முழுமையான நேரடி செய்தி அறிக்கையை மேற்கொள்ள இறைவனின் அருளால் என்னால் முடிந்தது. என்னுடைய புகைப்படமும் குரலும் AI தொழில்நுட்பத்தின் முலம் குளோனிங் செய்து செய்தியை தயாரித்தேன். செய்திக்குறிய காணொளிகளையும் நானே தொகுத்தேன். நேரடி ஒளிபரப்பையும் நானே மேற்கொண்டேன். இவை அனைத்திற்கும் எனக்கு சுமார் 8 மணித்தியாளங்களே செலவாகின.

**செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒளிபரப்பட்ட உலகில் முதல் தமிழ் செய்தி அறிக்கை பற்றி உங்கள் அனுபவம் என்ன?**

உலக தமிழ் தெலைக்காட்சி வரலாற்றில் மே 8 ஆம் திகதி ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய நாள். ஏனெனில் உலகில் முதலாவது செய்தி தொகுப்பாளரை சீனாவின் Xinhua News Agency and Sogou of China (சின்ஹுவா நியூஸ் ஏஜென்சியும் சோகோவும்) ஆகிய நிறுவனங்கள் இணைந்து 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இதனையடுத்து உலகளவில் இது பேசப்பட்டதை தொடர்ந்து பல மொழிகளிலும் பல செய்தி நிறுவனங்கள் செய்தி வாசிப்பாளர்களை அறிமுகப்படுத்தின. அதே போல தமிழ் ஊடகங்கள் சிலவும் தமிழ் Youtube பர்கள் சிலரும் இவ்வாறான முயற்சியை மேற்கொண்டதை மறுப்பதற்கில்லை. ஆனால் செய்தி அறிக்கை தயாரிப்பில் ஆரம்பத்திலிந்து செய்தி முடியும் வரை செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டதா? என்று கேட்டுப்பார்த்தால் பதில் கேள்விக்குறியே. அதே போல ஓரிரு செய்திகளையே சிலர் AI மூலம் வழங்கியிருக்கிறார்கள். இதுவரையில் எந்த ஒரு ஊடகமும் முழுமையான செய்தி அறிக்கையை AI மூலம் தொடர்ச்சியாக செய்ய முன்வரவில்லை.

***வேறு ஊடக நிறுவனங்கள் AI செய்தி தொகுப்பாளர்களை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?***

இந்தியாவில் பல ஊடகங்கள் செய்தி அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தியுள்ளன். இந்தியா டுடே குழுமம் இந்தியாவின் முதல் AI செய்தி தொகுப்பாளர் சனாவை அவர்களின் இந்தி சேனலான (Aaj Tak ) ஆஜ் தக்கிற்காக அறிமுகப்படுத்தியது. அதேபோல மலையாள செய்தி சேனல் மீடியா ஒன் டிவி( MediaOne TV) ஆண் AI செய்தி தொகுப்பாளரை அறிமுகப்படுத்தியது. கன்னட செய்தி சேனல் பவர் டிவி Power TV, கன்னடத்தின் முதல் AI செய்தி தொகுப்பாளரான சௌந்தர்யாவை அறிமுகப்படுத்தியது.

ஒடியா செய்தி சேனலான OTV அதன் AI செய்தி ஒளிபரப்பாளர் லிசாவை அறிமுகப்படுத்தி ஒடியா மற்றும் ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் விளக்கத்தை வழங்கியதை அடுத்து இணையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இலங்கையில் அண்மையில் தேசிய தொலைக்காட்சி AI செய்தி தொகுப்பாளர்களை அறிமுகப்படுத்தி இருந்தமை வரவேற்கத்தக்கது.

உலகில் முதல் தடவையாக தமிழ் செய்தி அறிக்கையை முழுமையாக AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி Geneva Times தமிழ் மேற்கொண்டதை பெருமையாக இங்கு என்னால் குறிப்பிட முடியும். அதுமாத்திரமன்றி AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக முழு செய்தி அறிக்கையை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்க Geneva Times தமிழ் தயாராகிவருகிறது.

***பார்வை அனுபவத்தின் அடிப்படையில் AI தொழில் நுட்பம் வழங்கக்கூடிய சிறப்பு அம்சங்கள் என்ன?***

AI செய்தி தொகுப்பாளர்கள் தற்போது மனிதனால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தை மனித தொகுப்பாளர் போன்று வழங்குகிறார்கள். அதனால் தற்போதைய பார்வை அனுபவத்தை குறைக்காது. AI அறிவிப்பாளர் பல மொழிகளில் ஒரு செய்தியை வழங்குவதன் மூலம் பார்வையாளர்களை உற்சாகப்படுத்துவார். அறிவிப்பாளர்கள் விரைவில் VR தொழில் நுட்பங்களுடன் எளிதாக ஒருங்கிணைக்கப்படலாம். மேலும் இது பார்வையாளர்களின் பார்வை அனுபவத்தை மேம்படுத்தும்.

ஒரு குறிப்பிட்ட நபரின் ஆர்வத்திற்கு ஏற்ப வீடியோ உள்ளடக்கத்தை வழங்கும் இணையதளங்கள் போன்ற டிஜிட்டல் மீடியா மூலம் தனிப்பட்ட தேவைக்கேற்ப AI செய்தி விளக்கக்காட்சி தனிப்பயனாக்கப்படும். AI செய்தி தொகுப்பாளர்கள் தரவு இதழியல் மற்றும் தேர்தல் போன்ற நிகழ்வுகளின் போது செய்தி மற்றும் அம்சக் கதைகளை வழங்குவது எதிர்காலத்தில் பார்வையாளர்களை உற்சாகப்படுத்தும்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# நபீலின் தென்னம்படல் மறைப்பு




ஈழத்தில் முக்கியமான எழுத்தாளுமைகளில்குறிப்பிடும் படியானவர் றிஸ்வி யூ முஹம்மது நபீல் என முன்னம் அறியப்பட்ட நபீல்.

நபீலின் தினகரன் வாரமஞ்சரிப் பத்தியெழுத்து 'நினைவின் தாழ்வாரங்கள்' தொடரின் பனுவல் தொகுப்பு'தென்னம்படல் மறைப்பு' காலச்சுவடு வெளியீடாக வந்திருக்கிறது.

தென்னம்படல் மறைப்பு அழியாத நினைவின் தடயங்கள் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.00 மணி முதல் கல்முனை ஆஷாத் பிளாஸ்மா மண்டபத்தில் நிகழ்கிறது. அநுசரி இலக்கிய நோக்கு மனமார அழைக்கிறார்கள்.

தென்னம்படல் மறைப்பு வீட்டின் நிலவாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், இலக்கிய அபிமானி ரவூப் ஹக்கீம் தோன்றுகிறார்.

சாணம் மெழுகிய திண்ணை நடுவில் உமா வரதராஜன்,எச்.ஏ.அஸீஸ், அப்துல் றஸாக்,மன்சூர் ஏ காதிர்,ஆரிக்கா காரியப்பர்,ரஷானா ஷரிபுத்தீன்,முபிஸால் அபூபக்கர்,ரோஷன் அக்தர்,கதீர் ஆகியோர் தென்னம்படல் மறைப்பின் சாணம் பூசிய தரையிலிருந்து உரையாடவுள்ளனர்.நபீலின் அனுபவங்களின் திரட்சியெழுத்து தென்னம்படல் மறைப்பு,கிழக்கின் மொழி மணம் கமழ்கிறது. உணர்வின் சாரம் பிழிந்த மழைப்பொழிவென தென்னம்படல் மறைப்பின் கீழ் ஒரு கலாசாரக் காவியம் நிகழ்கிறது. வாருங்கள் சாணம் பூசிய நிலத்தில் சந்திக்கலாம்

# கவிதை என்பது ரூஹின் சிறகு




வானம்பாடி யென்கிற முஜாமலா வின் யூஜின் சிறகுகள் மற்றும் நீதம் கவிதைப்பிரதிகளின் வெளியீட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை (19/05/2024) யன்று நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் செவ்வனே நிகழ்வுற்றது.

பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை கலை கலாசாரப்பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் கலந்து சிறப்பித்தார். அதே பல்கலை மொழித்துறை விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக்,சமூகவியல் பேராசிரியர் எஸ்.எம்.அய்யூப்,சமூக செயற்பாட்டாளர் தி.லலிதகோபன்,முல்லை முஸ்ரிபா ஆகியோர் முஜாமலா கவிதைகள் குறித்து கருத்துரைத்தனர்.

தென்கிழக்குப்பல்கலையின் தகவல் தொழிநுட்ப சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஃப்.எஸ்.ஏ. ஷிப்லி தலைமையேற்றிருந்தார்.

நாட்டாரியல் ஆர் எழுகவி மற்றும் மருதக்குயில் யாஸ்மின் ஆகியோர் பாடினர். கவிஞர் நாளிர் நிகழ்வு நெறியாள்கை செய்தார்.

ஈழத்துப்பெண் எழுத்து வெளியில் முக்கிய ஆளுமையாகத் தன்னை முன்னிறுத்தும் கவிதைப்பிரதிகளைத் தந்திருக்கிற முஜாமலாவின் எழுத்துக்கள் கூர்ப்படைவதை பிரதி வழி காணலாம்.

ஆரம்ப அல்லது பயில்நிலைக் கவிதை முறையிலிருந்து விடுபட்டுப் பொருளிலும், பொருள்கூறலிலும் தேர்ந்திருக்கிறாரென்பதை பிரதிகள் நிரூபிக்கின்றன.

முஜாமலா இறுக்கமான சொல்லாட்சியை கவிதைகளில் ஊடு பரப்புகிறார்;புதிய சொற்களைக் கண்டடைகிறார்;உணர்வின் பெருக்கத்தைக் கவிதைகளில் பாய்ச்சுகிறார்; சிலபோது இருண்மை நிலையில் வாசகரைத் தடுமாறச்செய்கிறார் அல்லது வாசக கூட்டுப்படைப்புநிலையை அவாவுகிறார்.

குரலற்றவர்களின் குரலாகிறார்; கவிதையில் நீதம் வேண்டுகிறார்; ரூஹின் சிறகெடுத்துப் பறக்கிறார்.

ஆன்மீகத்தளத்தில் ஊறும் கவிதைகளை முஜாமலா முன்மொழிகிறார்;அவரது எழுத்துக்கள் கோரும் செய்தி அல்லது வாழ்வியல் தத்துவம் முக்கியமானது.

முஜாமலாவின் கவிதை அரசியல் மானுடப் பிரதியாக எழுத்தை முன்னெழுப்புவதுதான்.கவிதை ரூஹின் சிறகுகளால் உந்திப்பறக்கும் முஜாமலா கவிதை வெளி வேண்டி நிற்கும் நீதமே அவரது கவிதைக்குரலுமாகும்.

மண்டபம் நிறைந்த இலக்கியவாதிகள் மற்றும் அபிமானிகள் முன்னிலையில் கவிதை குறித்த உரைகள் கவனம் பெற்றன.நுணுக்கமான ஆய்வுப்பார்வையை அய்யூப் முன்வைத்தார்,இருத்தலியல் சார்ந்த தேர்ந்த அழகிய உரையை அப்துல் றஸாக் வரைந்திருந்தார். முஜாமலா கவிதை நெறி பற்றி லலிதகோபன் விவரித்தார்.

அறிமுகங்கலந்த ஆக்கவுரையை வரவேற்பை தலைமையாற்றிய ஷிப்லி செப்பமிட்டார்.பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா சுருக்கமும் இறுக்கமுமாக வரலாற்றுக் குறிப்புகளோடு முஜாமலா கவிதைகள் குறித்த பார்வையைச் செலுத்தினார். நிந்தவூரில் ஒரு பகல் பொழுதுஅழகிய தமிழின் இனிமையில் ஊறியது.ரூஹின் சிறகுகள், நீதம் ஆகிய கவிதைப்பிரதிகள் வழியே.

முஜாமலாவின் கவிதை ரூஹின் சிறகுகள் மேலுமான அவருக்கான வானத்தை வரையட்டும். வாழ்த்துக்கள் முஜாமலா

## மறுவாசல்

முல்லை முஸ்ரிபா

# ஹிபா கவிதை



ஹிபா அபு நதா பலஸ்தீனப்போர் தின்ற மற்றுமொரு கவிஞை.

கவிதையும் நாவலுமாக இயக்கியவர். ஹிபாவின் 'ஒக்சிஜன் இறப்பவர்களுக்கானதல்ல 'நாவல் 2017இல் அரபு படைப்பாற்றலுக்கான ஷார்ஜா விருது கண்டது.

காஸாவின் கண்ணீரைக் கவிதையாக்கியவர் ஹிபா.

ஹிபா அபு நதாவின் கவிதைகள் உலகின் மனச்சாட்சி மீது நிகழ்த்தும் உரையாடல் முக்கியமானது.

அவரது கவிதையொன்று...

எளிமையான மொழிக்குள் இத்தனை துயர்; இத்தனை வலி;

**புறப்பாடு**

எங்கள் குடும்பப்
புகைப்படங்கள்
ஒரு பை நிறைய
மூட்டுக்கள்
ஒரு சாம்பல் குவியல்
ஐந்து கபனிடப்பட்ட
ஜனாஸாக்கள்
அருகருகில்
பல்வேறு அளவுகளில்
காஸாவிலுள்ள
குடும்பப்
புகைப்படங்கள்
வித்தியாசமானவை
ஆனால்
அவர்கள்
ஒன்றாகவே
இருக்கிறார்கள்
ஒன்றாகவே
இருந்தார்கள்
ஒன்றாகவே
புறப்பட்டார்கள்

–ஹிபா அபு நதா

# அன்னையை எழுதுதல்



தாயன்பின் ஈரமொழிக்கவிதைகள் தாயரின் முகங்களையும் அகங்களையும் விம்பமிடுவன.

உலகின் எல்லா மொழிக் கவிதைகளிலும் தாயின் முகம் படிந்தே கிடக்கிறது. அன்னையை எழுதுதும் மௌமிதா ஆலம் கவிதை அவுட்லுக் இன்டியா தளத்தில் வெளிவந்த ஆங்கில வழிக் கவிதை தமிழில் தருகிறார் சிறீ வத்சலா.

# பவளமும் அமுதமும்

ஈழத்தின் முக்கிய ஆளுமைகள் இருவரின் பிறந்த தினங்கள் நேற்றும் இன்றுமாகும்.

நேற்றைய பிறந்த தினம் மறைந்த மூத்த இலக்கிய ஆளுமை நந்தினி சேவியரின் எழுபத்தைந்தாவது பவள விழா நாளாகும்.

நந்தினியான் முற்போக்குச்சிந்தனை மரபில் முகிழ்நவர்;தீவிரமான எழுத்தின் மூலம் இலக்கியத்துறைக்கு பங்காற்றியவர்.

இவரது கதைகளும் கட்டுரைகளும் மானுட விமோஷனத்துக்கான குரலாக இருந்தன.

இன்றைய தினம் தனது எண்பதாவது அகவையை நிறைவு கொள்ளும் மலையகத்தின் ஆளுமை அந்தனிஜீவா கலை, இலக்கியம், சமூக செயற்பாட்டாளராக சுறுசுறுப்பாக இயங்கியவர்.



மலயகத்தின் தவிர்க்க முடியாத உரத்த குரல் அந்தோனி ஜீவாவுடையது. மறுசொல் இரு ஆளுமைகளையும் நினைவு கொள்கிறது.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

சிடெல்ஸ்கியின் அறிவுரைகளை ஏற்று மண்டேலா நிர்வாகத்தில் அமைதியாக நிர்வாக பணிகளில் ஈடுபட்டான். ஆனால் கோரின் அடாவடித்தனங்கள் நிர்வாகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றன. கோர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் முக்கிய உறுப்பினராகவும் கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய உறுப்பினராகவும் செயற்படுவது மண்டேலாவுக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்தது மட்டுமல்லாமல் கோரின் மீது வைத்த மதிப்பும் மரியாதையும் பன்மடங்காகப் பெருகிற்று. சிசுலுவும் அரசியலில் நாட்டமுடையவன் என்று தெரிய வந்ததும் மேலும் அதிசயித்துப் போனான். ஒருமுறை மண்டேலாவை சிடெல்ஸ்கி அழைத்து கோர், சிசுலு பற்றி எச்சரித்தார். இருவரது திறமைகளையும் அவர் பாராட்டத் தயங்கவில்லை என்றாலும் அவர்களது நிழல் நடவடிக்கைகளை சிடெல்ஸ்கி ஏற்றுக் கொள்ளவில்லை என்பது அவரது பேச்சினூடாகவே மண்டேலாவுக்கு புரிந்துவிட்டது. அவர் மண்டேலாவுக்கு "நெல்சன் உன் நண்பர்கள் அரசியலில் ஈடுபடுகிறார்கள். அதற்கு நான் தடையேதும் சொல்லவில்லை. ஆனால் நீ தவறியும் அரசியலில் விழுந்து விடாதே. அந்தப் பக்கம் கூட திரும்பிப் பார்க்காதே. அரசியல் ஒரு சாக்கடை. அதில் தவறி ஒருமுறை விழுந்துவிட்டால் கூட கடவுள் வந்தாலும் காப்பாற்ற முடியாது போய்விடும். கவனம் ஜாக்கிரதை" என்று எச்சரித்துக் கூறினார். அதற்கு மண்டேலாவோ புன்முறுவல் பூத்தபடி "கறுப்பின மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றுதான் நினைக்கின்றேனே தவிர அதற்கு அரசியல்தான் வடிகால் என்று நான் ஒருபோதும் கருதவில்லை. எனக்கு இதுவரை அரசியலிலில் ஒரு சிறு துளி கூட ஆர்வமில்லை" என்று கூறியதும் சிடெல்ஸ்கி புன்னகைத்து விட்டு மண்டேலாவை தோளோடு தோள் அணைத்து "உன் இலட்சியத்தில் வெற்றி பெற இப்போதே என் வாழ்த்துக்கள். நிர்வாகப் பணிகளை கவனிப்பதோடு சட்டப்படிப்பிலும் உன் தீவிர கவனத்தை செலுத்து என்று அறிவுறுத்திவிட்டு சென்றார்.



கோரின் விடுதலை உணர்வு நீர் பெற்ற வேர் போல வளர்ந்து கொண்டே சென்றது. ஒருமுறை சிடெல்ஸ்கி அவரது இருக்கையில் காலுக்கு மேல் கால் போட்டு அமர்ந்துகொண்டு மண்டேலாவுக்கு சில ஆவணங்களை கையில் கொடுத்து நிர்வாகம் பற்றிய சில தீர்மானங்களை சொல்லிக்கொண்டிருந்தார். அந்த அறைக்குள் தற்செயலாக நுழைந்த கோர் உதடுகள் துடிக்க ஆவேசத்தில் கத்திவிட்டான். "நீங்கள் எவ்வளவு உயர்ந்த இடத்தில அமர்ந்து கொண்டு எங்கள் ஆட்களை வேலை வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள். எங்கள் ஆட்களும் கைகட்டி நீங்கள் சொல்வதை கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஏன் இவ்வாறு நடக்கவேண்டும் என்று கேட்டால் அதற்கு ஒருவரிடமும் தகுந்த பதிலில்லை. என்னால் இதனை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஒருநாள் நிலைமை மாறத்தான் போகிறது. பார்த்து கொண்டே இருங்கள். நாங்கள் அந்தப் பக்கம் அமர்ந்து கொண்டு உங்களை வேலை வாங்கும் இனிய நாள் உதயமாகும். நீங்கள் அனைவரும் நாங்கள் சொல்வதை நீங்கள் கை கட்டி வாய் பொத்தி நின்று செய்யத்தான் போகிறீர்கள். ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்" என்று ஆக்ரோஷமாக உரத்து கத்தினான். மண்டேலாவுக்கோ தர்மசங்கடமாகிப் போய்விட்டது. சிடெல்ஸ்கியோ அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டார். செய்வதறியாது திகைத்து நின்றார்.மண்டேலாவோ "கோர் ஆத்திரப்படாதே, எம் உயர் அதிகாரி சிடெல்ஸ்கி பற்றி நான் சொல்லித்தான் உனக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை. அவர் நிறத்தில் வெள்ளையராக இருந்தாலும் அவர் ஒரு யூதர். அவர்களும் வெள்ளையர்களால் வஞ்சிக்கப்பட்டவர்கள்.

அதனால்தான் நம் சுதந்திர தாகம் தீர்க்க உறுதுணையாக அவர் இருப்பதை நீ மறந்துவிட்டாயா? அவர் மற்றவர்களை போல் நம்மை அடிமைகளாகவா நடத்துகிறார்? இல்லையே, எவ்வளவு தோழமையோடு எம்முடன் அனுசரணையாக நடந்துகொள்ளும் ஒரு நல்ல மனிதர். அவரை போய் நீ குற்றம் சுமத்தாதே. நன்றி கெட்டத்தனமாக பேசுவதை முதலில் நிறுத்து" என்று காரசாரமாக பொரிந்து தள்ளினான். கோர் அப்படியே அடங்கி வெட்கித்துப் போனான். ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டு சிடெல்ஸ்கியிடம் மன்னிப்பு கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டான். அன்றிரவு மண்டேலா, சிசுலு, கோர் மூவரும் ஒன்று சேர்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர்.

அவர்களின் பேச்சின் நடுவே கோர் சிடெல்ஸ்கியுடன் நடந்துகொண்ட பேச்சும் அங்கு அரங்கேறியது. கோர் மண்டேலாவை பார்த்து "நான் இன்று அதிகாரியுடன் நடந்துகொண்ட விதம் தவறு என்று இப்போது எனக்கு நன்றாகவே புரிகிறது.

*(தொடரும்)*



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# இஸ்லாமியப் பாடல்களின் இன்னிசை ராணி...கே.ராணி....!

இஸ்லாமியப் பாடல்களின் இன்னிசை ராணி...கே.ராணி....! ஒரு காலத்தில் இந்தப் பெண்மணியின் இனிமையான குரல் ஒலிக்காத இஸ்லாமியர்களின் வீடே கிடையாது என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்லலாம். இவரது பாடல்கள் எல்லோருடைய உதடுகளையும் முணுமுணுக்க வைத்தது. இதமான குரல். இனிமையான சாரீரம். பண்ணிசையில் இலகுவான ஏற்ற இறக்கம். கண்ணை மூடிக் கொண்டு கேட்டாலும் இது கே.ராணி உடைய குரல் என்று எளிதில் கண்டுபிடித்துச் சொல்லி விடலாம். நாகூர் இசைமுரசு இ.எம்.ஹனிபாவுடன் இப்பெண்மணி இணைந்து பாடிய பாடல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. அத்தனையும் முத்துக்கள். அன்றைய கால கட்டத்தில் "இவர்களிருவரும் இணைந்து பாடிய பாடல்கள் மூலமாகத்தான் இஸ்லாத்தைப் பற்றியும் இஸ்லாமிய சரித்திர நிகழ்வையும் எவ்வளவோ நாங்கள் அறிந்துக் கொண்டோம்" என்று கூறியவர்கள் ஏராளம். புலவர் ஆபிதீன் காக்கா அவர்களுடைய எழுத்தாற்றல் அதற்கு துணை நின்றது. இசைமுரசு நாகூர் ஹனிபா எத்தனையோ இஸ்லாமியப் பாடல்கள் பாடியிருந்தாலும் தொடக்க காலத்தில் அவர் கே. ராணியுடன் இணைந்து பாடிய பாடல்களுக்கு நிகரில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இவர்கள் இருவருடைய 'கெமிஸ்ட்ரி'யும் அட்டகாசமாக ஒத்துப் போனது. இசை ஞானத்தில் இருவருக்கிடையிலும் நல்ல புரிதல்கள் இருந்தன. டி.எம்..எஸ்ஸுக்கு இணையான ஜோடி பி.சுசீலா போன்று, முஹம்மது ரஃபிக்கு இணையான ஜோடி லதா மங்கேஷ்கர் போன்று, இஸ்லாமியப் பாடல்களுக்கு நாகூர் ஹனிபா – கே.ராணி ஜோடி என்ற அளவில் சிலாகித்து பேசப்பட்டது. இன்று, இசைமுரசு நாகூர் ஹனிபா, கே.ராணி இருவருமே நம்மிடையே இல்லை. ஆனால் இவர்கள் இருவரும் இணைந்து பாடிய





இன்னிசை என்றென்றும் நம் காதுகளில் தேனாய் பாய்ந்துக் கொண்டிருக்கிறது. கே.ராணி பாடிய கீழ்க்கண்ட இஸ்லாமியப் பாடல்கள் அன்றும், இன்றும், என்றும் பசுமரத்தாணியாய் நம் மனைதில் நீங்காது நிலைத்திருக்கும். அன்பு மார்க்கம் தந்த எங்கள் அஹ்மதே யா முஸ்தஃபா ! அறிவு தீபம் ஏற்றி வைத்த முஹம்மதே யா முஸ்தஃபா ! திருமறையின் அருள் மறையில் விளைந்திருப்பதென்ன? அறிவு இறைத்தூதர் நபி பொன்மொழியில் பொதிந்திருப்பதென்னஅன்பு ஓதுவோம் வாருங்கள் ! லாயிலாஹா இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல் லாஹ் உயர் கலிமாவின் பொருள் உலகெங்கும் கேட்க நெஞ்சிலே வாழ்கின்றவர் ! நேர்வழி காட்டுபவர் ! நானிலம் போற்றுபவர் ! நீதர் நபியாம் நாயகர் ! தீனோரே நியாயமா மாறலாமா ! தூதர் நபி போதனையை மீறலாமா ! உள்ளம் சோரலாமா ! வாழ வாழ நல்ல வழிகள் உண்டு ! நபி வழங்கிய நெறிகளிலே ! வாரி வாரி தந்த வைரம் உண்டு ! அவர் வாய்மலர் மொழிகளிலே ! எல்லாம் வல்ல ஏகன் நீயே ! இணையில்லாத அல்லாஹ் நீயே ! என்றும் புகழ்வோமே அல்ஹம்துலில்லாஹ் !! அருள் மேவும் ஆண்டவனேன் ! அன்புடையை காவலனே ! இருள் நீக்கும் தூயவனே ! இணையில்லாத அல்லாஹ்வே ! தீன் கொடி நாட்டிய தேவா ! – இறைத் தூதரே யா முஸ்தபா ! பாலைவனம் தாண்டி போகலாமே நாம் ! புவிபோற்றும் மதினா நகராளும் நபியை நாம் ! பண்போடு சென்று காணலாம் !! எல்லா உலகும் ஏகமாய் ஆளும் இணையற்ற அல்லாஹ்வே ! வல்லமை வாய்ந்த உன்னிடம் நாங்கள் மன்னிப்பை வேண்டுகிறோம் ! மக்கள் யாவரும் ஒன்றே குலமெனும் மார்க்கம் வந்தது யாராலே மக்காவென்னும் நகரம் தந்த மாந்தர் திலகம் நபியாலே ! இன்ப வாழ்வு பொங்கிட வேண்டும் ! ஏழை எளியோர் உயர்ந்திட வேண்டும் ! அன்பு எங்கும் பரவிட வேண்டும் ! யா அல்லாஹ் ! யா அல்லாஹ் ! கருணை செய்வாய் !! இன்று வந்து நாளை போகும் நிலையிலே என்ன செய்து வாழுகின்றாய் உலகிலே? இஸ்லாமியப் பாடல்கள் மாத்திரமே இவர் பாடியிருக்கிறார் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவருடைய சாதனைகளின் மறுபக்கம் சரியாக எடுத்துரைக்கப்படவில்லை என்பது என் கருத்து.. பி.சுசிலா, எஸ்.ஜானகி, எல்.ஆர்.ஈஸ்வரியைத் தெரிந்து வைத்திருக்கின்ற அளவுக்கு இவரை யாரும் தெரிந்து வைத்திருக்கவில்லை என்பது வருத்தமான செய்தி. வெறும் எட்டே வயது நிரம்பிய சிறுமியொருத்தி திரைப்படங்களில் பின்னணி பாடி வானளாவிய புகழைப் பெற்றார் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? சிறுமுது திறனாளியாக

*(தொடரும்)*



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பின் விருது வழங்கும் விழா



கடந்த பதினொரு வருடங்களாக இந்தியாவில் இயங்கி வரும் அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு சர்வதேச ரீதியாக தங்களது சேவையினை விஸ்தரிக்கும் முகமாக முதன் முறையாக இலங்கையில் பல துறைகளில் சேவையாற்றி வரும் சமுக சிந்தனையாளர்களுக்கு அதன் தலைவர் வழக்கறிஞர், டாக்டர் டி. கே. சத்தியசீலனின் பிறந்தநாளை முன்னிட்டு (மே.15 திகதி) கொழும்பு13 ஆமர் வீதி "பிரைட்டன் ஹோட்டலில்" சேவா ரத்னா விருதை எழுபது பேருக்கு வழங்கியது. இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசரும் வட மாகாண முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான C.V. விக்னேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் ஆகியோருடன் இந்திய உயர்நீதிமன்ற நீதிபதிகளும். சட்டத்தரணிகளும் இந்தியா, இலங்கையைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

**படங்கள் : எம். நஸார்**

# டிஸ்கோ ராஜா பவுண்டேசனின் புத்தாண்டு விழா



டிஸ்கோ ராஜா பவுண்டேசன் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெருவில் நடத்திய தமிழ், சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

**படங்கள் : எம். நஸார்**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.